# பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புதல்

## இலங்கையில் ஊடகத்துறை மற்றும் ஊடகத் தொழில் தொடர்பான மதிப்பீடு

பங்குபற்றுதல் ஆய்வுமுறைச் செயற்பாட்டினடிப்படையில் இவ்வறிக்கை உருவாக்கப்பட்டது. இதற்குச் சுமார் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் சென்றது. இலங்கையில் ஊடகத்துறை விருத்தி, சூழல் தொடர்பான பூரணத்துவம் மிக்க மதிப்பீட்டை இது கொண்டுள்ளது. சட்ட வரைவுச்சட்டகம், பொருளாதார நிலைமைகள், மனித வள அபிவிருத்தி, தொழில்நுட்பச் சூழல்கள், பாதுகாப்பு, நாட்டில் ஊடக வளர்ச்சியின் உண்மையான நிலைப்பாடு உள்ளடங்கலாக ஊடக வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்ற மாறுபட்ட அம்சங்களை நோக்குகின்ற யுனெஸ்கோவின் ஊடக அபிவிருத்தி குறிகாட்டி வரைவுச்சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் தகவல் அறியும் உரிமைக்கு அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதங்களை வழங்கும் முகமாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களை சான்றாகக் கொண்டு நோக்குகையில் ஊடகத் துறையில் மறுசீரமைப்புகளையும் புது முயற்சிகளையும் மேற்கொள்வதற்கா நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை உணரமுடியும். இத்தகைய பொருத்தமான தருணத்தில் இந்த மதிப்பீடு வெளிவருகிறது.

டொபீ மென்டல், நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சட்டம், ஜனநாயகத்திற்கான நிலையம், கனடா

வெளியீடு
ஊடக மறுசீரமைப்பிற்கான செயகலம் - இலங்கை.

உதவி
சர்வதேச ஊடக அமைப்பு (ஐஆளு) டென்மார்க்
www.mediasupport.org

பிரதான தலைப்புகள்
ஊடகம், ஊடகத்துறை, ஊடக ஒழுங்கமைப்பு, ஊடகக் கொள்கை, கருத்துச் சுதந்திரம், ஊடக விருத்தி, ஊடகக் கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், புதிய ஊடகம்.

9 789553 958006

பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புதல்
இலங்கையில் ஊடகத் துறை, ஊடகத் தொழில் தொடர்பான மதிப்பீடு

# பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புதல்

இலங்கையில் ஊடகத் துறை, ஊடகத் தொழில் தொடர்பான மதிப்பீடு

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்

மே 2016

# பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல்

## இலங்கையில் ஊடகத்துறை மீதான மக்களின் நம்பிக்கையை மீளக்கட்டி எழுப்புதல் தொடர்பான மதிப்பீடு

ஊடக மறுசீரமைப்பு செயலகம்,
கொழும்பு,
இலங்கை

மே 2016

இலங்கை சர்வதேச ஊடக ஆதரவின்
இலங்கைக்கான ஊடக மறுசீரமைப்பு
செயலகத்தின் வெளியீடு.
www.mediasupport.org

அறிக்கை தயாரரிப்புக்குழு.
விஜயானந்த ஜயவீர ஆலோசனை.
Dr.ரங்ககலன்சூரியஅறிவுரை
Dr.பிரதீப் என் வீரசிங்க,செயலக மற்றும் கருப்பொருளுக்கான
தலைவர்.
நாலக்க குணவர்தன ஆசிரியபீட ஆலோசகர்,
குமாரி வெலகெதர உறுப்பினர்,
குமார் லோபஸ் உறுப்பினர்.

தமிழ் மொழிபெயர்ப்பு M S Mஅயூப், ரஜீவன் அரசரத்தினம் மற்றும்
கறுப்பையா நாகபூஷனி

அட்டைப்படம் தர்ஷன கருணாதிலக.
பக்கவடிவமைப்பு நிலந்த ரத்னாயக்க, Net Point, Badulla
அச்சகம் மஜெஸ்டிக் பிரிண்ட் ஷொப் பன்னல இலங்கை

இலங்கையில் முதலில் வெளியிடப்பட்டது மே 2016

இந்தவெளியீட்டினை கீழுள்ள இணையத்தளத்தில்
பார்வையிடலாம்.
http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/

பரிந்துரைக்கப்பட்டசான்று:
ஊடகசீர்திருத்தசெயலகம் (2016) பொதுமக்கள்
நம்பிக்கையை மீளக்கட்டி எழுப்புதல் தொழில்சார்
ஊடகத்துறை பற்றிய மதிப்பீடு, கொழும்பு, இலங்கை
SMR/IMS

ISBN: 9-789-553-958006

## அறிமுகம்

இவ்வறிக்கையானது தனிப்பட்ட மற்றும் அரசதுறை, கல்வித்துறை, கூட்டுத்தாபனங்கள், சிவில் சமூகம் ஆகியவற்றின் பாரிய அளவிலான பல்வேறுபட்ட பங்களிப்புகளுடன் 14 மாத காலத்திற்குள் தயாரிக்கப்பட்டது.

கட்டமைப்பு மற்றும் கருப்பொருள் பற்றிய செயற்குழு உறுப்பினர்களின் வெளிப்பாடு, இணைப்பு 1

இதற்கு மேலதிகமாக அறிக்கை தயாரிப்புக்குழு தனது கௌரவத்தினை மேலான கருத்துரைகளை வழங்கியவர்களுக்கு தெரிவிக்கிறது. (பெயர் விபரம் வருமாறு)

- டாக்டர் வில்லியம் க்ரவ்ளி பொதுநலவாய கல்வி நிறுவனம் லண்டன் பல்கலைக்கழகம் ஐக்கிய ராஜ்ஜியம்
- மைக்கல் ஜே.ஆர்.டேவிட் முன்னாள் பத்திரிக்கையாளர் (பீ.பீ.சி உலக சேவை சிங்களம்) சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
- சுனந்த தேஷப்பரிய ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் (சுவிசர்லாந்து)
- டாக்டர் ரோகன எதிரிசிங்க முன்னாள் விரிவுரையாளர் சட்டபீடம் கொழும்பு பல்கலைக்கழகம்
- டாக்டர் ஷெல்டன் எ.குணரத்ன ஓய்வு நிலை பேராசிரியர் வெகுஜன ஊடகத்துறை, மின்சொட்டா ஸ்டேட் பல்கலைக்கழகம், அமெரிக்கா.
- டோபி மண்டல் நிர்வாக இயக்குனர் சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான மத்திய நிலையம், கனடா
- டாக்டர் டேவிட் பேஜ் பொதுநலவாய கல்வி நிறுவனம், இலண்டன் பல்கலைக்கழகம் ஐக்கிய ராச்சியம்.
- கிஷலி பின்டோ ஜயவர்தன சட்ட ஆய்வாளர் மற்றும் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர்.
- டாக்டர் ரொஹான் சமரஜீவ தொடர்பாடல் அறிஞர் மற்றும் நிறுவுனர்.
- டாக்டர் அசங்க வெலிகல பொது சட்ட விரிவுரையாளர் எடின் பேர்க் பாடசாலை, இணை இயக்குனர், எடின் பேர்க் அரசியல் சட்ட அமைப்பு ஐக்கிய ராச்சியம்.
- இறுதிப்பதிப்பில் கவனக்குறைவுகள் தவறுகள் இருப்பின் பதிப்பாசிரியர்களே பொறுப்பேற்பர்.

ஆய்வுக்கு உதவிய குழுவினருக்கும் பதிப்பாசிரியர்களினது நன்றி உரித்தாகும்.

பெயர்ப்பட்டியல் இணைப்பு 2

## பொறுப்பு

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள யோசனைகள் மற்றும் கருத்துக்களுக்கு பதிப்பாசிரியர்களே பொறுப்பாகும். சர்வதேச ஊடக ஆதரவோ (IMS) அமைப்போ இதற்கு பொறுப்பேற்க மாட்டாது.

# Acronyms and Abbreviations

| | |
|---|---|
| AAAA | Accredited Advertising Agencies Association |
| ACJ | Asian College of Journalism |
| ADIC | Alcohol and Drug Information Centre |
| AHRC | Asian Human Rights Commission |
| AIBD | Asia Pacific Institute for Broadcasting Development |
| ANCL | Associated Newspapers of Ceylon Limited (Lake House) |
| BOP | Bottom of the pyramid |
| CBA | Commonwealth Broadcasting Association |
| CPA | Centre for Policy Alternatives |
| CPJ | Committee to Project Journalists (US based advocacy group) |
| CSOs | Civil Society Organisations |
| DTTB | Digital Terrestrial Television Broadcasting |
| DBNO | Digital Broadcast Network Operator |
| EGOSL | Editors' Guild of Sri Lanka |
| FMETU | Federation of Media Employees Trade Union |
| FMM | Free Media Movement |
| FOE | Freedom of Expression |
| FUTA | Federation of University Teachers Associations |
| GIC | Government Information Centre |
| HRCSL | Human Rights Commission of Sri Lanka |
| ICCPR | International Covenant on Civil and Political Rights |
| ICT | Information and Communications Technologies |
| ICTA | Information and Communication Technology Agency |
| IFJ | International Federation of Journalists |
| IMADR | International Movement Against All Forms of Discrimination and Racism |
| IMS | International Media Support |
| IPDC | International Programme for the Development of Communication (UNESCO) |
| IPTV | Internet Protocol Television |
| ISP | Internet Service Provider |
| ITN | Independent Television Network (Sri Lanka) |
| ITU | International Telecommunications Union |
| JDS | Journalist for Democracy in Sri Lanka |
| JICA | Japan International Cooperation Agency |
| LBO | Lanka Business Online |
| LLRC | Lessons Learnt and Reconciliation Commission |
| LTTE | Liberation Tigers of Tamil Eelam |

| | |
|---|---|
| MCR | Mahaweli Community Radio (of SLBC) |
| MDI | Media Development Indicators |
| MRTC | Media Resources and Training Centre (affiliated to University of Jaffna) |
| NBN | National Backbone Network |
| NGO | Non-Governmental Organization |
| NSSL | Newspaper Society of Sri Lanka |
| OSCE | Organisation for Security and Cooperation in Europe |
| PCCSL | Press Complaints Commission of Sri Lanka |
| PSB | Public Service Broadcasting |
| PPB | Public Performances Board |
| PTA | Prevention of Terrorism Act |
| RNTC | Radio Nederland Training Centre |
| RSF | Reporters Without Borders (*Reporters Sans Frontières* in French) |
| RTI | Right to Information |
| SAARC | South Asian Association for Regional Cooperation |
| SAFMA | South Asian Free Media Association |
| SAMSN | South Asian Media Solidarity Network |
| SARD | Strategic Alliance for Research and Development |
| SIDA | Swedish International Development Cooperation Agency |
| SLBC | Sri Lanka Broadcasting Corporation |
| SLCJ | Sri Lanka College of Journalism |
| SLMMF | Sri Lanka Muslim Media Forum |
| SLMTI | Sri Lanka Media Training Institute |
| SLPI | Sri Lanka Press Institute |
| SLTMA | Sri Lanka Tamil Media Alliance |
| SLTTI | Sri Lanka Television Training Institute |
| SLRC | Sri Lanka Rupavahini Corporation (National TV Broadcaster) |
| SLWJA | Sri Lanka Working Journalists Association |
| SMS | Short Message Service (also known as text message) |
| TISL | Transparency International Sri Lanka |
| TRCSL | Telecommunications Regulatory Commission of Sri Lanka |
| WNL | Wijeya Newspapers Limited |
| UCR | Uva Community Radio |
| UNESCO | United Nations Educational, Scientific and Cultural Organisation |
| UNHRC | United Nations Human Rights Council |

உள்ளடக்கம்


நிறைவேற்று சுருக்கம். IX

*முக்கிய பரிந்துரைகள்* XI

ஊடக மறுசீரமைப்புக்கான செயலகத்தின் முகவுரை XIII

சர்வதேச ஊடக ஆதரவின் முகவுரை XIV

விசேட பங்களிப்புகள் XIV

அறிமுகம் XVII

ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்: பங்காண்மை அமைப்புகள் XX

வரைவுச்சட்டகம் மற்றும் முறைமை 02

வகை 1:

ஊடகத்தின் பேச்சு சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மையை உகந்த விதத்தில் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பு 13

அ சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம் 20

ஆ ஒலிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை 44

இ ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மட்டுப்பாடுகள் 49

ஈ தணிக்கை 61

வகை 2:

ஊடகங்களின் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை, சகல தரப்பினருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை 73

அ ஊடக செறிவு 78

ஆ பல்வகை தன்மை கொண்ட தனியார், பொது மற்றும் சமூக ஊடகம் 86

இ அனுமதிப் பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு 94

ஈ வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும் 105

உ விளம்பரம் 109

வகை 3:

ஜனநாயக சொல்லாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல் 122

அ ஊடகம் சமூகங்களின் பல்வகைமையைப் பிரதிபலித்தல். 127

ஆ பொதுச்சேவை ஒலிபரப்பு மாதிரி 131

இ ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை 142

ஈ நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள் 155

உ ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கையின் அளவு 161

ஊ பத்திரிகையாளனின் பாதுகாப்பு 162

வகை **4:**

கருத்துச் சுதந்திரம், பன்முகதன்மை மற்றும் பல்வகைமையை உறுதிப்படுத்தும் நிறுவனங்களின் தொழிற்சார் திறனை அதிகரித்தல், மற்றும் ஆதரவளித்தல் **175**

அ தொழில்சார் பயிற்சி கிடைத்தல் 178

ஆ ஊடக செயற்பாடுகள் குறித்த கற்கை நெறிகள் கிடைத்தல் 202

இ சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம் 209

வகை **5:**

சுயாதீன, பன்மைத்துவமிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் **227**

அ ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும் 232

ஆ செய்தி ஊடகம், ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல் 240

**Annexes** **269**

## List of Text Boxes

Box 1 MDI for the Bigger Picture
Box 2 Context: Freedom of Expression and Media Freedom
Box 3 Among the Other Laws that Affect Media
Box 4 What exactly is Media Pluralism?
Box 5 Cross-ownership of Media
Box 6 Spectrum as a Scarce Public Property
Box 7 An independent broadcast regulator: False start in 1997
Box 8 Guiding principles of community radio
Box 9 Community Radio in Sri Lanka: Myth and Reality
Box 10 Restricting Newspaper Advertisements by Government Institutions
Box 11 Too Much Advertising?
Box 12 Public Service Broadcasting (PSB)
Box 13 PSBs: Clarify purpose first!
Box 14 Code of Professional Practice for Lankan Media
Box 15 State Media's Conduct During Presidential Election 2015
Box 16 How Self-censorship Corrodes Democracy and Hampers Reconciliation
Box 17 Media Education, Media Studies and Journalism Education
Box 18 What Every Journalist Ought to Know…
Box 19 Raising professional standards in Sinhala and Tamil language media
Box 20 Evaluating academic courses in journalism
Box 21 Ideal Curricula for Journalism Education?
Box 22 What is Media Literacy?
Box 23 What is Media Convergence?
Box 24 Community Media for Inclusive Information Societies
Box 25 Sri Lanka's First Citizen Journalists

## List of Tables

Table 1 Overview of Media Regulatory Framework in Sri Lanka
Table 2 Different media regulatory mechanisms
Table 3 Different courses offered by Sri Lanka College of Journalism

## Annexes

Annex 1 Sources and Persons consulted
Annex 2 Research Support Team
Annex 3 Summaries of Focus Group Discussions
Annex 4 Recommendations to political parties during General Election 2015
Annex 5 Radio and Television Channels in Sri Lanka
Annex 6 Registered Institutions for Radio and TV Licence in Sri Lanka
Annex 7 Highlights of the Public Perceptions Survey 2015

# நிறைவேற்று சுருக்கம்.

இலங்கையில் ஒரு தசாப்தமாக நிலவிய சர்வதிகார ஆட்சிக்கு முடிவுகட்டி ஜனநாயகத்தை நிலைநாட்ட சிறந்ததொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தது 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல். இந்த அரசியல் மாற்றமானது வலுவானதும் பாதுகாப்பானதுமான கருத்து சுதந்திரத்திற்கும் ஊடக சுதந்திரத்திற்கும் ஒரு தளத்தை அமைத்திருக்கிறது.

புதிய அரசாங்கம் 2015 இல் அர்ப்பணிப்புடனான இடை நிலை நீதி மற்றும் சமரசத்தின் ஊடாக ஊடகத்திற்கு முக்கிய வகி பாகத்தை வழங்கியது. அரசாங்கம் ஏற்கனவே ஊடகங்களும் பத்திரிகை துறையும் எதிர்நோக்கியிருந்த அச்சுறுத்தல்களை முடிவுக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடந்த தாக்குதல்களுக்கான விசாரணைகளை ஆரம்பித்தது. அரசியல் வலைத்தளங்களை சட்டவிரோதமாக முடக்குவதையும் முடிவுக்கு கொண்டு வந்தது 19 ஆவது திருத்தச்சட்டமூலத்தின் மூலம் தகவலறியும் செயற்பாட்டினை அடிப்படை உரிமையாக்கியது.

இலங்கையில் ஊடக சுதந்திரம் மேம்படுத்தப்பட்டது. பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் உகந்த சூழல் உருவாக்கப்பட்டது. வகுக்கப்பட்ட கொள்கைகளும், சட்டங்களும், சீர்திருத்தங்களும் உறுதி செய்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

கால்நூற்றாண்டு கால போர் சூழல் இலங்கை ஊடகத்துறையில் ஏற்படுத்திய ஆழமான பிளவு இன, மத, அரசியல் ரீதியில் ஏற்படுத்தியிருந்த முனைப்புப்பெற்ற பிரச்சினைகளுக்கு அரசு முகம் கொடுக்க வேண்டி இருந்தது, அதே நேரம் ஊடகத்துறையும் துறை சார்ந்தோரும் எதிர்பாராத பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்ததோடு மக்கள் நம்பிக்கையை கட்டி எழுப்புவதும் சவாலாக இருந்தது.

ஊடக நிறுவனங்களிலும் வர்த்தக செயற்பாடுகளிலும் பொருளாதார ரீதியில் மாபெரும் சவால்கள் தலை தூக்கின நுகர்வோருக்கான தளத்தை தக்கவைத்துக்கொள்ள போராட வேண்டி இருந்தது. அநேகமான ஊடகங்கள் டிஜிடல் மற்றும் இணைய பயன்பாடுகளில் மந்தகதியிலேயே செயல்பட்டன. இதன் காரணமாக ஊடக தயாரிப்புகளுக்கும் நுகர்வோர் விருப்பங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட வருமான பற்றாக்குறையை ஈடு செய்ய சில ஊடகங்கள் தரமற்ற செய்திகளை வழங்கின. அடுத்த கட்டமாக வதந்திகளையும் கிசுகிசுக்களையும் தரத்தொடங்கின.

மக்கள் விருப்பத்தினை பூர்த்தி செய்யும் பத்திரிகையாளர்களும் பதிப்பாசிரியர்களும் தமது சேவையை ஆற்ற முடியாமல் அரசியல் அல்லது இன மழுங்கடிக்கப்படும் நிலை, ஊடகம் சார்ந்த மக்கள் நம்பிக்கை மிகக்குறைவாக இருப்பதாக கணக்கெடுப்புகள் ஆதாரம் காட்டுகின்றன. இளைய தலைமுறை இணையங்களையும் சமூக வலைத்தளங்களையுமே நாடுகின்றது.

அச்சு ஊடகங்களை பொறுப்புடன் நிர்வகிப்பதன் பொருட்டு 2003 ஆம் ஆண்டு

இலங்கை அச்சு ஊடக முறைப்பாட்டு ஆணையகத்தின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையே கொண்டிருந்தது. புறக்கணிக்கும் பத்திரிகை நிறுவனங்களில் அதன் தீர்ப்புக்களை செயல்படுத்தும் அதிகாரம் இருக்கவில்லை.

கடந்த இரண்டு தசாப்தங்களாக எந்த ஒரு வானொலி தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் பொறுப்புக் கூறும் பொறிமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. தொடர்ந்து வந்த அரசுகள் தமது அரசியல் ஆதரவாளர்களுக்கு ஒலி ஒளிபரப்பு உரிமங்களை வழங்கியிருந்தன. இதனால் அலைவரிசைக்கான வரம்புகள் மீறப்பட்டு பொதுச்சொத்து வீணடிக்கப்பட்டு சிக்கலான நிலை ஏற்பட்டது. சுயாதீன ஒலிபரப்பு கட்டுப்பாட்டின் மூலமே இதனை சீர்படுத்த முடியும்.

இந்த மதிப்பீடானது ஒரு நாட்டினுடைய ஊடகத்துறையின் வளர்ச்சியை அளவீடு செய்ய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக கட்டமைப்பைக்கொண்டு யுனெஸ்கோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஊடக வளர்ச்சிக்குறியீடுகளை (MDis) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் ஊடகச்சூழல் பற்றிய ஆய்வாகும். MDis யானது பலம் பலஹீனம் என்பவற்றை அடையாளம் கண்டு ஆதாரங்களை முன்வைத்து ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக பன்மைத்துவம் என்பவற்றை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் முன்மொழியும்.

இந்த மதிப்பீடானது ஊடக சீர்திருத்தத்திற்கான தேசிய செயலகத்தினால் ஐந்து பேர் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டு, இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் ஏற்பாட்டில் 2015 மார்ச் மாதம் கொள்கை வகுப்பாளர்கள், ஊடக உரிமையாளர்கள், ஊடக பயிற்சியாளர், ஆராய்ச்சியாளர்கள், விவாதக்குழு, மற்றும் ஊடக நுகர்வோரான பொதுமக்களுடனான சந்திப்பொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது சம்பந்தமான விவாதம் 2015 மே மாதம் ஊடக சீர்திருத்தங்கள் தேசிய உச்சி மாநாட்டில் இடம்பெற்றது. முக்கிய ஊடக பங்குதாரர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, மூளைசாளிகளுடனான அமர்வில் பெறப்பட்ட ஒரு பெரிய மாதிரி கணக்கெடுப்பு 250 இற்கு மேற்பட்ட பங்குதார்கள், சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் மீள் பரிசீலனை செய்யப்பட்டது,

இவற்றில் சில சீர்திருத்தங்களை தொழில்சார் ஊடகங்களும் நிறுவனங்களும் தாமாகவே கொண்டுவரவேண்டும். சட்டங்கள், அரசின் கொள்கைகள் ஆகியவற்றில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதனாலும் பிராந்திய ஊடகங்களை புதுப்பித்தும் ஏனைய சீர் திருத்தங்களை மேற்கொள்ளலாம். அதேநேரம் ஊடகவியலும் வெகுசன ஊடக கற்கை நெறிகளும் மீள் பரிசீலனை செய்யப்படுவதுடன் தற்கால தொழில்சார் தேவைகளும் ஊடக நுகர்வின் பாங்கும் மேம்படுத்தப்படல் வேண்டும். சட்ட ஊடக அறிவு சமுதாய மட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

ஊடக அபிவிருத்தி சுட்டிகள் ஐந்து வகை கருப்பொருளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து அத்தியாயங்களில் முக்கிய பரிந்துரைகளாக தொகுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்திற்கு இலங்கையில் ஒரு சுதந்திரமான பன்முகத்தன்மையுள்ள ஊடகத்துறையை ஏற்படுத்த என்ன செய்யவேண்டுமென்பதை அரசாங்கம் மற்றும்

ஊடக பங்குதாரர்களுக்கான பரிந்துரையை இந்த ஆய்வு வெளிப்படுத்துவதாக கருதப்படுகிறது.

## *முக்கிய பரிந்துரைகள்*

- **சட்ட மீள் ஆய்வும் திருத்தமும்:** சர்வதேச மனித் உரிமை சட்டங்கள் மற்றும் விதி முறைகளுக்கு முரண்படாத வகையில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் அனைத்து சட்டங்களையும் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும்.

- **RTI:** தகவல் உரிமைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பொதுத்துறையில் கூடுதலான வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும்.

- **ஊடக உரிமை:** ஊடக உரிமையாளர் பற்றிய விபரங்கள் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் இருக்கும்படியாக நிபந்தனைகள் இயற்றப்பட வேண்டும்.

- **ஊடக கட்டுப்பாடு:** 1973 ஆம் ஆண்டு பிரஸ் கவுன்சில் ACT No. 5 நீக்கபட்டு பிராந்திய பிரஸ் கவுன்சில் முறையை நீக்கக் கோருவதுடன் அதற்குப்பதிலாக அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை உள்ளடக்கியதான சுய ஒழுங்குமுறை சரியான முறையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- **ஒலிபரப்பு விதிமுறைகள்:** வெளிப்படையான ஒலிபரப்பு உரிமத்தை உறுதி செய்யும் புதிய சட்டங்கள் அவசியம். தேவையான அளவு அலைவரிசைகள் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்படல், பொது, வணிக மற்றும் சமூக ஒலிபரப்பாளர்கள் என மூன்றடுக்கு முறை பேணப்பட்டு அரசியல் மற்றும் தேர்தல் கடமைகளில் பாரபட்சமற்ற சீரான முறையில் உள்ளடக்குதல். சுதந்திரமான ஊடக முறை அமைக்கப்பட வேண்டும்.

- **டிஜிட்டல் ஒலிபரப்பு:** அரசாங்கம் தொலைக்காட்சி ஒளிபரப்பினை அனலாக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு மாற்றுவது பற்றிய தெளிவான திட்டத்தினையும் காலவரிசையினையும் விரைவாக உருவாக்க வேண்டும்.

- **அரச ஊடகங்களின் மறுசீரமைப்பு:** மூன்று அரச ஒலிபரப்பாளர்களும் சுயாதீன பொது சேவை ஒலிபரப்பாலராகவும் உத்தரவாதமுள்ள சுதந்திர ஆசிரிய பீடமாக மாற்றப்பட வேண்டும். அரசுக்கு சொந்தமான லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் ஆசிரியபீடத்தின் சுதந்திரத்துடன் சுயாதீனமாக இயங்க வேண்டும்.

- **தணிக்கை:** எந்த ஒரு ஊடகத்தின்மீதும் முன் தணிக்கை விதிக்கப்படக்கூடாது. அவசியமானால் வெளியீட்டின் பின்னர் நீதிமன்றங்கள் சட்டபூர்வமாக ஊடக உள்ளடக்கத்தை மீளாய்வு செய்து சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் அமைய அனுமதிக்கப்பட்ட தணிக்கையின் படி திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

  அரசாங்கம் ஆன் லைன் உள்ளடக்கங்களையோ சமூக ஊடக செயல்பாடுகளையோ முடக்க எத்தனிக்கக்கூடாது.

- **ஊடகக்கல்வியும் எழுத்தறிவும்:** மூன்றாம் நிலைக்கல்வி மட்டத்தில் இதழியல் மற்றும் வெகுசன ஊடகக்கற்கை நெறியானது தற்போதைய தொழில் தேவைகளையும் நுகர்வு வடிவங்களையும் கொண்டதாக புதுப்பிக்கப்பட வேண்டும். இணைய

கல்வியறிவையும் ஊடகக்கல்வியறிவையும் மேம்படுத்த ஒரு தேசியக் கொள்கையும் அவசியமாகும்.

இதில் கண்டறியப்பட்டவையும் பரிந்துரைகளும் நாட்டின் வரலாற்றில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் ஜனநாயக சீர்திருத்தம் உருவாகியிருக்கும் முக்கியமான தருணத்தில் வழங்கப்படுகிறது. இந்த அருமையான சந்தர்ப்பம் கைகூடுமென நம்பப்படுகிறது.

ஒட்டுமொத்த ஊடகத்தொழில் முறை சூழலை ஒழுங்குபடுத்த முற்போக்கான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நெறிமுறைகள் கைகொடுத்தாலும் ஊடக நிறுவனமும் அதன் பணியாளர்களுமே அவர்களது தரத்தையும் நெறிமுறைகளையும் உயர்த்த முடியும்.

# ஊடக மறுசீரமைப்புக்கான செயலகத்தின் முகவுரை

கடந்த சில தசாப்தங்களாக ஊடகத்துறையானது துரிதமான பல மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. இவ்வித மாற்றங்களானது ஊடகத்துறையிலும் ஊடகத்தை நுகர்கின்ற பொதுமக்கள் மத்தியிலும் நேரடியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தனிப்பட்ட வாழ்க்கை, மனப்பாங்குகள், சிந்தனைகள், விருப்பங்கள், நம்பிக்கைகள், கருத்தியல்கள் போன்றவற்றை வடிவமைப்பது தொடர்பான சமூகத்தின் அரசியல், கலாசார, பொருளாதார அம்சங்கள் தொடர்பில் நெறிப்படுத்தல்களில் ஊடகமானது செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இவ்வித விடயங்களை நாம் காத்திரமாக ஆய்வுக்குட்படுத்தி விமர்சிக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் ஊடகத்துறையானது பெரும்பாலும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளின் காரணமாக வளர்ந்துள்ளது. தேசிய அபிவிருத்தியிலும் தேசிய ஒருங்கிணைப்பிலும் ஊடகத்தின் கூட்டிசைவான தொலைநோக்கு வகிபாகத்தைக் கருத்திற்கொள்ளாமல் அரசாங்கம், ஏனைய அக்கறையுள்ள தரப்பினர் மற்றும் கூட்டுத்தாபன உரிமையாளர்கள் உள்ளடங்கலாக ஊடக உள்ளடக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்சமயம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஜனநாயகம் மற்றும் அரசியல் ரீதியான மறுசீரமைப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்குத் தெளிவான ஊடகக் கொள்கைகள் மற்றும் ஊடகத் துறையுடன் தொடர்புடைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் ஆகியவற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

பாரியளவிலான பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் மேற்கொள்ளப்படும் பரந்தளவிலான ஆலோசனை மூலம் ஊடகத்துறை, ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், ஊடகப் பரிந்துரைக் குழுக்கள் ஆகியன இவற்றை மேற்கொள்ள முடியும். இவ் அறிக்கையானது பயன்மிக்க நிலைமைகள் பகுப்பாய்வுகள் அத்தோடு கொள்கை ரீதியான நெறிப்படுத்தல்கள், விதப்புரைகள் ஆகியவற்றை வழங்குகின்றது. நாம் இங்கு குறிப்பிட்டுள்ள பாதையில் எம்மோடு கைகோர்த்துப் பயணிப்பதற்கு அரசாங்கம், அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், கல்வியயலாளர்கள், ஊடகத்துறை ஆகியன கைகோர்த்துக் கூட்டிணையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

டாக்டர் பிரதீப் என் வீரசிங்க
ஊடக மறுசீரமைப்புக்கான செயலகத்தின் தலைவர் மற்றும் தொணிப்பொருள் சார் தலைவர்.

# சர்வதேச ஊடக ஆதரவின் முகவுரை

யுனெஸ்கோவின் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் ஊடகத்துறை தொடர்பான முதலாவது பூரணத்துவம் மிக்க மதிப்பீடு ஒன்றுக்கான இணை வெளியீட்டாளர்களாகத் திகழ்வதில் சர்வதேச ஊடக ஆதரவு மகிழ்ச்சியடைகிறது. ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகளானது வரைவுச்சட்டகமொன்றை வரையறை செய்கின்றது. இதன் மூலம் நல்லாட்சி மற்றும் ஜனநாயக ரீதியான அபிவிருத்திகள் ஆகியவற்றுக்கு ஊடகம் சிறந்த பங்களிப்புகளை நல்குவதுடன் அவற்றிலிருந்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மறுசீரமைப்பிற்கான வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு நிலைமாற்றுக்கால நீதி, நல்லிணக்கம் ஆகியன தொடர்பான பொறுப்புகள் அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க இத்தருணத்தில் இவ் ஆய்வின் கண்டறிதல்களும் விதப்புரைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன. இத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்ற தருணத்தில் இயங்காற்றல்மிக்க பகிரங்க பண்மைத்துவம் மிக்க ஊடகம் சார்ந்த சூழலானது சாதகமான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதுடன் பக்கச்சார்பற்ற துல்லியமான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்களையும் இவை தொடர்பில் ஈடுபடுத்த முடியும்.

2015 மார்ச் ஆரம்பத்தின் பொழுது அரசாங்கம், கல்வியியலாளர்கள், ஊடகத்துறை, சிவில் சமூகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இலங்கையில் MDI (ஊடக அபிவிருத்தக் குறிகாட்டிகள்) மதிப்பீட்டுச் செயற்பாடுகளானது முழுமையாக உள்ளூர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயன்முறை என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2003 ஆம் ஆண்டு முதல் IMS ஆனது இலங்கையில் ஊடக அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. தற்போதைய ஊடகம் சார் சூழல்கள் மற்றும் அதன் ஆரோக்கியமான அபிவிருத்திக்கு எவ்விதமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் போன்றன தொடர்பில் இவ் அறிக்கையானது அரசாங்கத்திற்கு எடுத்துரைக்குமென நாம் நம்புகின்றோம்.

ஜெஸ்பர் ஹெச்போர்க்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சர்வதேச ஊடக ஆதரவு

மே 2016

# விசேட பங்களிப்புகள்

இலங்கையில் ஊடக அபிவிருத்திக்கான ஒட்டுமொத்த சூழல் தொடர்பான பூரணத்துவமிக்க மதிப்பீடு ஒன்றினை இந்த மதிப்பீடு வழங்குகின்றது. யுனெஸ்கோவின் MDI (ஊடக அபிவிருத்தக் குறிகாட்டிகள்) வரைவுச் சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு இது மேற்கொள்ளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடப்படுகிறது. சட்ட ரீதியான வரைவுச்சட்டகம், பொருளாதார நிலைமைகள், மனித வளங்கள் அபிவிருத்தி, தொழில்நுட்பம் சார் சூழல்கள், பாதுகாப்பு, நாட்டின் ஊடகத் துறை அபிவிருத்தியில் உண்மையான நிலைப்பாடு ஆகியன உள்ளடங்கலாக ஊடக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய மாறுபட்ட அம்சங்களை இது ஆராய்கின்றது.

ஏற்கனவே மொத்தமாக 14 MDI மதிப்பீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பூட்டான், மாலைதீவு, நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகளில் 3 மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 16 மதிப்பீடுகள் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. சர்வதேச தராதரங்களுடன் ஒப்பீடு செய்து ஊடகம் சார் சூழல் தொடர்பான பலன்களையும் பலவீனங்களையும் அடையாளங்காண்பதே MDI மதிப்பீட்டின் இலக்காகும். இதன் மூலமாக தேசிய ரீதியான மறுசீரமைப்புகளுக்கு இது வழிவகுக்கின்றது. முன்னுரிமைகளை இனங்கண்டு அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது உள்ளூர்ப் பங்கீட்டுப்பாட்டாளர்களது பொறுப்பாகும். இந்த MDI மதிப்பீடுகளானது ஒரு வகையான தரப்படுத்தல்களோ அல்லது நாடுகளுக்கிடையிலான ஒப்பீடுகளோ அல்ல.

இலங்கையில் முக்கியமானதொரு தருணத்தில் இந்த மதிப்பீடுகள் வெளிவருகின்றன. தகவல் அறியும் உரிமை தொடர்பில் அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதங்களை மேற்கொள்வதன் பொருட்டு அரசியலமைப்பு ரீதியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இத்தருணத்தில் ஊடக மறுசீரமைப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தை நாடு மேற்கொண்டு வருகிறது. ஊடக மறுசீரமைப்புத் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்னுரிமைகள் மற்றும் பிரதான நெறிப்படுத்தல்கள் ஆகியவற்றை இனங்காண்பதற்கு ஏதுவாக பெறுமதியான கருவிகளை இந்த மதிப்பீடு பிரதிநிதித்துவம் செய்கிறது.

MDI அணுகுமுறைகளின் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகபூர்வ மற்றும் சிவில் சமூகப் பங்காளர்களின் ஈடுபாட்டுடன் விசேடமாக இலங்கை ஊடக அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழக ஊடகத் திணைக்களம், இலங்கைப் பத்திரிகை நிறுவகம், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான உபாய ரீதியான கூட்டமைப்பு (SARD) சர்வதேச ஊடக ஆதரவு (IMS) ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

அண்மைய தசாப்தங்களில் இலங்கையில் ஊடக அபிவிருத்தியானது குறிப்பிடக் கூடியளவு உறுதியாகவுள்ளது

என்பதையும் பல்வேறு விதமான சுதந்திர ஊடகத் துறை மூலம் நாடு தற்சமயம் நன்மையடைந்துள்ளது என்பதையும் இம்மதிப்பீட்டின் மூலம் தெளிவாக உணர முடியும். அதேவேளையில் ஊடகம் தொடர்பான காத்திரமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கும் அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது தெளிவாகும். இவற்றுள் சட்ட ரீதியான சீர்திருத்தங்கள், சிறப்பான கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான வாய்ப்புகள், ஊடகத்திற்கென காத்திரமான பொருளாதார ரீதியான சுற்றாடலொன்றை உருவாக்குதல், ஊடகச் சுதந்திரத்திற்கென கட்டமைப்பு ரீதியான உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்தல் போன்றன சிலவாகும்.

முன்னோக்கிப் பயணிப்பதற்கான விடயங்களை இந்த மதிப்பீடு எடுத்துரைக்கிறது. இந்த விதப்புரைகளை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவது உள்ளூர் செயற்பாட்டாளர்களிடம் காணப்படுகிறது.

டாப்பி மென்டல்
நிறைவேற்றுப் பணிப்பாளர், சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையம்.

# அறிமுகம்

ஊடகத்தின் ஜனநாயக, சமூக மற்றும் கலாசார ரீதியான முக்கியத்துவங்கள் இந்த முக்கிய வெளியீட்டிற்கான நியாயப்பாடுகளைப் புலப்படுத்துகின்றன. கோணல்மாணலாகக் காணப்படுகின்ற எமது ஊடக முறையிலுள்ள சமத்துவமின்மைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக உருவாக்கப்பட்ட பல முக்கிய விதப்புரைகளைக் கொண்டதாக இது காணப்படுகிறது. பல்வேறு விதமான உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த விமர்சனங்களுக்கும் இது உட்பட்டது. பல்வேறு விதமான விமர்சனங்களின் காரணமாக எமது ஊடகங்கள் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையிழந்தும் காணப்படுகிறது.

ஊடக அபிவிருத்தியை அளவிடும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட மிக நவீன யுனெஸ்கோவின் வரைவுச்சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டும் ஊடகத் தொழில்வாண்மைமிக்கவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆய்வுக் குழுவை உள்ளடக்கியும் அரச மற்றும் அரச சாராத செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் இணைந்தும் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

யுனெஸ்கோ முறைமையில் விபரிக்கப்பட்டுள்ள ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்பான 5 வகைகளை அடிப்படையாகக் கொண்டு கடந்தகால கற்கைகளை இவ் ஆய்வுக் குழு மீளாய்வு செய்ததுடன், சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்து மையக்குழுக் கலந்துரையாடல் மூலம் தகவல்களைத் திரட்டி ஊடக தொழில்வாண்மை மிக்கவர்கள் மற்றும் அதனைப் பயன்படுத்துபவர்களுடைய கருத்துக்களை உறுதிப்படுத்தும் முகமாக இரண்டு மாதிரி ஆய்வுகளை மேற்கொண்டதோடு, இவை தொடர்பில் நம்பகமிக்க சான்றுகளைத் திரட்டும் முகமாக பல்வேறு விதமான பங்கீட்டுப்பாட்டாளர்கள் மற்றும் மூளைசாலிகள் ஆகியோரையும் பேட்டி கண்டது. பரந்துபட்ட தரப்பினரிடமிருந்து அவர்களது அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இக்குழுவானது தொடர்ச்சியாக பல்வேறு விதமான நகல் அறிக்கைகளை அவர்களுக்கு வழங்கியது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட காத்திரமான மீளாய்வுச் செயன்முறையின் பின்னர் கண்டறிதல்களையும் விதப்புரைகளையும் உள்ளடக்கிய இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த மதிப்பீட்டுச் செயன்முறையை பூரணப்படுத்துவதற்கும் இவ் வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டுள்ள சான்றுரைகள் தொடர்பில் இணக்கப்பாடுகளை அடைவதற்கும் சுமார் ஒரு வருடகாலம் சென்றது.

ஜனநாயக சமூகமொன்றில் தனி நபர்களுக்கும் குழுக்களுக்கும் இடையிலான தொடர்புகளானது, உதாரணமாக பிரஜைகளுக்கும் அரசாங்கத்திற்கும் அல்லது நுகர்வோருக்கும் கைத்தொழில் துறையினருக்கும் இடையிலான தொடர்பாடல்கள் போன்றன முழுச் சமூகக் கட்டமைப்புத் தொடர்பான பின்னூ ட்டல்களைப் புலப்படுத்துவதுடன், இவை முறையாக செயற்படுவதற்கு அவசியமான

விடயங்களையும் எடுத்துரைக்கின்றன. அறிவைப் பரப்புவதற்கான முக்கிய கருவியாக தொடர்பாடல் முறை திகழ்கின்ற அதேவேளை, ஏனைய பல பெறுமதிகளையும் தன்னகத்தே கொண்டதாக இது திகழ்கின்றது.

முன்னெப்போதும் இல்லாதளவிற்கு எமது பெறுமானங்களை அல்லது பெறுமதிகள் தொடர்பில் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டியுள்ளது. இவற்றை நீதி, சமத்துவம், சுதந்திரம், பகிர்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்வது சிறப்பானதாகும். இவை யாவும் எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய விடயங்களாகத் திகழ்கின்றன. இதன் நிமித்தம் சுயாதீனமான, சுதந்திரமான, வினைத்திறன்மிக்க, பன்மைத்துவம்மிக்க ஊடக முறை எமக்கு அவசியப்படுகின்றது.

இங்கு "சுயாதீனம்" அல்லது சுதந்திரம் எனும் பொழுது தனிப்பட்ட தலையீடுகளோ அல்லது தனிப்பட்ட நலன்களோ அற்றதாகவும் அரசாங்கம் மற்றும் பல்வேறு அழுத்தக் குழுக்களில் பலவந்தம் அற்றதாகவும் ஊடகம் திகழ வேண்டும். ஊடகவியலாளர்கள் தமது தொழில்வாண்மை மிக்க தராதரங்களைப் பேணுவதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் சமூகமும் அரசும் அனுமதித்தல் வேண்டும். ஊடகங்கள் இவ்விதமான சுயாதீனத் தன்மைகளைப் பிரயோகிக்கின்ற அதேவேளை, அவற்றின் நேர்மை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படல் வேண்டும். இது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிப்பதாகும். அதேவேளை, வாசகர்கள், நேர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகியோரைக் கருத்திற்கொள்ளாமல் தரக்குறைவாக வழங்கப்படும் தகவல்களை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இங்கு "சுதந்திரம்" எனும் பொழுது ஊடகத் துறையின் உரிமை எவரைச் சார்ந்ததாகவிருந்த போதிலும் கூட தங்குதடையற்ற ஊடகம் சார்ந்த சுதந்திரங்கள் பதிப்பாசிரியர் சார்ந்த சுதந்திரங்கள் காணப்படல் வேண்டும். இவ்விதமான பதிப்பாசிரியர் சார்ந்த சுயாதீனத் தன்மைகளின் மூலம் ஊடகமானது சுயாதீன சிந்தனை தொடர்பிலான சான்றுகளைப் புலப்படுத்துவதுடன் அதிகாரமிக்க பல அமைப்புகளது செயற்பாடுகளை மேற்பார்வை செய்யவும் முடியும். இது அரசாங்கத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படல் கூடாது. சுயாதீன தன்மை மிக்க உள்ளடக்க வெளியீட்டுடன் கூடிய ஊடகமானது மக்கள் செய்திகளையும் தகவல்களையும் பகிரங்கமாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருத்தல் வேண்டும். அவர்களது கருத்துக்களையும் விருப்பங்களையும் வலுப்படுத்தக் கூடிய அபிப்பிராயங்களைக் கொண்டதாக இவை இருத்தல் கூடாது.

ஊடகமானது உண்மையில் பண்மைத்துவம் மிக்கதாகத் திகழாத வரையில் வெறுமனே ஊடகச் சுதந்திரம் பதிப்புரிமை சார்ந்த சுதந்திரம் என்பன போதாமைகளாகின்றன. அதாவது சமூகத்தின் பல்வேறு மட்டங்களைச் சார்ந்த மக்களின் கருத்துக்களைப் போதியளவு பிரதிநிதித்துவம் செய்யக் கூடியதாக இவை இருத்தல் வேண்டும். இருப்பினும் பல்வேறு விதமான ஊடகக் கம்பனிகள், நிலையங்கள் ஆகியன காணப்படுவதை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஊடகச் சுதந்திரம் காணப்படுகின்றது என நாம் கருத

முடியாது. ஒரு குறிப்பிட்ட வகையில் தமது வெளிப்பாடுகள் காணப்படல் வேண்டுமென இவை பலவந்தப்படுத்தப்படுகின்ற பொழுது ஊடகப் பண்மைத்துவத்தை அவதானிக்க முடியாது. இவ்விதமான விடயங்களை இலங்கையர் என்ற முறையில் நீண்டகாலம் நாம் அனுபவித்து வருகின்றோம்.

ஊடகப் பண்மைத்துவம் என்ற வார்த்தையை வெறுமனே சந்தைப்படுத்தல் சார்ந்த நலன்களுக்கும் போட்டித்தன்மைகளுக்கும் மாத்திரம் பிரயோகிக்க முடியாது. ஊடகமானது அரசியல்மயப்படுத்தல் நுகர்வோரை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள், விற்பனையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும். பொதுமக்கள் மத்தியில் தொடர்பாடல்களை மேம்படுத்தக் கூடிய ஜனநாயகக் கருவியாக இது திகழ வேண்டும்.

எனவே, நாட்டில் காணப்படுகின்ற ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கையினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இதனை அளவிட முடியாது. சமூகத்தில் காணப்படுகின்ற சமத்துவமின்மைகளுக்கு எதிராக சவால் விடுக்கும் ஆற்றல் ஜனநாயகத் தன்மை மிக்க அனைவரையும் உள்ளடக்கிய அம்சங்கள், அது வழங்குகின்ற தகவல்களின் தரம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இவற்றைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பிரதான விதப்புரைகள் இலக்குகளை அடைவதற்கு அவசியமான சட்ட ரீதியான மறுசீரமைப்புகள் மற்றும் அரச கொள்கைகள் ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன. அரசாங்கம், சகல அரசியல் கட்சிகள், சட்டங்களை உருவாக்குபவர்கள் ஆகியோர் கூட்டாக இணைந்து இத்தகைய மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வினையமாக நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவில் சமூகம், ஊடக அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், வெளியீட்டாளர்கள், ஏனைய அமைப்புகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான நிதியிடல் முகவர்கள் உள்ளடங்கலாக ஏனைய பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கும் பல்வேறு விதமான முக்கிய விதந்துரைகள் அனுப்பிவைக்கப்பட்டன. இலங்கையில் இயங்காற்றல் மிக்க ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக்கூடிய உண்மையான சுயாதீனத் தன்மை, சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்ட பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு பன்மைத்துவம் மிக்க ஊடக முறை எமக்கு அவசியப்படுகின்றது.

விஜயானந்த ஜயவீர,
முன்னாள் பணிப்பாளர், தொடர்பாடல் அபிவிருத்திப் பிரிவு, யுனஸ்கோ தலைமையகம், தொடர்பாடல்களை விருத்தி செய்வதற்கான யுனஸ்கோ சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் (2003-2011), ஆய்வுக் குழுக்களுக்கான ஆலோசகர்.

## ஊடக மறுசீரமைப்புகளுக்கான செயலகம்: பங்காண்மை அமைப்புகள்

### பாராளுமன்ற மறுசீரமைப்புகள் மற்றும் ஊடக அமைச்சு

பண்மைத்துவமிக்க இயங்காற்றல் மிக்க சமூகமே இவ் அமைச்சின் தெலைநோக்கு என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பணியானது "மக்கள் நேய, அபிவிருத்தி மைய, சுயாதீன மற்றும் பொறுப்புள்ள இலங்கை ஊடக கலாசாரமொன்றைத் தோற்றுவிக்கும் முகமாக கொள்கைகளையும் உபாய முறைகளையும் உருவாக்குவதற்கென இலகுபடுத்தல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல்" என்பதாகவும் உள்ளது.

### ஊடகத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்

மக்களது வறுமையை இல்லாதொழித்து அபிவிருத்தி ரீதியான கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பிரதான உபாய முறைக்கான மூலம் ஊடகமாகும். இத்துறையை நாட்டில் முன்னெடுத்துச் செல்கின்ற ஊடகச் செயற்பாட்டாளர்களினால் இந்தப் பிரதான நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் காணப்படுகின்றது. இதனை நாம் இனங்காணும் பொழுது நிச்சயம் அது நாட்டின் சுபீட்சத்திற்கு இட்டுச் செல்லும். வெற்றிகரமான தொடர்பாடல் முறைகள் மூலம் நாட்டின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களை அடைய முடியுமென ஊடகப் பல்கலைக்கழகமான சிறி பாலி வளாகம் கருதுகிறது. (http://spc.cmp.ac.lk/?q=Department _Mass_Media).

### சர்வதேச ஊடக ஆதரவு (IMS)

ஆயுத முரண்பாடுகள், மனித பாதுகாப்பின்மை, அரசியல் நிலைமாற்றம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் பணியாற்றுகின்ற இலாபம் கருதாதோர் அமைப்பே சர்வதேச ஊடக ஆதரவு ஆகும் (IMS). இலவச தொழில்வாண்மை மிக்க ஊடகத்திற்காக நாம் செயற்படுகின்றோம். (www.mediasupport.ortg)

### இலங்கை பத்திரிகை நிறுவகம் (SLPI)

1998 இல் உதயமான ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புகள் தொடர்பான கொழும்பு பிரகடனம் மற்றும் 2008 இல் இது மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் நவீன ஊடக ரீதியான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு செயற்படுவதை இலங்கை பத்திரிகை நிறுவகத்தின் நோக்கமாகும். எனவே, யுனஸ்கோவின் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் வரைவுச் சட்டகத்தின் மூலம் இலங்கையில் ஊடக கலாசாரம் தொடர்பிலான புரிதல்களை உள்வாங்கி செயற்படுவதன் காரணமாக ஊடகத்துறை தொடர்பில் இதுவோர் முக்கிய அங்கமாகக் காணப்படுகிறது (www.slpi.lk).

### ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான உபாய ரீதியான கூட்டமைப்பு (SARD)

சிவில் சமூக அமைப்பு என்ற வகையில் SARD ஆனது வாசகர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஊடகங்களை அணுகுகின்ற அதேவேளை அபிவிருத்திச் செயற்பாட்டில் ஊடகமும் ஒரு முக்கிய அங்கமெனக் கருதிச் செயற்படுகின்றது. எனவே பண்மைத்துவமிக்க பல்வேறு வகையான கருத்துக்களை மேம்படுத்தும் நோக்கத்திலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையிலும் ஞயுசுனு செயற்படுகின்ற அதேவேளை, அபிவிருத்திச் செயற்பாடுகளில் மக்களது பங்களிப்புகளை அதிகரிக்கக் கூடிய வழிமுறைகளையும் மேற்கொள்கிறது (www.sardglobal.org).


ජනමාධ්‍ය
வெகுசன
Mass Media
Reforms
ජාතික සමුළුව
මැයි 13 - 14

# வரைவுச்சட்டகம் மற்றும் முறைமை

## கருத்தார்ந்த வரைவுச்சட்டகம்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பான யுனஸ்கோவினால் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவுச்சட்டகத்தின் பிரகாரம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இது "ஊடக அபிவிருத்திக்கான குறிகாட்டிகள் என அழைக்கப்படுகிறது: ஊடக அபிவிருத்தியை மதிப்பிடுவதற்கான வரைவுச்சட்டகமாகும்". 2008 இல் யுனஸ்கோவின் அபிவிருத்தி மற்றும் தொடர்பாடலுக்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் யுனஸ்கோவின் அரசாங்கங்களுக்கு இடையிலான சபை மூலம் இந்த வரைவுச்சட்டகம் உருவாக்கப்பட்டது. சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்ட கலந்துரையாடல்கள் மூலம் இந்த ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் 2006-7 இல் உருவாக்கப்பட்டன.

குறிப்பிட்ட நாடொன்றில் ஊடக அபிவிருத்தி தொடர்பான மதிப்பீடுகளை சகல பங்கீட்டுப்பாட்டாளர்களும் அளவிடுவதற்கான முக்கிய வரைவுச்சட்டகமாக MDI காணப்படுகிறது. எவ்வெவ் விடயங்களில் உதவி முக்கியமாக அவசியப்படுகின்றன என்பதை இதனை அடிப்படையாகக் கொண்டு இனங்காண முடியும். ஊடகத்தின் தன்மையை மதிப்பிடல், அதன் பலத்தையும் பலவீனத்தையும் இனங்காணல், ஊடக சுதந்திரம், ஊடக பண்மைத்துவம், ஊடக சுயாதீனம் ஆகியவற்றை எவ்வாறு வலுப்படுத்துவது என்பதை சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட விதப்புரைகள் மூலம் பிரேரித்தல் மற்றும் பலம், பலவீனம் ஆகியவற்றை இனங்காணல் போன்றவற்றுக்கும் இது உதவுகிறது.

MDI உருவாக்கப்பட்டதிலிருந்து ஆபிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் 15 நாடுகளில் MDI இனை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் மற்றும் கொள்கை உருவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊடக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி ஆகியன தொடர்பில் நாடுகளின் அடிப்படையில் ஊடக அபிவிருத்தி தொடர்பில் ஐ.நா. வின் பொது அணுகுமுறை வரைவிலக்கணத்தில் MDI அணுமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

## பல பங்கீட்டுப்பாட்டாளர்களைக் கொண்ட கலந்தாராய்வு செயன்முறை

இலங்கையில் ஊடக மறுசீரமைப்புக்கான பங்காண்மையாக MDI மதிப்பீடுகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டன.

1 http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/media-development-indicators-a-framework-for-assessing-media-development/

2 MDIs have been produced so far for: Bhutan, Croatia, Ecuador, Egypt, Gabon, Jordan, Libya, Mozambique, Nepal, Palestine, South Sudan, The Maldives, Timor Leste and Tunisia. As at October 2015, assessments were ongoing in Bolivia, Brazil, Colombia, Côte d'Ivoire, the Dominican Republic, Iraq, Liberia, Madagascar, Mongolia, Morocco, Myanmar, Rwanda, Swaziland, Togo, Uganda and Uruguay, as well as a regional project in South-East Europe.

தொடர்புடைய பங்காளர்கள்,

- ஊடக அமைச்சு (அரசாங்கப் பங்காளர்)
- ஊடகத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் (கல்வி சார் பங்காளர்)
- இலங்கை பத்திரிகை நிறுகவம்,SLPI (ஊடகத்துறைப் பங்காளர்)
- அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான உபாய ரீதியான கூட்டமைப்பு, SARD (நடைமுறைப்படுத்தும் பங்காளர்)
- சர்வதேச ஊடக ஆதரவு, IMS (நிதியிடல் மற்றும் கலந்தாலோசனை பங்காளர்)

சகல பங்கீட்டுப்பாட்டாளர்களதும் பங்களிப்புகளை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் இதன் ஒட்டுமொத்த இலக்காகும். இதற்கான செயன்முறைகளை முன்னெடுத்தல் மற்றும் இலங்கையில் ஸ்திரத்தன்மை மிக்க அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற ஊடக கட்டமைப்பு மறுசீரமைப்புகளை இலகுபடுத்துவதும் இதன் நோக்கமாகும்.

3 http://www.sardglobal.org/NSSMR

BOX 01

## பரந்த தோற்றத்திற்கான ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் (MDI)

சிறந்த நல்லாட்சி, ஜனநாயக ரீதியான அபிவிருத்தி ஆகியவற்றிலிருந்து ஊடகம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் மற்றும் ஊடகத்தின் பங்களிப்புகள் தொடர்பான வரைவுச்சட்டகங்களை ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் வரையறை செய்கின்றன. ஊடகச் சுற்றாடல் தொடர்பான சகல அம்சங்களையும் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் நோக்குவதுடன், இது சுமார் 5 வகைகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- கருத்துச் சுதந்திரம், பண்மைத்துவம், ஊடகத்தின் பல் வகைமை ஆகியன தொடர்பில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒழுங்கு விதிகள்.
- பொருளாதார தளம் மற்றும் உரிமை தொடர்பான வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய பண்மைத்துவம் மற்றும் பல்வகைமையுடைய ஊடகம்.
- ஜனநாயக ரீதியான சொல்லாடல்களுக்கான களமாக ஊடகம் திகழ்தல்.
- கருத்துச் சுதந்திரம், பண்மைத்துவம்,

பல்வகைமை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தொழில்வாண்மைகளை கட்டியெழுப்புதல் மற்றும் உதவியளிக்கும் நிறுவகங்கள்.

- சுயாதீன பண்மைத்துவம் மிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்.

கருத்துச் சுதந்திரம், பண்மைத்துவம், ஊடகப் பல்வகைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய குறிப்பிட்ட நாடொன்றில் கட்டமைக்கக் கூடிய ஊடகச் சூழல் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் தோற்றத்தை இது வழங்குகின்றது.

ஒவ்வொரு ஊடக அபிவிருத்திக் குறிகாட்டியும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை பரந்த பல குறிகாட்டிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. பங்கீட்டுப்பாட்டாளர்கள் அரச ஊடகங்களை மதிப்பீடு செய்வதற்கும் ஊடக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கங்களை அளவிடுவதற்குமானதொரு பகுப்பாய்வுக் கருவியாக இக்குறிகாட்டிகள் காணப்படுகின்றன. இவை இனங்காண்பதற்கான கருவிகளேயன்றி கட்டளைகள் அல்ல. ஊடக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவும் நோக்கில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை எவ்வித நிபந்தனைகளையும் பியோகிக்கவில்லை.

பல் பங்கீட்டுப்பாட்டாளர் கலந்தாராய்வின் மூலம் இவை மேற்கொள்ளப்பட்டன. கொள்கை வகுப்பாளர்கள், ஊடக உரிமையாளர்கள், ஊடக செயற்படுத்துநர்கள், ஊடக ஆராய்ச்சியாளர்கள், ஊடக பரிந்துரைக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

அறிவார்ந்த மற்றும் தொழில்வாண்மை மிக்க வழிகாட்டிகளை வழங்கும் முகமாக நான்கு பணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

## இப்பணிக் குழுவிற்கான ஆலோசகர்:

விஜயானந்த ஜயவீர, யுனஸ்கோவின் தொடர்பாடல் அபிவிருத்திக்கான முன்னாள் பணிப்பாளர், தொடர்பாடலை அபிவிருத்தி செய்வதற்கான யுனஸ்கோவின் சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்.

## பணிக்குழு 1

## கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தல்

தலைவர்: தம்மா திசாநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்களம்.

இணைத்தலைவர்: டாக்டர் சுகத் செனரத்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சிறி பாலி வளாகம்,
கொழும்புபல்கலைக்களம்.

உறுப்பினர்கள்:

என்.எம். அமீன், தலைவர்,
இலங்கை முஸ்லிம்
ஊடக ஒன்றியம்
பிரியன் ஆர் விஜய பண்டார,
ஊடகவியலாளர்,
அதிதி விரிவுரையாளர்,
சிறி பாளி வளாகம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.
சீத்தா ரஞ்சனி, கூட்டுநர்,
சுதந்திர ஊடக அமைப்பு.

இணைத்தலைவர் :

அசோக்கா டயஸ்,
ஊடகவியலாளர்,
நாட்டுப் பிரதிநிதி,
ஆசிய ஊடக தகவல் மற்றும்
தொடர்பாடல் நிலையம்
(AMIC)

உறுப்பினர்கள்:

சுகுமார் ரொக்வூட் CEO,
இலங்கை பத்திரிகை
முறைப்பாட்டு ஆணைக்குழு
ஜகத் லியன்ன ஆராச்சி,
சட்ட ஆரோசகர், ட்ரான்பேரன்சி
இன்டர்நெஷனல் சிறிலங்கா
டீ.எம். திசநாயக்க,CEO
சியத்த மீடியா வலையமைப்பு

## பணிக்குழு 2

ஊடகப் பண்மைத்துவம் மற்றும் ஒழுங்குவிதிகள்: அரச, தனியார் மற்றும் சமூக ஊடகங்களை உள்ளடக்கிய பல்வகைமை அமைப்பு

தலைவர்: டாக்டர் பிரதீப் என் வீரசிங்க,
தலைவர்,
ஊடகத் திணைக்களம்,
சிறி பாளி வளாகம், கொழும்பு
பல்கலைக்கழகம்.

## பணிக் குழு 3

ஊடகத்தின் நேர்மை, பக்கச்சார்பின்மை, பொதுமக்கள் நம்பிக்கை ஆகியன தொடர்பான தேவைப்பாடுகள்.

தலைவர் : நாலக்க குணவர்தன,
ஊடகவியலாளர்,
ஊடக ஆலோசகர்

இணைத்தலைவர்:
சுமித் சமிந்த, சிரேஷ்ட பகுப்பாய்வாளர், அரசியல் விஞ்ஞானத் தலைவர், வேர்டைல் ஆராய்ச்சி.

உறுப்பினர்கள்
டாக்டர் ரங்கா கலன்சூரிய, ஆசியாவுக்கான பிராந்திய ஆலோசகர்

சர்வதேச ஊடக உதவி:
குமார் லோப்பர் CEO, இலங்கை

பத்திரிகை நிறுவகம் SLPI சேனாதி ஹரிஸ்சந்திர, சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்களம் மற்றும் ஊடக தொடர்பாடல்கள்

திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

பணிக்குழு 4
தொழில்வாண்மை ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஊடகக் கல்வி

தலைவர் : பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, தலைவர், ஊடக தொடர்பாடல் திணைக்களம், களனிப் பல்கலைக்களம்.

இணைத்தலைவர்:
விஜயானந்த ரூபசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர், ஊடக தொடர்பாடல் திணைக்களம், களனிப் பல்கலைக்களம்.

உறுப்பினர்கள்:
திளின சமரசூரிய, பணிப்பாளர், பயிற்சி மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC).
ரீ.எம்.ஜி. சந்திரசேகர, பணிப்பாளர், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி,

4 http://www.ft.lk/article/448711/Journalists-call-for-political-commitment-for-media-reform-and-freedom-of-expression

5 The statement was jointly issued by: Sri Lanka Press Institute (SLPI), Free Media Movement (FMM), Sri Lanka Working Journalists' Association (SLWJA), Sri Lanka Press Association, Jaffna Press Club, Sri Lanka Muslim Journalists' Association, National Alliance of Provincial Journalists, National Alliance of Community Broadcasters, and the Young Journalists Association.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC).

சீ. தொடவத்தை, ஆலோசகர், பயிற்சி, அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடட் (லேக் ஹவுஸ்).

2015 மார்ச் முதல் 2016 மார்ச் வரை பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2015 மார்ச்: ஊடக மறுசீரமைப்புக்கான தேசிய செயலகம் தாபிக்கப்பட்டது, கூட்டம் நடத்துவதற்கான வசதிகளை SLPI ஐ வழங்கியது.

மார்ச்: அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றின் மூலம் விளம்பரங்கள் மற்றும் ஈ-மெயில்கள் மூலமாக ஊடக மறுசீரமைப்புத் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது.

மார்ச் 20: ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் முறைமை மற்றும் செயன்முறை தொடர்பிலான செயலமர்வு SLPI இல் இடம்பெற்றது. இலங்கையிலிருந்து 410 இற்கும் மேற்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்கள் பங்குபற்றினர். மற்றும் தென்னாசியாவைச் சேர்ந்த 3 ஊடக ஆளுமைகளும் பங்குபற்றின (பங்களாதேஷ், பூட்டான், பாகிஸ்தான்).

மார்ச் - மே: தயார்நிலைக் கருத்தமர்வுகளின் நிமித்தம் பணிக்குழு பலமுறை SLPI இல் கூடியது.

மார்ச் - மே: நாளக்க குணவர்தன அவர்களினால் ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் மதிப்பீடு தொடர்பான துரித மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாட்டில் இது சமர்ப்பிக்கப்படும்.

மே 12-13: ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாடு கொழும்பு இலங்கைக் கல்லூரி மன்றத்தில் இடம்பெற்றது. 200

இற்கும் மேற்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்கள் இதில் பங்குபற்றினார்கள். முதலாவது தினத்தில் 9ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்பான துரித மதிப்பீட்டுச் சமர்ப்பணம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து குழுக்கலந்துரையாடல்கள் மற்றும் பின்னூட்டல் இடம்பெற்றன. இரண்டாவது தினம், பிரதம அமைச்சர், ஊடக அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஊடக மறுசீரமைப்புத் தொடர்பில் தமது கருத்துக்களை பகிரங்கமாகத் தெரிவித்தனர்.

ஏப்ரல், மே, ஜுன்: கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பிரிவினால் பிரதான நபர்களுடன் 40 இற்கும் மேற்பட்ட பேட்டிகள் மேற்கொள்ளப்பட்டன (பிற்சேர்க்கை 1 இல் பட்டியலிடப்பட்டுள்ளது). மற்றும் மாறுபட்ட பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் 5 கவனக்குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. நான்கு கூட்டங்கள் கொழும்பிலும் ஒரு கூட்டம் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றது. இவை தொடர்பான சுருக்க விபரங்கள் பிற்சேர்க்கை 3 இல் தரப்பட்டுள்ளன.

மே - ஜுன்: ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான தேசிய மாநாட்டில் கிடைக்கப்பெற்ற பின்னூட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தமது விதப்புரைகளை பணிக்குழு உறுதிப்படுத்தியது.

மே - ஜுலை: அரச ஊடகம் மற்றும் ஊடகத் துறை மறுசீரமைப்புகள் தொடர்பான முன்னுரிமைகள் ஆகியன பற்றிய இரண்டு ஆய்வுகளை கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு மேற்கொண்டது. ஒன்று ஊடகவியலாளர்களுடனும் ஊடகத் துறையில் பணியாற்றுபவர்களுடனும் மேற்கொள்ளப்பட்டது. மற்றது பல்வேறுபட்ட பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது.

ஜுலை 21: 2015 பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் கவனத்தை ஈர்க்கும் முகமாக கருத்துச் சுதந்திரம் மற்றும்

ஊடகச் சுதந்திரம் தொடர்பிலான கூற்று வெளியிடப்பட்டது. காத்திரமான அரசியல் அர்ப்பணிப்பு அவசியப்படுகின்ற ஊடக மறுசீரமைப்புகள் தொடர்பான 10 செயற்பாடுகள் முன்னுரிமையின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டன. முழுமையான கூற்று பிற்சேர்க்கை 4 இல் காணப்படுகின்றது.

நவம்பர்: அரசாங்கம், ஊடகத்துறை, கல்வியியலாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் பின்னூ ட்டல்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ஊடக அபிவிருத்திக் குறிகாட்டிகள் தொடர்பான நகல் அறிக்கையானது 200 இற்கும் மேற்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்களிடம் வழங்கப்பட்டது.

டிசம்பர்: மூன்று அமர்வுகள் பற்றிய மீளாய்வுகள் குழு உறுப்பினர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஜனவரி: இரண்டாவது மீளாய்வுசெய்யப்பட்ட நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பெப்ரவரி – மார்ச்: தேசிய மற்றும் சர்வதேசக் குழு மீளாய்வாளர்கள் மத்தியில் இரண்டாவது நகல் வரைவு வழங்கப்பட்டது.

கூட்டங்கள், பேட்டிகள், மையக்குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் குழு மீளாய்வுச் செயன்முறைகள் ஆகியவற்றில் 500 இற்கும் மேற்பட்ட நபர்கள் பங்குபற்றினர். இதன்போது, பல்வேறு விதமான கருத்துக்களும் பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. இவற்றில் ஒருசில முரண்பாடு உடையதாகவும் சில யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றதாகவும் காணப்பட்டன. இயலுமானவரை பண்மைத்துவம் மிக்க சிறந்த கருத்துக்களை உள்வாங்கியதுடன், இவை தொடர்பில் பத்திரிகை ஆசிரியரின் தற்றுணிபும் பிரயோகிக்கப்பட்டது. அதன் மூலம் இது அறிக்கையின் சமநிலை, ஒத்திசைவு, பிரதிநிதித்துவப்படுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டன.







s ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் அரசியல் கட்சியளின் மக்கள் உறுதிமொழி - மே 2015

t ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டு திறப்பு விழா






s ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உறுதிமொழியை கையொப்பமிடல்

t






s ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் பார்வையாளர்களில் ஒரு பிரிவினர்

t ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் முன்னால் எதிர்கட்சி தலைவர் திரு. நிமல் சிரிபால த சில்வா அவர்கள் உறுதிமொழியை கையொப்பமிடல்







s ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் டாக்டர் அர்ஜுன பராக்கிரம அவர்கள் சிறப்பு முகவரியளித்தார்

t ஊடக சீர்திருத்தம் குறித்த தேசிய உச்சிமாநாட்டில் டாக்டர் ரங்க கலன்சூரிய அவர்கள் பேசினார்

“நுண்ணாய்வுடைய, சுயாதீன, புலனாய்வு ஊடகமே எந்தவொரு ஜனநாயகத்தின் உயிர் மூச்சாகும். ஊடகமானது அரச தலையீடு இன்றி சுயாதீனமாக இருத்தல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளின் அதிகார வெளிப்பாட்டிற்கு எதிராக எழுந்துநிற்கின்ற பொருளாதாரப் பலம் ஊடகத்திடம் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட நலன்களுக்கு எதிராக துணிச்சலுடன் எவ்வித அச்சமோ, பக்கச்சார்போ அற்ற நிலையில் செயற்படக் கூடிய போதியளவு சுயாதீனத் தன்மை இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு ஊடகத்திற்கு இருத்தல் வேண்டும். அப்போது பிரஜைகள் என்ற முறையில் எமது உரிமைகளை ஊடகம் பாதுகாக்க முடியும்”

- நெல்சன் மண்டேலா -

# ஊடக வளர்ச்சிக் குறியீடுகள்
# ஊடக வளர்ச்சி மதிப்பிடும் கட்டமைப்பு

இந்த ஆவணம் MDI இன் பிரிவுகளுக்கும் காட்டிகளுக்கும் ஏற்ப ஏற்பாடு செய்யப்பட்டது பின்வருமாறு

வகை 1

**ஊடகத்தின் பேச்சு சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மையை உகந்த விதத்தில் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பு**

அ சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம்

ஆ ஒலிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை

இ ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மட்டுப்பாடுகள்

ஈ தணிக்கை

வகை 2

**ஊடகங்களின் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை, சகல தரப்பினருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை**

அ ஊடக செறிவு

ஆ பல்வகை தன்மை கொண்ட தனியார், பொது மற்றும் சமூக ஊடகம்

இ அனுமதிப் பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு

ஈ வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும்

உ விளம்பரம்

வகை 3

**ஜனநாயக சொல்லாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல்**

அ ஊடகம் சமூகங்களின் பல்வகைமையைப் பிரதிபலித்தல்.

ஆ பொதுச்சேவை ஒலிபரப்பு மாதிரி

இ ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை

ஈ நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள்

உ ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கையின் அளவு

ஊ பத்திரிகையாளனின் பாதுகாப்பு

வகை 4

**கருத்துச் சுதந்திரம், பன்முகதன்மை மற்றும் பல்வகைமையை உறுதிப்படுத்தும் நிறுவனங்களின் தொழிற்சார் திறனை அதிகரித்தல், மற்றும் ஆதரவளித்தல்**

அ தொழில்சார் பயிற்சி கிடைத்தல்

ஆ ஊடக செயற்பாடுகள் குறித்த கற்கை நெறிகள் கிடைத்தல்

இ சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

வகை 5

**சுயாதீன, பன்மைத்துவமிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்**

அ ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும்

ஆ செய்தி ஊடகம், ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

Category

# 1

## ஊடகத்தின் பேச்சு சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மையை உகந்த விதத்தில் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பு

## முக்கிய குறிகாட்டிகள்

**அ** சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம்

1.1 பேச்சு சுதந்திரம் சட்டத்திலும் நடைமுறையிலும் உத்தரவாதம் பெற்றுள்ளது

1.2 தகவல் உரிமை சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு நடைமுறையில் மதிக்கவும்படுகிறது.

1.3 சட்டத்தில் ஆசிரிய உரைச் சுதந்திரம் உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது, நடைமுறையில் மதிக்கப்பட்டுள்ளது.

1.4 ஊடகவியலாளர்கள் தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையை சட்டத்தின் மூலம் வழங்குதல் மற்றும் நடைமுறையில் அதனை மதித்தல்

1.5 ஊடகம் தொடர்பான பொதுக்கொள்கையை வடிவமைப்பதில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியன பங்குபற்றின

**ஆ** ஒலிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை

1.6 சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தல் முறை தொடர்பான சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நடைமுறையில் மதிக்கவும்பட்டுள்ளது.

1.7 ஊடக பண்மைத்துவம், கருத்துமற்றும் தகவல்சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறை.

**இ** ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மட்டுப்பாடுகள்

1.8 ஊடகம் மீது சட்டப்படி உரிமை பெறாத சட்ட மட்டுப்பாடுகளை அரசாங்கம் பிரயோகிக்கவில்லை

1.9 தனிநபர் ஒருவரது நற்பெயரை பாதுகாப்பதற்கு அவசியமான குறுகிய மட்டுப்பாடுகளையே அவதூறுச்சட்டங்கள் பிரயோகிக்கின்றன.

1.10 தேசிய பாதுகாப்பு, வெறுப்பூட்டும் பேச்சுகள், அந்தரங்கத் தன்மை, நீதிமன்ற அவதூறுச் சட்டங்கள், ஆபாசம் ஆகியன தொடர்பில் கருத்துச் சுதந்திரம் மீது விதிக்கப்படும் மட்டுப்பாடுகள் தெளிவாகவிருத்தல் வேண்டும். மற்றும் சர்வதேச சட்டங்களுக்கமைவாக ஜனநாயக சமூகமொன்றுக்கு ஏற்ற விதத்தில் நியாயப்படுத்தக் கூடிய விதத்தில் சட்டத்தின் மூலம் வரையறை செய்தல் வேண்டும்.

BOX 02

## பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம்

1948 இல் உலக அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் கருத்துச் சுதந்திரமானது ஒரு அடிப்படை உரிமையாகக் குறிப்பிடப்பட்டது. அரசியல் கட்சிகளை உருவாக்குவதற்கான உரிமை, அரசியல் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கான உரிமை, அரச அதிகாரிகளிடம் கேள்விகளைக் கேட்டல் போன்ற ஏனைய ஜனநாயக ரீதியான சுதந்திரத்திற்கான அடிப்படையாக இது கருதப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தை பிரயோகிப்பதற்கான முக்கிய தளமாக ஊடகம் கருதப்படுகிறது. ஏனெனில், இவ் உரிமையைப் பிரயோகிப்பதற்கான தளமாக ஊடகங்களே திகழ்கின்றன. ஜனநாயகத்திற்கான தளமாக ஊடகம் திகழ்கின்றது என்ற விவாதமானது பல்வேறு விதமான செயற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இங்கு ஊடகம் எனும் போது செய்திகளையும் பொதுமக்களுக்கு ஏனைய தகவல்களையும் அறிவிக்கின்ற சகல ஊடகங்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

இச்சூழலைவில் ஊடகத்தைப் பின்வருமாறு நோக்க முடியும்.

- மக்கள் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற ஒரு தகவல் மற்றும் கல்வி மூலமாகக் காணப்படுகிறது.
- கதைகள், கருத்துக்கள், சம்பவங்கள் மற்றும் தகவல்களைப் பரப்புதல்.
- “சமச்சீரான செய்திகள்” ஆளுபவர்கள், ஆளப்படுபவர்கள் மற்றும் போட்டியில் ஈடுபடுகின்ற தனியார் நிறுவனங்கள்.
- பல்வேறு விதமான சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு மத்தியல் அறிவிக்கப்பட்டுள்ள விவாதங்களை மேற்கொள்வதற்கான இலகுபடுத்துனர், ஜனநாயக வழிமுறை மூலமாக பிணக்குகளுக்கான தீர்வினை உட்சாகப்படுத்தல்.
- சமூகம் தன்னைத்தானே இதன் மூலம் கற்றுக்கொள்கிறது. சமூகம் என்றதொரு உணர்வு கட்டியெழுப்பப்படுகின்றது. புரிதல்கள்,பெறுமானங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் போன்றன வடிவமைக்கப்படுகின்றன.
- ஒரு நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் கலாசார ரீதியான வெளிப்பாடுகள், கலாசார ரீதியான கூட்டமைவு ஆகியவற்றுக்கான கருவி.
- அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் அவதானித்துக்கொண்டு வருகின்ற அதேவேளை, பொதுப் பாதுகாப்பு மற்றும் பொது வாழ்க்கை தொடர்பில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துகின்றது. மேலும்

துஷ்பிரயோகம், பிழையான நிருவாக முறைகள், கூட்டுத்தாபன பிழையான நடவடிக்கைகள் போன்றவற்றை வெளிப்படுத்துகிறது. வினைத்திறனற்ற விடயங்கள் தொடர்பிலும் அவதானமாகச் செயற்படுகின்ற அதேவேளை, பொதுமக்களது பங்குபற்றுதல்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன. பிழையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாமல் அல்லது கையாளப்படாமலிருத்தல்.

- பொருளாதாரப் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கான கருவி.

- ஜனநாயகச் செயற்பாடுகளை இலகுபடுத்துகின்ற அதேவேளை, நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்துவதையும் இலகுபடுத்துகின்றது.

- பண்மைத்துவமிக்க பெறுமானங்களை மதிக்கின்ற அதேவேளை, தனது சொந்த உரிமைகள் தொடர்பில் பரிந்துரையாளராகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் திகழ்கிறது.

முக்கியமான அல்லது ஓரங்கட்டப்பட்ட மக்களது குரல்களை நிராகரிப்பதன் மூலம் அல்லது சக்திபடைத்த ஊடக உரிமையாளர்களது குரல்களுக்கு மாத்திரம் களம் அமைத்துக் கொடுப்பதன் மூலம் சிலவேளைகளில் சமூக சமத்துவமின்மைகளை இவை அதிகரிக்கச் செய்கின்றன. மற்றும் தனிப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்ட செய்திகளையும் சிலவேளைகளில் வெளியிடுகின்றன. இலங்கையில் இவ்விதமான நிலைமைகள் அண்மையில் ஏற்பட்டதை அவதானிக்க முடியும். சிலவேளைகளில் முரண்பாடுகளையும் சமூகங்களுக்கிடையிலான பிளவுகளையும் ஊடகம் ஏற்படுத்திய.

கருத்துச் சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் கேட்கின்ற பிரதான கேள்வி என்னவெனில், நல்லாட்சி மற்றும் மனித அபிவிருத்திகளுக்குப் பங்களிப்புச் செய்கின்ற அவற்றை மேம்படுத்துகின்ற ஊடகப் பரிவுச்சட்டகம், நடைமுறை போன்றவற்றை எவ்வாறு மேம்படுத்துவது என்பதாகும். ஊடகச் செயற்பாடுகள் அடக்கப்படுகின்ற சூழ்நிலையில் ஊழல் காணப்படுகின்ற போது யுத்தத்தின் தாக்கம் மற்றும் குன்றிய அபிவிருத்தி போன்ற நிலைமைகளின் கீழ் புதிய அல்லது வழமையான ஜனநாயகத்திற்கு இது முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

அ

# சட்ட மற்றும் கொள்கை ரீதியான வரைவுச்சட்டகம்

101 பேச்சு சுதந்திரம் சட்டத்திலும் நடைமுறையிலும் உத்தரவாதம் பெற்றுள்ளது

இலங்கையின் 1978 ஆம் வருட அரசியலமைப்பில் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. உறுப்புரை 14(1)(அ) இன் பிரகாரம், “நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் அருகதையுடையவர்களாவர், இதில் வெளியீட்டுச் சுதந்திரமும் உள்ளடங்கும்”

அதேவேளை, அரசியலமைப்பில் கருத்துச் சுதந்திரமானது பின்வருமாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது:

- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இன மற்றும் மத ரீதியான நல்லிணக்கங்களை கருத்திற்கொண்டு அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமைகள், நீதிமன்ற அவதூறு, ஏனைய அவதூறு அல்லது குற்றமொன்றைத் தூண்டுதல் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு கருத்துச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படலாம் என உறுப்புரை 15(2) குறிப்பிடுகிறது.

- உறுப்புரை 15(7) இன் பிரகாரம், சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டதன் பிரகாரம், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் அல்லது அடுத்தவர்களது உரிமைகளையும்

http://www.parliament.lk/constitution/main

சுதந்திரத்தையும் பாதுகாக்கும் நோக்குடனும் உரிய அங்கீகாரம் வழங்கும் நோக்குடனும் அல்லது ஜனநாயக சமூகமொன்றின் பொது நலன்களைப் பேணும் நோக்குடனும் இத்தகைய சுதந்திரம் மட்டுப்படுத்தப்படலாம். உறுப்புரை 15(7) இன் பிரகாரம், பொதுமக்கள் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக ஒழுங்குவிதிகளை உருவாக்க முடியுமெனக் குறிப்பிடுகிறது.

உறுப்புரை 14(1)(அ) இன் பிரகாரம், பிரஜைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, எல்லா நபர்களும் எனக் குறிப்பிடப்படவில்லை. சட்ட ரீதியான பொருட்கோடல்களின் பிரகாரம் (நபர் எனும் போது அது "பிரஜைகள்" என்பதை விடப் பரந்ததாகக் காணப்படுகிறது. ஏனெனில், நபர்கள் எனும் போது பிரஜைகள் சாராத கூட்டுறவு மற்றும் சட்ட ரீதியான நிறுவகங்களையும் உள்ளடக்கியதாக இலங்கை நீதித்துறை நியாயாதிக்கத்தின் பிரகாரம் பொருட்கோடப்பட்டுள்ளது. சர்வதேச தராதரங்களின் பிரகாரம், பிரஜைகள் மற்றும் பிரஜைகள் சாராதவர்களுக்கும் இந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது இலங்கை அரசியல் அமைப்பிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. வேறு விதமாகக்கூறின், பிரஜைகளுக்கு மாத்திரம் என பிரயோகம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) கீழ் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை மாத்திரம் அது திட்டவட்டமாக மட்டுப்படுத்தவில்லை.

உறுப்புரை 14 இன் பிரகாரம் காணப்படுகின்ற இவ்வித மட்டுப்பாடுகளானது சர்வதேச தராதரங்களை மதிக்கவில்லையென்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது. பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டே உறுப்புரை 15(2) மற்றும் (7) ஆகிய மட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.சர்வதேச சட்டங்களின் பிரகாரம் இவ்வித மட்டுப்பாடுகள் கண்டிப்பானவையாகக் காணப்படுகின்றன. சில வழக்குகளின் போது இவ்வித விடயங்கள் தொடர்பிலான பொருட்கோடல்கள் இலங்கை நீதிமன்றங்களினால் குறிப்பிடப்பட்ட போதிலும் கூட தொடர்ந்தும் அது பலவீனமானதாகவே காணப்படுகிறது. இரண்டாவதாக, உறுப்புரை 15(2) மற்றும் (7) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நலன்கள் அல்லது அக்கறைகள் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட விடயங்களை மாத்திரம் முழுமையாக உறுதிப்படுத்தவில்லை. இது நலன்களைப் பாதுகாப்பதனையே அனுமதிக்கின்றது. சட்டமுறைகள் பற்றியது அல்ல, (உதாரணமாக, அவதூறுக்குப் பதிலாக நற்பெயர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், நீதிமன்ற

7 https://www.parliament.lk/files/pdf/constitution/19th-amendment-act.pdf

8 The ICCPR Act of 2007 is seen by legal analysts as a half-hearted attempt by the then government to demonstrate its compliance with the ICCPR in relation to Sri Lanka's bid to retain the GSP Plus facility, a preferential tariff system in the European Union that was conditional to human rights compliance. In a critique published in January 2015, legal scholars Rohan Edrisinha and Asanga Welikala have explained why it is a poor piece of legislation, which does not significantly improve compliance. http://www.cpalanka.org/wp-content/uploads/2015/01/ICCPR-Chapter-Final.pdf

9 International Covenant on Civil and Political Rights http://www.ohchr.org/en/professionalinterest/pages/ccpr.aspx

அவதூறுக்குப் பதிலாக நீதித்துறையின் அதிகாரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது). எனவே,சனநாயகச் சமூகமொன்றில் பொது நலன்களைப் பேணுவதற்கு அவசியமான தேவைப்பாடுகள் எனும் பொழுது, உறுப்புரை 15(7) பொதுவானதாகவே காணப்படுகிறது. எவ்வித விடயங்களையும் உள்ளடக்கியது என்று பொருட்கோடல்களையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. 2015 ஏப்ரல் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம், தகவல் அறிவதற்கான உரிமை ஓர் அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, தகவல் அறியும் உரிமையை ஓர் அரசியல் அமைப்பு சார்ந்த உரிமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிவு 1.2 இல் இது தொடர்பில் ஆராயப்படும்.

கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள் அடிப்படையில் ICCPR (சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம்) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1980 இல் இலங்கை இதனை ஏற்றுக்கொண்டது. (1997 தெரிவுசார் ஒழுங்கு மரபு). 2007 ஆம் ஆண்டில் 2007 இன் 56 ஆம் இலக்க ICCPR சட்டத்தினை இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இதன் பிரகாரம் இலங்கைச் சட்டத்திலும் ICCPR இன் சில ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் இலங்கை உயர் நீதிமன்றமானது தனது கருத்துத் தெரிவிப்பின் பொழுது ICCPR இன் உரிமைகள் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படக் கூடியன. அதாவது, அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பிரிவுகள் மற்றும் ICCPR சட்டம் ஆகியவற்றின் கீழ் ICCPR உரிமைகள் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தக் கூடியன என உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

இலங்கை அரசியலமைப்பு மற்றும் 2007 ஆம் ஆண்டுக்கான ICCPR சட்டம் ஆகியன தொடர்பில் நோக்கும் பொழுது ICCPR இன் 19 ஆம் உறுப்புரை பரந்ததாகக் காணப்படுகிறது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளை விட குறைவான மட்டுப்பாடுகளையே ICCPR அனுமதிக்கிறது. இலங்கை அரசியலமைப்பை விட இதன் மட்டுப்பாடுகள் குறுகியதாகக் காணப்படுகின்றன. மட்டுப்பாடுகளை விதிக்கின்ற பொழுது உயர்ந்த தராதரமிக்க நியாயப்பாடுகளை ICCPR கோரி நிற்கின்றது. இது அரசியலமைப்பில் காணப்படவில்லை.
ஏனைய சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

10 The Supreme Court has in some cases tried to read in the concept of necessity to the Sri Lankan framework for the restriction of fundamental rights, e.g. Sunila Abeysekera v. Ariya Rubesinghe and Others; (2001; 1 SLR 315), but this is insufficient and has not always been consistently followed by the Court itself in subsequent cases.

11 http://hrcsl.lk/english/about-us/establishment/

12 The National Human Rights Commission of Sri Lanka: Marionette of the State. Paper by Miyuru Gunasinghe, Law & Society Trust (LST), Sri Lanka. FORUM ASIA, Bangkok 2013 http://www.lawandsocietytrust.org/PDF/resource/marionette_state.pdf

13 Securing the Freedom of Expression in the New Sri Lanka: Essential Institutional Reforms, by Asanga Welikala. Groundviews.org 17 January 2015. http://groundviews.org/2015/01/17/securing-the-freedom-of-expression-in-the-new-sri-lanka-essential-institutional-reforms/

ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இன ரீதியாக பாரபட்சம் காட்டுகின்ற சகல வடிவங்களையும் இல்லாதொழிக்கின்ற சர்வதேச சமவாயம் (1982 இல்) சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (1991) ஆகியவற்றையும் இலங்கை ஏற்றுக்கொண்டது. இலங்கையில் இது நடைமுறைப்படுத்தும் தன்மையுடையது.

நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாத்து அதனை மேம்படுத்தும் நோக்குடன் 1996 இன் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) தாபிக்கப்பட்டது. இதன் சுயாதீனத் தன்மை பற்றி மனித உரிமைகள் காப்பாளர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகியன பல வருடங்களாக கேள்வி எழுப்பி வருகின்றன. அதாவது, அரச தலையீடு இன்றி இது நடைபெறுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளன. உதாரணமாக, 2013 ஆம் ஆண்டில் விரிவான விமர்சனமொன்றின் பொழுது, சட்டம் மற்றும் சமூகம் பற்றிய பரிந்துரைக் குழுவொன்று இதனை அரசாங்கத்திற்கு ஆதரவான அமைப்பு எனத் தெரிவித்தது.

1978 முதல் கருத்துச் சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு உறுதிப்பாடுகள் பற்றிய பல கேள்விகள் எழுந்துள்ளன. இவற்றுள் சில முக்கிய வழக்குகளும் உள்ளடங்குகின்றன.

உறுப்புரை 14(1)(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள, "கருத்துச் சுதந்திரம்" எனும் போது இது தொடர்பான பொருட்கோடல்களை உயர் நீதிமன்றனமானது சுயாதீன முறையில் மேற்கொண்டுள்ளது.

மேலும், வாக்களிக்கும் உரிமை தொடர்பில் (உதாரணமாக, முதல் அமைச்சரின் வழக்கு) பேச்சு சாராத அரசியல் ஆர்ப்பாட்ட வடிவங்கள் எனும் பொழுது இது கருத்துச் சுதந்திரத்திற்கு உட்பட்டதாகவே காணப்படுகிறது (ஜனகௌசா வழக்கு). மற்றும் மாற்றுக்கருத்திற்கான சுதந்திரம் ஆகியவற்றில் இது உள்ளடங்குகின்றது. மேலும் கருத்துச் சுதந்திரம் எனும் பொழுது சில தகவல்களைப் பெற்று அவற்றைப் பரப்புவதற்கான உரிமைகளையும் அது உள்ளடக்கியுள்ளது என நீதிமன்றம் தெரிவித்தது (உதாரணம், விமல் பர்னாந்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வழக்கு).

நீதிமன்ற வழக்குகள் மற்றும் நீதித்துறைசார் பொருட்கோடல்கள் ஆகியவற்றில் தங்கியிருப்பதில் போதாமைகள் காணப்படுவதாக வெளிக்கல தெரிவித்தார். ஏனெனில், உயர் நீதிமன்றமானது இவை தொடர்பில் ஒத்த தன்மையுடையதாகச் செயற்படவில்லை. பல சந்தர்ப்பங்களில்

14 Freedom of Expression on the Internet in Sri Lanka, Centre for Policy Alternatives, Colombo. November 2011. http://cpalanka.org/wp-content/uploads/2011/11/FOE-REPORT-NOV-2011-FINAL-CPA.pdf

15 Public Security Ordinance No 25 of 1947, https://goo.gl/HcAZOi

16 Prevention of Terrorism (Temporary Provisions) Act No. 48 of 1979 http://www.satp.org/satporgtp/countries/shrilanka/document/actsandordinance/prevention_of_terrorism.htm

இதன் தீர்ப்புகளானது சர்வதேச தராதரங்களுக்கு அப்பால் அல்லது புறம்பாகச் செயற்பட்டுள்ளன. கருத்துச் சுதந்திரத்திற்கு அப்பாலும் இவை காணப்படுகின்றன. வயது வந்தவர்களுக்கென தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றைத் தடைசெய்தல் தொடர்பிலான பொருட்கோடல்களின் பொழுது கலாசாரம் மற்றும் ஒழுக்கம் தொடர்பில் நீதிமன்றமானது தனது சுய கருத்துக்களைத் தெரிவித்தது (அக்ஸ்ஹூதனயா வழக்கு).

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) ஆராய்ச்சி மற்றும் பரிந்துரைத்தல் பிரிவானது 2011 இல் இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்பான மீளாய்வொன்றின் பொழுது குறிப்பிட்டதாவது, கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான பல்வேறு வழக்குகளின் பொழுது, அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரங்களை மட்டுப்படுத்தும் வகையில் பரந்த மற்றும் கருத்துத் தெளிவற்ற தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பிலான கருத்துக்களை உயர் நீதிமன்றம் வெளிப்படுத்தியது.

அரசியல் உரிமைகள் தொடர்பிலான பொருட்கோடல்களின் பொழுது இலங்கை உயர் நீதிமன்றமானது தாராள மற்றும் பலவீனமான பொருட்கோடல்களையே மேற்கொண்டுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்தது. அரசியலமைப்புத் தொடர்பான வழக்குகளின் பொழுது உயர் நீதிமன்றமானது அல்லது நீதிமன்றங்களானவை அரசாங்கத்திற்கு ஆதரவான விடயங்களையே வெளிப்படுத்தின. குறிப்பாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் மட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்பட்ட பொழுது இவற்றை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

ICCPR ஐப் போலல்லாது இலங்கை அரசியலமைப்பின் கீழ் அரசியலமைப்பு உரிமைகளின் கீழான மட்டுப்பாடுகள் நியாயமானவை அல்லது அவசியமானவை என்பன தொடர்பிலான வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகள் காணப்படவில்லை. இவ்விதமான தேவைப்பாடுகள் குறைவாக காணப்படுவதன் காரணமாக அரசாங்கத்திற்குச் சாதகமான வாய்ப்புக்களையே இது வழங்குகிறது. குறிப்பாக மட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்ற பொழுது மட்டுப்பாடுகள் தொடர்பில் நீதிமன்றத்திற்கு கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இலங்கையில் அண்மைக்கால கருத்துச் சுதந்திரம் பற்றிய அல்லது அதன் பிரயோகம் பற்றிய விடயங்களை ஆராய்கையில் அவை சுமார் 3 தசாப்த காலமாக நாட்டில்

17 For details, see: A State of Permanent Crisis: Constitutional Government, Fundamental Rights and States of Emergency in Sri Lanka, by Asanga Welikala, 2008. http://cpalanka.org/wp-content/uploads/2009/5/States%20of%20Emergency%20%2830%2010%202008%29.pdf

18 An Agenda for Change: The Right to Freedom of Expression in Sri Lanka. Article 19. October 1994 http://www.article19.org/data/files/pdfs/publications/sri-lanka-agenda-for-change.pdf

நிலவிய வடகிழக்கு பிரிவினைவாத யுத்தம் மற்றும் இரண்டு மாக்சிய இளைஞர் கிளர்ச்சிகள் (1971, 1987-89) ஆகியவற்றுடன் தொடர்புடையனவாகவே காணப்படுகின்றது. இவை யாவும் இராணுவ ரீதியாக ஒடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த முரண்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் கருத்துச் சுதந்திரத்தை வித்தியாசமான கோணல்களிலேயே அணுகினர்.

இரண்டு சட்ட முறைமைகளின் கீழ் கருத்துச் சுதந்திரமானது குறிப்பாக பாதிப்புறும் நிலையில் காணப்படுகின்றது. அவையாவன,

- Emergency regulations (imposed under the Public Security Ordinance No 25 of 1947) that were in place nearly continuously for 40 years since 1971, with the exception of some brief periods.[15] In 2011, the Parliament allowed the regulations (that required monthly extension) to lapse on 31 August 2011.

- Prevention of Terrorism (Temporary Provisions) Act No. 48 of 1979, as amended by Act Nos. 10 of 1982 and 22 of 1988, remains on the law books and is a regular law of the land now.[16]

செய்தித் தாள்களை உள்ளடக்கிய விடயங்களை எந்த நேரத்திலும் நடைமுறைப்படுத்த முடியும். மேலும் இவை தொடர்பில் சில செய்திகளின் உள்ளடக்கம் தொடர்பில் தீர்மானிக்கக் கூடிய அதிகாரம் பொருந்திய அதிகாரி ஒருவரையும் நியமிக்க முடியும் (முன்கூட்டிய தணிக்கை இங்கு இடம்பெறுகிறது).

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் வார்த்தைப் பிரயோகங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன் :

(அ) அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி ஒருவரின் எழுத்து மூலமான அனுமதியற்ற நிலையில் எந்தவொரு நபரும் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான எவ்விதமான செய்திகளையோ அல்லது செய்திப் பத்திரிகைகளையோ வெளியிட முடியாது.

i. இச்சட்டத்தின் கீழ் குற்றமாகக் குறிப்பிடப்பட்ட ஏதாவது குற்றங்கள் அல்லது ஏதாவது அதிகாரி தொடர்பிலான விசாரணைகள், அல்லது

ii. மாறுபட்ட சமுதாயங்கள் அல்லது இன அல்லது சமயக் குழுக்களுக்கிடையில் வன்முறைகளைத் தூண்டக்கூடிய அல்லது சமய, இன,

19 http://www.pen.org/defending-writers/test-first-name-test-middle-name-test-last-name/j-s-tissainayagam

20 http://www.pmaward.org/recipients/j-s-tissainayagam/

21 Emergency Law in the Context of Terrorism – Sri Lanka. By Niran Anketell & Gehan Gunatilleke. South Asians for Human Rights, 2011. http://www.southasianrights.org/wp-content/uploads/2009/10/SL-Security-Laws-Final.pdf

சமுதாய ரீதியான கலவரங்களை அல்லது தீய உணர்வுகளை அல்லது குரோதங்களை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்தவொரு நபரும் எந்தவிதமான செய்தியையோ அல்லது செய்திப் பத்திரிகையையோ வெளியிடக் கூடாது. பந்தி (அ) வின் பிரகாரம் இலங்கைக்குள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ இவ்விதமான எந்தவிடயங்களையும் அச்சிட்டோ அல்லது அவை தொடர்பிலான வெளியீடுகளையோ மேற்கொள்ளல் கூடாது.

அவசர காலநிலைச் சட்டத்தைப் பிரயோகிப்பதானது சாதாரண சூழ்நிலை, விதிவிலக்கான சூழ்நிலை ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தில் தங்கியுள்ளது. அசாதாரண சூழ்நிலை நிலவுகின்றது என்பதை நிறைவேற்று அதிகாரம் உடையவர் பிரகடனப்படுத்தல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு விதிவிலக்கான அதிகாரங்களையும் பிரயோகிக்க முடியும். இதற்கு அதிக காலம் எடுக்கலாம் மற்றும் அவ்வப்போது இதனை நீட்சிப்படுத்தவும் வேண்டும். இதனைப் பிரகடனப்படுத்தல், தொடர்தல் மற்றும் அவசரகால நிலைமையின் பொழுது விதிவிலக்கான அதிகாரங்களைப் பிரயோகித்தல் ஆகியன கடும் சட்டம் மற்றும் நீதித்துறை சார் கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய பல்வேறு அம்சங்களை அரசியலமைப்பில் காண முடியும். ஆனால், நடைமுறையில் பல அரசாங்கங்கள் இதனைப் பின்பற்றுவதில்லை. சில அரசாங்கங்கள் மிக எளிமையாக இவற்றைப் புறக்கணிக்கின்றன. சாதாரண சூழ்நிலையின் கீழ் நிலவுகின்ற சட்டங்களைப் புறக்கணித்து அவற்றுக்கு அப்பால் செயற்படும் நோக்குடனும் பல சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிரான அதிகாரங்கள் அச்சுறுத்தலானது இயல்பாகவே குறிப்பிட்ட காலவரைக்குட்பட்டது என ஊகிக்க முடியாது. இவ்விதமான அசாதாரணச் சட்டங்கள் அடிப்படை உரிமைகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாகக் காணப்படுகின்றன. மிகக் கவனமாகவே இத்தகைய சட்டங்களைப் பயன்படுத்தல் வேண்டும். அதாவது நிறைவேற்று அதிகாரத்துடன் மிகக் கவனமாக இவற்றைப் பிரயோகிக்கின்ற அதேவேளை,பொருத்தமான

கண்காணிப்பு முறைகள் மூலம் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படல் வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்று அதிகாரமிக்கவர் தனது அதிகாரங்களைப் பிழையாகப் பிரயோகிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. மாற்றுக் கருத்துடையவர்களுடைய குரல்களை அடக்கும் முகமாக தொடர்ச்சியாக பல அரசாங்கங்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளன. இலங்கையில் கருத்துச் சுதந்திரம் பற்றிய 1994 ஆம் ஆண்டின் அறிக்கையொன்றின் உறுப்புரை 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,"பொலிஸ் மாஅதிபரின் அனுமதி பெறாமல் பல சந்தர்ப்பங்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவது மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவது ஆகியவற்றைத் தடுக்கும் முகமாக அவசரகாலச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பொதுக்கூட்டங்களைத் தடைசெய்தல், ஊர்வலங்களைத் தடைசெய்தல், பத்திரிகைகளைத் தடைசெய்தல், அச்சகங்களை மூடிவிடல், வெளியீடுகளைத் தணிக்கை செய்தல், ஒலிபரப்புகளைத் தணிக்கை செய்தல், தகவல் மூலங்களைப் பாதுகாக்கும் ஊடகத்துறைக் கொள்கைகளை மீறுதல், பொதுமக்களது போராட்டங்களை அரசாங்கத்திற்கு எதிரான சதித்திட்டம் எனக் கூறுதல் மற்றும் அரசியற்கட்சிகளைத் தடைசெய்தல் போன்றவற்றுக்காகவும் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகம் அவர்களை கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்து அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள், குற்றம் சுமத்துதல், சிறையிலடைத்த செயற்பாடுகள் ஆகியவற்றை நோக்கும் பொழுது, ஒருவரது கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும். சமூகங்களுக்கெதிராக அமைதியின்மையை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 2009 ஆகஸ்ட் மாதத்தில் அவருக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதாவது, 2006 ஆம் ஆண்டில் வட கிழக்கில் மாதாந்த சஞ்சிகை ஒன்றை வெளியிட்டமைக்காகவும் அந்த சஞ்சிகைக்கென நிதி திரட்டியமைக்காவும் அதில் வெளிவந்த ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது. இவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் இவருக்கெதிராக விதிக்கப்பட்ட கடும் தண்டனைகள் ஆகியவற்றை சர்வதேச சமூகம் கண்டித்தது.

ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களினால் 2010 மே 03 ஆம் திகதி திஸநாயக்க அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

தற்போழுது காலாவதியான நிலையிலுள்ள அவரசகால ஒழுங்குவிதிகள் மற்றும் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியன கருத்துச் சுதந்திரம் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தின. சட்டப் பகுப்பாய்வாளர்களான நிரான் அன்கடெயில் மற்றும் கிஹான் குணதிலக்க ஆகியோர் 2011 இல் எழுதியதன் பிரகாரம் "அவரசகாலச் சட்டத்தின் கீழ் ஊடகங்கள் மீது விதிக்கப்பட்ட தணிக்கைகள் தற்போது குறிப்பிடக் கூடியளவு குறைந்துள்ளன. இருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் கீழ் விடுக்கப்படுகின்ற பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள்,கைதுசெய்யப்படுதல்கள் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் போன்ற கலாசாரத்தின் காரணமாக இலங்கை ஊடகவியலாளர்கள் தமக்குத்தாமே சுய தணிக்கைகளை விதித்துள்ளனர்"

## விதப்புரைகள்

- கருத்துச் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக உள்ளடக்கி பாதுகாக்கக் கூடிய விதத்தில் அரசிலமைப்பு திருத்தப்படல் வேண்டும். மற்றும் சகல நபர்கள் பற்றிய தகவல்கள் வெறும் பிரஜைகள் என்றல்லாது, இலங்கை அரசாங்கத்தின் நியாயாதிக்கத்திற்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே அவசரகால ஒழுங்குவிதிகளைப் (பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்) பிரயோகிக்கக் கூடியதாக இருக்கும் வகையில் அரசயிலமைப்பு திருத்தப்படல் வேண்டும். ஏனெனில் அவரசகாலச் சட்டமானது நாட்டு மக்களின் வாழ்க்கையை அச்சுறுத்தக்கூடியதாகக் காணப்படுகிறது. சாதாரண சட்டங்கள் செயற்படுத்தப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்ற பொழுது அதனை விஞ்சி அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்படக் கூடாது. அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கான தேவைகள் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். இவ்வாறு அவசரகாலச் சட்டங்களைப் பிரயோகிப்பது தொடர்பான நியாயப்பாடுகளை மதிப்பிடும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருக்கக் கூடியதாக

102 தகவல் உரிமை சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு நடைமுறையில் மதிக்கவும்படுகிறது.

ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

- கருத்துச் சுதந்திரத்திலும் தகவல் அறியும் உரிமையிலும் மட்டுப்பாடுகளை விதிக்கின்ற விடயங்களை மாற்றியமைக்கக் கூடியதாக அரசியலமைப்பில் புதிய விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். ICCPR உறுப்புரை 19(3) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்படல் வேண்டும். மக்களின் நலன்களைப் பதுகாப்பதற்கு மிகவும் அவசியமான சூழ்நிலைகளில் மாத்திரமே இவை பிரயோகிக்கப்படல் வேண்டும்.

கருத்துச் சுதந்திரம் தொடர்பில் மட்டுப்பாடுகளை விதிக்கின்ற சகலவிதமான தற்போதைய சட்டங்களையும் அரசாங்கம் மீளாய்வு செய்தல் வேண்டும். இவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு அமைவாக இருக்கும் வகையில் திருத்தப்படல் வேண்டும். அரசியலமைப்பு மீளாய்வுச் சட்ட முறைகளை மீள் அறிமுகப்படுத்துவது ஒரு தெரிவாகும். இதன் மூலம் ஏனைய சட்டங்களை விட மேலாதிக்கம் செலுத்தக் கூடியதாக அரசியலமைப்பு திகழும். இதன் மூலம் பழைய சட்டங்கள் மீது அரசியலமைப்பு ரீதியான கண்காணிப்புகளை ஏற்படுத்த முடியும்.

பொது நிறுவனங்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஆகியன தொடர்பில் வெளிப்படைத்தன்மை காணப்படாமை இலங்கையின் ஆட்சியில் காணப்படுகின்ற பிரதான குறைபாடாகும். மன்னர் ஆட்சிக்காலப்பகுதியில் இருந்தாலென்ன, அதனைத் தொடர்ந்து நிலவிய காலணித்துவ நிருவாகக் காலப்பகுதியில் இருந்தாலென்ன, மற்றும் காலணித்துவவாதிகளினால் உருவாக்கப்பட்ட நிருவாக கலாசார அதிகாரம் மற்றும் இரகசியத்தன்மை போன்றறைகளாகவிருந்தாலென்ன, எந்த சந்தர்ப்பங்களிலும் வெளிப்படைத்தன்மை

22 http://www.sundaytimes.lk/090208/Columns/focus.html

23 Information Ministry Sec's comment draws fire from media associations. The Sunday Times, 5 Aug 2012. http://www.sundaytimes.lk/120805/news/information-ministry-secs-comment-draws-fire-from-media-associations-8001.html

அல்லது பகிரங்கத்தன்மை காணப்படவில்லை. 1955 இன் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின் பிரகாரம், ஏதாவது உத்தியோகபூர்வ இரகசியத்தை ஊடகங்களுக்கு வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு விதமான தகவல்களை உள்ளடக்கி இந்த சட்டம் தொடர்பான பொருட்கோடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை பொதுமக்களது நலன்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. முதலாவது உலக யுத்தக் காலப்பகுதியில் காணப்பட்ட அரசாங்க நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு 1911 ஆம் ஆண்டில் பிரித்தானிய உத்தியோகபூர்வ இரகசியத் தன்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டது. பின்னர் முன்னணி பிரித்தானிய நீதிபதி ஒருவரினால் இது விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், அதாவது துஷ்பிரயோகத்திற்கு அடிப்படைக் காரணியாக இது திகழ்கிறது என அவர் குறிப்பிட்டார். அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தினால் இது பதிலீடு செய்யப்பட்டது.

தகவல் அறிதல் சட்டத்தை அறிமுகம் செய்தல் தொடர்பான இலங்கை மேற்கொண்ட முயற்சி தொடர்பான தடங்களை 2001 இல் ஆகக் குறைந்தது அவதானிக்க முடியும். தகவல் அறியும் சட்டம் தொடர்பான நகல் வரைவுத்திட்டமானது 2003 ஆம் ஆண்டில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை எடிட்டார்ஸ் கேட், சுதந்திர ஊடக அமைப்பு ஆகியன பிரதம அமைச்சர், சட்ட மாஅதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றுடன் கூட்டிணைந்து தயாரித்தது. இச்சட்டமூலத்திற்கு 2003 ஆம் ஆண்டில் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தது. அப்போதைய ஜனாதிபதியின் ஒப்புதல் 2004 ஆம் ஆண்டில் கிடைத்தது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் இச்சட்டத்தை அங்கீகரிக்க முடியாமற்போனது.

அக்காலம் முதல் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் இச்சட்டம் தொடர்பில் சாதகமான விடயங்களை வெளிப்படுத்தவில்லை. 2012 ஜூலையில் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் இவ்விடயம் தொடர்பில் முரண்பாடுமிக்க தகவலொன்றை வெளியிட்டார். அதாவது,தகவல் அறியும் சட்டமானது தேசிய

24 Maithripala Sirisena: Compassionate Government, Stable Country: Election Manifesto, December 2014. pp 51-52. http://www.president.gov.lk/wp-content/uploads/2015/01/Manifesto-EN.pdf

25 http://www.sundaytimes.lk/151206/sports/right-to-information-bill-to-be-gazetted-soon-174329.html

26 http://www.law-democracy.org/live/sri-lanka-proposes-strong-right-to-information-act/

27 http://www.lankabusinessonline.com/sri-lankas-right-to-information-bill-presented-to-parliament/

28 Sri Lanka Constitution updated with all amendments as at 15 May 2015, accessed from: http://www.parliament.lk/files/pdf/constitution.pdf

பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுப்பதன் காரணமாக அரசாங்கமானது இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தாது என அவர் தெரிவித்தார்.

இருப்பினும் 2015 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட மைத்திரிப்பால சிறிசேன அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் பொழுது தகவல் அறிவதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தேர்தலில் வென்றதன் பின்னர் இவ் அரசாங்கமானது 2003 ஆம் ஆண்டுக்கான நகல் வரைவுச் சட்டமூலத்தை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொண்டது. மீளாய்வு செய்யப்பட்ட நகல் சட்டமூலத்தை 2015 டிசம்பரில் அமைச்சரவை அங்கீகரித்தது. 2016 இல் இது தொடர்பான பாராளுமன்ற விவாதங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஏற்பட்டன.

2015 டிசம்பர் நகல் வரைவுச்சட்டம் பற்றிய பகுப்பாய்வொன்றினை சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான கனேடிய நிலையமொன்று மேற்கொண்டது. அதன் கருத்துப்படி, இச்சட்டம் நிறைவேற்றப்படுமெனில் உலகில் காணப்படுகின்ற ஏதாவது உறுதியான சட்டம் இதுவென குறிப்பிடப்பட்டது.

இவ் அறிக்கை எழுதப்படுகின்ற காலப்பகுதியினுள் தகவல் அறிவதற்கான சட்டம் 2016 மார்ச் 24 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒருசில வாரங்களில் இது அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

மேலும் 2015 ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தில் தகவல் அறிவதற்கான உரிமை ஒரு அடிப்படை உரிமையென்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பிலான பந்திகள் பின்வருமாறு காணப்படுகின்றன:

* [தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை:

14அ. (1) ஒவ்வொரு பிரசையும், பிரசையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்னவருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடு

29 http://www.ft.lk/article/483191/Clear-thinking-and-professional-drafting-needed-for-Constitution-making

30 See, for example, TISL public opinion survey on RTI: http://www.tisrilanka.org/wp-content/uploads/2015/03/RTI-final-report-for-web-28-Feb.pdf

செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டக்குழு

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட் ஏதேனும் நியதிச்சட்டக் குழு

(இ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை அத்துடன்

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ), அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள்.

(2) ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைத் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன்கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால்

பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது.

(3) இவ் உறுப்புரையில் "பிரசை" என்பது கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது.]

சில பகுப்பாய்வாளர்களின் கருத்துப்படி, இத்தகைய தகவல் அறியும் விடயங்கள் அரசியல் ஏற்பாடாக உள்ளடக்கப்படுவது அதிகபட்சமுடையதாகும். ஏனெனில், சாதாரண ஒரு கூற்றின் மூலமே இத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது அவர்களது அபிப்பிராயமாகும். இவ்வித சகலவிதமான தகவல்களையும் சாதாரண சட்டத்தின் கீழ் வழங்க முடியுமென்பது அவர்களது அபிப்பிராயமாகும்.

பாராளுமன்றச் சிறப்புரிமைகளை தகவல் அறிவது தொடர்பான அரசியலமைப்புத் திருத்தங்கள் மட்டுப்படுத்துவதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். இருப்பினும், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் அவர்களுடைய சிறப்புரிமைகளைப் பேணும் முகமாக தகவல் வழங்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென்பது ஜனநாயக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. பிரஜைகளுக்கான உரிமை, அதாவது பிரஜைகள் அற்றவர்களை விடுவிப்பதானது சர்வதேச தராதரங்களுக்கு முரணான விடயமென்பதை மீண்டும் தெரிவிக்கின்றோம்.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது சிறப்பானதாகும். இவ்வகையான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பல நாடுகளில் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் ஒரு திகதி குறிப்பிடப்படும். அதன் பின்னரே அது நடைமுறைப்படுத்தப்படும். இந்த சட்டத்தை அர்த்தபுஸ்டியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நிருவாக ரீதியான கால அவகாசம் தேவைப்படலாம். அதன் நிமித்தமே இது வலுவிற்கு வரும் திகதி பின்னர் குறிப்பிடப்படுகிறது. இவ்விதமான கருணைக் காலப்பகுதி இலங்கையில் வழங்கப்படாத பட்சத்தில் அது சில தாமதங்களுக்கும் அதிருப்திகளுக்கும் வழிவகுக்கலாம்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

தொடர்பில் ஆதரவுகளை அவர்கள் திரட்டியபொழுதிலும் தகவல் அறியும் சட்டம் தொடர்பிலான நன்மைகள் அதன் குறிப்பிட்ட பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சில பரிந்துரை அமைப்புகள் மேற்கொண்டன. உதாரணமாக, ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் சிறிலங்கா (TISL) இலங்கை பத்திரிகை நிறுவனம் (SLPI) போன்றன நகரை அடிப்படையாகக் கொண்ட ஊடகவியலாளர்களையும் மாகாண ஊடகவியலாளர்களுக்கும் பல்வேறுவிதமான பயிற்சிகளை வழங்கியது. இத்தகைய முயற்சிகள் விழிப்புணர்வுகளைக் கட்டியெழுப்புவதுடன், சமூக அடிப்படையிலான தயார் நிலைகளையும் தகவல் அறியும் சட்டம் தொடர்பில் ஏற்படுத்துகிறது.

ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பமாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் காணப்படுகிறது. இதனை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் விருப்பம், நிருவாக ரீதியான திட்டமிடல்கள், போதியளவு நிதி வசதி ஆகியன அவசியப்படுகின்றன. இச்செயன்முறை முறையாக துல்லியமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு சிவில் சமூகங்கள், ஊடக அமைப்புகள் போன்றனவற்றின் தொடர்ச்சியான கண்காணிப்புகள் அவசியப்படுகின்றன.

## விதப்புரைகள்

- கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அதிக தகவல்களை வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் தகவல் அறிவதற்கான உரிமைச்சட்டம் உருவாக்கப்படல் வேண்டும் 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இரகசியச் சட்டமானது முழுமையாக அகற்றப்படல் வேண்டும். அல்லது அதிலுள்ள சில அம்சங்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு ஏற்ப திருத்தப்படல் வேண்டும். நன்நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற தீய விடயங்களை இடித்துரைக்கின்றவர்களையும் பாதுகாக்கப்படக் கூடிய ஏற்பாடுகளையும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும். வழங்கப்படுகின்ற தகவல்கள் சரியான விதத்தில் வெளிப்படுத்தப்படுவதுடன் குற்றச் செயல்களுக்கு எதிரான சான்றுகளாகவும் இருத்தல் வேண்டும்.
- பாராளுமன்றச் சிறப்புரிமைகளைப் பாதுகாத்தல் என்பதன் கீழ் மட்டுப்படுத்தப்படும் தகவல்கள் அரசியலமைப்பிலிருந்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்தும் அகற்றப்படுதல் வேண்டும்.

## 1 03 சட்டத்தில் ஆசிரிய உரைச் சுதந்திரம் த்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது, நடைமுறையில் மதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய உரைச் சுதந்திரம் என்பது செய்தி ஆசிரியர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தமது ஆக்கங்களின் உள்ளடக்கம் பற்றிய தீர்மானங்களை ஊடக உரிமையாளர், வியாபார முகாமையாளர்கள் அல்லது வேறு மூன்றாம் தரப்பினர் அல்லது அதிகாரிகள் போன்றோர்களது தலையீடுகளின்றி சுயாதீனமாக மேற்கொள்ளல். ஆசிரியர் உரைச் சுயாதீனக் கொள்கைகள் எனும் பொழுது ஊடகவியலாளர்கள் அல்லது ஒலிபரப்பாளர்கள் தொழில்வாண்மை அடிப்படையில் பொதுமக்களது அறிந்துகொள்வதற்கான உரிமையை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தின் மூலமாக பாதுகாக்கக் கூடிய விதத்திலும் நடைமுறையில் மதிக்கக் கூடிய விதத்திலும் தீர்மானங்களை மேற்கொள்வதாகும்.

ஆசிரிய உரைச் சுதந்திரம் தொடர்பில் இலங்கையில் எவ்விதமான சட்ட ரீதியான உத்திரவாதங்களும் இல்லை. ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் அரசாங்கத்தின் ஊடகக் கொள்கை என்ற தொனிப்பொருளில் “சகல ஊடகப் பணியாளர்களதும் ஆசிரிய உரைச் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு உறுதியளித்தல்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், யதார்த்தபூர்வமாக நோக்குகையில் ஊடகவியலாளர்களது தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகளானது உள்ளிருந்தும் வெளியிருந்தும் பல அழுத்தங்களை எதிர்கொள்கிறது.

தனியார் ஊடகங்களைப் பொறுத்தவரையில், அவ் ஊடகங்களின் உரிமையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் அவ் ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் அல்லது ஏனைய கருத்துக்கள் தொடர்பில் அவர்களது அரசியல் மற்றும்.`. அல்லது வர்த்தக ரீதியான நலன்களை அடிப்படையாகக் கொண்டு செல்வாக்குச் செலுத்துகின்றனர். அரச ஊடகங்களைப் பொறுத்தவரையில் (அவை உண்மையில் பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற ஊடகங்களல்ல. இது தொடர்பில் 3.3 இல் கலந்துரையாடப்பட்டுள்ளது), அங்கு இடம்பெறுகின்ற செய்திகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். தமக்கு ஆதரவான செய்திகளையே வெளியிடுவதற்கான நிர்ப்பந்தங்களை மேற்கொள்கின்றனர்.

ஊடகங்களுக்கான ஆசிரிய உரைச் சுதந்திரம் தொடர்பான அழுத்தங்கள் வெளியிலிருந்து பல்வேறுபட்டவர்களிடமிருந்து ஏழலாம். உதாரணமாக, அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், விளம்பரதாதிகள், பொதுத் தொடர்பாடல் முகவர்கள் அல்லது

31 Beyond RTI: Moving towards Open Data and Open Government. By Nalaka Gunawardene. *Daily Mirror.* 14 September 2015. http://www.dailymirror.lk/87099/beyond-rti-moving-to-open-data-and-open-govt

32 http://www.media.gov.lk/images/pdf_word/media-policy_english.pdf

பல்வேறுபட்ட அழுத்தக் குழுக்கள். இவை பல்வேறு வடிவங்களில் எழலாம். தமக்குச் சாதகமான நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கான அழுத்தங்கள் ஏற்படலாம். வேறு சந்தர்ப்பங்களில் சில விடயங்களைக் காட்ட வேண்டாம் என்ற அழுத்தங்களும் ஏற்படலாம். உதாரணமாக, ஒரு கொலை சம்பந்தப்பட்ட செய்தி பொதுமக்கள் முக்கியத்தும் வாய்ந்ததாகக் காணப்பட்ட போதிலும் அதனை வெளியிட வேண்டாம் என்ற அழுத்தங்கள் ஏற்படலாம்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் தேசிய செய்தித்தாள் ஆசிரியர்களை மாதாந்தம் சந்தித்து முறைசாராத முறையில் பல்வேறு விதமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். எதிர்க்கட்சி மற்றும் எதிர்க்கட்சி சார்ந்த ஊடகவியலாளர்கள் இங்கு புறக்கணிக்கப்பட்டனர். இதன் பொழுது ஊடகங்களில் இடம்பெறுகின்ற செய்திகள் அல்லது உள்ளடக்கங்கள் தொடர்பில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

இலங்கையின் அரச ஒலிபரப்பாளர்கள் தற்சமயம் சுதந்திரமாகச் செயற்படும் வாய்ப்பினை இழந்துள்ளனர். பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு அல்லது பொதுமக்கள் சேவைப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு சேவையாற்ற முடியாத நிலை காணப்படுகிறது. 2006 ஒக்டோபரில் சர்வதேச அமைப்பொன்றின் இலங்கை பற்றிய கருத்தின்படி "இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விவாதங்கள் நடைபெற்ற பொழுதிலும் இவை தொடர்பில் பல்வேறுபட்ட விதப்புரைகள் முன்வைக்கப்பட்ட பொழுதிலும் அரசாங்கமானது ஊடகவியலாளர்களை குறிப்பாக ஒலிபரப்பாளர்களை அவர்களுக்குரிய ஊடக சுதந்திரத்துடன் செயற்படுவதற்கான படிமுறைகளை இதுவரை எடுக்கவில்லை" ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும் இந்நிலைமையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படவில்லை.

ஊடக மறுசீரமைப்புச் செயற்பாட்டாளரும் முன்னாள் ஒலிபரப்பாளருமான விஜயானந்த ஜயவீர செய்தி ஊடகங்களின் ஆசிரிய உரை சார்ந்த சுதந்திரங்கள் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார். இதன் நிமித்தம் சுயாதீன ஊடக சபையொன்று சட்டத்தின் மூலமாகத் தாபிக்கப்பட்டு ஊடக சுதந்திரத்தை, ஆசிரிய உரைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் தொழில்வாண்மைப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு ஊடக பொறுப்புக் கூறல் முறையொன்றை ஊடக அமைப்புகள் விருத்திசெய்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். வியாபாரத்தை தனியாகவும் ஆசிரிய உரை சார்ந்த செயற்பாடுகளை தனியாகவும் மேற்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் ஆசிரிய

33 http://dbsjeyaraj.com/dbsj/archives/13756

34 Press Freedom and Freedom of Expression in Sri Lanka: Struggle for Survival. Report of the International Press Freedom and Freedom of Expression Mission to Sri Lanka. January 2007. http://www.article19.org/data/files/pdfs/publications/sri-lanka-mission-rpt.pdf

35 Identifying Requirements for Structural Changes in Our Media System. Wijayananda Jayaweera. World Press Freedom Day lecture, organised by Free Media Movement and the Sri Lanka Press Institute. 5 May 2015 http://srilankabrief.org/2015/05/sri-lanka-identifying-requirements-for-structural-changes-in-our-media-system/

உரை சார்ந்த விடயங்கள் தனித்தனியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அரசாங்கத்திடமிருந்தாலென்ன, அல்லது ஊடக உரிமையாளர்களிடமிருந்து வந்தாலென்ன, அழுத்தங்கள் எழுகின்ற பொழுது அவற்றை எதிர்கொள்வதற்கும் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குமான பொறிமுறைகள் இருத்தல் அவசியமென இவர் மேலும் குறிப்பிட்டார். ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கேற்ற வகையில் அத்தகையதொரு பொறிமுறையாக சுயாதீன ஊடகச் சபை திகழவேண்டுமென இவர் குறிப்பிட்டார். பொதுமக்கள் மத்தியில் காணப்படும் மூளைசாலிகள், முக்கிய ஊடகவியலாளர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஊடக தொழில்வாண்மை மிக்கவர்கள் ஆகியவர்களை உள்ளடக்கிய இந்தோனேசிய சுயாதீன ஊடக சபை இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்தச் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கேற்ப சகல ஊடகங்களும் இந்தோனேசியாவில் நடந்துகொள்ளல் வேண்டும்.

தனியார் ஊடகங்கள் தொடர்பில் ஆசிரிய உரைச் சுயாதீனம் தொடர்பில் பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் சட்ட வல்லுனர்களும் ஏனைய செயற்பாட்டாளர்களும் மாறுபட்ட கருத்துக்களை தம்மகத்தே கொண்டுள்ளனர். இவ்விதமான பொறிமுறைகள் உருவாக்கப்படும் பட்சத்தில் தனியார் ஊடகங்கள் மீது அரசாங்கத்தினது தலையீடுகள் அதிகரிக்கலாமெனவும் கருதுகின்றனர். இதன் மூலமாக இவை பிழையாக பிரயோகிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக ஏற்படலாமெனவும் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஐக்கிய இராச்சியம் போன்ற முதிர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகளில் காணப்படுவது போல் ஊடகவியலாளர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்க முடியும். இதன் மூலம் பல்வேறு விதமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு ஆசிரிய உரை சார்ந்த சுதந்திரத்தன்மைகளைப் பேண முடியும். உதாரணமாக, ஐக்கிய இராச்சியத்தில் பைனான்சியல் ரைம்ஸ் ஜப்பானைச் சேர்ந்த நிகாய் என்பவரினால் வாங்கப்பட்டது. உதாரணமாக, அத்தருணத்தில் இதனைக் கொள்வனவு செய்தவர் ஆசிரிய உரை சார்ந்த சுயாதீனத் தன்மையை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை விடுத்தனர்.

## விதப்புரைகள்

- பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற ஊடகங்கள் தொடர்பிலான ஆசிரிய உரைச் சுயாதீனங்கள் சட்டத்தின் மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய சகல ஊடகங்களும் தமது தொழில்வாண்மைப் பெறுமானங்கள்

மற்றும் பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதை மையப் பொருளாகக் கொண்டு ஆசிரிய உரைக் கொள்கைகள் மற்றும் பொறுப்புக் கூறல் முறைகள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உட்சாகப்படுத்தி அதனடிப்படையில் தமது வெளியீடுகளை மேற்கொள்வதற்கு உட்சாகப்படுத்தப்படல் வேண்டும். அவ்வகையான கூற்றுக்களின் பொழுது ஊடகத் துறைப் பணியாளர்களுக்கான அதிகாரங்கள் தெளிவாக வழங்கப்படல் வேண்டும். மற்றும் ஊடக வியாபாரம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் ஊடக கம்பனியின் செயற்பாடுகள் போன்றன தனித்தனியாக பிரித்து வழங்கப்படல் வேண்டும். தேவையற்ற தலையீடுகளிலிருந்து பாதுகாக்கும் வகையில்,ஆசிரிய உரை சார்ந்த சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கூடிய வகையில் அவசியமான அதிகாரங்களைக் கொண்டதான ஊடக சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பு அல்லது இணை ஒழுங்குபடுத்தல் பொறிமுறை காணப்படல் வேண்டும்.

- இலங்கையிலுள்ள ஊடக பங்கீட்டுப்பாட்டாளர்கள் ஆசிரிய சுயாதீனத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது, சிறந்த விடயங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலான தேசிய விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## 104 ஊடகவியலாளர்கள் தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையை சட்டத்தின் மூலம் வழங்குதல் மற்றும் நடைமுறையில் அதனை மதித்தல்

ஊடகமானது பொதுமக்கள் நலன் கருதிய செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களிடமே தங்கியிருக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் தகவல்களை வழங்கும் மூலங்கள் அவர்களது விபரங்களைத் தெரிவிப்பது தொடர்பில் மகிழ்ச்சியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இருப்பினும் கூருணர்வுமிக்க சில தகவல்களை வழங்கும் பொழுது தமது விபரங்களை வெளியிடுவதில் விருப்பமற்றவர்களாகவும் சிலர் இருக்கின்றனர். உதாரணமாக, ஊழல், அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் போன்றன. அவ்வித சந்தர்ப்பங்களில் தகவல் மூலங்கள் தொடர்பான விடயங்களை வெளியிடுகின்ற பொழுது அவர்கள் தாக்கப்படலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என்ற காரணத்தினால் தமது விபரங்களை வெளியிடுவதில் விருப்பமற்றவர்களாகவிருக்கின்றனர்.

ஊடகத் தகவல் மூலத்தைப் பாதுகாப்பது ஊடக சுதந்திரத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. அதனைப் பாதுகாக்காத சந்தர்ப்பத்தில் ஊடகத்திற்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு அவர்கள் உதவி செய்ய மறுக்கலாம். அவ்விதமான சந்தர்ப்பங்களில் பொதுமக்களது

36 http://www.theguardian.com/media/greenslade/2015/sep/28/financial-times-nikkei-guarantee-of-independence

37 https://www.article19.org/pages/en/protection-of-sources-more.html

கண்காணிப்பாளன் என்ற முக்கிய வகிபாகத்தை ஊடகங்கள் இழக்கலாம். அவ்வித சந்தர்ப்பங்களில் ஊடகங்களின் தன்மை குறைமதிப்பீடு செய்யப்படுவதுடன் துல்லியமான தகவல்களை வழங்க முடியாத நிலை ஏற்படலாம். இதனால் ஊடகத்தின் மீதான நம்பகத்தன்மை இழக்கப்பட்டு பாதகமான விளைவுகளும் ஏற்படலாம்.

தமது தகவல் மூலங்களை இரகசியமாக ஊடகவியலாளர்கள் வைத்திருப்பதை உத்தரவாதப்படுத்தக் கூடிய திட்டவட்டமான சட்டங்கள் இலங்கையில் இல்லை. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் அழுத்தங்களை விடுத்துள்ளனர்.

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை ஊடகச் சபைச் சட்டத்தின் கீழ் 1981 இல் இலங்கை பத்திரிகை சபையானது ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவை ஒன்றை உருவாக்கியது. இது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு 1981 ஒக்டோபர் 08 ஆம் திகதி வர்த்தமானியில் இடம்பெற்ற பொழுதிலும் ஊடகவியலாளர்களினால் இந்த ஒழுக்கநெறிக் கோவை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் கூட இதனைப் பின்பற்ற வேண்டுமென்ற சட்ட ரீதியான கடப்பாடு இல்லை. இதில் இவ்வாறு ஒரு வாசகம் காணப்படுகிறது. "தகவல் ஒன்றை வழங்கிய நபர் அவரைப் பற்றிய விபரத்தை வெளியிடும் படி கோரினாலன்றி, அத்தகவலை வழங்கிய நபர் தொடர்பான அல்லது தகவல் மூலம் தொடர்பான இரகசியத்தன்மையை ஒவ்வொரு ஊடகவியலாளரும் பின்பற்றல் வேண்டும்" இந்த இரகசியத்தன்மையைப் பேணவேண்டிய கடப்பாடு ஒவ்வொரு ஊடகவியலாளருக்கும் உண்டு. இது ஓர் உரிமையல்ல.

ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம்ஆகியவற்றைத் தாக்கும் விடயங்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 1996 இல் வெளியிடப்பட்டது (பரவலாக இது ஆர். கே.டபிள்யு. குணசேகர குழு அறிக்கை எனக் கூறப்படுகிறது). இவ் அறிக்கையின் பிரகாரம் தகவல் மூலங்களின் இரகசியத்தன்மையை இலக்கையில் பேண முடியாத போது அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். குறிப்பாக புலனாய்வு ரீதியான ஊடகச் செயற்பாடுகள் மற்றும் பொதுவான மோசடிகள், பிழையான நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படலாம். இதன் பிரகாரம்

38 http://www.slpc.lk/images/doc/1981-10-14-English.pdf

39 https://freedomhouse.org/report/freedom-press/2007/sri-lanka#.VUyKc_DkqSo

40 Colombo Declaration on Media Freedom and Social Responsibility (2008 revised version) https://ict4peace.files.wordpress.com/2009/03/declaration_eng.pdf

தகவல் மூலங்களை வெளியிடும்படி ஊடகவியலாளர்கள் நிர்ப்பந்திக்க முடியாது. இவர்கள் சட்டம் மூலமாக பாதுகாக்கப்படல் வேண்டும். இவை தொடர்பிலான சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்படுகிறது. இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையிலும் இது தொடர்பிலான எத்தகைய சட்டங்களும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை.

யுத்த காலத்தின் பொழுதும் யுத்தம் நிறைவுற்றதன் பின்னரும் கூட ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு, அரச செலவினங்கள்,அரசியல் ஊழல்கள், கூருணர்வுமிக்க தலைப்புகளிலான செய்திகள் போன்றவற்றை வெளியிடுகின்ற பொழுது தமது ஆக்கங்கள் தொடர்பிலான தகவல் மூலத்தை வெளியிடும்படி அரசாங்கத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஊடகச் சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்படும் இவ்வகையான அத்துமீறல்கள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச பரிந்துரைக் குழுக்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளன. உதாரணமாக, 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பத்திரிகைச் சுதந்திரம் என்ற அறிக்கையில் தமது தகவல் மூலங்களை வெளியிடும் படி ஊடகவியலாளர்கள் எவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர், எவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் என்ற விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2008 ஊடகச் சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புத் தொடர்பான கொழும்பு பிரகடனத்தில் 11 ஆம் பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. “ஊடகத் தகவல் மூலங்கள் தொடர்பிலான இரகசியத்தன்மையைப் பாதுகாக்கக் கூடிய சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இது நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் ஓர் அங்கமாகவிருத்தல் வேண்டும். ஊடகத் தகவல் மூலங்களை எவ்விதமான சந்தர்ப்பங்களில் வெளியிடும் படி கோர முடியுமென்பதை திட்டவட்டமாக வரையறை செய்தல் வேண்டும்”

## விதப்புரைகள்

- பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை தொழில்வாண்மை மிக்க முறையில் வழங்குகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடகம் சார் பணியாளர்கள் மற்றும் அவர்கள் பெற்றுக்கொள்கின்ற தகவல் மூலங்களின் இரகசியத் தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சட்டம் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.05 ஊடகம் தொடர்பான பொதுக்கொள்கையை வடிவமைப்பதில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியன பங்குபற்றின

இலங்கையைப் பொறுத்தவரை கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் போன்றன உருவாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அல்லது சிவில் சமூகத்தின் பங்குபற்றுதலுக்கு அல்லது ஈடுபாட்டிற்கு அதிக வாய்ப்புகள் பொதுவாக வழங்கப்படுவதில்லை. இருப்பினும், புதிய கொள்கைகள் அல்லது பாதகமான கொள்கைகள், சட்டங்கள், நடைமுறைகள் போன்றன உருவாக்கப்படுகின்ற பொழுது அவை தொடர்பிலான விமர்சனங்களை முன்வைப்பதற்காக ஆர்வம்மிகுந்த தனிநபர்களும் விழிப்புமிக்க சிவில் சமூக அமைப்புகளும் ஊடகம், தொழில்வாண்மைச் சங்கங்கள் மற்றும் ஏனைய தளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். இவ்வித செயற்பாடுகளின் பொழுது, சிலவேளைகளில் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவுகளையும் அவர்கள் நாடுகின்றனர்.

தகவல் அறியும் சட்டமூலத்தை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்தில் அது தொடர்பிலான கலந்துரையாடல்களில் கல்வியியலாளர்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் பங்குபற்றினார்கள். அரசாங்கத்தின் தரப்பில் கலந்தாலோசனை அணுகுமுறை

“இன்று இலங்கை ஊடகங்கள் தமது பொறுப்புக்களை மறந்து அவை வழிதவறிச் செல்கின்றன. எனவே, எமது தொழிற்துறையையும் தொழிலையும் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு ஊடக மறுசீரமைப்புகள் எமக்கு உடனடியாக அவசியப்படுகின்றன. இத்தகைய மறுசீரமைப்புகள் பல மட்டங்களில் அவசியப்படுகின்றன : அதாவது, ஊடகம் தொடர்பான சட்டங்கள், ஊடக ஒழுக்கநெறிகள், ஊடகத்தில் பாரியளவிலான தொழில்வாண்மைகள் போன்றன. தற்போதைய வீழ்ச்சிக்குக் காரணம் என்னவென்பதை நாம் முறையாக இனங்கண்டு அவை தொடர்பில் காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

“சிங்கள மொழி மூலமான பத்திரிகைகள் அனுபவிக்கின்ற தகவல் அறியும் உரிமைகளில் அரைப்பகுதி கூட தமிழ் மொழி மூலமான ஊடகம் எமக்கு இல்லை. சக ஊடகவியலாளர்களே எம்மை பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்துகின்றனர். உதாரணமாக, இந்த நாட்டு மக்களும் தமிழ் ஊடகங்களும் வடக்கில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்துகொள்வதற்கு சுதந்திரம் அற்றவர்களாக இருக்கின்றனர். அங்கு நடைபெறுகின்ற விடயங்களை அறிந்து எமது வாசகர்களுக்கு அறிவிப்பது பெரும் போராட்டமாகக் காணப்படுகிறது. யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியிலும் மாத்திரமல்லாது இப்போதும் இந்நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை (2015 ஜூன்).

“கருத்துச் சுதந்திரம் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் நடைமுறையில் பல்வேறுவிதமான மட்டுப்பாடுகளும் தடைகளும் பிரயோகிக்கப்படுகின்றன. இதன் காரணமாக சுய தணிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். கருத்துச் சுதந்திரம் என்பது வெறுமனே ஊடகத்திற்கும் ஊடகவியலாளர்களுக்கும் மாத்திரம் உரிய அடிப்படை உரிமையல்ல. அது நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய அடிப்படை உரிமையாகும்.

எஸ். சிறி கஜன், பிரதம ஆசிரியர், வீரகேசரி நாளிதழ்.

41 http://www.sundaytimes.lk/130623/news/move-to-impose-standards-on-media-thwarted-49939.html

மேற்கொள்ளப்பட்டதை இது எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக ஊடகம் தொடர்பிலான கொள்கைகளின் பொழுது ஊடகவியலாளர்களது தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய ஊடக அமைப்புகள் போன்றன பல அழுத்தங்களை எதிர்கொள்கின்றன. வாய்ப்புள்ள பல சந்தர்ப்பங்களில் பொது ஆர்ப்பாட்டப் பிரச்சாரங்களாகவும் இவை மாறுகின்றன.

இதற்கான அண்மைய உதாரணம், “2013 ஆம் ஆண்டு மத்திய காலப்பகுதியில் ஊடக அமைச்சானது ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முயன்றபொழுது அது ஊடகவியலாளர்களினாலும் பத்திரிகை ஆசிரியர்களினாலும் வெற்றிகரமாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் அதனைத் தொடர வேண்டாமென அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்தார். மேலும் அவ்விதமான கோரிக்கைகள் ஊடகவியலாளர்களிடமிருந்தே வரவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு, இலங்கை எடிட்டர்ஸ் கில்டினால் உருவாக்கப்பட்ட ஒழுக்கநெறிக் கோவை ஏற்கனவே நடைமுறையில் இருப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

## விதப்புரைகள்

- கருத்துச் சுதந்திரத்தை அல்லது ஊடகத்தை பாதிக்கின்ற அல்லது அவை தொடர்பிலான சட்டங்களை அரசாங்கம் உருவாக்குகின்ற பொழுது அல்லது கொள்கைகளை வகுக்கின்ற பொழுது சம்பந்தப்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ

# ஒலிபரப்புத் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறை

106 சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தல் முறை தொடர்பான சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நடைமுறையில் மதிக்கவும்பட்டுள்ளது.

இலங்கையின் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் முறை, அதன் சுயாதீனத் தன்மை ஆகியன நன்கு வரையறைசெய்யப்படவில்லை.

வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் தொடர்பான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அதிகாரம் ஊடக அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தின் நிமித்தம் திட்டவட்டமான சட்டங்களின்மையின் காரணமாக, 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கு இவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, “இலங்கையின் எப்பாகத்திலும் நபர் ஒருவர் தனியார் ஒலிபரப்புகளை நிறுவி அதனைப் பேணுவதற்கான அனுமதிப்பத்திரம்”

இவ்விதமான அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பது தொடர்பான விளம்பரங்களை அரச வர்த்தமானியிலும் செய்தித்தாள்களிலும் பிரசுரிக்கும் படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை இச்சட்டம் கோரியுள்ளது. “ஒருவரது விண்ணப்பம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் எவருக்கும் அனுமதிப்பத்திரங்கள்

விநியோகிக்கப்படக் கூடாது"

இச்சட்டம் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை உருவாக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்ட போதிலும், இச்சட்டம் உருவாக்கப்பட்டு சுமார் அரை நூற்றாண்டு கடந்துவிட்ட நிலையிலும் அத்தகைய ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படவில்லை.

நடைமுறையில் உண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமல்ல, ஊடக அமைச்சே இவை தொடர்பான அதிகாரங்களைப் பயன்படுத்தி வருவதுடன் அனுமதிப்பத்திரங்களையும் விநியோகிக்கின்றது. 1992 ஆம் ஆண்டு முதல் விநியோகிக்கப்பட்ட 41 அமைப்புகள் தொடர்பான பட்டியலை அமைச்சின் இணையத்தளத்தில் பார்க்க முடியும். இவை புவி சார்ந்த (ரெரஸ்டியல்), கேபிள் மற்றும் செய்மதி முறை விநியோகங்களை உள்ளடக்கியுள்ளது.

இவற்றைப் பரிசீலித்தல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறை தொடர்பில் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. இது முழுமையாக தற்றுணிபின் அடிப்படையிலேயே காணப்படுகிறது. விரும்பிய நேரங்களில் அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியும். இவை தொடர்பான மேன்முறையீடுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை.

இதன் காரணமாக அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதானது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திடமே காணப்படுகிறது. இவை தொடர்பில் இரண்டு சிரேஷ்ட ஒலிபரப்பாளர்கள் தமது கருத்துக்களைத் தொவிக்கையில், "சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் எந்தளவிற்கு சுமுகத்தன்மையைப் பேணுகின்றோமோ அதனடிப்படையிலேயே அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும் நடைமுறை முழுமையாகத் தங்கியுள்ளது. அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் இவ் அனுமதிப்பத்திரங்களை நீடிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இதன் காரணமாக அமைச்சரிடம் தொடர்ச்சியாக தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. மேலும் அரசாங்கம் தமக்கு விரும்பிய நேரத்தில் ஒலிபரப்புகளை இடைநிறுத்த முடியும். எனவே, தொடர்ச்சியாக அரசாங்கத்தை மகிழ்ச்சியில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் தனியார் ஊடகங்களுக்குக் காணப்படுகிறது.

42 Registered Institutions for Radio and TV License, as listed on Ministry of Media website, accessed on 31 January 2016: http://www.media.gov.lk/images/pdf_word/licensed-institutions-tv-radio.pdf

43 Political Economy of the Electronic Media in Sri Lanka. Tilak Jayaratne & Sarath Kellapotha. Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), p129

44 http://www.bbc.co.uk/sinhala/news/story/2007/10/071029_fmm.shtml

45 http://en.rsf.org/sri-lanka-court-upholds-withdrawal-of-abc-s-02-11-2007,24177

ஒருமுறை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரங்களின் நிலைமை தொடர்பில் மேற்பார்வைகொள்வது பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. மிக அரிதாகவே அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை அமைச்சு பிரயோகிக்கின்றது. 2007 ஒக்டோபரில் ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்பட்ட ஐந்து வானொலிகளின் சேவை இடைநிறுத்தப்பட்டன (சன் எப். எம்., கோல்ட் எப்.எம்., ஹிரு எப்.எம்., ஷா எப்.எம்., சூரியன் எப்.எம்.). இலங்கையின் தென் பகுதியிலுள்ள கிராமம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியதாக பிழையான செய்தி ஒன்றை ஓர் ஒலிபரப்பு நிலையம் ஒலிபரப்பியதன் காரணமாக இவ்வாறு ஐந்து ஒலிபரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டன. இந்த ஒலிபரப்பு நிலையமானது தனது பிழையை உடனடியாகத் திருத்தி அவை தொடர்பில் மன்னிப்புக் கோரிய பொழுதிலும் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் இது முற்றுமுழுதிலும் கருத்துச் சுதந்திரத்தை மீறிய செயலாகக் கருதியது.

இந்தக் கம்பனி உயர் நீதிமன்றத்தை நாடிய பொழுதிலும் வெற்றிபெற முடியவில்லை. இவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் ஆறு மாதங்களின் பின்னர் வழங்கப்பட்ட பொழுதிலும் இவை தொடர்பில் எவ்வாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பான விடயங்கள் வெளிப்படைத்தன்மையற்றதாகவே காணப்பட்டன. பொதுமக்கள் நலன் கருதிய பரிசீலனைகளன்றி அரசியல் செல்வாக்குப் பிரயோகிக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. மேற்படி விடயங்களை நோக்குகையில் சுயாதீன ஊடக ஆணைக்குழு அல்லது சுயாதீன ஒலிபரப்பு ஆணைக்குழுவின் அவசியத்தை உணர முடிகின்றது. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த வரைவுச்சட்டகத்தின் கீழ் இவற்றை வழங்கலாம்.

சுதந்திர ஊடக அமைப்புகள் போன்றன சுயாதீன ஊடக ஆணைக்குழு தொடர்பிலான பரிந்துரைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டன. அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைகளுடன் சுதந்திர ஊடக ஆணைக்குழ நியமிக்கப்படல் வேண்டும். இது தற்பொழுது பணியிலுள்ள ஊடகவியலாளர்கள்,துறைசார்ந்த கல்வியியலாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டாளர்களை உள்ளடக்கியதாகவிருத்தல் வேண்டுமென

## 1 07 ஊடக பண்மைத்துவம், கருத்துமற்றும் தகவல்சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுங்குபடுத்தல் முறை.

சட்ட வல்லுனர் அசங்க வெலிக்கல அவர்கள் தெரிவிக்கின்றார்.

(2.8 இலுள்ள கலந்துரையாடல்களைப் பார்வையிடவும்)



**Broadcasting needs technical level regulation to avoid chaos**

சுயாதீன ஒழுங்குபடுத்துநர் இல்லாத சூழ்நிலையில் இது இயலாது. இலங்கையில் ஊடக அமைச்சானது தற்சமயம் பல்வேறு விதமான வகிபாகங்களை மேற்கொள்கின்றது. உதாரணமாக, கொள்கை வகுப்பு,ஒலிபரப்பு ஒழுங்கமைப்பாளர்,அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒலிபரப்பு நிலையங்களை முழுமையாக இயக்குதல் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஐ.ரீ.என்.).

பண்மைத்துவத்தை மேம்படுத்தக்கூடிய எவ்விதமான முறைசார்ந்த கடப்பாடுகளும் அமைச்சுக்கு இல்லை. சிவில் சமூகம் மேற்கொண்ட பரிந்துரைகளின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒலிபரப்பு நிலையங்களை உண்மையில் பொதுமக்களுக்குச் சேவையாற்றக் கூடிய ஒலிபரப்பு நிலையங்களாக அல்லது நேர்மையான சமூக ஒலிபரப்பிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் இதுவரை அரசாங்கம் செயற்படவில்லை.

[16] Securing the Freedom of Expression in the New Sri Lanka: Essential Institutional Reforms, by Asanga Welikala. Groundviews.org 17 January 2015. http://groundviews.org/2015/01/17/securing-the-freedom-of-expression-in-the-new-sri-lanka-essential-institutional-reforms/

## விதப்புரைகள்

- ஒலிபரப்புத் தொடர்பான பூரணத்துவமிக்க சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். இது ஏனைய விடயங்களுடன் ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பான சுயாதீன மதிப்பொன்றை உருவாக்குதல் அல்லது சர்வதேச தராதரங்களுக்கேற்ப பாராளுமன்றம் மூலமாக இலங்கை மக்களுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றையும் உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். இவ் அமைப்பானது வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் பொறுப்புக் கூறக்கூடியதாகவும் செயற்படல் வேண்டும். மேலும் இது செயற்பட வேண்டிய வரையறைகள் பற்றிய தெளிவான கொள்கையை சட்டம் எடுத்துரைத்தல் வேண்டும்.

*“உலகில் மிக மோசமான ஊடக நடத்தைகள் இலங்கையில் இடம்பெறுவதாக நான் நம்புகின்றேன். உதாரணத்திற்கு ஊடக உரிமைகளை எடுத்துக்கொள்வோம். எமது அரசாங்கத்திற்கு பாரியளவில் செய்திப் பத்திரிகைகளை வெளியிடும் உரிமை காணப்படுகிறது. அரசாங்கச் செய்திப்பத்திரிகை என எதனையும் நாம் அழைக்க முடியாது. அது உண்மையில் மக்களுக்குச் சொந்தமானதாகவிருத்தல் வேண்டும். எனவே,ANCL, லேக் ஹவுஸ் போன்ற நிறுவனங்கள் விற்கப்படல் வேண்டும்”*

*“எமது ஊடகங்கள் அரசியல்வாதிகளுக்குப் பின்னாலேயே செயற்படுகிறது. அவர்களைக் கடவுளாகக் கருதிச் செயற்படுபவர்களும் உண்டு. பொதுமக்கள் நலனை மையமாகக் கொண்ட தகவல்கள் இங்கு வெளியிடப்படுவதில்லை. இவை வெறுமனே நாடகமாடுகின்றன. ஒலிபரப்பு ஊடகமின்றி இன்று இலங்கையில் எவ்வித அரசியலும் இல்லை. அதேபோல் அரசியல் இல்லாமல் எவ்வித ஒலிபரப்பு ஊடகமும் இல்லை. இவை இரண்டும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து செயற்படுவதற்கு நாம் அனுமதித்துள்ளோம். தமது சுய இலாபத்தின் நிமித்தம் ஒவ்வொருவரும் குறுகிய காலமே பணியாற்றுகின்றனர். ஒவ்வொருவரும் தமது தொழில்களைப் பாதுகாத்துக்கொள்ளவே செயற்படுகின்றனர். இக்கலாசாரத்தை நாம் மாற்ற வேண்டும்.*

*இலங்கையைப் பொறுத்தவரையில், பல ஊடகங்களுக்கு இலாபம் கூட ஒரு முக்கியமான விடயமல்ல. ஏனைய நன்மைகளைக் கருத்திற்கொண்டு அவர்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். எனவே*

பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதோ அவர்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதோ முக்கியமல்ல. சில ஆக்கங்களை ஏதே ஒருவிதத்தில் வெளியிடுகின்றனர். பல இடங்களிலிருந்து பிரதி செய்தும் வெளியிடுகின்றனர்.

"எமது ஊடகத்தைத் தாக்குகின்ற கட்டமைப்புச் சார்ந்த விடயங்களை மறுசீரமைப்புச் செய்து அவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென நான் கருதுகின்றேன். ஊடக ஒழுக்கநெறி போன்ற ஏனைய முக்கிய விடயங்கள் அடுத்து வரலாம். கேக் இல்லாமல் வெறுமனே ஐசிங்கை மாத்திரம் வைத்து எப்பயனும் இல்லை. 1977 ஆம் ஆண்டு ஆர்.கே.டபிள்யு. குணசேகர அறிக்கை, 1977 ஆம் ஆண்டின் சிதத் நன்தலொச்சன அறிக்கை ஆகியவற்றைக் கொண்டு நாம் ஆரம்பிப்போம்.

டாக்டர் ரொஹான் சமரஜீவ,
தொடர்பாடல் கல்வியியலாளர்,
முன்னாள் பணிப்பாளர் நாயகம்,
TRCSL, ஸ்தாபகத் தலைவர்,LIRNE
ஆசிய ஆராய்ச்சி அமைப்பு

# இ

# ஊடகவியலாளர்கள் மீதான அவதூறுச்சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மட்டுப்பாடுகள்

தனிநபர்களது நற்பெயருக்கு போலியான குற்றச்சாட்டுகளினால் ஏற்படும் களங்கத்திலிருந்து அவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே அவதூறுச்சட்டங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் ஊடக பரிந்துரைக் குழுவின் 19 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பல நாடுகளில் அவதூறுச் சட்டமானது தேவையற்ற மற்றும் நியாயபூர்வமற்ற மட்டுப்பாடுகளை கருத்துச் சுதந்திரம் மீது ஏற்படுத்துகிறது.

உறுப்புரை 19 இன் பிரகாரம், அவதூறுச் சட்டங்களானவை அதன் வரைவிலக்கணம் தொடர்பில் மிகவும் பரந்ததாகக் காணப்படுகிறது. போதியளவு சட்ட ரீதியான பாதுகாப்புகளை இது வழங்கவில்லை. இதற்கெதிராகப் போராடுபவர் அதிக செலவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அல்லது இதனை மீறுபவர்களுக்கு மிக அதிகமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதாவது, குற்றவியல் ரீதியான தண்டனைகள் அல்லது அதிகளவு தண்டப்பணம் விதிக்கப்படுகிறது. சிறந்த அவதூறுச் சட்டமானது தனிப்பட்ட நபர்களது நற்பெயரைப் பாதுகாத்தல் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கிடையில் ஆரோக்கியமான சமநிலையைப் பேணுவதாகவிருத்தல் வேண்டும்.

அவதூறுச் சட்டத்தை ஒரு சிவில் விடயமாகக் கையாளுவதற்கான போக்குகள் உலகளாவிய ரீதியில் காணப்பட்ட பொழுதிலும், குற்றவியல் அவதூறுச் சட்டங்களானது கடுமையாகக் காணப்படுகின்ற அதேவேளை, கருத்துச் சுதந்திரம் மீது பொருத்தமற்ற தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் காணப்படுகின்றது. ஐ.நா. மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்பிற்குமான அமைப்பு (OSEC) ஆகியன இவ்வகையான அவதூறுச் சட்டங்களை குற்றமற்றதாக மாற்ற வேண்டுமென்ற பரிந்துரைகளை மேற்கொண்டு வருகின்றன.

2002ஆம் ஆண்டில் தென்னாசியாவில் அவதூறுச் சட்டங்களை குற்றமற்றதாக மாற்ற வேண்டுமென்ற முன்னெடுப்புகளை இலங்கை மேற்கொண்டது.

47 Article 19 (2006). Defamation ABC: A Simple Introduction to Key Concepts of Defamation Law. Article 19. London. https://www.article19.org/data/files/pdfs/tools/defamation-abc.pdf

48 https://www.article19.org/pages/en/defamation-more.html

49 http://www.sundaytimes.lk/151004/news/lankas-efforts-to-be-rid-of-criminal-defamation-lauded-by-indian-editor-166701.html

## 108 ஊடகம் மீது சட்டப்படி உரிமை பெறாத சட்ட மட்டுப்பாடுகளை அரசாங்கம் பிரயோகிக்கவில்லை

ஊடகவியலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்கு முன்னர் தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுமென எவ்வகையான சட்டமோ அல்லது ஒழுங்குவிதிகளோ கோரவில்லை. இருப்பினும் அச்சக ஊடகங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பத்திரிகை ஆசிரியர்கள் அல்லது செய்தி ஆசிரியர்கள் தம்மைப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும் (1902 இல் உருவாக்கப்பட்டது). இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரான முறையாகும். பத்திரிகை ஆசிரியர்கள் மீது இவ்விதமான நடவடிக்கைகள் வேறு எங்கும் பிரயோகிக்கப்படவில்லை.

சட்ட ரீதியான தேவையாக காணப்படாத பொழுதிலும் கூட ஊடக தரச்சான்று என்ற பெயரில் ஒரு வகையான நிருவாக ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இதன் பிரகாரம், ஊடக அமைச்சின் கீழ் வருகின்ற தகவல் திணைக்களம் சான்றிதழ் ஒன்றை விநியோகிக்கின்றது. இச்சான்றிதழை வைத்திருக்கும் ஊடகவியலாளர் அதனை ஓர் அடையாள அட்டை போல் பயன்படுத்தி உத்தியோகபூர்வமான பத்திரிகை மாநாடுகளிலும் தேசிய விழாக்கள் போன்றவற்றிலும் பங்குபற்ற முடியும். வெளி விவகார அமைச்சின் அனுமதியுடன் வெளிநாட்டிலிருந்து விஜயம் செய்கின்ற ஊடகவியலாளர்களும் ஒரு தற்காலிக தரச்சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடியும். இச்சான்றிதழை விநியோகிப்பது தொடர்பில் குறிப்பிட்ட நடைமுறையொன்று காணப்பட்ட போதிலும் கூட தகவல் திணைக்களமானது தனது தற்றுணிபு அதிகாரங்களையே விண்ணப்பங்கள் தொடர்பில் பிரயோகிக்கின்றது. கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை மேற்கொண்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கு இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை திணைக்களம் மறுத்தது.

வரலாற்று ரீதியாக நோக்குகையில் செய்தித் தாள்களும் ஏனைய சஞ்சிகைகளும் தபால் திணைக்களத்திலேயே தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும் (இவர்கள் பிரதிகளை அனுப்பும் போது விலைச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்). அத்தோடு, தேசிய ஆவணக் காப்பகத்திலும் தம்மைப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும். தேசிய ஆவணக் காப்பகத்தின் பதிவாளர் புத்தகங்களினதும் செய்தித்தாள்களினதும் பதிவாளராகச் செயற்பட்டார்.

இருப்பினும், 1970 ஆம் ஆண்டு முதல் தேசிய பத்திரிகைச் சபையானது

[50] http://www.dgi.gov.lk/divisions/media-accreditation-unit

109 தனிநபர் ஒருவரது நற்பெயரை பாதுகாப்பதற்கு அவசியமான குறுகிய மட்டுப்பாடுகளையே அவதூறுச்சட்டங்கள் பிரயோகிக்கின்றன.

அச்சிடப்பட்ட பருவ இதழ்களும் தம்மை அங்கு பதிவுசெய்துகொள்ள வேண்டுமெனவும் அவை தொடர்பான தகவல்களை வழங்க வேண்டுமெனவும் கூறியது. இதன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், இவ்வித பதிவுகள் கட்டாயமற்றவை எனக் குறிப்பிடப்பட்ட பொழுதிலும் கூட இதனை ஒரு நிறுவனம் பதிவுசெய்துகொள்ள முற்படுகின்ற பொழுது ஆவண ரீதியான பல்வேறு விதமான தகவல்களையும் தனது பதிப்பின் பிரதிகளையும் இழக்க வேண்டிய சிக்கல்கள் காணப்படுகின்றன.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம், பத்திரிகைகளைப் பதிவுசெய்துகொள்ளும் விடயமானது சந்தேகக் கண்ணுடனேயே நோக்கப்படுகிறது. மற்றும் பதிவுகளுக்குத் தடையேற்படுத்தப்படும் பட்சத்தில் வித்தியாசமான கண்ணோட்டத்தில் இப்பிரச்சினைகள் அணுகப்படுகின்றன. ஊடகங்களை மேற்பார்வை செய்து கண்காணித்து வருகின்ற செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஏன் இவ்விதமான பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதில் தெளிவில்லை.

51 http://www.archives.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=227&Itemid=158&lang=en

52 http://www.slpc.lk/news-paper-registrations.html

ஊடகத்தில் குறிப்பிடப்பட்ட விடயமானது அரச தலைவருக்கு மற்றும்/ அல்லது அரசாங்க அமைச்சர்களுக்கு சிக்கலானதாக ஊடக உள்ளடக்கங்கள் காணப்படும் பட்சத்தில் பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக ஆட்சிசெய்த அரசாங்கங்கள் குற்றவியல் அவதூறுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதன் நிமித்தம் இவர்கள் அரச வளங்களைப் பயன்படுத்தினர் (உதாரணம், சட்டமா அதிபர் திணைக்களம்). 1980 மற்றும் 1990 காலப்பகுதியில் இவ்வாறு பல்வேறு விதமான வழக்குகள் தொடரப்பட்டன. இதன் காரணமாக இந்த குற்றவியல் அவதூறுச்சட்டத்தை அகற்றும்படி ஊடக உரிமைக்குழுக்கள் பிரச்சாரங்களை மேற்கொண்டுவந்தன.

குறிப்பாக தண்டனைச் சட்டக்கோவையில் காணப்படுகின்ற 479 ஆம் பிரிவை அகற்றும்படி அவர்கள் கோரிக்கைவிடுத்தனர். இதன் பிரகாரம் இவற்றை குற்றவியல் குற்றமாகக் கருதி சிறைவாசம் அனுப்ப முடியும். ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புகள் தொடர்பான கொழும்பு பிரகடனத்தில் இது முதன்மை விடயமாகக் காணப்பட்டது. இலங்கையின் பல ஊடக அமைப்புகளும் சர்வதேச பரிந்துரைக் குழுக்களும் கலந்துகொண்டதொரு சர்வதேச

கருத்தரங்கின் பொழுது 1998 ஏப்ரலில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதியில் 2002 ஜூனில் 479 ஆம் பிரிவு அகற்றப்பட்டது. அத்தோடு, பத்திரிகைச் சபைச்சட்டமும் அகற்றப்பட்டது.

சுய ஒழுங்குபடுத்தலை நிறுவனமயப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்கள் அமைப்புகள் உடனடியாக ஒன்றுகூடி பத்திரிகை முறைப்பாட்டுகள் ஆணைக்குழுவினை நிறுவினர் (CCSL). இதுவோர் தன்னார்வ பொறிமுறையாகும். 2003 ஒக்டோபரில் இது தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. (3.7 இன் கீழுள்ள விபரங்களைப் பார்வையிடவும்).

ஊடகத்தில் வெளிவந்த ஆக்கமொன்றின் மூலம் தனது நற்பெயர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதென தனி நபர் அல்லது ஓர் அமைப்பு கருதும் பட்சத்தில் அது சிவில் அவதூறுச் சட்டத்தின் கீழ் சட்டப் பரிகாரங்களை நாட முடியும். அவ்வித ஆக்கங்கள் தீய நோக்கத்துடன் இடம்பெற்றுள்ளன என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில் சிவில் அவதூறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இருப்பினும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படுகின்ற கால தாமதங்களின் காரணமாக இதனை இது அர்த்தமற்றதாக மாறிவருகிறது.

பொதுவான சட்டத்தின் கீழேயே சிவில் அவதூறுச் சட்டங்கள் வருகின்றன. இது ஆங்கிலச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். அதாவது, மரபுகள் மற்றும் முன்னைய நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து இது வருகிறது. எனவே சிவில் அவதூறுச் சட்டங்கள் என எவையும் சட்டப் புத்தகத்தில் இல்லை.

ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் குற்றவியல் அவதூறுச் சட்டத்தினைப் போல் இது கடுமையானதாக இல்லாத பொழுதிலும், சிவில் வழக்குகளின் பொழுது சில நேரங்களில் பாரியளவு பணம் நட்டஈடாகக் கோரப்படுவதும் உண்டு. எனவே, சிக்கலான ஊடகங்கள் மீது சில அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள், வியாபாரிகள் போன்றோர் இதன் கீழ் வழக்குகளை தொடர்வதற்கான வாய்ப்புகளும் உண்டு.

[53] https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka

## விதப்புரைகள்

- சர்வதேச மற்றும் அரசியல் யாப்பு தராதரங்களுக்கு ஏற்ப சிவில் அவதூறு தொடர்பான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு ஏற்ற விதத்தில் சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். ஏனைய விடயங்களுடன் இச்சட்டத்தில் அரச அதிகாரிகள் தமது சொந்தப் பெயரில் அவதூறுச்சட்டங்களைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்கள் இருத்தல் கூடாது. சாதாரண மக்களை விட பொது வாழக்கையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் பண்பு இருத்தல் வேண்டும். அவதூறான விடயங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய பொறிமுறைகள் உள்ளன. இழைக்கப்பட்ட குற்றத்திற்கு அளவாகவே அல்லது ஏற்ற விதத்திலே இவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

110 தேசிய பாதுகாப்பு, வெறுப்பூட்டும் பேச்சுகள், அந்தரங்கத் தன்மை, நீதிமன்ற அவதூறுச் சட்டங்கள், ஆபாசம் ஆகியன தொடர்பில் கருத்துச் சுதந்திரம் மீது விதிக்கப்படும் மட்டுப்பாடுகள் தெளிவாகவிருத்தல் வேண்டும். மற்றும் சர்வதேச சட்டங்களுக்கமைவாக ஜனநாயக சமூகமொன்றுக்கு ஏற்ற விதத்தில் நியாயப்படுத்தக் கூடிய விதத்தில் சட்டத்தின் மூலம் வரையறை செய்தல் வேண்டும்.

### நீதிமன்றத்தை அவமதித்தல்

ஊடகவியலாளர்கள் அவ்வப்போது நீதிமன்ற அவதூறு தொடர்பான வழக்குகளை எதிர்கொள்கின்றனர். நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் குறிப்பிடக் கூடியளவு கருத்துமயக்கம் காணப்படுவதுடன் நீதித்துறை சார் பொருட்கோடல்களிலும் கருத்துமயக்கம் காணப்படுகிறது. சட்ட ஆய்வாளர்களான கிசானி பின்டோ ஜயவர்தன மற்றும் ஜிஹான் குணதிலக்க ஆகியோர் இது பற்றி எழுதுகையில் "ஊடகத்தை அச்சுறுத்துகின்ற நீதித்துறை சார்ந்த போக்குகள் மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் அறிக்கையிடுவதில் காணப்படுகின்ற தடைகள்" இதுவே வழக்குக்கான காரணிகளாகக் காணப்படுகின்றன.

கொழும்பு பிரகடனத்தின் 4 ஆம் பிரிவின் (2008 இல் மீளாய்வு செய்யப்பட்டது) பிரகாரம் இவ்வாறு காணப்படுகிறது, "பொறுமைச்

In Media Law Reform Examined, by Kishali Pinto-Jayawardena and Gehan Gunatilleke, in Embattled Media Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 199-203

சட்டம் (Substantive Law) மற்றும் நடவடிக்கை முறைச் சட்டம் ஆகியவற்றை தெளிவுபடுத்துவதற்கு ஏற்ற விதத்திலேயே நீதிமன்ற அவமதிப்புச் சட்டங்கள் இருத்தல் வேண்டும். நீதிமன்ற அவமதிப்பு என்றால் என்னவென்பதை திட்டவட்டமாக இவை எடுத்துரைத்தல் வேண்டும். மேலும் 1981 ஆம் ஆண்டின் ஐக்கிய இராச்சிய நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரகாரமும் 1971 ஆம் ஆண்டின் இந்திய நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் பிரகாரமும் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கொன்று தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியாத விடயங்கள் கட்டமைக்கப்படல் வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புகள் தொடர்பில் நியாயபூர்வமான விமர்சனங்களை முன்வைப்பதற்கும் நீதித்துறை சார் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் அவை நிலுவையில் உள்ள பொழுதும் அவை தொடர்பில் தெரிவிக்கின்ற கருத்துக்கள் நீதிமன்றத்தையோ, அதன் நிருவாகத்தையோ அவமதித்ததாக கருதுதல் கூடாது. இவை தொடர்பான வரைவிலக்கணங்கள் திட்டவட்டமாக உருவாக்கப்படல் வேண்டும். இரகசியத்தன்மை தொடர்பான விடயங்களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். நீதிமன்றத்தை அவமதித்ததாகக் காணப்படும் பட்சத்தில் விதிக்கக் கூடிய ஆகக்கூடிய தண்டனை பற்றியும் இங்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் இலங்கையில் ஒழுங்காக முறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் இல்லை. இருப்பினும், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட விசேட குழுவொன்றின் மூலம் நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான சட்டத்தின் நகல் வரைவொன்று தயாரிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளில் ஒரு ஏற்பாடு இவ்வாறு கருத்து தெரிவிக்கின்றது, அதாவது ஒரு வழக்குத் தொடர்பில் நியாயபூர்வமான கருத்தை வெளியிடுகின்ற பொழுது அதனை நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதக்கூடாது, இந்த வழக்கு விசாரணையிலிருந்து அது தொடர்பான தீர்ப்பு இறுதியில் வழங்கப்படலாம். இருப்பினும், சட்டத்தின் தன்மைகள் பற்றி நியாயபூர்வமான முறையில் விமர்சனங்களை முன்வைக்கின்ற பொழுது அதனை நீதிமன்ற அவதூறாக கருத்திற்கொள்ளக் கூடாது.

மேலும் எடிட்டர்ஸ் கில்ட் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன நீதிமன்ற அவதூறு தொடர்பிலான நகல்

55 http://www.sundaytimes.lk/060226/news/12.html

http://www.parliament.lk/files/pdf/powers_privileges.pdf

வரைபுத் திட்டங்களை காலஞ்சென்ற அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை தாங்கிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு 2003 இல் சமர்ப்பித்தது. இருப்பினும், அத்தெரிவுக் குழு தமது பணிகளை நிறைவுசெய்வதற்கு முன்னர் அப்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற சிறப்புரிமைகள்

பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டமானது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு சட்டமாகும். பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டம் (1953 இன் 21 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் திருத்தங்கள்) சிறப்புரிமைகள் மீறப்படும் பொழுது அவற்றுக்கு எதிராக செயற்படும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்குகிறது. கடந்த காலங்களில் சில ஊடகவியலாளர்களைத் தண்டிப்பதற்கு பாரர்ளுமன்றமானது தனது நீதித்துறையை ஒத்த அதிகாரங்களைப் பிரயோகித்தது. பாராளுமன்றத்திடம் காணப்பட்ட அத்தகைய அதிகாரங்கள் 1977 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட பொழுதிலும் கூட பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்களை ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் கவலைகொள்ள வைக்கின்றன.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பில் ஆர்.கே.டபிள்யு. குணசேகரவின் குழு குறிப்பிடுகையில், பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை வழங்குகின்ற அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் சுதந்திரப் பேச்சு மற்றும் ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றை மட்டுப்படுத்துவதற்கானதொரு அடித்தளமாகக் காணப்படுகின்றன. இவை சர்வதேச சட்டங்களின் கீழ் இலங்கைக்கு காணப்படுகின்ற கடப்பாடுகளுக்கு முழுமையாக முரணாகத் திகழ்கின்றன.

கொழும்பு பிரகடனமானது 1.3 ஆம் பிரிவில் (2008 இல்) பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் அகற்றப்படல் வேண்டும். இது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமற்ற சிறப்புரிமைகளை வழங்குகின்றது. பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியன பற்றிய சமகால உலகின் தராதரங்களை இவை பிரதிபலிக்கவில்லை". மேலும் பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டம் அதன் ஆரம்ப நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டும் (1953) மற்றும்

பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அகற்றப்படவும் வேண்டும்.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களது பேச்சுச் சுதந்திரத்தை தொடரவேண்டிய அவசியமும் காணப்படுகிறது. ஆனால் அதனை மறுசீரமைக்கப்பட்ட முறையொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளல் வேண்டும். நவீன ஜனநாயக உலகில் இந்த சிறப்புரிமையானது பாராளுமன்றத்தை வலுப்படுத்துவது தொடர்பில் செயற்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குத் தொடுப்பதிலிருந்தும் அவர்களை இது பாதுகாக்கின்றது. இதன் காரணமாக பாராளுமன்றத்தில் பொதுமக்கள் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை எவ்வித அச்சமுமின்றி உரையாற்றக்கூடியதாகவிருக்கின்றது. இவ்விதமான கலந்துரையாடல்களின் பொழுது மற்றவர்களின் நற்பெயருக்கு பாதகம் ஏற்படக் கூடிய விதத்தில் ஏனைய செயற்பாட்டாளர்களோ அல்லது ஊடகங்களோ நடந்துகொள்ளும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக சிவில் அவதூறுச் சட்டத்தை பிரயோகிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

எனவே, துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் முகமாக இத்தகைய சிறப்புரிமைகள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். பொதுமக்களது நலன் மற்றும் சட்டவாக்கத்தின் சுயாதீனம் ஆகியவற்றைப் பேணக்கூடிய விதத்தில் பல்வேறு பொதுநலவாய நாடுகளிலிருந்து அதன் மாதிரிகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலமாக தனிநபர்களுடைய நற்பெயர்களையும் பேணமுடியும்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் தொடர்பான இலங்கையின் சட்ட வரைவுச்சட்டகமானது ஏனைய சட்டங்களினாலும் வரையறை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக,

- தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆம் உறுப்புரை: அரசாங்கத்திற்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புடையதாக இது காணப்படுகிறது. நாட்டின் ஜனாதிபதி, தேசிய அரசாங்கம், நீதித்துறை நிருவாகம், மாறுபட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் ஆகியோருக்கு எதிராக தீய நோக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மேற்கொள்ளப்படும் செயல்கள் அல்லது அதற்கான முயற்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் போது அதனைக்

Surveillance and Survival.
By Sumathy Sivamohan.
Frontline, 14 February 2014.
http://www.frontline.in/arts-and-culture/cinema/surveillance-and-survival/article5652190.ece

குற்றவியல் குற்றமொன்றாகக் கருதி 2 வருட சிறைதண்டனை விதிக்க முடியும். இச்சட்டமானது தேசத்துரோகச் சட்டத்தின் ஒரு வடிவமாகக் கருதப்படுகின்றது. சர்வதேச சட்டங்களின் பிரகாரம் சட்டத்திற்கு முரணான விடயமாக இது கருதப்படுகிறது.

- பொதுச்செயலாற்றுகைக் கட்டளைச்சட்டம் (1912 இன் 7 ஆம் இலக்கம்): ஏதாவது நாடகம் அல்லது திரைப்படம் அல்லது காணொளி போன்றன பொதுமக்கள் மத்தியில் காட்டப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பொதுச் செயலாற்றுகைச் சபையின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். யுத்த காலத்தின் பொழுதும் அதற்குப் பின்னரும் சமூகக் கூருணர்வு, விமர்சனங்கள் மிக்க திரைப்படங்கள் தயாரிக்கப்பட்ட பொழுது அவை கடும் தணிக்கைக்குட்படுத்தப்பட்டன அல்லது தடைசெய்யப்பட்டன.

2014 இல் ஆய்வாளர் சிவமோகன் சுமதி அவர்கள் குறிப்பிட்டதன் பிரகாரம், தேசியம் பற்றிய மீள் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கங்களை உருவாக்கிய பிரசன்ன விதானக்கே, விமுக்தி ஜயசுந்தர, சஞ்சீவ புஷ்பகுமார மற்றும் அசோக்கா ஹந்தகம போன்றவர்கள் பொதுமக்கள் செயலாற்றுகைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தணிக்கைக்குட்படுத்தப்பட்டனர்.

மேற்குறிப்பிடப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான மட்டுப்பாடுகளை பகிரங்க விவாதத்திற்கு உட்படுத்துவது அவசியமாகும். மேலும் ஊழல், உறவினர்களுக்குக் காட்டப்படும் சலுவை, நண்பர்களுக்குக் காட்டப்படும் சலுகை ஆகியன எல்லா சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களைச் சென்றடைவதில்லை.

BOX 03

## ஊடகத்தைத் தாக்குகின்ற ஏனைய சட்டங்கள்

ஊடகச் செயற்பாடுகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ தாக்குகின்ற பல்வேறு விதமான சட்டங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்றன.
அவையாவன,

- செய்தித் தாள் கட்டளைச்சட்டம் - 1839 இன் 5 ஆம் இலக்கம்
- 1885 இன் 1 ஆம் இலக்க அச்சக மற்றும் வெளியீடுகள் தொடர்பான கட்டளைச்சட்டம்
- 1902 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அச்சக, ஊடகக் கட்டளைச்சட்டம்
- 1927 இன் 4 ஆம் இலக்க ஆபாச வெளியீடுகள் தொடர்பான கட்டளைச்சட்டம்
- 1958 இன் 41 ஆம் இலக்க தெய்வ நிந்தனை வெளியீடுகள் சட்டம்
- 1973 இன் 48 ஆம் இலக்க தேசிய ஆவணக்காப்பகச் சட்டம்
- 1979 ஆம் ஆண்டின் புலமைச் சொத்துச் சட்டம்.

இவற்றுக்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான தண்டனைச் சட்ட ஏற்பாடுகள் (பிரிவு 118, 120) பொதுமக்களது ஒழுக்கம், நடத்தை அல்லது சமய நல்லிணக்கங்களைப் பாதிக்கின்ற குற்றங்கள் தொடர்பான சட்டம் (பிரிவுகள் 285 முதல் 287 வரை மற்றும் 291 அ மற்றும் ஆ போன்றனவும் ஊடகங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றது.

மூலம் : செல்டன் ஏ குணரத்ன மற்றும் சானுக்க வத்துகம, ஆசிய ஊடகம் தொடர்பான கையேடு, சாகா பப்ளிகேஷன்ஸ் 2000, பக்கம் 182 முதல் 216 வரை.

## விதப்புரைகள்

- தீர்ப்புகள் தொடர்பில் நியாயபூர்வமான விமர்சனத்திற்கு அனுமதிக்கின்ற, நீதித்துறை சார் நடத்தைகள், நீதிமன்றச் செயன்முறைகள் ஆகியன தொடர்பில் விமாசனங்களை அனுமதிக்கின்ற முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தாராளத் தன்மையுடைய நீதிமன்ற அவமதிப்புச் சட்டம். இவற்றுள் தற்பொழுது நடைபெறுகின்ற வழக்கொன்று தொடர்பில் முன்வைக்கின்ற விமர்சனமானது, கோரோதத் தன்மை மிக்கதாகத் திகழாத பொழுது அல்லது அவ்வித கருத்துக்கள் குறிப்பிட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையிலோ இருக்கின்ற விமர்சனங்களை அனுமதித்தல் ஆகியனவும் இவற்றுள் உள்ளடங்கும்.

- பாராளுமன்றம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற அதிகாரிகள் ஆகியோரை விமர்சித்தமைக்காக அவர்கள் மீது தடைகளை விதிக்கின்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருத்தல் கூடாது. பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் உள்ளடங்கலாக பொதுமக்கள் நலனைக் கருதி தகவல்களை வெளியிடுவதற்கான உரிமை சட்டத்தின் மூலம் முழுமையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

- தேசத்துரோகத்துடன் தொடர்புடைய தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவு அகற்றப்படல் வேண்டும். குற்றங்களை தூண்டுவதுடன் தொடர்புடைய சட்டங்கள் இவ்வாறு எழுகின்ற அச்சங்கள் தொடர்பில் செயற்படுவதற்கு போதுமானதாகும்.

- கருத்துச்சுதந்திரத்தை மட்டுப்படுத்துகின்ற ஏனைய சட்டங்களும் விதிகளும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். அவசியமாயின், கருத்துச் சுதந்திரம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சர்வதேச உத்தரவாதங்கள் மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப இவை திருத்தப்படல் வேண்டும்.

# தணிக்கை

செய்திகள் அழியக்கூடிய பொருட்களாகும்: செய்தி ஊடகம் மூலம் அவற்றை வெளியிடுவதற்கு தாமதங்கள் ஏற்படுகின்ற பொழுது அவை சுயாதீனக் கருத்து வெளிப்பாட்டை கடுமையாக இகழ்வதாகக் காணப்படுகின்றன.

மிகவும் தவிர்க்க முடியாத விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே முன்கூட்டிய தணிக்கைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சட்டங்கள் அனுமதிக்கின்றன. பொதுமக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே கருத்துச் சுதந்திரம் மீது சில மட்டுப்பாடுகளை விதிக்க முடியும். இவை தொடர்பில் சரியான வரைவிலக்கணம் மேற்கொள்ளப்படுவதுடன், நலன்களைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சுதந்திரக் கருத்து வெளிப்பாடுகள் தொடர்பில் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றில் கையொப்பமிட்ட சில நாடுகள் தமது சொந்தச் சட்டங்கள் அல்லது அரசியலமைப்பு ஆகியவற்றுக்கு முரணாக முன்கூட்டிய தணிக்கைகளைத் தொடர்ச்சியாக விதித்து வருகின்றன.

முறையாக வடிவமைக்கப்படாத அல்லது மோசமாக உருவாக்கப்பட்ட சட்டங்கள் பேச்சுச் சுதந்திரத்திற்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். இவை தொடர்பில் செயற்படும் அதிகாரிகள் இதன் எல்லைகளைத் தீர்மானிப்பது தொடர்பில் அதகளவிலான தமது தற்றுணிபை பிரயோகிக்கின்றனர். உதாரணமாக, பொதுமக்களது ஒழுங்கு, அவர்களது பாதுகாப்பு அல்லது உறவுகளில் பாதிப்பினை ஏற்படுத்துமெனக் கருதப்படுகின்ற வெளியீடுகள் அல்லது ஒலிபரப்புகள் தொடர்பில் தடைகள் விதிக்கப்படுகின்ற பொழுது இவை தொடர்பிலான பொருட்கோடல்கள் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

ஊடகங்கள் மீது விதிக்கப்படும் அதிகளவிலான தண்டப்பணம் மற்றும் அவற்றை மூடிவிடுவதென விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றின் காரணமாக பல ஊடகங்கள் தமக்குத்தாமே சுய தணிக்கையை ஏற்படுத்திக் கொள்கின்றன. இது கருத்துச் சுதந்திரத்தை மீறும் நடவடிக்கையாகும். ஒப்பீட்டளவில் ஊடக சுய ஒழுங்கமைப்பு தொடர்பிலான வினைத்திறன் மிக்க முறையொன்று காணப்படும் பட்சத்தில் தேவையற்ற அரச தலையீடுகளை அது தவிர்க்கக் கூடியதாகவிருக்கும் (ஊடக சுய ஒழுங்கமைப்பு தொடர்பான 3.7 மற்றும் 3.8 ஆம் பிரிவுகளைப் பார்வையிடவும்).




**Censorship - by Eric Drooker**

## 11 சட்டம் மற்றும் நடைமுறை ஆகியவற்றினடிப்படையில் முன்கூட்டிய தணிக்கைக்கு ஊடகம் உட்படுத்தப்படவில்லை.

இலங்கையில் சிவில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான சகல விடயங்களும் பல வருடங்களாக தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன (ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்கங்கள் இதனை மேற்கொண்டன). அவசரகாலச் சட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்பட்டது (2011 ஆகஸ்டில் இது இல்லாதொழிக்கப்பட்டது). தணிக்கை தொடர்பான விதிமுறைகள் பெரும்பாலும் தான்றோன்றித்தனம் மிக்கதாகவும் அதிகபட்சமானதாகவும் காணப்பட்டதாக ஊடக அமைப்புகள் கருதின.

2006 இல் தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான விடயங்கள் தொடர்பில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பிற்கான ஊடக நிலையத்தினால் (**MCNS**) உத்தியோகப்பற்றற்ற பதிப்பிற்கு முன்னரான தணிக்கை விதிக்கப்பட்டது. இவ் விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் அல்லது கருத்துக்களை வழங்குகின்ற அதிகாரமிக்க அமைப்பாக இது காணப்பட்டது. இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் இந்நிலையம் கலைக்கப்பட்டது.

இலங்கையில் பல வருடங்களாக முறைசார்ந்த முன்கூட்டிய தணிக்கைகள் காணப்படவில்லை. இருப்பினும் நேயமற்ற பாதகமான சூழலின் காரணமாக பல ஊடக அமைப்புகளும் ஊடகவியலாளர்களும் தமக்குத்தாமே சுய தணிக்கையினை விதித்துக்கொண்டனர். இந்நிலைமை 2015 வரை காணப்பட்டது.

Freedom of the Press 2014 Report on Sri Lanka. Freedom House. https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka#.VUhQvfDkqSo

## 112 கேடு விளைவிக்கக்கூடியதும் உணர்வுபூர்வமானதுமான தகவல்களைக்கொண்ட இணையத்தளங்களை அரசாங்கம் தடைசெய்யவோ நீக்கவோ எண்ணாதிருத்தல்

இலங்கையில் இணையத்தளத்தை முடக்கும் செயற்பாடு முதன் முதலில் 2007 இல் இடம் பெற்றது. அது பரந்த அளவில் பார்வையிடப்பட்டதும் பிரபலமானதுமான தமிழ்நெற் www.tamilnet.com எனப்படும் செய்தி தளத்தை முடக்குவதுடன் ஆரம்பமானது. அரச உயர் மட்ட அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய செயற்படும் அனைத்து முக்கிய இணைய சேவை வழங்குனர்களாலும் தமிழ்நெற் தடைசெய்யப்பட்டது. அதன் பின்னர் இணைய சேவை வழங்குனர்கள் செய்தி வெப்தளங்களையும் அரசியல் விமர்சனங்களை வெளியிட்ட வெப்தளங்களையும் தடைசெய்த பல சம்பவங்கள் உள்ளன. இவை அனைத்தும் இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் உத்தரவின் வெயரிலேயே இடம்பெற்றது.

இவ்வாறு தடை செய்வது முற்றிலும் தன்னிச்சையான செயற்பாடாகும். இது எந்தவித சட்ட அடிப்படைகளோ நீதிமன்ற உத்தரவுகளோ அல்லது கண்காணிப்புகளோ இல்லாதது. (இது பொலிஸார் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட உத்தரவுகளைப் பயன்படுத்தி சில ஆபாச வெப்தளங்களை தடை செய்ததற்கு நேர் மாறானது.) இதன் காரணமாக இது உத்தியோக பூர்வமற்ற தணிக்கைக்கு சமனானது.

இதுவரை அறியப்பட்டவரை இலங்கையின் இணைய சேவை வழங்குனர்கள் எவரும் இந்த உத்தரவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லவில்லை. அல்லது நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கூடப் பெறவில்லை. தங்கள் அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படலாம் என்ற அச்சம் இதற்கு காரணமாக இருக்கலாம். (தாங்கள் இவ்வாறு வெப்தளங்களை முடக்கி உள்ளதை அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்குக் கூட தெரிவிக்கவில்லை. இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவினால் தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத தொலைத் தொடர்பு நிறுவனங்கள் மீது நிதி அல்லது சட்ட ரீதியான தண்டனைகளை வழங்க முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இலங்கையின் இணைய சுதந்திரம் தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்று 2011 நவம்பரில் வெளியானது. அதில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. ஷஷதேசிய பாதுகாப்பு தொடர்பான உத்தரவுகளும் தேசிய நலன், பொதுமக்கள் ஒழுக்கம் என்றால் என்ன என்பது குறித்து அரசாங்க அதிகாரிகளின் தன்னிச்சையான முடிவுகளும்

[59] Tamilnet blocked in Sri Lanka, BBC Sinhala.com http://www.bbc.co.uk/sinhala/news/story/2007/06/070620_tamilnet.shtml

[60] https://www.article19.org/data/files/pdfs/press/sri-lanka-tamilnet-blocked.pdf

"There are no laws in Sri Lanka for online content regulation. Website blocking was ad hoc (during prior to 2015) – it was done by asking Internet Service Providers (usually through verbal instructions) to block access from within Sri Lanka, but such websites were accessible from anywhere else in the world. These orders were not documented."

**- Charitha Herath,**
**Former Secretary, Ministry of Media and Information**
**(2012-14)**

மாற்றுக் கருத்தை முடக்குவதற்கும் தங்களுக்கு ஆபத்தான வெப்தளங்களை முடக்குவதற்கும் பயன்பட்டுள்ளது. இந்த நிலைமை சிவில் உரிமைகளை தேசிய பாதுகாப்பிற்காக பலி கொடுக்கும் சட்ட வடிவமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் தராதரங்களால் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தன்னிச்சையான வெப் தணிக்கை சர்வதேச அளவில் கண்டனத்திற்குள்ளாகி உள்ளது. ஃபிரீடம் கௌஸ் அமைப்பு இணைய சுதந்திரம் தொடர்பான தனது 2014ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கை குறித்து இவ்வாறு தெரிவித்திருந்தது. இணையங்களில் வெளியாகும் விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பக்கச் சார்பானவை சட்டத்திற்கு புறம்பானவை ஒடுக்கு முறையானவை.

அந்த அறிக்கையில் மேலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கு வைக்கப்பட்ட அரசியல் மயப்படுத்தப்பட்ட தணிக்கை 2013 2014ம் ஆண்டுகளிலும் தொடர்ந்தது. கொழும்பு டெலிகிராப் வெப் தளம் காலத்திற்குக் காலம் தடை செய்யப்பட்டது. அதில் காணப்படும் மாற்றுக் கருத்து உள்ளடக்கமும் நாட்டின் சச்சைக்குரிய அரசியல் விவகாரங்களை அது வெளிப்படுத்தியதுமே அதற்குக் காரணம். கடந்த காலங்களைப் போல இதற்கான காரணம் அரசாங்கம் அல்ல என மறுத்தது. இணையங்களில் வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தன. அநேக

[51] https://freedomhouse.org/report/freedom-net/2012/sri-lanka

[52] Freedom of Expression on the Internet in Sri Lanka, Centre for Policy Alternatives, Colombo. November 2011. http://cpalanka.org/wp-content/uploads/2011/11/FOE-REPORT-NOV-2011-FINAL-CPA.pdf

சமூக ஊடகங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்களே தொடர்ந்தும் முக்கியமாக ஆராயப்பட்டன. நாட்டிற்குள் உள்ள முகநூல் பாவனையாளர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஆதரவைத் தெரிவிக்கும் செய்திகளை வெளியிட்டனர்.

நவம்பர் 2011 இல் தகவல் திணைக்களம் இலங்கை சம்பந்தமான செய்திகளை வெளியிடும் அல்லது இலங்கை மக்கள் தொடர்பான செய்திகளை வெளியிடும் அல்லது இலங்கையில் இருந்து தரவேற்றப்படும் அல்லது வேறெங்காவது இருந்து தரவேற்றப்படும் அனைத்து வெப் தளங்களையும் உடனடியாக பதிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தது. தகவல் ஊடக அமைச்சே இதனைப் பதிவு செய்யும் அதிகார சபையாகும். தெளிவற்ற தன்மை கொண்ட இந்த நடவடிக்கையைப் பல சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக் காட்டியிருந்தன. ஓர் அறிக்கையில் அவர்கள் இவ்வாறு சுட்டியிருந்தனர். அவதூறு மற்றும் அந்தரங்க உரிமை ஆகியவை குறித்த கரிசனைகளுக்கு அப்பால் அரசாங்கம் இந்தப் பதிவு நடைமுறைக்கு ஒரு நியாய பூர்வமான காரணத்தை முன்வைக்கத் தவறியுள்ளது.

பல செய்தி மற்றும் உடனடி வெப் தளங்கள் தங்களை பதிவு செய்து கொண்டன. அதே வேளை வேறு பல வெப் தளங்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தன. இவ்வாறு தங்களைப் பதிவு செய்துகொள்ளாத வெப் தளங்கள் பல பின்னர் முடக்கப்பட்டன. 2012 இன் ஆரம்பத்தில் இலங்கையின் சுதந்திர ஊடக இயக்கம் பதிவு செய்யப்படாத 5 வெப் தளங்களை முடக்கியதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. எனினும் உச்ச நீதிமன்றம் சில மாதங்களுக்குப் பின்னர் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது.

அரசியல் மற்றும் கடும் விமர்சனங்களை முன்வைக்கும் வெப் தளங்களை தன்னிச்சையாக முடக்கும் நடவடிக்கை 2015 ஜனவரியில் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட பின்னர் முடிவிற்கு வந்தது. நீதிமன்றத்தின் உத்தரவுடன் ஆபாச வெப் தளங்களை தடை செய்வது தொடர்கிறது.

இலங்கை இதுவரை எந்தவொரு சமூக ஊடக தளத்தையும் தடைசெய்யவில்லை. எனினும் மூத்த அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் சமூக ஊடகங்களை வெளிப்படையான அறிக்கைகளில் கடுமையாக விமர்சித்துள்ளனர். 2013 ஒக்ரோபர் மாதம்

[63] https://freedomhouse.org/sites/default/files/resources/Sri%20Lanka.pdf

[61] Arbitrary Blocking and Registration of Websites: The Continuing Violation of Freedom of Expression on the Internet. Civil society statement issued on 9 November 2011. http://www.cpalanka.org/arbitrary-blocking-and-registration-of-websites-the-continuing-violation-of-freedom-of-expression-on-the-internet/

> “Filtering of content on the Internet, using communications ‘kill switches’ (i.e. shutting down entire parts of communications systems) and the physical takeover of broadcasting stations are measures which can never be justified under human rights law.”
>
> **- From the Joint Declaration on Freedom of Expression and responses to conflict situations.** UN Office of the High Commissioner of Human Rights. 4 May 2015. https://shar.es/1YhNPC

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முகநூல் எமது பிள்ளைகளைப் பிடித்துள்ள ஒரு நோய் என்றார். எனினும் அவரே மக்களைச் சென்றடைவதற்காக முகப் புத்தகத்தையும் டுவிட்டரையும் தீவிரமாகப் பயன்படுத்துகிறார். 2014 மார்ச் மாதம் தகவல் ஊடக அமைச்சு சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த குழு ஒன்றை உருவாக்கியது. ஆனால் அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

65 http://www.therepublicsquare.com/politics/2013/10/president-says-facebook-is-a-disease-in-sri-lanka/

Over 200,000 in Jaffna deprived of phone service now for two months. LIRNEasia, 30 October 2006. http://lirneasia.net/2006/10/over-200000-in-jaffna-deprived-of-phone-service-now-for-two-months/

அரசியல்வாதிகள், அரசாங்கம், அத்துடன் ஊடகமும் எமது நாட்டின் மோசமான நிலைமைக்கான காரணத்தை பொறுப்பேற்க வேண்டும். நாங்கள் எங்கள் ஊடகங்களை எங்கள் கலாசாரம் மற்றும் சமூக யதார்த்தங்களுக்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுக்க வேண்டும். பீ.பீ.சி போன்ற முன்னுதாரணமான பொதுச்சேவை ஊடகங்கள் எப்படி வளர்ந்தன என்பதை நாங்கள் ஆராய வேண்டும். ஆனால் இறுதியில் எங்கள் மாதிரிகளை நாங்களே உருவாக்க வேண்டும்.

எட்மன் ரணசிங்க டிவயின மற்றும் ஐலண்டின் முன்னால் பிரதம ஆசிரியர்.

யுத்தம் குறித்து எங்கள் ஊடகங்கள் செய்தி வெளியிட்ட விதத்தில் பாரிய பிரச்சனைகள் உள்ளன. அது யுத்தத்திற்குப் பின்னரும் தொடர்கிறது. சமாதானத்தைக் கட்டி எழுப்புவதிலும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதிலும் எங்கள் ஊடகங்கள் பாரிய பங்களிப்புச் செய்ய வேண்டும்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.”

இன்று நாங்கள் ஊடகங்களில் காணும் பல பிரச்சனைகள் சமூகத்திலும் எங்கள் கல்வி முறையிலும் காணப்படும் ஆழமான பலவீனங்களின் பிரதிபலிப்பே. நாங்கள் சிந்திக்கும் மக்களை எங்கள் பாடசாலையில் இருந்து உருவாக்குவதில்லை. இலங்கையின் ஊடகத் துறைக்கு பாரிய சீர்திருத்தங்கள் அவசியமாக உள்ளன.

சமன் அத்தாவுதஹெட்டி பிரதமரின் மேலதிக ஊடகச் செயலாளர்.

முன்னைய அரசாங்கம் வெப் தளங்களை முடக்குவதற்கு முயன்று தேவையற்ற விவகாரங்களை தோற்றுவித்தது, செய்தி வெப்தளங்கள் ஊடக அமைச்சில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டது, இந்தத் திட்டம் அர்த்தமற்றது, வெறுமனே வெப்தளங்களை பதிவு செய்வதன் மூலம், அதன் உள்ளடக்கம் தொடர்பான எந்தவித கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்த முடியாது. மேலும் நாட்டில் அரசியல் வெப்தளங்கள் முடக்கப்படும்போது. மக்கள் அந்த தகவல்களை பெறுவதற்கான வேறு வழிகளை கண்டுபிடிக்கின்றனர்.

வெப்தளங்களை முடக்குவதை நான் முற்றாக எதிர்க்கிறேன், தங்களை விமர்சிக்கும் வெப்தளங்களை முடக்குவதன் மூலம் தகவல் வெளியாவதை தடுக்கலாம் என அரசாங்கம் கருதினால் அவர்களது எண்ணம் தவறானது, தொழில் நுட்பரீதியிலும் நடைமுறையிலும், அது பிழையான செயல், முன்னைய

அரசாங்கம் மேற்கொண்ட பெரும் தவறு

ஹர்சா விஜயவர்தன, கொழும்பு பல்கலைக் கழகத்தின் கணினிப் பிரிவின் பிரிவுத் தலைவர்.

வெப்தளங்களில் காணப்படும் உள்ளடக்கங்களை ஒழுங்குபடுத்துவதையோ அல்லது அரசாங்கத்தினால் அவை கட்டுப்படுத்தப்படுவதையோ, நாங்கள் எதிாக்கின்றோம், நாங்கள் பொறுப்புணர்வுடன் கூடிய உள்ளடக்கங்களை தயாரிப்பதையும் பகிர்ந்து கொள்வதையும் நாங்கள் முன்னிறுத்துகின்றோம், தொழில்சார் வெப்தள ஊடகவியலாளர்கள் சங்கம் இலங்கையின் தொழில்சார் வெப்தள ஊடகவியலாளர்கள் பின்பற்றுவதற்கான ஒழுக்காற்று கோவையொன்றை தயாரித்து வருகின்றது. இந்த ஒழுக்காற்றுக் கோவையை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதாக உறுதிப் படுத்துபவர்களை மாத்திரமே நாங்கள் அனுமதிப்போம், நாங்கள் செய்தி வெப்தளங்களை ஊடக அமைச்சில் பதிவதை எதிர்க்கவில்லை, ஆனால் தற்போது அதற்கான கட்டணம் (வருடத்திற்கு ஒருமுறை 35,000) மிகவும் அதிகமாக காணப்படுகின்றது, இதனை குறைக்கலாம் என நாங்கள் நம்புகின்றோம்,

முன்னைய அரசாங்கம் வெப் தளங்களை முடக்கவும் தணிக்கைக்கு உட்படுத்தவும் முயன்றது, ஆனால் அதனை செய்வதற்கான சட்டஅடிப்படைகள் எதுவுமில்லை, நாங்கள் சுமார் 8 வெப் தளங்களை முடக்குவதற்கு எதிராக போராடினோம், நாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் போது சிலரின் தொலைபேசி அழைப்புகளை அடிப்படையாக வைத்து இணைய சேவை வழங்குநர்கள் இவற்றை முடக்கியமை தெரிய வந்துள்ளது. தற்போது வெப்தளங்கள் முடக்கப்படுவது என்பது இல்லை (ஏப்ரல் 2015) ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என யாராலும் தெரிவிக்க முடியாது.

பிரெடி கமகே. தொழிற்சார் வெப் செய்தியாளர் சங்க தலைவர்

பிரிவு1

## ஊடகத்தின் பேச்சு சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மையை உகந்த விதத்தில் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பு

பரிந்துரை சேகரிப்பு

## பரிந்துரைகள

1. அரசமைப்பு கருத்துச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை மற்றும் அனைத்து மக்களினதும் தகவல்களை - வெறுமனே பிரஜைகளை மாத்திரம் உறுதிப்படுத்தும் விதத்தில் மாற்றங்களிற்கு உட்பட வேண்டும்,

2. சர்வதேச சட்டங்களில் குறிப்பிட்டுள்ளபடி அவசரகாலச் சட்டத்தினை மிகவும் வழமைக்கு மாறான சூழ்நிலைகளில் மாத்திரமே நடைமுறைப் படுத்துவதை உறுதிசெய்யும் விதத்தில் அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும். ஏனெனில் அவசரகாலச்சட்டம் காணப்படுவது எமது தேசத்தின் வாழ்விற்கே ஆபத்தானதாக காணப்படுகின்றது. இவ்வாறான விதிமுறைகளை ஒருபோதும் வழமையான சட்டவாக்க நடைமுறைகளைக் கைப்பற்றுவதற்கான ஒரு வழிமுறையாகப் பயன்படுத்த அனுமதிக்க கூடாது, அவசரகால நிலைமைக்கான தேவைகள் குறித்து அவசரகால சட்ட விதிமுறைகளில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். அவசரகால சட்ட விதி முறைகளை நடைமுறைப்படுத்துவது நியாயப்படுத்தக் கூடியதா என்பதை நீதிமன்றம் மதிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் அவசியம்.

3. கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றிற்கான அடிப்படை உரிமையைக் கட்டுப்படுத்துவதை ஐசிசிபிஆரின் பிரிவு 19 (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளிலேயே மேற்கொள்ளலாம் என அரசமைப்பு விசேடமாக தெரிவிக்க வேண்டும். அவை கட்டுப்படுத்தகூடிய நலன்களை நியாயப்படுத்தக் கூடியவையாகவும் காணப்பட வேண்டும், அந்த நலனைப் பாதுகாப்பதற்கு அவசியமான கட்டுப்பாடாக அது காணப்பட வேண்டும்,

4. அரச அதிகாரிகளிடம் உள்ள தகவல்களைப் பெறக்கூடியதான தகவல் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், அது சர்வதேச தராதரத்தில் காணப்பட வேண்டும்.

## பரிந்துரைகள

5. 1955 ஆம்ஆண்டின் 32 உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் அல்லது அது மக்கள் நலனிற்கு அவசியமான அரசாங்க தகவலை பெற்றுக்கொள்வதை தேவையற்ற விதத்தில் கட்டுப்படுத்தாத விதத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்றப்பட வேண்டும்.

6. அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் என்ன விடயங்கள் வெளியாக வேண்டும் அல்லது ஒலிபரப்ப வேண்டும் என்பது குறித்த அழுத்தங்களை ஊடகங்களிற்கு கொடுப்பதற்காக தங்களது பதவி மற்றும் அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்வதை நிறுத்த வேண்டும்.

7. தங்கள் தகவல்களைத் தொழிற்சார் ரீதியில் பரப்பும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனையவர்கள் அல்லது பொதுமக்கள் நலனில் தொடர்ச்சியாக செயற்படுபவர்களிற்கு தங்கள் தகவல் மூலங்கள் குறித்த இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்கு உள்ள உரிமையைப் பாதுகாப்பதற்கு சட்டம் வலுமையான பாதுகாப்பை வழங்க வேண்டும்.

8. ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும் சட்டங்கள் அல்லது கொள்கைகளை எற்றுக்கொள்ளும் போது அதனுடன் தொடர்புபட்ட தரப்புகளுடன் அரசாங்கம் பரந்துபட்ட கலந்தாய்வினை மேற்கொள்ள வேண்டும்.

9. ஒலிபரப்பு தொடர்பான முழுமையான சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், அனுமதிப் பத்திரங்களை வழங்கவும், சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தவும் சுயாதீன அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். அது பாராளுமன்றம் ஊடாக இலங்கை மக்களிற்கு பொறுப்புக் கூறுவதாக காணப்பட வேண்டும். அந்த அமைப்பு வெளிப்படைத் தன்மை மிக்கதாகவும், பொறுப்புக் கூறும் வகையிலும் செயற்படவில்லை.

## பரிந்துரைகள

10. கருத்துச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் சகல சட்டங்கள் குறித்தும் அவைகள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் தராதரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளதை உறுதிப்படுத்துவதற்கான மாற்றங்களை கொண்டுவரும் நோக்கில் அரசாங்கம் ஆராயவேண்டும்.

11. சிவில் அவதூறு சட்டத்தை சர்வதேச மற்றும் அரசமைப்பின் தராதரங்களிற்கு ஏற்ப கொண்டுவருவதற்காக அவை குறித்த ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். அரசஅதிகாரிகள் தங்கள் பெயர்களின் கீழ் அவதூறு வழக்குகளை தொடுப்பதற்கான அதிகாரத்தினை இல்லாமல் செய்ய வேண்டும். பொது வாழ்க்கையில் உள்ளவர்கள் பொதுமக்களை விட அதிகளவிற்கு தங்கள் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக காணப்பட வேண்டும், அவதூறு வழக்குகளை எதிர்கொண்டுள்ளவர்கள் தங்களை நியாயப்படுத்தவதற்கு பொருத்தமான ஏற்பாடுகள் காணப்பட வேண்டும், மேலும் அவதூறு வழக்குகளில் விதிக்கப்படும் தண்டனைகள் இழைக்கப்பட்ட குற்றங்களிற்கு சமாந்திரமாக காணப்படவேண்டும்.

12. நீதிமன்ற அவமதிப்பு சட்டங்கள், தீர்ப்புகளை, நீதித்துறை செயற்பாடுகளை, நீதித்துறை அமர்வுகளை நியாயபூர்வமான விதத்தில் விமர்சனம் செய்வதற்கு ஏற்ற வகையில் மாற்றப்படவேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையாமல் இருக்கின்ற வரையிலும், வெளியிடப்பட்ட கருத்துக்கள் நீதி நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாத வரையிலும்,

13. பயங்கரவாதம் அதன் தற்போதைய வடிவத்தில் நீக்கப்பட்டு, தேவைப்பட்டால் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் தராதரங்களிற்கு ஏற்றவகையிலும், பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச தராதரங்களின் அடிப்டையிலுமான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

பிரிவு

# 2

## ஊடகங்களின் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை, சகல தரப்பினருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை

முக்கிய குறிகாட்டிகள்

**A** ஊடக செறிவு

2.1 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல்

2.2 பன்முகதன்மை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பின்பற்றப்படுதலை அரசாங்கம் உறுதிப்படுத்தல்

**B** பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் பல்வேறு கலவை

2.3 அரசாங்கம் பொது, தனியார் மற்றும் சமூக ஊடகங்களின் பல்வேறு கலவையை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

2.4 சுயாதீன மற்றும் வெளிப்படைத் தன்மை மிக்க ஒழுங்குபடுத்தல் முறைகள்

2.5 அரசு மற்று சிஎஸ்ஓ ஆகியன சமுக ஊடகங்களை உருவாக்குவதை ஆர்வத்துடன் ஊக்குவித்தல்

**C** அனுமதிப்பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடுகள்

2.6 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம் பொதுமக்களின் அதிகூடிய நலனை கருத்தில் கொண்டதாக காணப்பட வேண்டும்

2.7 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டம், உரிமை மற்றும் உள்ளடக்கத்தில் பன்முகத்தன்மை காணப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்,

2.8 வெளிப்படையான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு முறை

**D** வரிவிதிப்பு மற்றும் வர்த்தக விதிமுறைகள்

2.9 ஊடக அபிவிருத்தி பாராபட்சமற்ற விதத்தில் இடம்பெறுவதை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் வரிவிதிப்பையும் வர்த்தக முறைகளையும் பயன்படுத்துகின்றது

**E** விளம்பரம்

2.10 விளம்பர கொள்கை மூலம் அரசாங்கம் பாராபட்சம் காட்டாமலிருப்பது

2.11 ஊடகங்களில் விளம்பரம் தொடர்பான வலுவான விதிமுறைகள்

ஜனநாயக சமூகங்களின் பிரஜைகள், தங்களை சூழ்ச்சித் திறத்துடன் கையாள்வது, கட்டுப்படுத்துவதில் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக புத்திஜீவித்தனமான சுயபாதுகாப்பை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் அர்த்தபுஷ்டியான ஜனநாயகத்திற்கான அடிப்படையை ஏற்படுத்த வேண்டும் - அமெரிக்க மொழியில் பேராசிரியரும் ஜனநாயகத்தில் ஊடகங்களின் பங்களிப்பு குறித்த முக்கிய விமர்சகருமான நோம் சொம்ஸ்கி

ஊடகங்களின் உரிமை - அது தனியொருவரின் உரிமையாக - அல்லது அரசினதாக,அல்லது வேறு ஒரு அமைப்பினதாக காணப்பட்டாலும் அது ஆசிரிய பீடத்தின் உள்ளடக்கத்துடன் பிரித்துப்பார்க்க முடியாதபடி தொடர்புபட்டுள்ளது. நவீன சமூகங்களில் ஊடகங்களால் எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்த முடியும் அல்லது பொதுமக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க முடியும் என்பதை கருத்தில் கொள்ளும் போது, ஊடகங்களின் உரிமையாளர்கள் யார், ஆசிரியபீட பதவிகளை அவர்கள் எவ்வளவு தூரம் கட்டுப்படுத்துகின்றனர் என்ற விடயம் குறித்து தீவிர கவனத்தை செலுத்த வேண்டும்.

ஊடக உரிமை என்பது ஒரு சிலதனிப்பட்ட நபர்களின் கரங்களிலோ அல்லது நிறுவனங்களிலோ தங்கியிருக்கும் போது, ஊடகங்கள் சேவையாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படும் பொதுமக்களின் நலன்களை விடத் தனியாரின் நலன்களிற்கே அவை சேவையாற்றுகின்றன. அவ்வாறான தனிப்பட்ட நலன்கள் அரசியல் கட்சிகளின், நிறுவனங்களின் அல்லது பல பிரசார குழுக்களின் நலன்களாக காணப்படலாம்.

அனைத்து ஒலிபரப்பாளர்களும் அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்படும் பொதுச் சொத்தான வானலைகளைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பிட்ட சில உயர் வர்க்கத்தினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் சில நிறுவனங்கள், வானலைகளை கட்டுப்படுத்தும் போது சந்தையை அடிப்படையாகக் கொண்ட போட்டியில்லாமல் போய்விடும், அது பின்னர் தனியொருவர் செல்வாக்குச் செலுத்தும் நடைமுறைகளிற்கு வழிவகுக்கலாம் (உயர்விலைகள் போன்றவை) குறைந்தளவு புதுமை இல்லாமல் காணப்படும்,

ஜனநாயகங்கள் ஊடக உரிமை தொடர்பான போக்குகள் குறித்து கண்காணிக்க வேண்டும், மேலும் ஒரு இடத்தில் குவிவதை

தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைககளை எடுக்க வேண்டும், ஒன்று அல்லது பல ஊடகப் பிரிவுகளில் தனியொரு நபர், குடும்பம் அல்லது நிறுவனம் அல்லது குழுமம் செல்வாக்கு செலுத்துவதை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் சட்டங்களை உருவாக்கலாம். போதுமான அளவு பல்வகைத் தன்மை கொண்ட ஊடக நிறுவனங்களை வளர்த்தெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு கடப்பாடுள்ளது.

இந்த விதிமுறைகள், பார்வையாளர்களின் பங்கு, விற்பனை, வருமானம், மூலதன பங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் அல்லது வாக்களிக்கும் முறைகள் போன்றவற்றை கருத்தில் எடுத்ததாக இந்த விதிமுறைகள் காணப்படலாம், மேலும் இது கிடைநிலை ஒருமைப்பாடு, மற்றும் செங்கோட்டு ஒருமைப்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டதாக காணப்பட வேண்டும்.

விதிமுறைகள் எவ்வாறான வடிவத்தை எடுக்கின்றன என்பது ஊடக சந்தையின் அளவு மற்றும் அதன் அபிவிருத்தி அளவு என்பதில் தங்கி உள்ளது. மேலும் ஊடக சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்குத் தங்கள் பணியை நிறைவேற்றுவதற்கான போதியளவு அதிகாரங்ககளை வழங்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாகவும் அரசியல் அழுத்தங்களில் இருந்து விடுபட்டவர்களாகவும் செயற்பட வேண்டும். ஊடக பன்முகத் தன்மை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போதோ அல்லது ஏற்றுக் கொள்ள முடியாத அளவு குவிப்பு இடம்பெறுகிறபோதோ ஊடக செயற்பாடுகளை நிறுத்துவதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கவேண்டும். தேவையான இடத்தில் தடைகள் தண்டங்கள் போன்றவற்றை விதிப்பதற்கான

BOX 04

## What exactly is Media Pluralism?

The media are pluralistic if they are multi-centred and diverse enough to host an informed, uninhibited and inclusive discussion of matters of public interest at all times.

Pluralism of the media means a media structure that is:

- comprised of competing media outlets which are independent from each other, a central owner, or other influence;
- diversified on separate but overlapping planes of ownership, political views, cultural outlooks and regional interests;
- able to communicate to all corners of society;
- capable of conveying a great variety of information and opinion; and
- designed to draw information from a wealth of different sources.

**Source:** Media Pluralism and Human Rights, produced by the Council of Europe Commissioner for Human Rights, 2011 https://wcd.coe.int/ViewDoc.jsp?id=1881589

அ

ஊடக செறிவு

ஊடக செறிவு (ஒரு குறிப்பிட்ட சந்தையில் ஊடகங்களின் குறிப்பிடத் தக்க பங்கினை குறிப்பிட்ட அளவு தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் வைத்திருத்தல்.) பன்முகத் தன்மையையும் பல் வகையையும் பாதிக்கின்றது. பல தரப்பட்ட எண்ணங்கள், மொழிகள் மற்றும் கலாசாரங்கள் ஊடகங்களில் காணப்படும் சூழலை ஏற்படுத்துவதற்கு பாதகமான நிலையை அது உருவாக்குகின்றது. அதன் காரணமாக சமூகம் ஒன்றின் சகல பிரிவினரும் பகிரங்க கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை தடுக்கின்றது.

இலங்கையின் ஊடகத் துறையை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அதற்கு சொந்தமான மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களுக்குச் சொந்தமானது என பரந்து பட்ட அளவில் வகுக்கலாம். இலங்கையில் உண்மையான சமூகத்திற்கு சொந்தமான ஊடகங்கள் இல்லை. சமூக வானொலிகள் இதுவரை இல்லை. அனைத்து தனியார் ஒலிபரப்பு அலைவரிசைகளில் கொழும்பு மற்றும் அதைச் சுற்றி உள்ள பகுதிகளில் இருந்து உருவானவை. 5 வானொலி நிலையங்களும் அரசால் இயக்கப்படுபவை. இது பிரஜைகள் உள்ளூர் மட்டத்தை பல்வகை ஊடகங்களை பயன்படுத்துவதற்கான திறமையை தடுக்கின்றது.

BOX 05

## Cross-ownership of Media

Media cross-ownership is the ownership of multiple media businesses by one person or company. These businesses can include broadcast and cable television, film, radio, newspaper, magazine, book publishing, music, video games, and various online outlets. This is to ensure that one individual or company does not have a disproportionately high influence over public opinion.

In the United States, the Federal Communications Commission (FCC) sets limits on the number of broadcast stations (radio and TV) an entity can own, as well as limits on the common ownership of broadcast stations and newspapers. These limits are reviewed once every four years.

**Details at:** https://transition.fcc.gov/cgb/consumerfacts/reviewrules.pdf

## 2 01 அரசாங்கம் பன்முகத் தன்மை கொண்ட ஊடகத்தை ஊக்குவிப்பதற்கு சாதகமான நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.

இலங்கையில் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை கொண்ட ஊடகங்களை ஊக்குவிப்பதற்கான எந்த வித அரச கொள்கைகளும் காணப்படுவதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

மேலும், இலங்கையில் ஊடகங்களின் உரிமை ஒரு சிலரிடமே குவிந்திருப்பதை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் எதுவும் இல்லை. ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் பல ஊடக வர்த்தகங்களில் ஈடுபடுவது ஒழுங்குபடுத்தப் படவில்லை. அவ்வாறான சட்டங்கள் இருந்தாலும் நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் அமைப்பு அல்லது பொறிமுறை எதுவும் இல்லை.

அண்மைய வருடங்களில் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் வெளியிட்ட விஞ்ஞாபனங்கள் ஊடக சுதந்திரத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாக காணப்பட்டன. ஆனால் ஊடக பன்முகத் தன்மை மற்றும் பல் வகைமை ஆகியவற்றை உருவாக்குவதற்கான கொள்கைகளின் முக்கியத்துவத்தை அவர்கள் கருத்தில் எடுக்கவில்லை. குறிப்பாக ஒலிபரப்புத் துறையில் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமையை உருவாக்கும் ஆணையைக் கொண்ட சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு எதுவும் இல்லை.

எப். எம். றேடியோக்கள் மற்றும் தொலைக் காட்சிகளில் அலைவரிசைகள் அதிகரித்து வருகின்றன. ஆனால் இந்த அதிகரிப்பு பொதுமக்களை உள்வாங்கும் செயற்பாட்டை உருவாக்கவில்லை. மாறாக இது செய்தி மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளில் முன்னைய அலைவரிசைகளையே பின்பற்றுகின்றன.

2014 வரை அப்போது காணப்பட்ட அரசில் சூழ்நிலை காரணமாக ஒலிபரப்புத் துறையினர் தங்களுடைய உள்ளடக்கத்தில் பல்வகைத் தன்மையை உருவாக்குவது பாதிக்கப்பட்டிருக்கலாம். அக்காலப் பகுதியில் அவர்கள் பாதுகாப்பாக செயற்படவும் அரசாங்கத்தின் விருப்பத்துடன் இணைந்து செல்லவும் விரும்பினர். பல்வகைத் தன்மை அல்லது மாற்றுக் கருத்துக்கள் போன்றவற்றை அனுமதிப்பதன் மூலம் ஆபத்துக்களை எதிர் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அது இடம்பெற்றவேளை – அரச ஒலிபரப்பாளர்களும் பதவியில் உள்ள அரசாங்கத்தின் பிரச்சார சாதனங்களாக பயன்படுத்தப்பட்டனர் - இதன் காரணமாக முழு ஒலிபரப்புத் துறையும் அரசாங்கத்தின் கொள்கையை மட்டும் முன்னெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. மாற்றுக்

68 The Directory was available until 30 April 2015 on Ministry website but is no longer online. Earlier location: http://www.media.gov.lk/english/images/stories/pdf/guide_to_media.pdf

கருத்திற்கு தளம் அளிக்கக்கூடிய சுயாதீன சமூக ஊடகங்கள் இல்லாத நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியது.

இலங்கையில் பெருமளவு ஊடக நிறுவனங்கள் உள்ளன. அவை பல்வகைத் தன்மை குறித்த பிழையான எண்ணத்தை உருவாக்கி உள்ளன. ஆனால் அனைத்து ஊடகங்களும் ஒரே ….. கருப்பொருளையே வெளியிட்டு வருகின்றன. ஊடக சுதந்திரம் குறித்து வெளிப்படையான அர்ப்பணிப்பை வழங்கி உள்ள புதிய அரசாங்கத்தின் கீழ் இந்த நிலை தொடர்ந்தும் காணப்படக் கூடாது. ஆகவே உண்மையான ஊடக பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமைக்கான சரியான தருணம் இது.

## அலைவரிசைகளை சேவையில் ஈடுபடுத்தல்

ஊடக அமைச்சின் 2011 இற்கான இலங்கை ஊடகங்களின் நிலை குறித்த தொகுப்பில் பின்வரும் எண்ணிக்கையான அலைவரிசைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

- வானொலி ஒலிபரப்பில் 16 அலைவரிசைகள் ஈடுபட்டுள்ளன. (2 அரசாங்கத்தினுடையது. ஏனையவை தனியாருடையவை. இவர்கள் மூன்று மொழிகளிலும் 50 இற்கும் மேற்பட்ட எப். எம். வானொலிகளை இயக்குகின்றனர்.)
- 12 நிறுவனங்கள் தொலைக் காட்சி ஒளிபரப்பில் ஈடுபட்டுள்ளன. (2 அரசாங்கத்தினுடையது. ஏனையவை தனியாருடையவை. இவர்கள் 20 இற்கும் மேற்பட்ட அலைவரிசைகளுக்கு பொறுப்பாக உள்ளனர்.)

இவற்றுக்கு மேலதிகமாக சில கேபிள் தொலைக் காட்சிகளும் வீட்டுக்கு நேரடியாக வரும் செய்மதி தொலைக் காட்சி இயக்குனர்களும் ஒரு ஐ.பி. தொலைக்காட்சி வினியோகஸ்தர்களும் உள்ளனர். அனேக சந்தர்ப்பங்களில் இந்த அலைவரிசைகள் உள்ளூர் அலைவரிசைகளை ஒளிபரப்புவதுடன் வெளிநாட்டு செய்மதி அலைவரிசைகளையும் ஒளிபரப்புகின்றனர். சந்தையில் அவர்களுடைய பங்கு ஒப்பீட்டு அளவில் குறைவானது என்ற போதிலும் அது வளர்ந்து வருகின்றது. டயலொக் தொலைக்காட்சி 2015 மார்ச் இறுதி வரை தனக்கு 504, 000 சந்தாதாரர்கள் உள்ளதாக அறிவித்தது. சந்தா கட்டணங்களில் பல்வகைப் பட்டதாக உள்ளன. ஆகக் குறைந்தது. மாதத்திற்கு 450 இலங்கை ரூபாய். இது தவிர நாளாந்த சந்தா கட்டணங்களும் உள்ளன.

https://www.dialog.lk/dialog-delivers-growth-of-6-in-first-quarter

அரசாங்கம் பல ஊடக நிறுவனங்களை சொந்தமாகக் கொண்டுள்ளதுடன் நிர்வகித்து வருகின்றது. அவை கணிசமான அளவு மக்களைச் சென்றடைகின்றது.

- லேக்கவுஸ் என அழைக்கப்படும் அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிட்டட் நிறுவனம். இதுவே நாட்டின் பழைய பாரிய பிரசுர நிறுவனம். (1973 இல் தேசியமயப்படுத்தப் பட்டது.)
- தேசிய வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தமாபனம்.
- தேசிய தொலைக்காட்சி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்.
- சுயாதீன தொலைக்காட்சி என அழைக்கப்படும் வர்த்தக தொலைக்காட்சி நிலையம். 1979ஆம் ஆண்டு தனியார் உரிமையாளர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

தற்போதைக்கு வேறு எந்த ஊடக நிறுவனங்களும் இவற்றுடன் ஒப்பிடும் அளவிற்கு மக்களைச் சென்றடையும் நிலையை கொண்டிருக்கவில்லை. லேக்கவுஸ், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் ஆகியன வரலாற்று ரீதியான சாதக தன்மைகளைக் கொண்டிருப்பதுடன் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட வலை அமைப்புகளையும் கொண்டுள்ளன.

வேறு எந்த தனியார் நிறுவனமும் இதுவரை அனைத்து ஊடகங்களிலும் தங்களுடைய தொடர்ச்சியான பிரசன்னத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால் கடந்த மூன்று தசாப்தங்களில் ஒலிபரப்பு ஊடக நிறுவனங்கள் தங்கள் அலைவரிசைகளை அதிகரித்துள்ளதுடன் வெப் தளங்களையும் உருவாக்கி உள்ளன.

இலங்கையின் ஊடக சந்தை வளர்ச்சியடைந்து வரும் வேளையில் அதன் நுகர்வோரின் விருப்பங்களும் மெல்ல மெல்ல மாறுகின்றன. இதனால் சில சிறிய நிறுவனங்கள் தொடர்ந்தும் செயற்படுவதற்கு போராடுகின்றன. வேறு எந்த வர்த்தக நலன்களையும் கொண்டிராத ஊடக நிறுவனங்களுக்கு இது குறிப்பாக கடும் சவாலாக உள்ளது. அவர்கள் முற்று முழுதாக சந்தா அல்லது விளம்பர வருமானத்தில் தங்கி உள்ளன. சில பத்திரிகைகள் தங்கள் சந்தையை உறுதிப்படுத்துவதற்காக உரிமை மாற்றத்தை எதிர் கொண்டுள்ளன. (பாரிய ஊடக நிறுவனங்கள் கொள்வனவு செய்துள்ளன.)

| Holding Company | FM radio channels | TV channels (terrestrial) | Other media operations |
|---|---|---|---|
| **Capital Maharaja Organisation Ltd.**<br>www.capitalmaharaja.com | Sirasa FM<br>Shakthi FM<br>YES FM<br>Y FM<br>Operated under MBC Networks (Pvt) Ltd | Sirasa TV<br>Shakthi TV<br>TV 1<br>Operated under MTV Channel (Pvt) Ltd. | News website:<br>News 1st<br>http://newsfirst.lk |
| **EAP Holdings**<br>www.eapholdings.lk | Shree FM<br>E FM<br>Ran FM | Swarnawahini<br>ETv | Cinema network:<br>EAP Films and Theatres (Pvt) Ltd. |
| **Asian Broadcasting Corporation (Pvt) Ltd.**<br>www.asiabroadcasting.lk | Hiru FM<br>Sun FM<br>Sooriyan FM<br>Gold FM<br>Shaa FM | Hiru TV | News website:<br>Hiru News<br>www.hirunews.lk |
| **Power House (Pvt) Ltd.** | FM Derana | TV Derana<br>(also operates cable news channel named Ada Derana 24/7) | News website and SMS news alert service:<br>Ada Derana<br>http://www.adaderana.lk |

ஊடக உரிமை செயற்பாட்டாளர்கள் பதிவு செய்துள்ளதன்படி முன்னைய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் தங்களை விமர்சிக்கும் ஊடக நிறுவனங்களை கொள்வனவு செய்துள்ளனர். அதன் பின்னர் அந்த ஆசிரியர் பீடத்தின் உள்ளடக்கம் வெளிப்படையாக மாற்றம் கண்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரை ஊடக நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அல்லது பங்கை வைத்திருப்பவர்களின் பெயர் விபரங்களை பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் என்ற சட்டத் தேவையும் இல்லை. 2.9 இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல நிறுவனத்தின் ஒழுங்கமைப்பாளர் வருடாந்த வருமானம் குறித்த அடிப்படை விடயங்களை வெளியிட்டால் போதும். (இந்தியாவில் அரசாங்கத்தின் பத்திரிகைகளின் பதிவாளர்கள் பத்திரிகையின் ஒவ்வொரு பிரதியும், அதனை அச்சிட்டவர், வெளியிட்டவர், உரிமையாளர், ஆசிரியர், அச்சிட்ட இடம், திகதி ஆகியவற்றை கொண்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.)

சில அரசியல்வாதிகள் தங்களின் குடும்பத்தவர் அல்லது நெருக்கமானவர்களை வைத்து சில ஊடக நிறுவனங்களுக்கு உரிமையாளர்களாக செயற்படுகின்றனர். கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வைத்த 5 உறுப்பினர்கள் குடும்ப வழியில் தனியார் பத்திரிகையுடன் தொடர்புகளைக் கொண்டவர்களாக காணப்பட்டனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் மிகவும் பிரபலமான ஒலிபரப்பு நிறுவனத்தையும் பல வானொலி தொலைக்காட்சி அலைவரிசையையும் கொண்டிருந்தார்.

அரசியல்வாதிகள் ஊடக நிறுவனங்களை வைத்திருப்பது அல்லது அதனுடன் நெருக்கமாக இருப்பது போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்கான எந்தவோர் ஏற்பாடும் இலங்கையில் தற்போது இல்லை. மாறாக அதிகளவான அரசியல்வாதிகள் ஊடக நிறுவனங்களை வைத்திருக்க ஆசைப்படுகின்றனர். அதே போன்று சில ஊடக உரிமையாளர்கள் மறைமுக அரசியல் ஆசைகளைக்

70 Rajapaksa and the media: Someone has to undo the damage. Daily Mirror, 8 Dec 2014. http://www.dailymirror.lk/58351/rajapaksa-and-media-someone-else-has-to-undo-the-damage

71 http://rni.nic.in/cenrule.asp

72 Parliament of Sri Lanka has a total of 225 members. http://www.parliament.lk/en/members-of-parliament/directory-of-members

## 2.02 அரசாங்கம் பன்முகத் தன்மை கொண்ட ஊடகத்தை ஊக்குவிப்பதற்கான இணக்கம்

இலங்கையில் ஊடக பன்முகத் தன்மையை விசேடமாக ஊக்குவிக்கும் சட்டங்களோ விதிமுறைகளோ இல்லை. தற்போது காணப்படும் உரிமையாளர் கட்டமைப்புகள் அவ்வாறான விவாதங்கள், கருத்து பரிமாற்றங்களை ஏற்றுக் கொள்வதுமில்லை.

இலங்கை சமூகம் எப்படி ஒழுங்கமைக்கபட்பட்டுள்ளது மற்றும் அதன் பொருளாதார முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்ற விடயத்திற்கு ஊடகங்களுக்கு யார் உரிமையாளர் என்ற விடயம் மிகவும் முக்கியமானது. துரதிஸ்ட வசமாக அதிகரித்து வரும் தனியார் ஊரிமை ஒலிபரப்புத் துறையில் சுயாதீன ஊடகங்களை வளர்த்தெடுக்கவில்லை.

அண்மையில் வெளியான "போராட்ட நிலையில் உள்ள ஊடகம்" (Embattled Media) என்ற புத்தகம், பரந்துபட்ட வர்த்தக வலையமைப்புகளை கொண்டுள்ளவர்களின், தனியார் ஒலிபரப்பு நிறுவனங்கள் எவ்வாறு பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட சேவையை ஆற்றுவது குறித்து அக்கறை கொள்ளவில்லை என்பதை சுட்டிக் காட்டுகிறது. இலங்கையின் ஒலிபரப்பு ஊடகத்தின் அரசியல் பொருளாதாரம் குறித்து ஆராய்கின்ற புத்தகம் முழு ஊடக உரிமை குறித்தும் முழுமையாக ஆராயுமாறும் பல்வகை எண்ணங்கள் மற்றும் குரல்களுக்கு இடமளிக்குமாறும் கோரி உள்ளது.

73 Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, Feb 2015). pp 101-150 http://www.sagepub.in/books/Book244886?siteId=sage-india&prodTypes=any&q=Embattled+Media&fs=1

ஆ

## பல்வகை தன்மை கொண்ட தனியார், பொது மற்றும் சமூக ஊடகம்

**2.03 இலங்கையில் பல்வகைத் தன்மை கொண்ட ஊடக கலவையை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை.**

இலங்கையின் ஒலிபரப்புத் தறையில் தனியாருக்கு இடம் அளிப்பது என்பது 1990 முதல் ஆட்சியில் உள்ள பல ஆளுங்கட்சிகளின் வர்த்தக நண்பர்களுக்கானதாக மாத்திரம் காணப்படுகிறது. அது வெளிப்படைத் தன்மை மிக்கதாகவோ போட்டி அடிப்படையிலோ வழங்கப்படவில்லை. வானொலியிலோ தொலைக் காட்சியிலோ சமூக ஒலி(ளி) பரப்பு என்பது இல்லை. சமூக குழுக்கள் மற்றும் இலாபத்தை மையமாகக் கொள்ளாத அமைப்புகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை.

பொதுத் தகவல்களுக்கான வாய்ப்பை வழங்கும் விடயத்தில் முன்னைய அரசாங்கம் பல்வேறு பட்ட ஊடக நிறுவனங்களுக்கு இடையில் பாரபட்சமாக நடந்து கொண்டது. சில தனியார் பத்திரிகைகள், ஒலிபரப்பாளர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் வெப் தளங்கள் எனக் கருதப்பட்டவர்களுக்கு அரசாங்க அறிவிப்புகளை வழங்கவில்லை.

இலங்கையில் மாதாந்தர அச்சு பதிப்பு ஒன்றை ஆரம்பிப்பது மிக சுலபமானது. பெருமளவு பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான தலைப்புகளை இலங்கையில் பார்க்கலாம். ஆனால் வர்த்தக ரீதியான சாத்தியத் தன்மையுடன் அவை நெருக்கடிகளை சந்திக்கின்றன.

## 2.04 சுயாதீன மற்றும் வெளிப்படையான ஒழுங்குபடுத்தல் முறை

ஒலிபரப்பின்போது எலெக்ரோ மாக்னட்டிக் அலைக் கற்றைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பொதுச் சொத்துகள் - பல சர்வதேச உடன்படிக்கைகளின் அடிப்படையில் அவை நாடுகளிற்கு ஒதுக்கப்படுகின்றன - என்பதே அரசாங்கங்களின் முக்கிய வாதம் - இவை கிடைத்தற்கரிய வளங்கள். ஓரளவு அலைக் கற்றைகள் மாத்திரமே ஒலிபரப்பிற்கும் ஏனைய பயன்பாட்டிற்கும் கிடைக்கின்றன. இது கிடைத்தத்கரிய வளம் என்பதால் பெறுமதியானது.

டிஜிற்றல் ஒலிபரப்பு என்பது வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போதிலும் இன்னும் முடிவற்ற வினியோகமாகக் காணப்படவில்லை. இதன் காரணமாக அலைக் கற்றைகளின் பாதுகாவலனாக உள்ள அரசாங்கம் அந்த வளத்தை பயன்படுத்தும் ஒலிபரப்பாளர்கள் மீது சில கடப்பாடுகளை திணிப்பது நியாயமானது. எந்த ஒழுங்குபடுத்தல் பொறிமுறையும் வேறு எந்த நலனையும் விட பொதுமக்கள் நலனுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இலங்கையில் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் முறை சுயாதீனமானதும் அல்ல வெளிப்படையானதுமல்ல.

பல தசாப்தங்களாக அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருந்த ஒலிபரப்புத் துறை, 1992 தனியார் துறை பங்களிப்பிற்கு திறந்து விடப்பட்டது. எனினும் இந்த முடிவுடன் விசேட சட்டங்களோ விதிமுறைகளோ உருவாக்கப்படவில்லை. இது அன்றிலிருந்து அவ்வப்போது மேற்கொள்ளப்படும் நிடைமுறைகளாகவே காணப்படுகிறது. தெளிவான விதிமுறைகளோ அல்லது சுதந்திரமான அமுல்படுத்தலோ அல்லது ஒழுங்குபடுத்தல் பொறிமுறையோ இல்லை. தனியார் தரப்பிற்கு வழங்கப்பட்ட அனைத்து ஒலிபரப்பு அனுமதிப் பத்திரங்களும் ஆளும் கட்சிகளின் அரசியல் ஆதரவாளர்களுக்கும் சகாக்களுக்குமே சென்றுள்ளன.

ஒலிபரப்பிற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை தெளிவு படுத்தப்படாததாகவும் ஊடக அமைச்சின் அதிகாரிகளும் அமைச்சரும் தீர்மானிப்பதாகவும் காணப்படுகிறது. பிரசுரிக்கப்பட்ட விதிமுறைகளோ அல்லது தகுதிகளோ கிடையாது. இவை இல்லாததன் காரணமாக பொதுச் சேவை ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களுக்கு அனுமதிப் பத்திரங்களாக ஆதரவை வழங்குகின்ற சட்ட ஏற்பாடுகளும் இல்லை. அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறைகள் இதுவரை அவ்வாறான விடயங்களில் ஆர்வம் காட்டவில்லை.

BOX 06

## An independent broadcast regulator: False start in 1997

In March 1997, the then government of President Chandrika Bandaranaike Kumaratunga proposed a 'Sri Lanka Broadcasting Authority Bill' that sought to establish a regulatory authority for the country's broadcast media. The new entity was to regulate the establishment and maintenance of broadcasting stations and to provide for the issue of broadcast licenses.

Advocacy groups petitioned Supreme Court against the Bill primarily on the basis that it proposed different regulatory regimes with regard to expected standards of performance and accountability for the state broadcasters on the one hand and non-state broadcasters on the other. They argued this was discriminatory treatment, which, in order to be constitutional, needed a rational basis.

The Court found that there was none, and thus ruled against the Bill. In this case, formally known as *Athukorale and others v. Attorney General of Sri Lanka*, the Supreme Court went on to consider the constitutionality of the proposed regulatory authority.

Holding that regulatory authorities must conform to standards of independence and impartiality, it quoted from ARTICLE 19's publication 'Broadcasting Freedom: International Standards and Guidelines': *"The body that allocates licenses must be independent of government. The body may be the one which manages public broadcasting or a separate authority. However, a single authority with jurisdiction over public and private broadcasting is recommended because it facilitates the development and implementation of broadcasting policy, including a co-ordinated strategy to ensure that pluralism is achieved in broadcasting as a whole. The independent licensing body should also have responsibility for the allocation of frequencies and other technical aspects of broadcasting."*

In this landmark judgement, Supreme Court also underlined the need for media pluralism: *"If the fundamental rights of freedom of thought and expression are to be fostered, there must be an adequate coverage of public issues and an ample play for the free and fair competition of opposing views. The imposition of conditions on licenses to ensure that these criteria should be observed do not transgress the right of freedom of speech, but they rather advance it by giving listeners and viewers the opportunity of considering different points of view, of thinking for themselves, and making personal choices."*

**Source:** http://www.article19.org/resources.php/resource/2472/en/sri-lanka:-athukorale-and-others-v.-attorney-general-of-sri-lanka

BOX 07

## Spectrum as a Scarce Public Property

In a landmark 1995 judgment, the Supreme Court of India held that the airwaves or frequencies in the electro-magnetic spectrum are a public property. Thus, their use had to be controlled and regulated by a public authority in the interests of the public and to prevent the invasion of their rights. Since the broadcast media involves the use of the airwaves, this factor creates an inbuilt restriction on its use, as in the case of any other public property.

The dispute arose between the Ministry of Information and Broadcasting of India and the Cricket Association of Bengal (CAB) over whether or not the cricket organisation had the right to grant exclusive telecast rights to a private agency rather than to Doordarshan.

The Lankan Supreme Court, in the Broadcasting Authorities Bill determination in 1997, summarized the legal position as follows: "The body that allocates [broadcast] licenses must be independent of government. The ultimate guarantor that the limited airwaves/ frequencies shall be utilized for the benefit of the public is the State. This does not mean that the regulation and control of airwaves/frequencies should be placed in the hands of a government in office for the time being. The airwaves/frequencies, as we have seen, are universally regarded as public property. In this area, a government is a trustee for the public…"

**Sources:** http://www.mib.nic.in/WriteReadData/documents/SUPREMECOURTJUDGEMENTONAIRWAVES.htm

https://www.colombotelegraph.com/index.php/surrendering-airwaves-and-liberty-to-nepotism/

## 2.05 சமூக ஊடகங்களின் முன்னேற்றத்துக்கான அரசாங்க மற்றும் சமூக அமைப்புகளின் ஊக்குவிப்பு

சமூக ஊடகங்கள் என்பது தாங்கள் பணிபுரியும் சமூகத்திற்கு பொறுப்புக் கூறுவதனை அடிப்படையாக வைத்து குணாதிசயப்படுத்தப் படுகின்றன என யுனஸ்கோ தெரிவிக்கின்றது. பொதுமக்கள் பங்களிப்புச் செய்வதற்கான முக்கியமான இடைவெளியை பெறுவதற்கான மக்கள் இயக்கங்கள் காரணமாகவும் அரசியல் வர்த்தக நலன் இன்றி சுதந்திரமாக தனித்து இயங்குவதற்கான உரிமை குறித்த வேண்டுகோள் காரணமாகவும் இவை உருவாகின்றன.

சமூக ஊடகங்கள் என்பது சமூகங்களில் சமூகத்திற்காக சமூகத்தைப் பற்றி சமூகத்தினால் இயக்கப்படுவது. சமூகம் என்பது பூலோக ரீதியானது அல்லது இடம் சார்ந்ததாகவோ காணப்படலாம். நகரம் கிராமம், மாவட்டம் அல்லது தீவு. அது பொதுவான நலன் கொண்ட நபர்கள் பிரிவொன்றாக காணப்படலாம். அவர்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வாழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குறிப்பாக சமூக வானொலிகள் சமூகத்தில் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை ஆகியவற்றிக்கு பங்களிப்புச் செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகிக்கலாம். அது சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்கள்

74 http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/community-media/

அல்லது கிராம சமூகத்தினர் பங்கு கொள்வதற்கான பொதுவழியை உருவாக்கி வளர்த்தெடுக்கின்றது. இலங்கையில் நாட்டின் பல பகுதிகளில் ஆயிரக் கணக்கான சிறிய சமூகம் சார்ந்த அமைப்புகள் உள்ளன. மேலும் இவை பல வலையமைப்புகளையும் கொண்டுள்ளன. இவர்களில் அனேகமானவர்களுக்கு தொடர்பாடல் என்பது முக்கியமான செயற்பாடு என்ற போதிலும் இவர்களில் அனேகமானவர்கள் சமூக ஊடகம் என்பதை ஊக்குவிப்பதாகவில்லை.

ஏனைய வளர்ந்து வரும் ஆசிய நாடுகளான பங்களாதேஸ், இந்தியா, இந்தோனேசியா, நேபாளம், பிலிப்பைன்ஸ் போன்றவற்றில் பல சமூகம் சார்ந்த சிறிய சமூக அமைப்புகள் வானொலி நிலையங்களை இயக்குகின்றன. சிலர் தொலைக் காட்சிகளையும் இயக்குகின்றனர். அவர்களுடைய ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் வடிவமைப்புகள் அதற்கு அனுமதி அளிக்கின்றன.

இலங்கையில் சில சிறிய சமூக சார்ந்த அமைப்புகள் ஊடகங்கள் நலனுடன் ஒத்துழைக்கின்ற போதிலும் பத்திரிகைகளும் ஊடகங்களும் பொதுநல செய்திகள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு இலகுவில் இடமளிப்பதில்லை. அனேகமாக மைய ஊடகங்கள் அதற்கான வர்த்தக கட்டணங்களை செலுத்துமாறு கோருகின்றன. இதன் காரணமாக சிறிய சமூக அமைப்புகளும் ஏனைய வருமானம்

**Sri Lanka has No Real Community Radio!**

"However, community radio in Sri Lanka is in fact not truly community radio, in that the stations are administered and run by the government and not the community. The government also exerts control over content (no criticism of the government is allowed, keeping community radio artificially non-political)."
**- A Study of Media in Sri Lanka (excluding the North and East)** April 2005. A Report by the Centre for Policy Alternatives and International Media Support http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

BOX 08

## Guiding principles of community radio

Genuine community stations should be:

- Editorially independent and explicitly constituted as 'not-for-profit';
- Designed to serve the needs of specific communities – either geographically-based ones or 'communities of interest';
- Have management structures that are representative of the communities the station is designed to serve;
- Provide programming that is relevant to the community being served.

நோக்கமற்ற அமைப்புகளும் தங்களால் அணுகக்கூடிய தங்களுக்கு கட்டணம் செலுத்தக் கூடியதாக உள்ள ஏனைய மாற்று ஊடக அலைவரிசைகளை பயன்படுத்துகின்றனர். இ∴து இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தளங்கள் மற்றும் வீதி நாடகங்கள் அரங்குகள், டிஜிட்டல் கதை செல்லும் போன்றவை என்பன.

இந்தியா, நேபாளம், பங்களாதேஸ் போன்று இலங்கையில் இதய சுத்தியுடனான ஒலிபரப்பாளர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் காணப்படவில்லை, சமூக வானொலிகள் என்ற சொற்பதம் இலங்கையைப் பொறுத்தவரை தவறானது, அந்த வானொலி நிலையங்கள் சமூகங்களிற்கு சொந்தமானதாகவோ அல்லது அவர்களால் நிர்வகிக்கப்படுவதாகவோ காணப்படாததே இவ்வாறு தெரிவிப்பதற்கான காரணம். இலங்கையில் சமூக வானொலிகள் என அழைக்கப்படுபவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய ஒலிபரப்புகளே. இதுவரை வர்த்தக ஒலிபரப்பு அனுமதிப் பத்திரத்தின் கீழ் எந்த சமூக வானொலி நிலையமும் ஏற்படுத்தப்படவில்லை

சிவில் சமூகத்தினர் இதற்காகப் பல வருடங்களாக குரல் கொடுத்து

வருகின்றபோதிலும், தொடர்ச்சியாக இலங்கையை ஆட்சி புரிந்த அரசாங்கங்கள் சமூக ஒலிபரப்பாளர்களிற்கு அனுமதிப் பத்திரத்தை வழங்ககூடிய, ஏற்படுத்தகூடிய, உருவாக்க கூடிய, எந்தவித சட்ட நடைமுறை குறித்த யோசனைகளையும் முன்வைக்கவில்லை. சமூக வானொலி சேவைகளை நடத்துவதற்குச் சில பல்கலைக் கழகங்களும், நன்கு ஸ்தாபிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளும் விண்ணப்பித்துள்ள போதிலும் அது இதுவரை வெற்றியளிக்கவில்லை.




கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாலி வலாகத்தால் வானொலி வலாகம் தொடங்கி வைக்கப்பட்டது

சமீப காலங்களில் சில பொதுமக்கள் குழுவினர், நாடாளாவிய இணைய வசதிகளை பயன்படுத்தி முற்றுமுழுதாக இணையத்தை அடிப்படையாகக் கொண்ட வானொலி சேவைகளை ஆரம்பித்துள்ளனர். உதாரணத்திற்கு

- ரேடியோ களுத்துறை (http://www.radiokalutara.com), சில ஆர்வம் மிக்கவர்களால் இயக்கப்படுகின்றது
- நெசனல வானொலி (http://www.nenasalaradio.lk) குருநாகல் அஸ்பெதுவமில் உள்ள அபின வராம அபிவிருத்தி மன்றத்தனால் இயக்கப்படுகிறது.
- கும்பஸ் ரேடியோ (http://www.campusradio.lk), கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஹிறிபாலி மாணவர்களால் இயக்கப்படுகிறது.

இந்த சேவைகள் எந்தவித அனுமதிப் பத்திரம் அல்லது ஒழுங்குபடுத்தல் கட்டணத்திற்கும் உட்படவில்லை.

BOX 09

## Community Radio in Sri Lanka: Myth and Reality

In 1981, the fully state owned Sri Lanka Broadcasting Corporation (SLBC) initiated the Mahaweli Community Radio (MCR). It was designed to provide communication support for tens of thousands of families being resettled under the massive Mahaweli River Diversion Programme.

Drawing on experience in other countries, MCR founders devised participatory strategies to involve beneficiary communities. With international support from UNESCO, the Danish government and other sources, local radio stations were set up in Giradurukotte, Kothmale and Mahailuppallama and many two-way broadcasting activities were undertaken. In addition to content production, the process also trained many broadcasters on participatory radio methodologies.

Despite these accomplishments, MCR failed to gain lasting support within SLBC, and the project ran into operational difficulties after international funding ended in 1990. As former SLBC broadcaster and media researcher M J R David later documented, MCR's model was not popular within SLBC that had historically disseminated government information to the people in one-way communication.

In 2003, UNESCO and UNDP supported the Uva Provincial Council to set up Uva Community Radio (UCR) in Bandarawela, in the Badulla district, one of Sri Lanka's most underdeveloped districts. It was aimed at using low-cost digital radio production technology to enable communities to produce their own media content. As part of this strategy, 40 young communicators and close to 400 community volunteers were trained in community broadcasting and participatory programme production.

Both MCR and UCR faced serious challenges of sustainability. Over-reliance on foreign assistance was a mistake. MCR resources were later taken over by SLBC and the services discontinued.

A major flaw in both MCR and UCR was that they were not truly rooted in communities; these were simply rural transmissions of the state broadcaster. As journalist Nalaka Gunawardene wrote in 2003: "Listeners have no say in running the stations – these are managed by a tight bureaucracy in Colombo, whose rigid guidelines control content: strictly no politics, and nothing remotely against the government in office. Although touted as such, SLBC is not community radio, which is supposed to promote access, public participation in production and decision-making and listener-financing – where each listener contributes a small amount towards the running of the radio station."

In 2012, broadcasters Tilak Jayaratne and Sarath Kellapotha wrote: "One could argue that if the people were to own the media, it could provide a base, a platform for stabilising democratic rights through media interventions. Community radio could have provided such a space. Sadly, community radios in Sri Lanka do not belong to the community but to the state -- the classic violator of democratic rights."

Thus, genuine community radio remains an aspiration in Sri Lanka. Reforms that introduce a true democratisation of the airwaves could one day make it a reality.

**Sources:**

Chapter on Mahaweli Community Radio by M J R David in: A Passion for Radio, Ed. Bruce Girard (2001). http://comunica.org/passion/contents.htm

Description of Uva Community Radio (2003). The Communications Initiative. http://www.comminit.com/global/content/uva-community-radio

Radio suffers as Colombo bosses call the shots. Panos Features, London. October 2003. http://panos.org.uk/features/radio-suffers-as-colombo-bosses-call-the-shots/

The Political Economy of Electronic Media in Sri Lanka. Tilak Jayaratne and Sarath Kellapotha. 2012. http://goo.gl/uapyDM

# அனுமதிப் பத்திரம் மற்றும் அலைக்கற்றை ஒதுக்கீடு

ஒலிபரப்பு அனுமதிப் பத்திரம் என்பது பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாகும். ஒலிபரப்பு ஊடகங்களுக்கு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது பல்வகைமை குறித்து கருத்தில் கொள்ள வேண்டிய தேவை இல்லை. இரு வெவ்வேறு வகையான ஒலிபரப்பாளர்களுக்கு சமமான ஒதுக்கீடுகளுடன் கூடிய அனுமதிப் பத்திரத்தை வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும். அது முக்கியமானது.

**2006** அலைக் கற்றை ஒதுக்கீடுகளுக்கான அரச திட்டங்கள் பொதுமக்கள் நலனை அதிகளவிற்கு பயன்படுத்துவதாக காணப்படவில்லை.

மேலே குறிப்பிட்டது போல அலைக் கற்றை என்பது முடிவடையக் கூடியது. அது பல தரப்பட்ட சேவையாளர்கள் பயன்படுத்தக் கூடிய விதத்தில் சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதியான வளம்.

ஆதிகளவான விண்ணப்பங்கள் காரணமாக அலைக் கற்றை பாவனை அதிகளவு குழப்பம் மிகுந்ததாக மாறி உள்ளது.

- 1920 இல் ஆரம்பித்த வானலை ஒலிபரப்பு
- அரசாங்கங்களும் ஆய்வுகளும் இதனை பயன்படுத்துகின்றன. பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, வள முகாமைத்துவம், போக்குவரத்து போன்ற துறைகளில்.
- மக்களுக்கான வர்த்தக சேவைகள்
- தொழிற் துறை விஞ்ஞான மற்றும் மருத்துவ சேவைகள்.

வானொலி அலைவரிசைகளை சிறப்பான பயன் மற்றும் சமூக சாதகதன்மையை பெறுவதற்காக ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகளே அலைக்கற்றை முகாமைத்துவம் எனப்படும். வானொலி அலைக்கற்றை எனப்படுவது 3 கிலோ ஹேர்ட்ஸ் முதல் 3000 கிலோ ஹேர்ட்ஸ் வரையிலான முழுமையான தந்தியில்லா

தொடர்பாடல்களிற்கு பயன்படுத்தப்படும் அலைவரிசைகளைக் குறிக்கும். வானொலி அலைக்கற்றை மாசுபடுத்தலை கட்டுப்படுத்துவதும், பயன்படுத்த கூடிய வானொலி அலைக்கற்றைகள் மூலம் உச்சபயனை பெறுவதுமே அலைக்கற்றை முகாமைத்துவத்தின் நோக்கம். வெளிப்படை தன்மையுடன் நிர்வகிக்க வேண்டிய அலைக் கற்றைகளின் பாதுகாவலன் அரசாங்கமே.

அரைகுறையான, ஒலிபரப்பு தாராளமயப்படுத்தல் ஆரம்பித்த 1990 இன் ஆரம்பத்திலிருந்து இலங்கையில் இது உரிய முறையில் இடம்பெறவில்லை. எந்தவித உரிய நடைமுறைகளையும் பின்பற்றாமல் அலைவரிசைகள் தனிநபர்களிற்கும், நிறுவனங்களிற்கும் வழங்கப்பட்டுள்ளன, முற்றுமுழுதாக இதனை தீர்மானிக்கும் சக்தியாக அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உள்ளனர். இதன் காரணமாக வரையறைக்குட்பட்ட அலைக்கற்றைகள் சில பிரிவுகளில் நிரம்பியுள்ளது ( நிச்சயமாக எவ்வம்களால்) சில சந்தர்ப்பங்களில் அலை வரிசைகளை அரசியல்வாதிகள் தங்களுக்கென ஒதுக்கி வைத்துள்ளனர்.

ஊடக அமைச்சிடமிருந்து அனுமதிப்பத்திரத்தை பெற்றதும், இலங்கையின் அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்களும்

*"In Sri Lanka, media licensees have no terms or conditions: they can pretty much do whatever they please. Our radio frequency spectrum has been grossly mismanaged and we have now run out of frequencies. We know very well how frequencies were assigned.*

*"There are well-established methodologies for optimally managing this public resource. The best way is to auction frequencies, which is what I propose for Sri Lanka. It gives all interested parties the chance to bid, and it accrues money to the government."*

**- Dr Rohan Samarajiva, Former Director General, TRCSL (1998-99); and Founder Chair, LIRNEasia**

தங்கள் அலைவரிசையை இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் - இலங்கையின் தொலைத் தொடர்பு தொழில்துறை ஒழுங்குபடுத்தல் அமைப்பிடமிருந்தது, வானொலி அலைக் கற்றைகளை பயன்படுத்துவதை நிர்வகித்து கட்டுப்படுத்தும் ஆணை இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது, மேலும் அலைவரிசைகளை அவசியம் என கருதும் தருணங்களில் இடைநிறுத்துவதற்கும், இரத்துச் செய்வதற்கும், தடை செய்வதற்குமான அதிகாரத்தையும் அது கொண்டுள்ளது. அது 1991ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தின் கீழான தொலைத் தொடர்பு சட்டத்தின் கீழ் இவற்றிற்கான அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

உரிமம் வழங்கும் செயற்பாடுகளை போலல்லாமல், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அலைவரிசை ஒதுக்குதல், கண்காணிப்பு மற்றும் வருடாந்த புதுப்பித்தல் போன்றவை குறித்த விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. ஊடக நிறுவனமொன்றிற்கு உரிமம் வழங்கப்பட்டதும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறிப்பிட்ட நிறுவனத்தின் தொழில் நுட்ப தேவைகளை மதிப்பீடு செய்வதுடன் இன்னமும் உள்ள பகுதிகளில் இருந்து அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்யும். அதன் பின்னர் அலைவரிசைக்கான கட்டணத்தை செலுத்துமாறு குறிப்பிட்ட நிறுவனம் கோரப்படும். அஃதொரு வருடாந்த கட்டணமாகும். அது கோரப்பட்ட அலைவரிசை மற்றும் டிரான்ஸ்மிட்டரின் வலுவை பொறுத்து வேறுபடும்.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒதுக்கப்பட்ட அவைரிசைகள் மற்றும் தொழில் நுட்ப ரீதியிலான விபரங்களைத் தனது இணையத்தளத்தில் வெளியிடுகின்றது. ஆனால் இது மாத்திரம் அலைக்கற்றைகள் பொது நலனிற்கு உகந்த விதத்தில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு போதுமானதல்ல.

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் மற்றும் ஐடிஎன் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் பேராசிரியர் தம்மிக கங்கானந்த திசநாயக்க இவ்வாறு தெரிவிக்கின்றார்.- எங்களுடைய வானொலி அலைக்கற்றைகளை தற்சமயம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

75 http://www.trc.gov.lk/spectrum-management/spectrum-management-in-sri-lanka.html

76 http://www.commonlii.org/lk/legis/num_act/slta25o1991337/

77 http://www.trc.gov.lk/frequency-licensing.html

78 TRCSL Frequency reservation fees gazetted on 1 November 1999 under the Sri Lanka Telecommunications Act No 25 of 1991: http://www.trc.gov.lk/images/stories/spectrum/Gazette.pdf

79 http://www.trc.gov.lk/frequency-assignments.html

நிர்வகிக்கின்றது. பொதுமக்களுக்கு அஃது எவ்வாறு இயங்குகின்றது என்பது தெரியாது, இதில் வெளிப்படைத் தன்மையில்லை. இது மாற்றமடையவேண்டும். எங்களுக்கு வெளிப்படையான பொறுப்புக்கூறும் அலைக்கற்றை நிர்வாகம் அவசியம், மேலும் நாங்கள் அனலொக்கில் இருந்து டிஜிட்டல் ஒலிபரப்பு முறைக்கு மாறும்போது பல தரப்பினருக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

## 2.07 அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் உடைமையுரிமை மற்றும் உள்ளடக்கத்தின் பல்வகைதன்மையை ஊக்குவிக்கவேண்டும்.

வரையறைக்குட்பட்ட எலெக்டிரோ மாக்னட் அலைக்கற்றைகளுக்கு பலதரப்பட்டவர்களும் பயனாளிகளும் போட்டியிடும் நிலையில், பல்வேறுபட்ட சேவைகளுக்கு அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்வதற்கு தேசிய அலைவரிசை ஒதுக்கீட்டுத் திட்டத்தை அரசாங்கங்கள் பயன்படுத்துகின்றன.

ஐக்கிய நாடுகளின் விசேட முகவர் நிலையமான சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம், அலைக்கற்றையை உகந்த வழியில் பயன்படுத்துவதற்கு சர்வதேச கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது, அஃது அலைக்கற்றை ஒதுக்கீட்டிற்கான தராதரங்களை நிர்ணயித்துள்ளதுடன், ஒதுக்கீடுகளுக்கான சர்வதே அமைப்பை கையாள்கின்றது. தேசிய திட்டங்கள் நாட்டிற்கு உகந்த முறையில் அலைக்கற்றைகள் பயன்படுத்துவதை உறுதிசெய்வதற்காக தேசிய திட்டங்கள் சர்வதேச தொலைதொடர்பு சங்கத்தின் விதிமுறைகளை பின்பற்றவேண்டும்.

இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம் இவ்வாறு தெரிவிக்கின்றது, ஷசமூகத்தின் மாறிவரும் தேவைகளை இலங்கையின் தொலைத்தொடர்பு

80 http://www.trc.gov.lk/spectrum-planning.html

81 TRCSL Frequency assignment procedure, http://www.trc.gov.lk/frequency-assignments.html

ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கருத்தில்கொள்வதுடன், அலைக்கற்றை திட்டத்தை தயாரிக்கும்போது புதிய பயன்பாடுகளை நவீன தொழில் நுட்பத்தை புதுமையான முறையில் பயன்படுத்துகிறது.

அரசாங்கத்தின் தொழில்நுடப முகவர் நிலையம் என்ற வகையில் இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எனினும் மேலேகுறிப்பிடப்பட்ட விடயங்கள் முற்றமுழுதாக தொழில்நுட்ப தன்மை கொண்டவையாக மாத்திரம் காணப்படுகின்றன, எனினும் பொது வளமான அலைக்கற்றைகளை ஊடக பன்முகத்தன்மையை அல்லது அனைவரையும் உள்ளடக்கிய தகவல் சமூகத்தை வளர்த்தெடுப்பதற்கோ பயன்படுத்துவதற்கோ குறித்த பரந்துபட்ட தன்மையை காணமுடியவில்லை. அவ்வாறான வழிகாட்டுதல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கையிலிருநது வெளிவரவேண்டும்.

இலங்கையில் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகளிற்கான அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டுள்ள விதம் குறித்து இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் வெப்தளத்தில் காணமுடிகின்றது. (2015 மே முதலாம் திகதி வரை)

ஊடக உரிமப்பத்திரத்திற்கோ அல்லது அலைவரிசை ஒதுக்கீட்டிற்கோ கடப்பாட்டு தேவைகள் எதுவும் காணப்படவில்லை- கேபிள் தொலைகாட்சி இயக்குநர்களுக்கு பிஎஸ்பி அலைவரிசைகளை நடத்துவதற்கு- (இலங்கையில் இவை காணப்படவில்லை) அல்லது சிறுபான்மை நல அலைவரிசைகளை நடத்துவதற்கு.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அலைவரிசைகளை பயன்படுத்துபவர்களுக்கு வருடாந்த கட்டணத்தை அறவிடுகின்றது. தற்போதைய கட்டணங்கள் 1999 நவம்பர் முதலாம் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டவை. 5ஆம் திகதி நடைமுறைக்கு வந்தவை. இந்த கட்டணங்களை ஆராய்ந்ததில் வர்த்தக பாவனையாளர் களுக்கும்,வர்த்தக ரீதியில் பயன்படுத்தாதவர்களுக்கும் இடையில் கட்டணங்களில் வித்தியாசம் இல்லாதது தெரியவந்துள்ளது,பொதுச்சேவை ஒலிபரப்பாளர்களுக்கோ அல்லது சமூக ஒலிபரப்பாளர்களுக்கோ சலுகைக் கட்டணங்கள் எதுவும் இல்லை.

http://www.trc.gov.lk/frequency-assignments-in-sound-fm-and-television-tv-broadcasting-in-sri-lanka.html

http://spectrum.trc.gov.lk/Broadcasting/FM/download/Gazette.pdf

## 2.08 சுதந்திரமான மற்றும் வெளிப்படையான ஒழுங்குபடுத்தல் அமைப்பு

ஒலிபரப்பு உரிமங்களை வழங்குவதற்கான உரிய ஒழுங்கு முறை யெதுவும் இல்லை. அவைகள் சுதந்திரமானதாக, வெளிப்படையானதாக காணப்படுகின்றதா என்பது வேறு விடயம். ஒலிபரப்பு உரிமம் வழங்கும் நடவடிக்கைகள் இன்றுவரை ஒழுங்கற்றவையாக காணப்படுகின் றன. தொடர்ச்சியற்றவையாக மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்படாதவையாக காணப்படுகின்றன.

இலங்கையில் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு உரிமங்களை வழங்குவதற்காக 1992 முதல் மூன்று சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன-

- 1966 ஆம்ஆண்டின் 37ஆவது இலக்க இலங்கை ஒலிபரப்புச் சட்டம்-அப்போதைய ஒலிபரப்புத் திணைக்களத்தை அரசாங்கத்தின் ஒலிபரப்பு கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. இந்தச் சட்டம் ( பிரிவு 44) ஊடகத் துறைக்கு பொறுப்பாக உள்ள அமைச்சருக்குத் தனியார் ஒலிபரப்பு நிலையங்களை எற்படுத்துவதற்கான உரிமங்களை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.
- 1982ஆம் ஆண்டின் 6ஆவது இலக்க சட்டத்தின் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபன சட்டம்.-அது

"In order to guarantee the existence of a wide range of independent and autonomous media in the broadcasting sector, it is essential to provide for adequate and proportionate regulation of that sector. This will serve to guarantee the freedom of the media while at the same time ensuring a balance between that freedom and other legitimate rights and interests. Perhaps most importantly in order to preserve broadcasting as part of the democratic process, governments should aim to create independent regulators for broadcasting. Even in very small jurisdictions, where the only broadcaster is State funded and budgets are limited, regulation which is independent of the State is vital to preserve the right to freedom of speech."

**- Guidelines for Broadcasting Regulation,**
**By UNESCO & Commonwealth Broadcasting Association (CBA), 2006.** http://otp.unesco-ci.org/training-resource/film-production/guidelines-broadcasting-regulation

அனேகமான தேசிய தொலைக்காட்சி ஒலிபரப்பாளரின் வரைவிலக்கணம் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. சில விதிமுறைகளையும் இது உள்ளடக்கியுள்ளது.( பிரிவு 17, 28,38) மேலும் இது தனியார் மற்றும் அரச ஒலிபரப்பு நிலையங்களுக்கு உரிமம் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 1991 இன் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்பு சட்டம்(1996 இன் 27ஆம் ஆண்டு திருத்தம்) –இந்த சட்டம் தொலைத்தொடர்பு சேவையை வெறுமனே சமிக்ஞைகளை அல்லது பல சமிக்ஞைகளை பயன்படுத்தி செய்திகளை தெரிவிப்பது என வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.


இந்தச் சட்டங்களில் எவையும் பன்முகத்தன்மை ஊடகத் துறை குறித்து ஆராய்வதற்கான வகையில் அமைந்திருக்கவில்லை. முதல் இரண்டு சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளினை மிகக்கடுமையாக அர்த்தப்படுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் தங்களுக்குப்போட்டியாக உள்ள தனியார் ஒலிபரப்புகளைக் கட்டுப்படுத்தலாம். ஒலிபரப்பு தொடர்பான பாரிய சர்ச்சையொன்று தொடர்பாக (சிபிஎன்எஸ் விவகாரம்) ஆராய்ந்த ஆய்வாளர் ஒருவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்திலோ அல்லது தொலைத்தொடர்பு சட்டத்திலோ வெவ்வேறு ஒலிபரப்பு தொழில் நுட்பங்கள் குறித்து சிறிதளவு கூட குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒவ்வொரு வகையான ஒலிபரப்பாளரும் ஒலிபரப்பு நிறுவனமொன்றை உருவாக்கி சட்டத்திற்குக் கீழ் படிந்து நடத்துவதற்காக எந்த வகையான உரிமங்களைப் பெற வேண்டும் என்பது குறித்தும் தெரிவிக்கப் படவில்லை”

இந்த நிலை ஊடகப் பன்முகதன்மைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் கடும் சவால்களை உருவாக்ககூடியதாக காணப்படுகின்றது. 2005 இல் மேற்கொள்ளப்பட்ட ஊடக துறை மதிப்பீடு இவ்வாறு குறிப்பிடுகின்றது- இலங்கையின் ஒலிபரப்புத் துறை உரிம முறை முற்று முழுதாக வெளிப்படை, பொறுப்புக் கூறுதல் மற்றும் தொடர்ச்சி தன்மையற்றது. இதன் காரணமாக சில ஆசிரியபீட பதவிகள் ஊடக உடமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களினால் வர்த்தக மற்றும் அரசியல் முன்னுரிமைகள் என்ற அபாயத்தை எதிர்கொள்ளக் கூடும்,

84. An Investigation into the Closure of CBNSat and Implications for Sri Lankan Broadcast Media. 2006. Ruha Devanesan. http://www.cpalanka.org/n-investigation-into-the-closure-of-cbnsat-and-implications-for-sri-lankan-broadcast-media/

85. Grunnet, Henrik, Lebbe Yakoob, Umar & Weiss LaRs "Assessment of the need for a Radio and TV journalist training unit in Sri Lanka," The Sri Lanka Press Institute (SLPI) April 2005.

86. Legal, Industry and Educational Reforms Pertaining to the Print Media. 2012 paper by Kishali Pinto-Jayawardena & Gehan Gunetilleke. Media Reform Sri Lanka website. http://goo.gl/wObuRv




சட்ட ஆய்வாளர்கள் கிசாலி பின்டோ ஜெயவர்த்தனவும், ஜெகான் குணதிலகவும் 2012 இல் இவ்வாறு எழுதினர். பிரிவு 44(4) இரு நிலையங்களினதும் செயற்பாடுகள் தொடர்பாக சட்டங்களை உருவாக்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்குகின்றது, அவர்களுடைய கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சிகளின் வகைகள் குறித்தும், - இது ஊடகங்கள் மீது அளவுக்கதிகமான அரசாங்க செல்வாக்கை திணிக்கின்றது என்ற கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்த விடயத்தில் ஆர்வம் உள்ள குழுக்கள், தனியார் ஒலிபரப்பாளர்களக்கு உரிமங்களை வழங்குவதை ஒழுங்குபடுத்துவதற்காக சுயாதீன ஒலிபரப்பு அதிகார சபையை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தீவிர கவனம் செலுத்தியுள்ளன. இதன் மூலம் இலங்கை ஊடகங்கள் நடைமுறைசார்ந்த மற்றும் அரச கட்டுப்பாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க சுதந்திரத்தை அனுபவிக்கமுடியும்,

87 https://www.colombotelegraph.com/index.php/surrendering-airwaves-and-liberty-to-nepotism/

**Table 1: Overview of Media Regulatory Framework in Sri Lanka**

| Relevant legislation | Arrange/Covers | Regulatory Body | Assigned Rights |
|---|---|---|---|
| National Media Policy | Policy applies to the media and broadcasting | Ministry of Media | Media/Content/ Broadcast rights |
| Sri Lanka Telecommunications Act No. 25 of 1991, as amended by Act No. 27 of 1996 | Legislation applies to the establishment and operation of radio frequency transmitters and broadcasting. | Telecommunications Regulatory Commission of Sri Lanka (TRCSL) | Spectrum rights |
| Sri Lanka Broadcasting Corporation Act No 37 of 1966 Sri Lanka Rupavahini Corporation Act No 6 of 1982 | Laws and regulations are currently to regulate broadcasting content | Ministry of Media | Contents/ Broadcast rights |

*Adapted from: Roadmap for the Transition from Analogue to Digital Terrestrial Television Broadcasting in Sri Lanka (ITU, 2012)*

## இலங்கையில் ஒலிபரப்பு விதிமுறைகள் குறித்து பங்குதாரர்களின் கருத்துக்கள்

*"வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பினை எடுத்துக் கொண்டால், நாட்டின் அலைவரிசை என்பது வரையறைக்குட்பட்டது. மேலும் அஃது ஒரு பொதுச்சொத்து. அலைவரிசைகள்* **xyz** *என்ற ஒலிபரப்பாளர்களிற்கு சொந்தமானவைகள் அல்ல. இந்த அலை வரிசைகளின் பாதுகாவலன் என்ற அடிப்படையில் அரசாங்கம் இதனை வாடகைக்கு விடவேண்டும் அல்லது குத்தகைக்கு விடவேண்டும. முழுமையாக அதனை இன்னொருவருக்கு விற்க முடியாது. உதாரணத்திற்கு அவை மகாராஜா நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளன. அவர்களால் அதனை பல தலைமுறைக்குப் பயன்படுத்த முடியும்.*

*"இலங்கையில் தற்போதுள்ள சட்டங்களில் வலுவானது தொலைத் தொடர்பு சட்டமே. நாங்கள் பொது ஒலிபரப்பு சட்டம் மற்றும் டிஜிட்டல் ஒலிபரப்பு சட்டங்களை (2010 முதல்2014) உருவாக்கினோம் ஆனால், அவற்றை நிறைவேற்ற முடியவில்லை.*

- சரித ஹேரத் - முன்னாள் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர். *(2102 முதல் 2014)*

*இலங்கையின் ஒலிபரப்பு உரிம நடைமுறை இரகசியமான விதத்திலும் பெருமளவிற்கு ஒழுங்கற்ற விதத்திலும் இடம் பெறுகின்றது. இதனை முற்றாக மாற்றியமைக்க வேண்டும், இந்தியாவை பாருங்கள் அங்கு ஒலிபரப்பு உரிமம் வழங்கப்படும் விடயம் வெளிப்படைத் தன்மை மிக்கதாக காணப்படுகின்றது. இலங்கையைப் போன்று இந்தியாவின் உரிமங்கள் என்றென்றைக்குமாக வழங்கப்பட்டவையல்ல. மாறாக குறிப்பிட்ட காலத்திற்கே அவை வழங்கப்படுகின்றன. மேலும் உரிமத்திற்கு மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உள்ளன - அவை மீறப்பட்டால் உரிமத்தை எந்த நேரத்திலும் இரத்துச் செய்யலாம். இலங்கையில் ஒலிபரப்பு உரிமம் நட்பின் அல்லது உறவின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது, அல்லது அரசியல் தொடர்புகளின் அடிப்படையில். தற்போது எங்களிடம் அலைவரிசைகள் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டன, சில நாடுகளில் அலைவரிசைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படுகின்றன, இதன் மூலம் அதிக பணத்தைச் செலுத்தக் கூடியவர் அதனைப் பெறமுடியும்.*

*எங்களின் ஊடக நிறுவனங்கள் சில கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை*

தவறாகப் பயன்படுத்துகின்றன. தாங்கள் நினைத்ததை செய்கின்றன. உண்மையில் அது கருத்துச் சுதந்திரம் அல்ல. இலங்கைக்கு ஒலிபரப்பு அதிகாரசபை அவசியம். இதற்கு தென்னாபிரிக்காவிலும், இந்தியாவிலும் நடைமுறையில் காணப்படும் மாதிரிகளை ஆராய்ந்து பயன்படுத்தலாம்.

-சமன் அத்தாவுதஹெட்டி - இலங்கை பிரதமரின் மேலதிக செயலாளர்.

இலங்கையில் ஒலிபரப்பு மீதான அரசாங்கத்தின் தனியுரிமையை சிறிய நபர்களின் குழு கைப்பற்றியுள்ளது. இது சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடிய விடயமல்ல. இவர்களில் சிலர் மக்களை இருட்டில் அறியாமையில் வைத்திருக்க முயல்கின்றனர். இதன் காரணமாக தகவல் அறியும் உரிமைக்கான புதிய சட்டம் மிகவும் முக்கியமானது.

என்னைப் பொறுத்தவரை அரச ஊடகங்கள் என்பதே தேவையில்லை. இலங்கையில் இன்றுவரை 50 இகும் மேற்பட்ட ஒலிபரப்பு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அரச ஊடகங்களும், தனியார் ஊடகங்களும் மாத்திரம் உள்ளன. வானலைகள் என்பன பொதுச் சொத்தாகும். நீதிமன்ற தீர்ப்பொன்று கூட இதனை உறுதிசெய்துள்ளது. எனினும், எந்த பொதுநல அமைப்பினாலும் இந்த வானலைகளைப் பயன்படுத்த முடியவில்லை. இது மிகவும் பிழையான விடயம. சுயாதீன சிவில் சமூக அமைப்புகளாலும் ஒலிபரப்பு உரிமங்களைப் பெற்று ஒலிரப்புகளை நடத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

-திலான் சமரசூரிய

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி மற்றும் வெளிவிவகார இயக்குநர்,

# வரிவிதிப்பும் வர்த்தக விதிமுறைகளும்

## 2 09 ஊடக அபிவிருத்தி பாராபட்சமற்ற விதத்தில் இடம்பெறுவதை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் வரிவிதிப்பையும் வர்த்தக முறைகளையும் பயன்படுத்துகின்றது

ஏனைய அனைத்து முயற்சிகளையும் போல ஊடக நிறுவனங்கள் அரசாங்கத்தின் கம்பனி பதிவாளரிடம் தங்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும். பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வேறு எந்த நிறுவனத்திற்கும் உள்ள நடைமுறைகள் போன்றே காணப்படுகின்றன. -வருடாந்த வருமானம் குறித்த விபரங்களை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடாந்த கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். சில சிவில் சமூக அமைப்புகள் நன்கொடையாளர்களாக தங்களைப் பதிவு செய்துள்ளன. ஏனயவை கம்பனி பதிவாளரிடம் பதிவுசெய்ய விரும்புகின்றன.

ஊடக நிறுவனங்களுக்கு வேறு எந்த தொழிற்துறைசார்ந்த வரிச்சலுகைகளும் வழங்கப்படவில்லை. செய்தித்தாள், அச்சு மை, அல்லது ஒலிபரப்பு சாதனங்கள் போன்றவற்றிற்கு எந்தவித இறக்குமதி வரியும் இல்லை. அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடக நிறுவனங்கள் சில வேளைகளில் வரிச்சலுகைகளால் நன்மையடையலாம், (குறிப்பாக கருவிகள், சாதனங்கள் இருதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் உதவிகளின் கீழ் பெறப்படும் போது)

பல வருடங்களாக ஊடக நிறுவனங்களும்

88 As noted in the Colombo Declaration on Media Freedom and Social Responsibility (2008), section 8. http://www.pccsl.lk/sites/default/files/Colombo%20Declaration%202008%20%28English%29.pdf

செயற்பாட்டாளர்களும் உட்கட்டமைப்பு தொடர்பான விடயங்களை முக்கியப்படுத்தி வருகின்றனர். அச்சுத் தாளின் உயர்ந்த

"The [Sri Lanka] government imposes taxes on foreign movies, programs, and commercials to be shown on television, ranging from Rs 25,000 (approximately $200) for an imported English-language movie to Rs 90,000 (approximately $700) per half hour of a foreign-language program dubbed in the local language, Sinhala. Foreign television commercials are taxed at Rs 500,000 (approximately $3,900) per year. Rates for non-English foreign programming are higher."
**- US Trade Representative (USTR) National Trade Estimate Report on Sri Lanka, 2013** https://ustr.gov/sites/default/files/2013%20NTE%20Sri%20Lanka%20Final.pdf

விலை, பலதரப்பட்ட இறக்குமதி வரிகள், ஏனைய வரிகள் - இவை ஊடக நடவடிக்கைகளையும், பொருளாதார சாத்தியப்பாடுகளையும் பாதிக்கின்றன. ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்புணர்வு குறித்த கொழும்பு பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு (2008) இலங்கையில் பத்திரிகை அச்சிடும் செலவில் பெரும் பகுதி அச்சுத்தாளிற்கே செலவாகின்றது. (55-65) இலங்கையுடன் ஒப்பிடும்போது மேற்கு நாடுகளில் இது 25 முதல் 30 வீதமாகவே காணப்படுகின்றது. இது குறித்த கரிசனைகள் காணப்படுகின்ற போதிலும் அச்சுத்தாள் இறக்குமதிக்கு சுங்கவரி சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

எனினும் சமீப வருடங்களில் அரசாங்கம் ஊடகங்கள் மற்றும் தொலைத் தொடர்பு துறைக்கு என விசேடமாக சில வரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது கரிசனையை அதிகரித்துள்ளது.

2006 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளடக்கங்களிற்கான பாராபட்சமான சர்ச்சைக்குரிய இறக்குமதி வரி காரணமாக பல ஒலிபரப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர். குறிப்பிட்ட உள்ளடக்கம் எங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ

Sri Lanka TV industry hit by penal tax. Story by Lanka Business Online (LBO) on 7 July 2007, now archived at: https://shaqmark.wordpress.com/2007/07/08/sri-lanka-tv-industry-hit-by-penal-tax/

அதனை அடிப்படையாக வைத்து உள்ளூரில் அதனை ஒலிபரப்பு செய்வதற்காக அரசாங்கத்திற்கு இறக்குமதிவரியை செலுத்த வேண்டும். ஒலிபரப்பாளர்களால் மேலதிகமான செலவீனத்தை விளம்பரங்கள் மூலம் பெறமுடியாததால், உள்ளடக்கங்களை இறக்குமதி செய்து பயன்படுத்துவது பொருளாதார ரீதியில் சாத்தியமற்றதாகியது.

குறிப்பிட்ட காப்புக்கொள்கை வரி, மேற்கிலிருந்து வரும் ஆங்கில உள்ளடக்கங்களையும், இந்தியாவிலிருந்து வரும் ஹிந்தி மற்றும் தமிழ் உள்ளடக்கங்களையும் இலக்குவைத்தது. இலங்கையின் பல்கலாசார பார்வையாளர்களுக்கு பல்வகைத்தன்மை மிக்க உள்ளடக்கங்கள் கிடைப்பதை இது குறைத்தது. சிறிய தொலைக்காட்சி அலைவரிசைகள் தங்கள் நடவடிக்கைகளை குறைத்ததால், பலர் வேலைவாய்ப்புகளை இழக்கும் நிலையும் ஏற்பட்டது.

குறிப்பிட்ட சட்டத்தை ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக நடைமுறைப் படுத்தியதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ஒரு பில்லியன் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைத்திருக்கலாம் என தொழிற்துறையின் முக்கிய நபர் ஒருவர் குறிப்பிடுகின்றார். இந்தச் சட்டம் உள்நாட்டு தொழிற்சாலைகளின் உள்ளடக்க தயாரிப்பு தொழிற்துறைக்கு நன்மையளிப்பதற்காகவே கொண்டுவரப்பட்டபோதிலும். இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதற்கான பொறுப்புக் கூறல்கள் எவையும் காணப்படவில்லை.

உ

# விளம்பரம்

## 2.10 அரசாங்கம் தனது விளம்பரக் கொள்கை மூலம் பராபட்சத்தை வெளிப்படுத்தாமலிருப்பது..

இலங்கையின் அச்சு மற்றும் ஒலிபரப்பு துறைக்கான வருமானத்தை அதிகளவிற்கு ஈட்டித்தரும் முக்கிய வழிமுறையாக விளம்பரம் காணப்படுகின்றது. இலங்கையின் ஊடகத்துறை கண்காணிப்பு அமைப்பான நெல்சன் இலங்கை நிறுவனம் விளம்பரத்திற்காக 2014 இல் 77 பில்லியன்களை செலவு செய்ததாக தெரிவித்துள்ளது.

அரசாங்கமே - அரசாங்க திணை க்களங்கள், அரசாங்கத்திற்கு சொந்தமான வர்ததகங்கள், நீதித்துறை மற்றும் முப்படையினர் போன்றவர்கள் - நீண்ட காலமாக, தற்போது வரை இலங்கையின் மிகப்பெரிய விளம்பதாரராக காணப்படுகின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த விளம்பரங்களில் 30 வீதத்தினை அரசாங்கமே மேற்கொள்வதாக அந்த துறையைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இந்த புள்ளிவிபரம் வருடத்திற்கு வருடம் மாற்றமடைகின்றது.


பல தரப்பட்ட ஊடக நிறுவனங்களிற்கு விளம்பரங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்ற விடயத்தில் அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கின்றது. அரசாங்க அச்சு மற்றும் ஒலிபரப்பு நிறுவனங்கள் அவர்களுடைய விற்பனை அல்லது

[20] This is based on 'rack rates' for above-the-line media only. According to an industry leader, in reality the advertising industry (print, radio and TV) is around LKR 30 billion. Digital advertising in 2014 was worth around LKR 1 billion, but this amount is steadily increasing.

பார்வையாளர்களின் எண்ணிக்கையை கருத்திலெடுக்காமல், வரலாற்று ரீதியாக அரசாங்க நிறுவனங்களின் பெரும் பகுதியைப் பெற்றுக் கொள்கின்றன. அரசாங்கங்கள் அரச விளம்பரங்கள் என்ற விடயத்தைப் பயன்படுத்தி எவ்வாறு தனியார் ஊடகங்கள் மீது செல்வாக்கை செலுத்த முயல்கின்றன என்பதே இதை விட அதிகமாக கவலையளிக்கக் கூடியவிடயமாக காணப்படுகின்றது. அரச விளம்பரங்கள் நிறுத்தப்படலாம் அல்லது வழங்கப்பட மாட்டாது என்ற அச்சுறுத்தல் எப்போதும் காணப்படுகின்றது. எனினும் இது அவ்வப்போது மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2014 இல் வெளியான விமர்சனத்தில் ரசிக மனோபுதி, அர்ஜுன ரணவான, கேஸ்மா ரணவன ஆகியோர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர் - தனியார் ஊடகங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை தவிர வேறு மார்க்கங்கள் இல்லை. அரசாங்கம் 70 சத வீத பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதுடன், தனியொரு மிகப் பெரும் விளம்பரதாரராக காணப்படுகின்றது. இதற்கு இந்தியா போன்று - அரசாங்கத்தின் விளம்பர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கூடிய

**Sri Lanka: Total ad spend of LKR 77b in 2014 (mostly in mainstream media)**




Source: Nielsen
Based on monitored activities & rate card cost

சட்டங்கள் என எதுவுமில்லை. விற்பனை புள்ளி விபரங்களை அடிப்படையாக வைத்து அரசாங்கம் விளம்பரங்களை சமமான விதத்தில் வழங்கச் செய்யும்.

21 Sri Lanka's media, five years after the end of war. By Rasika Manobuddhi, Arjuna Ranawana and Kshama Ranawana. Groundviews.org 13 May 2014. http://groundviews.org/2014/05/13/sri-lankas-media-five-years-after-the-end-of-war/

தனியார் ஊடகங்களை அச்சுறுத்துவது என்பது வழமையான நிகழ்வு. இது பல தசாப்தங்களாக நடைமுறையில் காணப்படுகின்றது. அரசாங்கத்துடன் முரண்படும் எந்த தனியார் ஊடகமும் தனது விளம்பரத்தின் (வருமானத்தின் முக்கிய பகுதி ஒரு பகுதியை அல்லது விளம்பரத்தை இழக்க கூடுமாதலால், அது பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

இலங்கையின் முக்கிய வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதைத்தவிர வேறு வழியில்லாத நிலையில் காணப்படுகின்றன. அரசாங்கத்தை விமர்சிக்கும் தனியார் ஊடகங்களிற்கு விளம்பரங்களை வழங்குவதைத் தவிர்க்குமாறு பாரிய வர்த்தக நிறுவனங்கள் அழுத்தத்திற்கு ஆளான தருணங்கள் உள்ளன.

அரசியல்வாதிகளையும், அரசியல் நலன்களையும் பிரசாரம் செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களின் பொது நிதியைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த அரசாங்கத்தின் கீழ் உச்ச கட்டத்தை அடைந்தன. 2014 பிற்பகுதியில் ஆரம்பமான ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது இந்த ஆரோக்கியமற்ற போக்கு வெளிப்படையாகத் தென்பட்டது. ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி சிறிசேன இந்த நடைமுறையைத் தொடர வேண்டாம் என அரசாங்க நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.

BOX 10

## Restricting Newspaper Advertisements by Government Institutions

The interim budget presented in Parliament by the Minister of Finance on 29 January 2015 contained the following:

*9.43 The publication of newspapers advertisements by government institutions based on political rhetoric seems to be excessive in many instances. It appears that many advertisements so publicized with a political background are only creating a burden to the government expenditure.*

*9.44 Hence, I propose that all Ministries and departments should immediately stop the publication of political advertisements in newspapers, except in specific situations where they can publish with the approval of the Secretary to the relevant line Ministry.*

*9.45 I also propose that all the Chairmen and Board of Directors of the public institutions not only should refrain from publishing such newspaper advertisements with political rhetoric but also they will be held personally responsible for any cost on unauthorized advertisements, which will have to be borne by them in the event they had approved same.*

*9.46 The restriction of politician based pictures and material appearing in Calendars, diaries etc also will be applicable in the future pertaining to such material printed and published by public institutions.*

**Source:** http://www.treasury.gov.lk/images/depts/fpd/docs/budgetspeech/2015-jan29/InterimBudget2015-20150129-eng.pdf (page 39)

## 2.11 ஊடகங்களில் விளம்பரங்கள் குறித்து வலுவான சட்டங்கள்

மிகவும் பயனள்ளதாக காணப்படுவதற்கு விளம்பரங்கள் நுகர்வோரின் நம்பிக்கையைப் பேணுவது அவசியம். அது சட்டபூர்வமானதாக, ஒழுக்க நெறிகளை பின்பற்றுவதாக, உண்மையானதாக காணப்படவேண்டும். நுகர்வோர் விளம்பரங்களால் தவறாக வழிநடத்தப்பட்டால், அவர்கள் அதனை மீண்டும் வாங்க மாட்டார்கள்.அது அவர்களை காயப்படுத்தினால் அவர்கள் அதனைக் கொள்வனவு செய்யவே மாட்டார்கள்.

மோசமான விளம்பரங்கள் - அவை ஒட்டுமொத்த விளம்பரத்தின் சிறிய பகுதியாக காணப்பட்டாலும் - அவை மெல்ல மெல்ல நுகர்வோர் நம்பிக்கை இழக்கும் நிலையை உருவாக்கலாம். அதன் காரணமாக அனைத்து விளம்பரங்கள் மீதான நம்பிக்கையும் பாதிக்கப்படலாம். இதன் காரணமாக விளம்பரங்கள் உரியவிதத்தில் ஒழுங்குபடுத்தப்படுவது விளம்பர நிறுவனங்களின் நலனிற்கு முக்கியமான விடயம்.

பாரம்பரியமாக இதனை நிறைவேற்றுவதற்கு இரு வழிகள் காணப்படுகின்றன. முதலாவது அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஊடாக. மற்றையது சுய ஒழுங்குபடுத்தல் ஊடாக.

இலங்கையில் விளம்பரத் துறைக்கு என ஒட்டு மொத்தமான சட்டங்கள் எதுவும் கிடையாது. விளம்பர தராதர அதிகாரசபை எதுவும் கிடையாது. இதேபோன்று விளம்பர தொழிற்துறையிடமும் சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறை ஒன்று இல்லை. நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் காணப்படுகின்றபோதிலும் அவை நடைமுறைப் படுத்தப்படும் விதம், பலவீனமாகவும் கூறுகளாகவும் காணப்படுகின்றது - விளம்பரங்களால் சில சந்தர்ப்பங்களில் மக்களை தங்களிற்கு சாதகமாக செயற்படத் தூண்டமுடியும். தற்போதைக்கு சில பொருட்கள் சேவைகளை விளம்பரம் செய்வது குறித்து மாத்திரம் குறிப்பிடத்தக்க சட்டங்கள் காணப்படுகின்றன.

- 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டம் - இது மதுபானங்கள் மற்றும் புகையிலை குறித்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும், பொது இடங்களிலும் விளம்பரப்படுத்துவதை முழுமையாகத் தடை செய்தது.

- 1980 ஆம்ஆண்டின் உணவுச் சட்டம் இவ்வாறு தெரிவிக்கின்றது

92 Why regulate advertising? European Advertising Standards Alliance (EASA): http://www.easa-alliance.org/page.aspx/165

93 http://www.sundaytimes.lk/061203/FinancialTimes/ft313.html

94 http://documents.gov.lk/Acts/1980/Act%20No.26/Act26%28E%29-1980.pdf

BOX 11

## Too Much Advertising?

Media outlets have to strike a healthy balance between editorial content and advertising. Carrying too much could drive consumers away, and too little could threaten financial viability.

In the past, newspapers used to follow a ratio of 60% editorial content and 40% advertising in a given issue. But this is no longer strictly adhered to, and the matter is complicated by the steady rise of 'advertorials' – content written by public relations firms that are carried without being marked as promotional material.

In broadcast, audiences are increasingly weary of excessive advertising. In the United States, major networks used to limit television commercials to a total of 10 minutes per hour, but these limits have been breached.

In Sri Lanka, indiscriminate scheduling of commercials regularly reduces content. Some channels have so many commercial breaks that programmes appear to interrupt advertising! Perhaps the worst transgression is when a commercial overrides actual playing time during a key cricket match.

Media industry clearly needs to strike a better balance between advertising and content.

— உணவுகளின் தரம், இயல்பு, உள்ளடக்கம், பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து பிழையான, தவாறக வழிநடத்தும், ஏமாற்றும் அல்லது போலியான எண்ணத்தை தூண்டும் விதத்தில் எந்த நபரும் தகவல் சொல்ல முடியாது.

- மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் அது போன்ற பொருட்கள் விடயத்திலும் இதுபோன்ற கட்டுப்பாடுகள் உள்ளன. இவற்றை அனுமதியளிக்கப்பட்ட அரச ஸ்தாபனங்கள் நடைமுறைப் படுத்துகின்றன. எனினும் அதன் திறன் மற்றும் தொழில்நுட்ப போதனைகள் காரணமாக இந்த நடவடிக்கைகள் பலவீனமானவையாக காணப்படுகின்றன.

- சட்டத்தில் காணப்படாத போதிலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான முழுமையான ஒழுக்க கோவையை கொண்டுள்ளது. வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்கள் துல்லியமானவையாகவும், சரியானவையாகவும் தேவையான அனைத்து தகவல்களையும் கொண்டிருக்க வேண்டியவையாகவும் காணப்பட

95 http://www.ilo.org/wcmsp5/groups/public/--asia/---ro-bangkok/---ilo-colombo/documents/publication/wcms_233369.pdf

வேண்டியதன் அவசியத்தை அது வலியுறுத்துகின்றது.

ஊடக விளம்பரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துவது என்பது நீண்ட காலமாகவே விவாதத்திற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. சிறுவர் அமைப்புகளும் ஏனையவர்களும் சில கட்டுப்பாடுகள் அவசியம் எனக் கோரி வருகின்றனர். 2008 இல் மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று வலுவான விளம்பர விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுவது அவசியம் எனப் பரிந்துரை செய்தது. அந்த விதிமுறைகள் மீறப்பட்டால், அதனால் பாதிக்கப்படுபவர்களிற்கு நிவாரணத்தை வழங்குவதற்கான தெளிவான ஏற்பாடுகள் அவசியம் எனவும் அது தெரிவித்திருந்தது. விளம்பரதாரர்களும் சந்தைப்படுத்துபவர்களும் தாங்கள் தேவையற்ற விதத்தில் விமர்சனங்களிற்கு உள்ளாவதாக கருதும் பட்சத்தில், நாடக்கூடிய மத்தியஸ்த சபையொன்றை ஏற்படுத்தவும் பரிந்துரை செய்திருந்தது. எனினும் இது வரையில் இது நடைமுறைப் படுத்தப்படவில்லை.

ஊடகங்களைப் பொறுத்த வரையில் இதுவரையிலும் அவை எவ்விதமான விளம்பரங்களைப் பிரசுரிக்கலாம் அல்லது வெளியிடலாம் அல்லது வெளியிட மறுக்க வேண்டும் என்பது குறித்த பொதுவான கட்டமைப்போ அல்லது விதிமுறைகளோ இல்லாத நிலை காணப்படுகின்றது. சில ஊடகங்கள் இது தொடர்பான தங்களது சொந்த விதிமுறைகளை உருவாக்கியுள்ளன. அரசாங்க ஒலிபரப்பாளர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் ஆகியன விளம்பரங்கள் தொடர்பாக தங்கள் சொந்த விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஆனால், இவற்றை பரந்துபட்ட அளவில் தொழிற்துறை முழுவதும் கடைப்பிடிப்பதில்லை. சமீப காலத்தில் நாட்டின் நுகர்வோர் சட்டங்களில் இடம்பெற்றிராத, அல்லது வேறு எந்த விளம்பர விதிமுறைகளிற்கும் உட்பட்டிராத, ஜோதிடம் எதிர்காலத்தை முன்கூட்டியே கணித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பான பல விளம்பரங்கள் இடம்பெறுவதை காணமுடிகின்றது.

இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தவைராக பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் நியுட்டன் குணரத்தின இவ்வாறு தெரிவிக்கின்றார். ஷஷநான் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் கீறின் புக்

96 Children in Advertising in Sri Lanka – A Media Study. CPA, 2009. http://www.cpalanka.org/children-in-advertising-in-sri-lankaa-media-study/

எனப்படும் விளம்பரங்களிற்கான ஒழுக்காற்று கோவை காணப்பட்டது. உதாரணத்திற்கு விளம்பரங்கள் மக்களை அச்சமடையச் செய்வனவாக காணப்படவில்லை. மதிய உணவு நேரங்களில் சிலவகை விளம்பரங்களை ஒலிபரப்புச் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ரூபவாஹினியும் தனது ஆரம்பகாலங்களில் தனக்கான விளம்பர கோவையை ஏற்படுத்தியது. தனியார் தொலைக்காட்சிகள் இந்த விளம்பர கோவையை பின்பற்ற வேண்டும் என்ற புரிந்துணர்வு காணப்பட்டது - எனினும் பின்னர் நீண்டகாலமாக இதனை மறந்து விட்டனர்.

அரச ஒலிபரப்பாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து அனுபவமிக்க ஊடகவியலாளரான மொஹான் சமரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார். ஷஷெளங்கள் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்கள் மற்றும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும் விளம்பரங்கள் தொடர்பாக ரூபவாஹினியில் சில தராதரங்களைப் பேணமுயன்றோம். நாங்கள் அவற்றை நிராகரித்தவேளை, அவர்கள் தனியார் நிலையங்களிற்குச் சென்றார்கள். அவர்கள் அவற்றை வெளியிட்டனர் இதனால் ரூபவாஹினிக்கான வருமானம் பாதிக்கப்பட்டது.”

## விளம்பரங்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள்

கேள்விக்குரிய விதத்திலான அல்லது புண்படுத்தும் விளம்பரங்கள் தொடர்பாக முறையிடுவதற்காக பொதுமக்களுக்கான பொறிமுறை எதுவும் இலங்கையில் இல்லை. சட்டத்தில் இடம்பெற்றுள்ள சில பிரிவுகளைத் தவிர (மதுபானம், மருந்துப் பொருட்கள், புகையிலை) கரிசனைக்குரிய பிரஜைகள் குறிப்பிட்ட ஒரு விளம்பரத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தால் அது குறித்து பொறுப்பேற்காத நிலை காணப்படுகின்றது.

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் அல்லது சுய ஒழுங்குபடுத்தல்கள் இல்லாத நிலையில் செயற்பாட்டாளர்களும், வாதிடும் குழுக்களும் விளம்பர பிரச்சாரங்கள் தொடர்பாக அல்லது தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது, ஒழுக்க நெறிகளுக்கு முரணானது என அவர்கள் கருதும் விளம்பரங்களுக்கு எதிராகப் பகிரங்கமாக குரல் எழுப்புகின்றனர்.

உதாரணத்திற்கு மதுபானம், மருந்துகள் தகவல் நிலையம் என்ற அமைப்பு மதுபான மற்றும் புகையிலை நிறுவனங்களின் மெதுவான ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

மற்றும் அனுசரணைகள் வழங்கப்படுவதைத் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றது. இவை தொடர்பான நேரடி விளம்பரங்களுக்கு 2006 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் தன்னெழுச்சியான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன, கறுப்பான பெண்களைவிட வெள்ளையான பெண்கள் ஆண்களை அதிகம் கவரக்கூடியவர்கள் என்ற வகையில் வெளியான பிஸ்கட் விளம்பரம் தொடர்பாக 2014 பிற்பகுதியில் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட விமர்சனம் இதற்கு உதாரணமாகும். காயப்படுத்த கூடிய இந்த விளம்பரம் அடுத்த மூன்று நாட்களில் விலக்கிக் கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட அந்த நிறுவனம் அதற்காக பகிரங்க மன்னிப்புக் கோரி இருந்தது.

சமூகத்தில் அதிகரித்து வரும் கரிசனைகள் காரணமாக – சமூக ஊடகங்கள் ஊடாக சில வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. – சந்தைப்படுத்தல் தொழிற் துறையினரும் விளம்பர தொழில் துறையினரும் சுய ஒழுங்குபடுத்தல் முறையின் அவசியத்தை அங்கீகரிக்கத் தொடங்கி உள்ளனர். சில ஊடக விமர்சனர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளன.

ஊடக விளம்பரங்கள் என்பது ஊடக முகவர் அமைப்புகள் ஊடாக மாத்திரமில்லாமல் தனிப்பட்ட விளம்பரதாரர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு இடையில் நேரடியாக இடம்பெறுவதாலும் விளம்பர தொழிற் துறையின் சுய ஒழுங்குபடுத்தல் என்பது மிகவும் பலவீனமானதாகவே காணப்படுகிறது.

விளம்பர மற்றும் ஊடக தொழிற் துறையினர் பொதுவான தராதரங்கள் மற்றும் ஒழுக்கக் கோவைகள் தொடர்பாக இதுவரை இணக்கப்பாட்டிற்கு வராததன் காரணமாக முழுமையாகத் தானாக முன்வந்து ஒழுங்குபடுத்தும் பொறிமுறை போதுமானதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

97 http://www.adicsrilanka.org/2013/05/30/world-no-tobacco-day-2013-ban-tobacco-advertising-promotion-and-sponsorship-press-release/

98 http://www.globalpressjournal.com/asia/sri-lanka/responding-public-outrage-sri-lankan-biscuit

99 For example, see: Regulating Advertising, Business Times, 10 March 2013 http://www.sundaytimes.lk/130310/business-times/regulating-advertising-35523.html

பிரிவு 2

## ஊடகங்களின் பன்முகத் தன்மை மற்றும் பல்வகைமை, சகல தரப்பினருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் உரிமையாளர்கள் குறித்த வெளிப்படைத் தன்மை

## பரிந்துரை சேகரிப்பு

### பரிந்துரைகள்

1. பன்முகத் தன்மை மற்றும் பல்முகத் தன்மை ஊடகங்களை வளர்த்தெடுப்பதற்கும் தொடர்புகளை வகுப்பதற்காகவும் அரசாங்கம் அனைவரையும் உள்ளடக்கிய இதனுடன் தொடர்பு பட்ட பலருடன் கலந்தாய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும். இது வெறுமனே நுகர்வோர் வாய்ப்பு மற்றும் சந்தைப் போட்டியை அடிப்படையாகக கொண்டதாக காணப்படக் கூடாது. மாறாக ஜனநாயக தொடர்பாடல் அதிகாரத்தை அதிகரிப்பதாக இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. அரசாங்கம் ஊடக நிறுவனங்களின் உரிமையை வைத்திருப்பதைக் கைவிட வேண்டும். இதற்கு மாறாக ஒலிபரப்பு மற்றும் விளம்பரங்களுக்கான சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்புகளை உருவாக்குவதன் மூலம் சாதகத் தன்மை வாய்ந்த சூழலை ஏற்படுத்தி செயற்பட வேண்டும். இந்த ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுக்கு பொது நிதி வழங்கப்பட வேண்டும். (இதன் மூலம் பாராளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டும்.) ஆனால் இவர்களுடைய சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் சட்டப் பொறிமுறை ஊடாக அரசியல் தலையீடுகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

3. ஊடக உரிமையாளர்கள் குறித்த விபரங்கள் வெளிப்படையானவையாக காணப்பட வேண்டும். மற்றும் அவ்வப்போது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை கட்டாயமாக்கும் புதிய சட்டத்தை ஊடக அமைச்சு நிறைவேற்ற வேண்டும். வருடாந்தம் உரிமையாளர்களின் விபரங்களை வெளியிடும் ஒரு முறையை ஊடகத் தொழிற் துறை அல்லது அச்சு அல்லது ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் அமைப்புகள் உருவாக்க வேண்டும். (இந்தியாவைப் பொறுத்தவரை சகல ஊடக நிறுவனங்களும் தங்கள் உரிமையாளர் விபரங்களையும் முக்கிய பங்குதாரர்கள் யார் என்பதையும் தொடர்ச்சியான முறையில் வெளிப்படுத்துவது சட்ட ரீதியில் அவசியமான விடயமாகும்.)

4. ஊடக உரிமை என்பது ஒரே இடத்தில் குவிந்திருப்பதைக் கட்டுப்படுத்துவதற்குப் பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும்.

2.2 State ensures compliance with measures to promote pluralist media

## பரிந்துரைகள்

5. ஒலிபரப்பு சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் உரிமையாளர் மற்றும் உள்ளடக்க பன்முகத் தன்மையை ஊடக்குவிப்பதற்கான சட்டங்களையும் புகுத்த வேண்டும். மேலும் ஊடக உரிமம் மற்றும் ஏனைய வழிமுறைகள் ஊடாக இதனை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளையும் தெரிவிக்க வேண்டும்.

6. ஊடக அமைச்சு, ஒலிபரப்பு உரிமம் வழங்கும் நடைமுறைகளை வெளிப்படையானதாக, போட்டித் தன்மை மிக்கதாக, நேர்மையானதாக, பொறுப்புக் கூறுவதாக மாற்றுவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த முழு நடவடிக்கையையும் சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பொன்று நிர்வகிக்க வேண்டும். அது மக்கள் கண்காணிப்பு மற்றும் கருத்துகளை அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும. 1992 முதல் தன்னிச்சையான, ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் செயற்பாடுகள் அனைத்தும் கூடிய விரைவில் நிறுத்தப்பட வேண்டும். தற்போதைய அனைத்து ஒலிபரப்பு உரிமங்களிலும் முற்தேதியிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட உரிம நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

7. உத்தேச சுயாதீன ஒலிபரப்பு ஒழுங்குபடுத்துனர், ஒலிபரப்பு அலைவரிசைகள் எவ்வாறு திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றன என்ற விடயத்தில் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும. பொதுச் சேவை, வர்த்தக மற்றும் சமூக ஒலிபரப்பாளர்கள் மத்தியில், சமமான விதத்தில் அலை வரிசைகள் ஒதுக்கப்படுவதை உறுதியாக மேற்கொள்வதற்காக இதனைச் செய்ய வேண்டும்.

8. எலெக்ரோ மாக்னட்டிக் அலைக்கற்றை என அழைக்கப்படும் பொதுச் சொத்து, மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சிறப்பாக நிர்வகிக்கப்பட வேண்டும். இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இந்த விடயத்தில் தொடர்புபட்ட சகல தரப்புகளுடனும் கலந்தாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் சர்வதேச அளவிலான

## பரிந்துரைகள்

சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி எலெக்ரோ மாக்னட்டிக் அலைக்கற்றைகளை உகந்த முறையில் யன்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை உருவாக்க வேண்டும்.

9. மூன்றடுக்கு ஒலிபரப்பு உரிமையாளர் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஒலிபரப்புத் துறையில் பல்வேறுபட்ட உரிமையாளர் முறைகளை ஊடக அமைச்சு ஊக்குவிக்க வேண்டும். தனியாருக்குச் சொந்தமான வர்த்தக ஒலிபரப்பு, ஆசிரியபீட சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் பொதுச்சேவை ஒலிபரப்பு மற்றும் தனியார் சமூக ஒலிபரப்பு.

10. வருடாந்த அலைவரிசைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் போது, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, வர்த்தக நோக்கமற்ற பாவனையாளர்கள் மற்றும் வர்த்தக நோக்கத்துடனான பாவனையாளர்களுக்கு மத்தியில் வித்தியாசத்தை உருவாக்க வேண்டும். வர்த்தக நோக்கத்துடனான பாவனையாளர்களிடமிருந்து அதிகளவு கட்டணத்தை அறவிட வேண்டும்.

11. இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் ஊடக அமைச்சும் வானொலி அலைக் கற்றையின் குறிப்பிடத்தக்க பகுதியை சமூக ஒலிபரப்புகளுக்கு என ஒதுக்கிவைக்க வேண்டும். இதன் மூலம் அவ்வாறான பல ஒலிபரப்புகளை அரவணைத்து ஊக்குவிக்க வேண்டும்.

12. அறிமுகப்படுத்தப்படவுள்ள ஒலிபரப்பு விதிமுறைகள், சமூக ஒலிபரப்பு என்றால் என்னவென்பதைத் தெளிவாக வரைவிலக்கணப்படுத்த வேண்டும். இதன் மூலம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்வகிக்கும் ஒலிபரப்பாளர்களை ஆதரிக்க வேண்டும். ஒழுங்குபடுத்தப்பட்ட உரிமம் வழங்கும் நடைமுறைகள், அலைவரிசை ஒதுக்கீட்டிற்குக் குறைவான கட்டணம் மற்றும் ஏனைய சலுகைகளை வழங்க வேண்டும்.

## பரிந்துரைகள்

13. அரசாங்கம் விளம்பர தொழிற் துறையினருடன் கலந்தாலோசித்து பொதுநல நோக்கில் விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சுயாதீன ஒழுங்குபடுத்தும் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். அதற்கு அமுல்படுத்துவதற்கான அதிகாரங்கள் காணப்பட வேண்டும். ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு ஒட்டு மொத்த தராதர மற்றும் ஒழுக்கநெறி விதிமுறைகளை வகுக்க வேண்டும்.

14. இதற்கு சமாந்திரமாக விளம்பரத் தொழிற்துறையினர் மேலும் பொறுப்புணர்வு வாய்ந்தவர்களாகவும், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நலன்கள் குறித்தும் அக்கறையும், கரிசனையும் உள்ளவர்களாகவும் மாறுவதற்கு தமக்கு என சொந்த, சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதேவேளை ஊடகங்கள், ஆசிரியர் பீட உள்ளடக்கத்திற்கு சமமான விதத்தில் விளம்பர உள்ளடக்கங்கள் காணப்படுவதைக் குறைக்க வேண்டும்,

15. அரச விளம்பரங்களுக்கான ஏற்பாடுகள், அனைத்து அரச முகவர் அமைப்புகள், நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் ஊடாக முறைப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கத்தின் விளம்பர ஆதரவில் தற்போது காணப்படும் பாரபட்ச நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அரசாங்க விளம்பரங்கள் ஊடக நிறுவனங்களுக்கு பக்கச்சார்பற்ற விதத்தில், நேர்மையான விதத்தில் வழங்கப்படுவதை இதன் மூலம் உறுதிசெய்ய வேண்டும். அதேவேளை, தற்போதைய அரசாங்கம் அரசியல்வாதிகளைப் புகழும் விளம்பரங்கள் மீது, பொதுமக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என ஏற்கனவே உறுதியளித்துள்ளது.

16. ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவதற்கு அல்லது அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது அவர்களுக்குச் சாதகமானதாக நடந்துகொள்வதற்கு அரச, பொதுத்துறை விளம்பரங்கள் மற்றும் ஏனைய அரச வளங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக ஊடக அமைச்சு சட்ட ஏற்பாடுகளையும் தண்டனைகளையும் அறிமுகப்படுத்த

வேண்டும்.

17. அரசாங்கத்திற்கு வரிக் கொள்கைகளை மாற்றுவதற்கு அல்லது புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு உரிமை உண்டு. ஆனால் அது தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட விசேட வரிகளை அமுல்படுத்தக் கூடாது. இது விசேட தொழில் நுட்பங்கள், நிறுவனங்கள் மற்றும் நுகர்வோருக்கு எதிரான பாரபட்ச நடவடிக்கையாக அமையலாம்.

18. அரசாங்கமும் ஊடக தொழிற் துறையும் ஊடகங்களில் பல்முகத் தன்மையை அதிகரிப்பதற்கு அடிப்படை அர்ப்பணிப்பை வழங்க வேண்டும். எத்தனை ஊடகங்கள் உள்ளன என்பதை அடிப்படையாக வைத்து மதிப்பிடக் கூடாது. மாறாக பாரிய உள்வாங்கும் தன்மை மற்றும் பலதரப்பட்ட சமூக அரசியல் கலாசார கருத்துகளை பிரதிநிதித்துவப் படுத்துதல்.

19. 2006 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு தொலைக்காட்சிகள் மற்றும் வெளிநாட்டு விளம்பரங்களுக்கு விதிக்கப்பட்ட வரி மூலம் சேகரிக்கப்பட்ட நிதியை ஊடக அமைச்சும் நிதி அமைச்சும் உள்ளடக்க பல்வகைமையை ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு விவரணச் சித்திரங்களுக்கு ஆதரவளித்தல். உள் நாட்டு உள்ளடக்க தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதாகவே இந்த வரி அறவிடப்பட்டது. ஆனால், இது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பயன்படுத்த வில்லை. இந்த நிதியை மீள் முதலீடு செய்வதை வெளிப்படையாகவும் தெளிவான தகைமைகளுடனும் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் துஷ்பிரயோகம் மற்றும் ஒருவருக்குச் சார்பாக செயற்படுவதை தடுக்கலாம்.

20. ஆராய்ச்சியாளர்களும் சிவில் சமூக அமைப்புகளும் உள்ளடக்க ஆராய்வுகள் மற்றும் ஆசிரிய பீட நடைமுறைகளில் ஒழுக்காற்று முறைகள் குறித்த தங்களுடைய கண்காணிப்பு நடைமுறைகளை அதற்கு அப்பாலும் முன்னெடுக்க வேண்டும். மேலும் அரசியல் தொடர்புகள் குறித்து வெளிப்படையாக ஆராய வேண்டும்.

பிரிவு

# 3

# ஜனநாயக சொல்லாடலுக்கான தளமாக ஊடகத்தைப் பயன்படுத்தல்

## முக்கிய குறிகாட்டிகள்

**A** ஊடகம் சமூகத்தின் பல்வகைமையை பிரதிபலித்தல்

3.1 ஊடகம் - பொது தனியார் மற்றும் சமூகம் - அடிப்படையானது. சமூகத்தின் சகல குழுக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வது.

3.2 ஊடக அமைப்புகள் தங்களுடைய தொழில் நடைமுறைகளுடன் சமூக பல்வகைமையை பிரதிபலித்தல்.

**B** பொதுச்சேவை ஒலிபரப்பு மாதிரி

3.3 பொதுச்சேவை ஒலிபரப்பின் இலக்குகள் சட்ட ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.4 பொதுச் சேவை ஒலிபரப்பாளர்களின் நடவடிக்கைகள் எந்தத் துறையிலும் பாரபட்சத்தை அனுபவிக்கக் கூடாது.

3.5 சுதந்திரமான மற்றும் வெளிப்படையான ஆட்சியின் அமைப்பு.

**C** ஊடக சுய ஒழுங்குபடுத்தல்.

3.6 பொதுச்சேவை ஒலிபரப்பாளர்கள் பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புகளுடன் ஈடுபாடுகளை ஏற்படுத்துதல்

3.7 அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தலுக்கான சிறந்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல்.

3.8 ஊடகம் சுய ஒழுங்குபடுத்தலுக்கான கலாசாரத்தை வெளிப்படுத்தல்.

**D** நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகள்.

3.9 நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகளை முன்வைக்கும் வலுவான ஒலிபரப்புக் கோவை.

3.10 ஒலிபரப்புக் கோவையை வலுவாக அமுல்படுத்தல்.

**E** ஊடகங்கள் குறித்த பொதுமக்களின் நம்பிக்கையின் அளவு.

3.11 ஊடகங்களில் உயர்ந்தபட்ச நம்பிக்கையைப் பொதுமக்கள் வெளிப்படுத்தல்.

3.12 ஊடகங்கள் தங்கள் பணி குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கு செவிமடுத்தல்.

**E** பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு.

3.13 பத்திரிகையாளர்கள் இணைக்கப்பட்ட ஊடகப் பணியாளர்கள், மற்றும் ஊடக அமைப்புகள் தங்கள் செயற்பாடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ளல்.

3.13 பாதுகாப்பு இன்மை என்ற சூழலால் ஊடக நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருத்தல்.

**"Democracy after all is based upon public opinion. But public opinion is very often based upon what they hear from the media and if the media gives them a slanted view, then public opinion itself gets slanted…As highlighting the importance of an ethical code, the law cannot stipulate every duty of a journalist but the journalist themselves can. The journalists have got to get together and work out a code of ethics for themselves."**

**- Dr Christopher G Weeramantry**

**Former Vice President, International Court of Justice. Speaking at 10th anniversary conference of Press Complaints Commission of Sri Lanka**

ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை நீடிக்கச் செய்தல் மற்றும் வளர்த்தெடுத்தல் போன்ற பணிகளில் ஊடகங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. ஆனால் இதனை எவ்வாறு செய்வது என்பது குறித்து எந்தவித கருத்துடன்பாடும் இல்லை.

ஊடகங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஆனால் வித்தியாசமான பணிகளை ஆற்றுவதே இதற்கு ஒரு காரணம். ஊடகங்கள் என்பது ஜனநாயக விவாதங்கள் நடைபெறும் இடம். இங்கு தவல்கள் பறிமாறப்படுகின்றன. கலாசார வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. அதே வேளை ஊடகங்கள் சமூக செயற்பாட்டாளர்களும் கூட. வலுவான நிறுவனங்களை கண்காணிக்கும் அமைப்பாக செயற்படுகின்றன. அரசாங்கத்தை பொறுப்புக் கூற சொல்கின்றன.

சமூக செயற்பாடளர்கள் என்ற அடிப்படையில் அது பிரிவினை சக்தியாகவும் விளங்கலாம். சில நேரங்களில் மோதலுக்கான கருவியாகவும் காணப்படுகின்றன. இந்தக் காரணங்களுக்காக ஊடகங்கள் தங்கள் செயற்பாடுகள் குறித்து பொறுப்புக் கூறும் நிலை அவசியம். வேறு எந்த சமூக செயற்பாட்டாளர்களையும் போல. அதேவேளை விவாதங்கள் இடம்பெறும் பகுதி என்ற வகையில் ஊடகங்கள் அரசாங்கத்தினதோ அல்லது வேறு எந்த அமைப்பினதோ கட்டுப்பாடுகளை எதிர் கொள்ளாமல் விவாதங்களைத், தகவல்களைத் தொடர அனுமதிப்பது முக்கியமானது.

இதன் காரணமாகவே ஊடக சமூகம் ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சிகளை எதிர்க்கின்றது. .... ஒழுங்குபடுத்தல் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களுக்கு இடையில் உள்ள பொறுப்புணர்வின் வித்தியாசத்தைப் பிரித்துப் பார்ப்பது முக்கியம். அதன் மூலம் அவர்கள் பொது ஒலிபரப்பாளர்களுக்கு விசேட ஜனநாயகப் பணியை ஒதுக்க வேண்டும்.

ஊடகங்களுக்கு சமூகம் ஒன்றின் பல்வகைமையின் அனுபவத்தை வழிநடத்துவதற்கான பலமுள்ளது. பாலினம், இனம், சாதி, மொழி, மத நம்பிக்கைகள், உடலியல் திறமைகள், வருமானம் மற்றும் சமூக வர்க்கம் ஆகியன. ஊடகங்கள் தங்கள் ஜனநாயக சாத்தியப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்றால் சமூகத்தில்

உள்ள பல்வகைமையை அவர்கள் பிரதிபலிக்க வேண்டும்.

சமூக பல்வகைமை தொடர்பாக ஊடகங்களின் செயற்பாடுகள் உத்தியோகபூர்வ ஒழுங்குபடுத்தலுடன் தொடர்பு பட்டவை. உதாரணத்திற்குப் பொதுச் சேவை ஒலிபரப்பு ஊடகம் சமூகத்தின் சகல பிரிவினருக்கும் சேவையாற்றவேண்டிய தேவையையும் சகல அரசியல் கட்சிகளுக்கும் சமமான வாய்ப்பை வழங்கவேண்டிய தேவையும் உள்ளது. ஊடகங்களின் செயற்பாடுகள் சட்டங்களாலும் ஒழுங்குபடுத்தப்படலாம். நகரத்தில் கொள்வனவு சக்தி மிக்க மக்களை அடிப்படையாகக் கொண்ட விளம்பரதாரர்கள் மீது கவனம் செலுத்துவதும் வர்த்தக ஒலிபரப்பாளர்களை சமூகங்களில் ஒழுங்குபடுத்துவதும் அதி முக்கியமானது. இவ்வாறான சூழ் நிலைகளில் பொது மற்றும் சமூக ஊடகங்கள் வறிய மற்றும் கிராமிய தொலை தூரங்களில் வாழும் மக்களின் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்வது முக்கியம்.

சுய ஒழுங்குபடுத்தல் சகாக்களின் கண்காணிப்பு மற்றும் பார்வையாளர்களின் எதிர்வினை ஆகிய நிறுவன கலாசாரத்தில் ஊடக பல்வகைமை ஆழமாகக் காணப்படுகிறது. தற்போது அதிகளவிற்கு புதிய தொழில்நுட்ப பரவல் காரணமாக சமூகப் பன்முகத் தன்மை வலைப்பதிவுகள் முதலானவற்றில் காணப்படுகிறது.

அ

## ஊடகம் சமூகங்களின் பல்வகைமையைப் பிரதிபலித்தல்.

**3.01** ஊடகம் - பொது தனியார் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது. சமூகத்தின் சகல குழுக்களினதும் தேவைகளையும் பூர்த்தி செய்தல்.

இலங்கை வெகுசன ஊடகத்தின் வரலாறு இரண்டு நூற்றாண்டுகளைக் கொண்டது. முதலாவது அச்சு சஞ்சிகை. த சிலோன் கவர்மெனட் கசட் 1802 ஆம் ஆண்டு காலனித்துவ நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. அ∴து அரச அறிவிப்புகளுக்கான சஞ்சிகையாகத் தொடர்ந்தது. முதலாவது ஆங்கில பத்திரிகை 1832 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வானொலி ஒலிபரப்பு 1925ம் ஆண்டு ஆரம்பமானது. தொலைக்காட்சி ஒளிபரப்பு 1979ஆம் ஆண்டு ஆரம்பமானது. வர்த்தக இணைய சேவைகள் 1995ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகமாயின. அதன் பின்னரான தசாப்தங்களில் ஊடக நிறுவனங்ககள், அமைப்புகள் மற்றும் உற்பத்திகள் அதிகரித்தன. எனினும், இந்த எண்ணிக்கை அதிகரிப்பு ஊடக உற்பதிகளின் பல்வகைமை, நாட்டின் பல் கலாசார சமூகத்தின் இன, மத மற்றும் மொழி குழுக்களுக்கு ஏற்ற உள்ளடக்கங்கள் போன்றவற்றில் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. சில புவிசார் மற்றும் பூகோள பகுதிகளில் வாழும் மக்களுக்கு எதிரான உள்ளடக்கங்களில் இடைவெளியின் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

சமீபத்திய கட்டுரை ஒன்றில், அனுபவம் வாய்ந்த இரண்டு அறிவிப்பாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்- ‘‘சிறுபான்மையினர் மற்றும் புறந்தள்ளப்பட்டவர்கள் தொடர்பாக செய்திகளை வெளியிடுவது மற்றும் ஊடகக் கல்வி என்ற விடயத்தில் பாரிய சமத்துவமின்மை காணப்படுகின்றது. இ.்.து ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. இலங்கையின் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்கள் சமூகத்தின் உயர் குழாமினரை மையமாகவைத்தே செயற்படுகின்றன என்பது வழமையாகத் தெரிவிக்கப்படும் ஒரு விடயம்.

பத்திரிகைகள் சஞ்சிகைகள் மற்றும் வானொலிகள், தொலைக்காட்சிகள் மூன்று மொழியிலும் வெளியாகின்றன. (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) எனினும் ஊடக நிறுவனங்களின் உற்பத்திகளை இலங்கையின் அனைத்து பாகங்களிலும் பெற முடிவதில்லை. அவற்றை அணுக முடிவதில்லை.கொழும்பு மாவட்டத்திலும் மேல்மாகாணத்தில் வாழ்பவர்களால் நாட்டின் வேறு எந்த பகுதியிலும் வாழ்பவர்களை விடத் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை அணுக முடிகின்றது.

நாட்டின் ஊடக உற்பத்தியில் பெரும்பான்மையானவை 80சத வீதம் கொழும்பு மாவட்டத்திலேயே இடம்பெறுகின்றன. இது நகர பக்கச்சார்பினை உருவாக்குகின்றது. (2012 சனத் தொகை கணக்கெடுப்பின்படி நகரத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 18.2 வீதமாகவும், கிராமங்களில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 77.4 வீதமாகவும், மலையகத்தில் 4.4 வீதமானவர்கள் வாழ்வதாகவும் தெரியவந்துள்ளது) வட மாகாணத்தின் தமிழ்ப்பேசும் பார்வையாளர்களும், நாட்டின் தோட்டத் தொழிற்துறையைச் சேர்ந்தவர்களும் (மிகவும் குறைந்த அபிவிருத்தி குறிகாட்டிகளை கொண்டுள்ளது) தேசிய ஒலிரப்புகளை விட செய்மதிகள் ஊடாகப் பெறப்படும் தென்னிந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே விரும்புகின்றனர்.

சிறுவர்களுக்கு எனக் குறிப்பிடத்தக்க ஊடக உள்ளடக் கங்கள் காணப்படுகின்றன. இவை இலங்கையின் சனத்தொகையில் 25.2 வீதமாகவுள்ள 14 வயதினருக்கு ஏற்ப காணப்படுகின்றன. எனினும், முதியவர்களுக்கான- (60 வயதுக்கு மேற்பட்டவர்கள்)- நாட்டின் சனத்தொகையில் 13 வீதமாக உள்ளவர்கள்- இவர்களது எண்ணிக்கை அதிகரித்து

100 Putting the Citizen First: New Approaches to Media Literacy, by Tilak Jayaratne and Sarath Kellapotha, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 281-293

101 Results of Census of Population and Housing, 2012 http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=FinalPopulation&gp=Activities&tpl=3

102 http://www.dailymirror.lk/94975/let-s-get-real-about-sri-lanka-s-urbanization

## 3.02 ஊடக நிறுவனங்கள் தங்கள் தொழில் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் பல்வகைமையை வெளிப்படுத்துதல்.

வருகின்றது- நிகழ்ச்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன.
இதேபோன்று இலங்கை ஊடகங்கள் பல்வேறு உடல் ரீதியான குறைபாடுகளுடன் உள்ளவர்கள் தங்களைப்பயன்படுத்துவதை அதிகரிக்கவேண்டும. பிரெய்லி முறையில் ஒரேயொரு வாராந்த சஞ்சிகை மாத்திரம் காணப்படுகின்றது. எனினும் தொலைக்காட்சிகளில் சமிக்ஞை மொழி பாவனை என்பது தொடர்ச்சியற்றதாகவும் காண முடியாததததாகவும் உள்ளது.
உடல் பாதிப்புகள் உள்ளவர்களின் தேவைகளை அரவணைத்துச் செல்வது ஊடகங்களின் முக்கிய முன்னுரிமையாக காணப்படவேண்டும்.

சமூக பல்வகைமையைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஊடகங்களின் திறமை என்பது அதன் பணியாளர்களின் வகையிலேயே காணப்படுகின்றது.
உதாரணத்திற்கு பத்திரிகையாளர்களும் ஊடக நிறைவேற்று அதிகாரிகளும் பெண்களாகயிருத்தல் அல்லது அவர்கள் சிறுபான்மை சமூகத்தினை சேர்ந்தவர்களாகயிருத்தல்.
எனினும், துரதிஸ்டவசமாக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் - அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்கள் குறித்த தொடர்ச்சியான புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை. அரசாங்கத்தின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களம் தொழிற்துறைகள் தொடர்பான வருடாந்த ஆய்வினை மேற்கொள்கின்றது. இதில் பதிப்பு, அச்சு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் மீள்வெளியீடு என்ற பிரிவும் காணப்படுகின்றது. எனினும் இவை தனித்தனி பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களைக் கொண்டிருப்பதில்லை. பாலினம் தொடர்பான குறிப்பாக சில புள்ளிவிபரங்கள் காணப்படுகின்றன.
2011 இல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மேற்கொண்ட ஆய்வின்போது 31 பத்திரிகைகளில் 192 பெண்

[103] http://www.slbc.lk/index.php/tamil-news-update/3497-leader-of-the-veddah-community-commends-the-service-rendered-by-the-dambana-service-of-the-slbc-to-protect-the-language-of-the-indigenous-community.html

[104] www.wijeyanewspapers.lk/?page_id=41

ஊடகவியலாளர்கள் பணியாற்றுவது தெரியவந்துள்ளது. (மூன்று மொழிகளிலும்) ஆண் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 464 ஆக காணப்படுகின்றது, ஆக 29.5 வீதமானவர்கள் பெண் பத்திரிகையாளர்கள. (இந்த ஆய்வு ஒலிபரப்பு மற்றும் வெப் ஊடகங்கள் குறித்து ஆராயவில்லை)

இலங்கையில் பாலினமும் ஊடகங்களும் தொடர்பான சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் மார்ச்2015 அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகின்றது- இலங்கையில் பெண் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பல பெண்கள் குறிப்பாக ஆங்கில ஊடகங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர். இதேவேளை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை சந்தித்துள்ளபோதிலும் பெண்கள் பாதுகாப்பற்ற அல்லது ஊடக தொழிற்துறையினருக்கு உகந்ததாகக் காணப்படாத சூழல்களால் பாதிக்கப்படுகின்றனர். பிரச்சினை மிக்கதாக காணப்படும் பணிபுரியும் இடங்களுக்கு அப்பால் முன்னோக்கி நகர்வ தற்கான போதிய சந்தர்ப்பங்கள் இன்மை, ஆசிரியபீடங்களில் ஆண்களுக்குச் சார்பான போக்கு, போன்றவற்றின் காரணமாக ஊடகத் தொழிற்துறை என்பது பெண்களுக்கு சவால் மிகுநத்தாகவே காணப்படுகின்றது.

இந்த ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்ட விவரண ஆதாரங்களும் செவ்விகளும் இலங்கையின் ஊடகங்கள் போதியளவில் தங்களது சமூகத்தின் பல்வகைமையை பிரதிபலிக்கவில்லை என்பதை புலப்படுத்தியுள்ளன.

105 Annual Survey of Industries 2013. http://www.statistics.gov.lk/industry/ASI%202013%20report.pdf

106 http://www.ifj.org/fileadmin/images/Asia_Pacific/IFJ_AP/reports-etc/Gender_and_Media_in_Sri_Lanka

# பொதுச்சேவை ஒலிபரப்பு மாதிரி

## 3.03 பொதுச்சேவை ஒலிபரப்பின் இலக்குகள் குறித்து சட்ட ரீதியாக வரைவிலக்கணப்படுத்தவேண்டும்

இலங்கையில் வரலாற்று ரீதியாக அரசாங்கத்திற்குச் சொந்தமான வானொலிகளும் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிறுவனங்களும் பரிணாமம் பெற்றுள்ளன. எனினும் அவை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் பொதுச் சேவை ஒலிபரப்புகள் அல்ல.

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டம், ஒலிபரப்பு திணைக்களத்தை (ரேடியோ சிலோன்) சட்டரீதியான கூட்டுத்தாபனமாக மாற்றியது. சட்டமொன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை இலங்கைக்குள் சேவையாற்றும்படியும், அந்தச் சேவையை பொதுநலனின் அடிப்படையில் காலத்திற்குக் காலம் அபிவிருத்தி செய்து விஸ்தரித்து வளர்ச்சியடையச் செய்யுமாறும் ஆணை வழங்கியது.

1982 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டம் இலங்கையின் தேசிய ஒளிபரப்பாளரை உருவாக்கியது. அதன் ஆணையில் பின்வரும் விடயங்களும் காணப்படுகின்றன:- இலங்கைக்குள் ஒலிபரப்புச் சேவையை முன்னெடுப்பது, அதனை ஊக்குவித்து

107 http://www.commonlii.org/lk/legis/consol_act/slbc365375.pdf

108 http://www.commonlii.org/lk/legis/num_act/slrca6o1982386/s7.html

அபிவிருத்தி செய்வது, பொது நலனை அடிப்படையாக் கொண்டு நிகழ்ச்சிகளில் உயர்ந்த தராதரத்தைப் பேணுவது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் நிர்வாக சபைகளுக்கான உறுப்பினர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர். அவர், அவர்களை எந்தநேரத்திலும் எந்தக் காரணத்தையும் தெரிவிக்காமல், அந்தப் பதவிகளில் இருந்து அகற்றலாம். உறுப்பினர்கள் அரச கூட்டுத்தபானத்தின் ஊழியர்களாக கருதப்படுவார்கள். இந்த ஏற்பாடுகள் அரச ஒலிபரப்புகளின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர்கள், செய்திகள் விடயத்தில் பக்கச்சார்பாக நடந்துகொள்வதற்கு வழிவகுக்கின்றன.

BOX 12

## Public Service Broadcasting (PSB)

UNESCO has defined public service broadcasting (PSB) as broadcasting made, financed and controlled by the public, for the public. It is neither commercial nor state-owned, and also free from political interference and pressure from commercial forces. Through PSB, citizens are informed, educated and also entertained. When guaranteed with pluralism, programming diversity, editorial independence, appropriate funding, accountability and transparency, public service broadcasting can serve as a cornerstone of democracy.

**Source:** http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/public-service-broadcasting/

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மக்களின் வரிப் பணத்தினால் (ஏனைய நிதி விளம்பரங்களின் மூலம் கிடைக்கின்றது) இயங்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாய் நிர்வகிக்கப்படும் அமைப்புகள். இது தவிரவும், இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி சேவையென்ற ஒன்றும் காணப்படுகின்றது. தனியார் தொலைக்காட்சி நிலையமாக ஆரம்பத்தில் காணப்பட்ட இதுவே இலங்கையின் தொலைக்காட்சி சேவையின் முன்னோடியாக காணப்பட்டது. இது மூன்று மாதங்களில் கையகப்படுத்தப்பட்டு அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நோக்கத்துடனான நிறுவனமாக 1979 யூன் மாதத்தில் மாற்றப்பட்டது. 1992 இல் இது முற்றுமுழுதாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றப்பட்டது.

109 http://www.itn.lk/about-itn/

அதன் உரிமை என்பது எப்போதும் பரந்துபட்டதாகக் காணப்படவில்லை. பல தடவைகள் அது குறித்து விவாதிக்கப்பட்ட போதிலும்,

இந்த ஒலிபரப்பாளர்கள் எவருக்கும் சட்டத்தினால் வரவிலக்கணப்படுத்தப்பட்ட அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்ட சுதந்திரம் என்பது அவர்களுடைய ஆசிரியபீட நடவடிக்கைகளிலோ அல்லது உள்ளடக்கங்களை ஏற்படுத்துவதிலோ காணப்படவில்லை. அனைத்தும் பல தசாப்தங்களாக ஆளும் கட்சியினரின் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுநலன் என்பது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் மற்றும் ஆளும் கட்சியுடன் சேர்த்துநோக்கி குழப்பப்பட்டுள்ளது. ஆசிரியபீட முடிவுகள் எடுக்கப்படும் இடங்களில் அரசாங்கத்தின் நேரடி தலையீடு என்பது வழமையான விடயம். இலங்கையின் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் அலைவாங்கிகளின் அனைத்து உரிமையாளர்களும் வருடாந்த உரிமக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்,

இந்த வருமானம் இலங்கையின் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐடிஎன் ஆகியவற்றிற்கு இடையில் பகிரப்படுகின்றது. எனினும் இந்த நடைமுறை 2000 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டது, பொதுமக்களுக்கு சுமையாகவுள்ள அரசாங்க வரியை அகற்றவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், அரசாங்க ஊடகங்களை அவர்களது பொதுச்சேவை ஒலிபரப்புக் கடமைகளில் இருந்து விடுவிப்பதே இதன் உண்மையான நோக்கம் என ஊடகங்களை அவதானிப்பவர்கள்

BOX 13

## PSBs: Clarify purpose first!

Prof Dhammika Ganganath Dissanayake, a former chairman of both state TV stations (Rupavahini and ITN Sri Lanka), calls for clarity of purpose in pursuit of PSBs in Sri Lanka.

He said in an interview: "First we have to decide whether we really need PSBs in Sri Lanka. There is no point adopting enabling laws for PSBs if they are going to be totally dependent on the market forces. So we as a society should be willing to allocate sufficient taxpayer funds to maintain PSBs. Such PSBs should only be accountable to Parliament and not to the executive branch of government. Private sector participation in broadcasting is fine, as long as the industry is properly regulated by an independent regulator. This is what many other countries are doing."

Wimal Fernando v Sri Lanka Broadcasting Corporation [1996] 1 Sri Law Reports 157

கருத்து தெரிவித்துள்ளனர். கட்டணங்களைச் செலுத்தும் மக்கள் சில உரிமைகளுக்கு உரித்தானவர்கள் விமல் பெர்ணாண்டோ எதிர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வழக்கின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. (1996)

அரச ஒலிபரப்பாளர்களுக்கான முக்கிய வருமானம் அவர்களது வானலை நேரத்தை விளம்பரங்கள் மற்றும் அனுசரணை நிகழ்ச்சிகளுக்கு விற்பதன் மூலம் கிடைக்கிறது. கல்வி மற்றும் ஏனைய பொது நலன் உள்ளடக்கங்கள் வர்த்தக ரீதியான உள்ளடக்கங்களுடன் நேரடியாக போட்டியிடுகின்றன. 2012 இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தனது வானலை நேரத்தை விற்றதன் மூலம் 1.85 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியது. அதேவேளை 168 பில்லியனே ஏனைய வழிகள் மூலம் சம்பாதித்தது. இதில் 11 பில்லியன் அரச நன்கொடையாக வழங்கப்பட்டது.

இலங்கை தனது பொதுச் சேவை ஒலிபரப்பின் இலக்குகளை தனது சொந்த சமூக கலாசார மற்றும் அரசியல் சூழ் அமைவுகளுக்கு ஏற்ப மீள வரைவிலக்கணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பொதுச் சேவை ஒலிபரப்புகள் பல்வகைமையை உறுதி செய்வதன் மூலம் முக்கியமான ஜனநாயகப் பணியை ஆற்றுவது உண்மை. அதேவேளை தனியார் ஊடகங்கள் வெறுமனே சந்தையை அடிப்படையாக வைத்து பெருமளவு பார்வையாளர்களுக்கு அல்லது தரப்படுத்தல்களுக்கு நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.

- தரமான தகவல்களைப் பெறும் மக்கள் உரிமையை பூர்த்தி செய்தல். இதன் மூலம் நிகழ்ச்சித் தராதரங்களை அனைத்து ஒலிபரப்பாபளர்களுக்கும் ஏற்படுத்துதல்.
- பிரதிநிதித்துவ பன்முகத் தன்மையைச் செழிப்படையச் செய்தல். பெருமளவு பார்வையாளர்கள் அக்கறை கொள்ளாத விசேட நலன்களுக்கும் நிகழ்ச்சிகளை வழங்குதல்.
- கல்வி மற்றும் கலாசார தேவைகளுக்கு சேவை செய்தல். சமூகத்தின் கலாசார மட்டத்தை உயர்த்துதல் ஏனைய கலாசாரங்கள் குறித்த புரிந்துணர்வை வளர்த்தல்.
- சமூகத்தின் குரலாக மாறுவதற்கான திறமையை ஆசிரியர்பீட நோக்கம் தொடர்ச்சியாக காண்பித்தல். (இது

Sri Lanka Rupavahini Corporation Annual Report 2012. http://www.parliament.lk/uploads/documents/paperspresented/annual_report_srilanka_rupavahini_corporation_2012.pdf

சுயாதீன தயாரிப்பாளர்கள் பொதுச் சேவை ஊடகங்களைத் தளமாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருத்தல்)

- பொது நலன் நோக்கம் கொண்ட தொழில் சார் ரீதியிலானவர்களை உள்ளடக்கங்களைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலில் ஈடுபடுத்தல்.

பொதுச் சேவை ஊடகங்கள் காணப்படுவதற்கான நோக்கம் அவை வர்த்தக ஒலிபரப்பாளர்களை விடவும் வேறுமாதிரியான உள்ளடக்கங்களை வழங்குவதே. உதாரணத்திற்கு வர்த்தக ஒலிபரப்பாளர்கள் தங்கள் சேவையின் தரப்படுத்தல் அதிகரிக்குமானால் ஆன்மிகம் போன்ற விடயங்களை ஊக்குவிக்கக் கூடும். ஆனால் பொதுச் சேவை ஊடகங்களுக்கு அறிவு பூர்வமான சிந்தனையை வளர்ப்பதற்கான கடப்பாடு உள்ளது.

யுனஸ்கோவின் தொடர்பாடல் அபிவிருத்திப் பிரிவில் பணியாற்றியவரும் அதன் அபிவிருத்தி தொடர்பாடலுக்கான சர்வதேச திட்டத்திற்குத் தலைமை தாங்கியவருமான வியஜானந்த ஜெயவீர, உண்மையான சுதந்திரமுள்ள பொதுச் சேவை ஊடகங்கள் வெறுமனே வித்தியாசமான உள்ளடக்கத்திற்கான தளங்கள் மாத்திரமல்ல ஜனநாயக ஈடுபாட்டிற்கு மிகவும் அவசியமான நிறுவனங்கள் எனக் குறிப்பிடுகிறார். அவர் மேலும் இவ்வாறு தெரிவிக்கிறார். இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் அல்லது ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை பீ.பீ.சி போன்று மாற்றுவதில்லை. பொதுச் சேவை ஒலிபரப்புக்கு பீ.பீ.சி மாத்திரமே ஒரு முன்மாதிரி அல்ல. ஐரோப்பாவில் பல பாரம்பரியங்களும் மாதிரிகளும் உள்ளன. விசேடமாக பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஜப்பானில். போலந்து எப்படி தனது அரச ஒலிபரப்பாளர்களை வெற்றிகரமான பொதுச் சேவை ஒலிபரப்பாளர்களாக மாற்றியது என நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

20 வருடங்களுக்கு மேல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ஜயவீர, பொதுச் சேவை ஒலிபரப்பு என்பது அரசமைப்பு தேவையாக மாற வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என் இன்னாள் முன்னாள் தலைவருமான பேராசிரியர் கங்கானாத் திசாநாயக்க, இலங்கையின் பொதுச் சேவை ஒலிபரப்புக்கான முயற்சிகள் இடம்பெறுவதன் நோக்கம் குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்கிறார்.

112 http://www.nationmultimedia.com/opinion/Thai-PBS-belongs-to-the-people-not-those-in-power-30282141.html

113 Public media or public media organisations in Sri Lanka? Rohan Samarajiva. Lanka Business Online (LBO), 14 January 2015. http://www.lankabusinessonline.com/public-media-or-public-media-organizations-in-sri-lanka/

ஒரு பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். முதலில் எங்களுக்கு பொதுச் சேவை ஒலிபரப்பு அவசியமா என நாங்கள் தீர்மானிக்கவில்லை. பொதுச் சேவை ஒலிபரப்புகள் முற்று முழுதாக சந்தை வளத்தில் தங்கி இருக்கப் போகின்றார்கள் என்றால், சட்டங்களைக் கொண்டு வருவதில் அர்த்தம் இல்லை. ஆகவே ஒரு சமூகம் என்ற வகையில் வரி செலுத்துபவர்கள் குறிப்பிடத் தக்க நிதியை பொதுச் சேவை ஒலிபரப்பை பேணுவதற்கு ஒதுக்க வேண்டும். பொதுச் சேவை ஒலிபரப்புகள் பாராளுமன்றத்திற்கே பதிலளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கத்தின் தலைமைக்கு அல்ல. ஒலிபரப்புத் தொழிற் துறை சுயாதீன ஒழுங்குபடுத்துனரால் உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்படும் வரை தனியார் துறையின் பங்களிப்பு என்பது சிறந்ததாகும். உலகின் பல நாடுகள் இதனையே செய்கின்றன.

## பொதுச் சேவை ஒலிபரப்புகளுக்கு நிதி வழங்குதல்

பொதுச் செவை ஒலிபரப்புகளின் சுதந்திரம் மற்றும் செயற்பாட்டிற்குப் போதிய அளவு மற்றும் தொடர்ச்சியான நிதி கிடைப்பது முக்கியமாகும். வரி செலுத்துபவர்களின் நிதியை இவற்றுக்கு ஒதுக்குவது முறைசாரா கல்விக்கு செய்யப்படும் முக்கிய முதலீடாக கருதப்படலாம். சமூகத்தில் நிரந்தரமான கல்விப் பங்களிப்பை இந்த வகை ஒலிபரப்புகள் செய்வதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த வகை ஒலிபரப்புகளின் நிதி பலத்தை பல்வகைப் படுத்துவதற்கு ஏனைய நிதி சார்ந்த தந்திரோபாயங்களை உருவாக்க வேண்டும்.

- பயன்படுத்துபவர்கள் உரிமைக் கட்டணத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவது. (2000 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது) ஆனால் இதனை சேகரிக்கும் முறைகள் மேலும் வலுவானவையாக காணப்பட வேண்டும்.
- பிரிட்டனில் காணப்படுவது போல லொத்தர் சபை தனது வருமானத்தில் ஒரு பகுதியை பொதுச் சேவை ஒலிபரப்பின் உயர் தரமான கல்வி மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு வழங்கலாம்.
- 2006 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதி தொலைக் காட்சி


உள்ளடக்கங்களுக்கான வரியை பயன்படுத்தலாம். இதன் மூலம் அரசாங்கம் ஒரு பில்லியனுக்கு மேல் வருமானம் ஈட்டியதாக கருதப்படுகின்றது.

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும் எல்.ஐ.ஆர்.என்.இ. ஏசியா என்ற சுயாதீன கொள்கை ஆராய்ச்சி அமைப்பின் தலைவருமான கலாநிதி ரொகான் சமரவீர பேட்டி ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டங்கள் முற்று முழுதாக பழையவை. பல தசாப்தங்களுக்கு முன்னர் நிலவிய பொருளாதார சமூக மற்றும் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப அவை உருவாக்கப்பட்டன. அவற்றை தற்போது தரம் உயர்த்த வேண்டும். இலங்கையால் பீ.பீ.சி. போன்ற சுதந்திரமான பொதுச் சேவை ஊடகத்தை தொடர்ச்சியாக தக்க வைப்பதற்கான திறன் உள்ளதா என்பது எனக்கு நிச்சயமாக தெரியாது.


சமீபத்தில் பத்தி ஒன்றில் வர்த்தக நோக்கம் கொண்ட தனியார் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படாத உள்ளடக்கங்களை உருவாக்குவதற்குப் பொது ஊடகங்களுக்கு ஆதரவளிப்பதற்கான நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். தரமான உள்ளடக்கத்தை உருவாக்க வேண்டும். எந்த ஊடக தயாரிப்பாளர்களுக்கும் மானியங்களை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்குவதற்காக நிதியம் ஒன்றையும் முகாமைத்துவ கட்டமைப்பையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கான நிதி திறைசேரியில் இருந்தே வர வேண்டும். தனியார் தயாரிப்பாளர் மீது வரிகளை விதித்தால் அவர்கள் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட போட்டியில் இருந்து பாதுகாப்பைக் கோருவார்கள். உள்ளடக்கம் ஒழுக்க நெறியுடைய சமூகத்திற்கு அவசியமானது என்றால் அதனை மிக முக்கியமானது என நாங்கள் கருதினால். நாங்கள் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். தேவையற்ற தலையீடுகள் இல்லாத நிலையை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் வெற்றிக்கான உத்தரவாதமாக இஃது அமையாது. அரசியல் செல்வாக்கு உடைய பொது ஊடக உள்ளடக்கங்கள் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளை இதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்பதே ஒரேயொரு முக்கிய விடயம். இங்குப் பணம் பிரசார நடவடிக்கைகளுக்காக செலவிடப்படாது.

டப்.ஆர்.விஜேசோம அவர்களால் வெளியிடப்பட்ட கார்டூன் - அசல் வெளியீடு தி ஐலண்ட் 3 மார்ச் 1993




மின்னணு ஊடகங்களின் பரிணாம வளர்ச்சி - தர்ஷன கருணாதிலக அவர்களின் கார்டூன்



## 3.04 பொதுச் சேவை ஒலிபரப்பாளர்களின் நடவடிக்கைகள் எந்தத் துறையிலும் பாரபட்சத்தை ஏற்படுத்தக்கூடாது

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒலிபரப்பு அலைவரிசைகளுக்கு அன்ரனா உள்ள வீடுகள் நேரடியாக பெற்றுக் கொள்ளக்கூடிய சனல்களை ஒலிபரப்புவதற்கான உரிமை உள்ளது. மேலும் இந்த அலைவரிசைகள் கேபிள்கள் மற்றும் வீடுகளுக்கான நேரடி செய்மதி சேவைகள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. எனினும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இதனை கட்டாயமாகச் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கும் சட்டங்கள் அல்லது ஒழுங்குபடுத்தல்கள் எதுவும் இல்லை.

"For structural reforms to viable, the state media needs to be freed from their current reliance on market forces. SLBC and SLRC have to sustain themselves from advertising and sponsorship incomes. Various governments have been using state media but without providing funds. So there are enormous commercial pressures on state media, which prevent state media from properly performing their duties to the public.

"Even though SLRC is not explicitly set up as a public service broadcaster (PSB), its act mentions the public service remit. Unfortunately, political interference has compromised this ideal. I propose that we go back to the original intent and purpose of the founding Act, and reaffirm the corporation's independence from political forces. Ideally, SLRC should be transformed into an autonomous PSB, even though it will be a hard task to accomplish."

**- Mohan Samaranayake**
**Journalist and media analyst.**
**Former Chairman, Sri Lanka Rupavahini Corporation (SLRC)**

"I am shocked and appalled by how certain TV channels cover violence and death in our society. These tragedies are highly sensationalized, which is damaging our entire social fabric. We need public service broadcasting (PSB) in Sri Lanka. Our national TV (Rupavahini) was gifted by Japan and we received some of Japanese PSB station NHK's good traditions. But where are these now? We have moved far from the founding ideals of Rupavahini, which was meant to have focus on public education."

**- Hema Nalin Karunaratne**
**Managing Director, Heritage TV**

## 3 05 சுயாதீன மற்றும் வெளிப்படையான நிர்வாகம்

3.3 இல் குறிப்பிட்டதுபோல அரச ஒலிபரப்புக் கூட்டுத் தாபனங்களின் நிர்வாக சபையில் உள்ளவர்கள் முற்றுமுழுதாக அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்கள். நிர்வாக சபையின் புவிசார் பல்வகைமையை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது துறைசார் பிரதிநிதித்துவமோ காணப்பட வேண்டும் என்ற சட்ட அடிப்படையிலான தேவைகளும் இல்லை. காலத்திற்குக் காலம் பல அமைச்சர்கள் பல்வேறு அளவிலான இன பல்வகைமையைக் கொண்ட முகாமைத்துவ சபையை நியமித்துள்ளனர். சிவில் சமூகத்தனர் அரசாங்கத்தின் நேரடி மற்றும் மறைமுக செல்வாக்கில் இருந்தும் வர்த்தக சமூகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தும் விடுதலை பெற்ற சுயாதீன ஒலிபரப்பு அதிகார சபையை உருவாக்குமாறு யோசனைகளை முன்வைத்துள்ளனர். அவ்வாறான ஒரு கட்டமைப்பின் கீழ் அரச ஒலிபரப்பாளர்கள் தங்களது பொதுச் சேவை ஒலிபரப்பு ஆணையை மற்றும் பணியை நிறைவேற்ற முடியும்.

அவ்வாறான அதிகாரசபையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட கடந்த கால முயற்சிகள் வெற்றிகரமாக எதிர்க்கப்பட்டன,1997 இல் அதற்கு ஆதரவான குழுக்கள் இலங்கை ஒலிபரப்பு அதிகார சட்டம் என்ற உத்தேச சட்டத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன, குறிப்பிட்ட உத்தேச சட்ட மூலம் ஒலிபரப்பு ஊடகங்களுக்கு என ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையை ஏற்படுத்துவதற்கு முயன்றது, அதில் உள்ளடக்கங்களை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் காணப்பட்டன. குறிப்பிட்ட மனுவிற்கு பதிலளித்த உச்சநீதிமன்றம் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம் பாரபட்சமானது எனத் தெரிவித்திருந்தது.

ஒலிபரப்பு ஒழுங்குபடுத்துனருக்கான தேவை இன்னமும் காணப்படுகின்றது. ஆனால், அதன் சுதந்திரத்தை அரசாங்கத்திடமிருந்து பாதுகாக்கவேண்டியது அவசியமானது. அதன் நோக்கம் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

## 3.06 பொதுச்சேவை ஒலிபரப்பாளர்கள்

### பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புகளுடன் ஈடுபாடுகளை ஏற்படுத்துதல்

அரச ஒலிபரப்பாளர்களும், (அனேக வர்த்தக நோக்கிலான ஒலிபரப்பாளர்களும்) மக்களுடன் சில வடிவத்திலான நிகழ்ச்சிகள் மூலம் தொடர்புகொள்வார்கள்- தொலைபேசி மூலமான உரையாடல்கள் போன்றவை- இவை நேரடியாக ஒலி, ஒளிபரப்பாகும். எனினும், அவர்கள் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து நேயர்களைக் கருத்து கூறுமாறு உற்சாகப்படுத்துவதில்லை. ஊக்குவிப்பதில்லை. இவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்துகொள் பவர்கள் நடைமுறைகளுக்கு கட்டுப்பட பழக்கப்படுத்தப்படுகின்றனர். இதன் காரணமாக இவற்றை தீவிரமான கலந்துரையாடல்களுக்கான வாய்ப்புகள் எனக் கருதமுடியாது.

சிவில் சமூக அமைப்புகளுக்கோ அல்லது மக்களுக்கோ அரச ஒலிபரப்பாளர்கள் முகாமைத்துவ சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான எந்தவித உத்தியோகபூர்வமான வாய்ப்புகளும் இல்லை. எந்த ஒலிபரப்பாளராவது ஒலிபரப்பிய, சர்ச்சைக்குரிய உள்ளடக்கம் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கான உத்தியோகபூர்வ நடைமுறைகள் எதுவும் காணப்படவில்லை. நிகழ்ச்சிகள் குறித்த கொள்கைகளில் மக்கள் செல்வாக்கு செலுத்துவதற்கு ஏதுவான அரச ஒலிபரப்பாளர்களுக்கான பொறுப்புக்கூறல் அமைப்பு முறை எதுவும் காணப்படவில்லை.

# ஊடக சுய ஒழுங்குபடுத்தல் முறை

ஊடக ஒழுங்குபடுத்தல், அரசாங்கங்கள் அல்லது ஏனைய அமைப்புகள் ஊடகங்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது வழிகாட்டுதல் இந்த ஒழுங்குபடுத்துதல்களை பின்வரும் வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளலாம்.

- சட்டங்கள் , விதிமுறைகள் அல்லது நெறிமுறைகள் ஊடாக
- பல இலக்குகள் ஊடாக
- போட்டியை அல்லது வலுவான ஊடக சந்தையை ஊக்குவிப்பதன் ஊடாக அல்லது
- பொதுவான தொழில்நுட்ப தராதரங்களை ஏற்படுத்துதல் ஊடாக

உலகில் பல வகையான ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகள் காணப்படுகின்றன ஒழுங்குபடுத்தல் முறை-

**Table 2: Different media regulatory mechanisms**

| Regulatory method | Description | Example/s |
|---|---|---|
| Governmental regulation | When a regulatory body is either set up by a law, or otherwise controlled by the government. The models of government regulation differ worldwide and are not customised to a set formula. | Sri Lanka Press Council Act No 5 of 1973 which set up the Sri Lanka Press Council |
| Independent Statutory Regulation | Implies independence from both the media and government but set up by law. | Press Council of Denmark |
| Self-regulation | A peer review system operating within a set of self- imposed rules by the media. It consists of representatives from media profession passing judgement of matters of journalistic reporting using a Journalistic Code of Ethics... | Press Complaints Commission of Sri Lanka (PCCSL), operational since 2003 |
| Co-Regulation | A legally empowered regulatory body chosen by media producers and professionals, which is independent from both the government and corporate interests. | Indonesia's Independent Press Council (Dewan Pers) created by Press Law 1999 |

## 3.07 அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தல்கள் குறித்த வலுவான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல்

கடந்த பல வருடங்களாக இலங்கையின் அச்சு ஊடகத் துறையினர் சுய ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்ந்தும் வளர்ச்சி கண்டு வருகின்றது. எனினும் ஒலிபரப்புத் துறையினர் அதனுடன் ஒப்பிடக்கூடிய ஒன்றை இன்னமும் உருவாக்கவில்லை.

சுய ஒழுங்குபடுத்தல்களை முதலில் அறிமுகப்படுத்திய தெற்காசிய நாடு இலங்கையே. பத்திரிகை தொழிற்துறையின் பரந்துபட்ட ஆதரவுடன் அதனை அது மேற்கொண்டிருந்தது. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்பது பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் மற்றும் பத்திரிகைகளின் இணைய பதிப்புகள் என்பவற்றில் எழக்கூடிய தவறுகளை சரிசெய்வதற்காக ஊடகத் தொழிற்துறையினர் 2003 இல் தாமாக முன்வந்து உருவாக்கிய சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையாகும். இலங்கை செய்திப் பத்திரிகை சமூகத்தினர், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினர், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகிய இணைந்து இதனை உருவாக்கியிருந்தன.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு சமரசம், மத்தியஸ்தம், நடுவர் என்ற கொள்கைகளின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. ஊடகங்களில் காணப்படும் உள்ளடக்கங்கள் குறித்த பொதுமக்களின் கரிசனைகளிற்குச் சுதந்திரமான, வேகமான நேர்மையான அடிப்படையில் அது தீர்வைக் காண முயல்கின்றது. இது படிப்படியாக சமரச முறை ஊடாகத் தீர்ப்பளிக்க முயல்கின்றது, அது பலனளிக்காத பட்சத்தில் மத்தியஸ்தம், என்ற அடிப்படையில் செயற்படுகின்றது, இறுதியாகவே அது பிரச்சினை தீர்வு சபை ஊடாக மத்தியஸ்த வழியில் தீர்வைக் காண முயல்கின்றது. உயர் நீதிமன்றத்திற்குச் சட்டமொன்றின் கீழ் தீர்ப்பை வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரச்சினை தீர்வுக் குழு என்பது பதினொரு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, இவர்களில் 6 பேர் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள். ஏனைய ஐந்துபேரும் மூத்த பத்திரிகையாளர்கள். ஆசிரியர் பீட உள்ளடக்கத்திற்கான ஒழுக்க தராதரங்களை இலங்கை பத்திரிகையாளர், ஆசிரியர் சங்கத்தின் தொழில்சார் நடவடிக்கை கோவை நிர்ணயிக்கின்றது, இதனைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்

114 http://www.pccsl.lk/

115 http://www.pccsl.lk/sites/default/files/Code-English.pdf

BOX 14

# இலங்கை ஊடகங்களின் தொழில்சார் நடவடிக்கைக்கான கோவை

இலங்கை ஊடகங்களின் தொழில்சார் நடவடிக்கைக்கான கோவை 2003 2004 இல் ஊடகங்களின் ஒழுக்க கட்டமைப்பாக செயற்படுவதற்காக உருவாக்கப்பட்டது, பொதுமக்கள் எந்தவித எல்லை மீறல்கள் குறித்தும் மதிப்பிடமுடியும்,
குறிப்பிட்ட கோவை இந்த வரிகளுடன் ஆரம்பமாகின்றது - ''பத்திரிகை வெளியிடும் நிறுவனங்கள், ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை மற்றும் பங்களிப்பு செய்பவர்களை, அச்சு வடிவத்திலும் ஒன்லைன் மூலமாகவும், கட்டுப்படுத்தும் தொழில்சார் நடவடிக்கை கோவை, இலங்கை பத்திரிகைகள் சுதந்திரமானவையாகவும், பொறுப்புணர்வுடன் செயற்படுபவையாகவும், வாசகர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கு உணர்வு பூர்வமானவையாகவும் காணப்படுவதை உறுதிசெய்யும் நோக்கத்தை கொண்டது. பத்திரிகை துறையின் உயர்தராதரங்களை பேணும் அதேவேளையில்.
கோவை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. அறிமுகவுரை
2. துல்லியமான செய்தி அளித்தல்
3. திருத்தங்களும் மன்னிப்புகளும்
4. பதில் அளிப்பதற்கான வாய்ப்புகள்
5. செய்தி மூலங்களின் இரகசியத்தன்மை
6. பொதுவான செய்தியிடல் மற்றும் எழுத்து
7. அந்தரங்கம்,
8. துன்பறுத்தலும் தந்திரமும்.
9. நேர்மை
10. அர்த்தப்படுத்தல்
11. இணைய பதிப்புகள் ஆய்வு

ஆரம்பத்திலேயே ''இந்தக் கோவை தனி நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றது. அறிவதற்கு பொதுமக்களுக்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கின்றது. இது வெறுமனே வார்த்தைகளில் மாத்திரமல்ல செயற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதனைத் தனிநபர்களின் உரிமைகளை மதிப்பது என்ற அர்ப்பணிப்பை விட்டுக்கொடுப்பதாகவோ அல்லது பொதுநலன்களைக் கருத்தில் கொண்டு வெளியீட்டை தடுப்பதாகவோ குறுகிய ரீதியில் அர்த்தப்படுத்தக் கூடாது.

அறிமுகவுரையில் -
முறைப்பாடுகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் வேகமான முறையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவிற்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும். கோவையை மீறியதாக கருதப்படும் எந்த வெளியீடும், தீர்ப்பை முழுமையாகவும், உரிய முக்கியத்துவம் கொடுத்தும் வெளியிட வேண்டும், தலைப்பு இலங்கை பத்திரிகை ஆணைக் குழுவை சுட்டிக்காட்டுவதாக அமைய வேண்டும்,

குழு ஏற்றுக் கொண்டதுடன் பின்னர் அதனை 2014 இல் இதன் திருத்தப்பட்ட பதிப்பை வெளியிட்டது. அச்சு ஊடகங்கள் துல்லிய தன்மைக்கான முயற்சிகளையும், பொதுமக்கள் நலன்களையும் கருத்தில் கொள்ளும் அதேவேளை செயற்படக்கூடிய ஒழுக்க வடிவமைப்பை முன்வைக்கின்றது.

1980 களில் மூத்த பத்திரிகையாளர்கள் வரைந்த ஒழுக்காற்றுக் கோவையும் காணப்படுகின்றது. அந்தக் கோவை - இலங்கை பத்திரிகை பேரவையால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகள், இலங்கை பத்திரிகை பேரவையின் சட்டத்தின் 30(1) பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட சட்டத்தின் 30(3) பிரிவின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆந்திகதி அரச வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டது, குறிப்பிட்ட ஒழுக்காற்று கோவையும், அதனை உருவாக்கிய பத்திரிகை கவுன்சிலும் இலங்கையில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பல காலமாக சர்ச்சைக்குரிய விடயங்களாக காணப்பட்டன.

*"Neither the Editors' Code, nor the PCCSL are the ideal. There is, no doubt, room for improvement. But the principle of self-regulation remains steadfast and true. The alternative – a statutory body of Government appointees is not the answer. It is a sine-quo-non for a Free Press in Sri Lanka, or what is left of it, that its well-being is in its own responsible hands. It is up to those in the profession, and the industry, to protect it and foster it in their own interests and in the interests of their countrymen."*
**- Sinha Ratnatunga,**
Deputy Chairman of the Board, Sri Lanka Press Complaints Commission
(at 10th anniversary conference, January 2014)
http://www.pccsl.lk/sites/default/files/IC%20Final%20Report.pdf

117 PCCSL 2014 Annual Report. http://www.pccsl.lk/sites/default/files/AnualReport-2014-Englis%28Updated%29.pdf

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்கு- 12 வருட செயற்பாடுகள்

தற்போது மூன்று மொழிகளையும் சேர்ந்த அநேக பத்திரிகைகள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சுய ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. 2003 இறுதி முதல் 2014 வரை குறிப்பிட்ட ஆணைக் குழுவிற்கு 1800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது சராசரியாக வருடத்திற்கு 150 எனக் கொள்ளலாம்.

2014 இல் இலங்கை பத்திரிகை ஆணைக் குழுவிற்கு 291 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மூன்று மொழிகளையும் அடிப்படையாக வைத்து இது குறித்து ஆராய்ந்த வேளை பின்வரும் விடயங்கள் தெரிய வந்தன.

- சிங்கள மொழிப் பத்திரிகைகள் 167
- தமிழ் மொழிப் பத்திரிகைகள் 47
- ஆங்கில மொழிப் பத்திரிகைகள் 70

அச்சு ஊடகத்துடன் தொடர்பில்லாத 7 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. (ஆணைக் குழுவின் எல்லைக்கு

*"The history of self-regulation in Sri Lanka is essentially a response to excessive State control and attacks. We do not want the power of the press to undermine democracy, and self-regulation is part of the answer to that. Another key element is media independence, which can help prevent self censorship. The State should not see independence as a threat, because it helps ensure a proper flow of information to the people.*

*"The idea that 'comment is free' is still bounded by the need to respect human rights values. Bias in the media is not acceptable, whether against women, different groups or different viewpoints. But journalists need some sort of institutional support, like lawyers enjoy through the Bar Association. In Sri Lanka, self regulation serves this role and also provides support to freedom of expression."*

**- Prof. Savitri Goonesekere,**
Professor Emeritus of Law, University of Colombo
Speaking at 10th anniversary conference of Press Complaints Commission of Sri Lanka

118 http://www.pccsl.lk/sites/default/files/PCCSL%2010%20th%20Anniversary%20Souvenir.pdf

119 Self Regulation and Ethical Reporting: Report on the Conference Celebrating 10th Anniversary of PCCSL. January 2014. http://www.pccsl.lk/sites/default/files/IC%20Final%20Report.pdf

அப்பாற்பட்டது.)

80 சதவீதமான முறைப்பாடுகளுக்குக் கடந்த தசாப்தத்தில் தீர்வு காணப்பட்டுள்ளது. சுய ஒழுங்குபடுத்தல் என்ற கருத்தை தற்போது ஊடகங்களும் பொதுமக்களும் ஏற்றுக் கொண்டுள்ளதாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு தெரிவிக்கின்றது.

குறிப்பிட்ட ஆணைக் குழுவை ஈடுபடுத்தாமலேயே பாதிக்கப்பட்ட வாசகர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் முறைப்பாடுகளுக்கு நேரடியாக தீர்வு காண்பது குறித்து செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. அதன் 2014 வருடாந்த ஆய்வில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவை ஈடுபடுத்தாமலேயே இலங்கை பத்திரிகைகள் அதிகளவிலான பிழை திருத்தங்கள், தெளிவு படுத்தல்கள, மன்னிப்புகள், பதிலளிப்பதற்கான உரிமைகள் ஆகியவற்றை வெளியிடுவது ஆணைக் குழு மேற்கொண்ட பிரசாரங்கள் காரணமாக அதிகளவு வாசகர்கள், ஆசிரியர்களுக்கு நேரடியாக எழுதுவதையும் ஆணைக் குழுவின் நடைமுறைக்கு அப்பால் வாசகர்கள் உரிமை வெளியிடப்படுவதையும் காண முடிகின்றது. இவை மிகவும் சாதகமான விடயங்கள். தொழில் சார் ஊடகங்கள் என்ற இலக்கை எட்டுவதற்கு இவை உதவும்.

இலங்கையின் வானொலி மற்றும் தொலைக் காட்சி ஒலிபரப்பாளர்கள் இதுவரை தங்கள் தொழிற் துறை சார்ந்த கூட்டமைப்பை ஏற்படுத்தவில்லை. சுய ஒழுங்குபடுத்தல் பொறி முறையையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பத்து வருட பூர்த்தி நிகழும்போது விளம்பரத் தொழிற்துறை ஒலிபரப்புத் தொழிற்துறை மற்றும் இணையப் பயனாளிகளுடன் பரந்து பட்ட கோவையை உருவாக்குவதற்காக இணக்கப்பாட்டை பேணுவதற்கான தொடர்புகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் இது இன்னமும் சாத்தியமாகவில்லை.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தியைக் குறிக்கும் முகமாக சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டனின் பத்திரிகை ஆசிரியர் கோவைக் குழுவின் செயலாளர் இயன் பீலட்ஸ் இவ்வாறு தெரிவித்தார். பத்திரிகையாளர்

120 http://www.wsws.org/en/articles/2009/07/sril-j01.html and http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/06/090627_press.shtml

121 https://freedomhouse.org/report/freedom-press/2014/sri-lanka#.VUL0uvDkqSo

*இலங்கையின் சுய ஒழுங்குபடுத்தல் வரலாறு என்பது அளவுக்கு அதிகமான அரச கட்டுப்பாடு மற்றும் தாக்குதல்களுக்கான பதிலாகவே காணப்பட்டது. அச்சு ஊடகத்தின் அதிகாரங்கள் ஜனநாயகத்தைப் பாதிப்பதை நாங்கள் விரும்பவில்லை. சுய ஒழுங்குபடுத்தல் என்பது இதற்கான ஒரு பதிலே. இன்னொரு முக்கியமான விடயம் ஊடக சுதந்திரம். இது சுய தணிக்கையைத் தடுக்கும். அரசாங்கம் சுதந்திரமாக செயற்படுதலை தனக்கான அச்சுறுத்தலாக கருதப்படக்கூடாது. ஏனெனில், இது மக்களுக்கு தகவல்கள் உரிய விதத்தில் சென்றுசேர்வதை உறுதிப்படுத்துகிறது.*

*கருத்து என்பது சுதந்திரமானது என்ற எண்ணம் மனித உரிமை விழுமியங்களை மதிக்க வேண்டிய தேவையினால் இன்னமும் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களைப் பக்கச் சார்பு என்பது ஏற்றுகொள்ள முடியாது. அது பெண்களுக்கு எதிரானவையாகவும் அல்லது வேறு குழுக்கள் கருத்துக்களுக்கு எதிரானவையாக இருந்தாலும் சரி. இதேவேளை பத்திரிகையாளர்களுக்கு சில வகையான கட்டமைப்பு ஆதரவுகள் தேவை. சட்டத் தரணிகள் சங்கம் போன்று இலங்கையின் சுய ஒழுங்குபடுத்தல் என்பது இந்த பணியாற்றுவதுடன் கருத்துச் சுதந்திரத்திற்கான ஆதரவையும் வழங்குகிறது.*

*- பேராசிரியர் சாவித்திரி குணசேகர கொழும்பு பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் சட்டப் பேராசிரியர். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவில் தெரிவித்த கருத்து.*

சுய ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒழுக்க விதிகள் அர்த்தபூர்வமான வையாகவும் இலகுவானவையாகவும் இலகுவில் அமுல்படுத்தக் கூடியவையாகவும் காணப்பட வேண்டும். தனிப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் தாங்கள் விரும்பினால் உயர்ந்த ஒழுக்கத் தராதரங்களை நிர்ணயிக்கலாம்.

அவர் மேலும் இவ்வாறு தெரிவித்தார். இந்த அமைப்பு முறை நேர்மையான சுய ஒழுங்குபடுத்தலாக காணப்பட வேண்டும். இதில் அரசாங்கம் மற்றும் ஏனைய நலன்கள் கொண்டவர்களிடம் இருந்து இதன் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வலுவான அங்கத்துவம் என்பது அவசியம், நேர்மையைப் பாதுகாப்பதற்கு அவசியம் - வர்த்தகப் போட்டியாளர்களிடம் இருந்து தனிப்பட்ட ஆசிரியர்கள் கடுமையான தீர்ப்புகளை எதிர் கொள்வதைப் பாதுகாப்பதற்கும் இது அவசியம். தண்டனைகள் சமாந்தரமானவையாக காணப்பட வேண்டும் அளவுக்கு அதிகமானவையாக அல்ல.

122 Media groups slam Sirisena for bringing back Press Council. The Sunday Times, 5 July 2015. http://www.sundaytimes.lk/150705/news/media-groups-slam-sirisena-for-bringing-back-press-council-155671.html

1973 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் இலங்கை பத்திரிகை பேரவை என்ற சட்டபூர்வமான அமைப்பை ஏற்படுத்தியது.( SLPC, http://slpc.lk/) ஊடகங்களிற்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு அபராதங்களை விதிப்பதற்கான அதிகாரங்களுடன் அது காணப்பட்டது. கடந்த 40 வருடங்களாக பல பத்திரிகையாளர்கள் அதனை நிராகரித்து வந்துள்ளனர்.

1973ஆம் ஆண்டின் இலக்கம் 5 பத்திரிகை பேரவை சட்டத்தின் கீழ் அரசாங்கம் ஏழு பேரவை உறுப்பினர்களையும் தானே நியமிக்கும். எனினும், அந்தப் பேரவையில் இலங்கையின் பத்திரிகையாளர் சங்கங்களின் பிரதிநிதியொருவரும், பத்திரிகை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நலனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரும் அதில் இடம்பெற்றிருக்க வேண்டும். பத்திரிகை பேரவைக்கு குற்றவாளிகள் என உறுதிசெய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களிற்கு எதிராக சிறைத்தண்டனையை விதிப்பதற்கும், ஏனைய தண்டனைகளை வழங்குவதற்குமான அரை நீதித்துறை அதிகாரங்கள் உள்ளன. (மாவட்ட நீதிமன்றங்களுடன் ஒப்பிடும்போது). மேலும் இந்த சட்டம் சில நிதி, பாதுகாப்பு தகவல்களை வழங்குவதைத் தடைசெய்கின்றது.

2002 வரை பல அரசாங்கங்களின் கீழ் பத்திரிகைபேரவை ஊடகங்களை அச்சுறுத்துவதற்கான ஒரு பொறிமுறையாக செயற்பட்டு வந்தது, 2002 இல் அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருதரப்பு ஆதரவுடனான சட்டத்தின் மூலம் அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. எனினும் குறிப்பிட சட்டம் தொடர்ந்தும் காணப்பட்டதுடன், இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், 2009 யூன் மாதம் ராஜபக்ச அரசாங்கத்தினால் பத்திரிகை பேரவைக்கு மீண்டும் உயிரளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனை ஊடக அமைப்புகளும் ஏனைய சிவில் சமூக அமைப்புகளும் பரவலாக கண்டித்தன. மெதுவான ஆரம்பத்தின் பின்னர் பேரவை 2012 இல் அனைத்து வகை ஊடகங்களையும் கையாள்வதற்கான ஆணையைக்கொண்டது அத்துடன் தீர்ப்புகளை வழங்கத் தொடங் கியது.

2015 இல் ஆட்சிபொறுப்பை ஏற்ற விக்கிரமசிங்க அரசாங்கம், பல

மாதங்களாகப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிக்கவில்லை. இதன் காரணம், 2015 யூலை மாதம் ஜனாதிபதி சிறிசேன திடீரெனப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமித்தவேளை ஊடகத் துறையினர் அதிர்ச்சியடைந்தனர்,


இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை பத்திரிகை சமூகம், இலங்கை பத்திரிகையாசிரியர்கள் சங்கம், உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் என்பன அறிக்கையொன்றை வெளியிட்டன. அவை அந்த அறிக்கையில் ஜனாதிபதியின் செயற்பாடு சட்டவிரோதமானது. அதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை பண்பு கூட பின்பற்றப்படவில்லை எனத் தெரிவித்திருந்தன.

அது மேலும் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது‘‘- அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் பத்திரிகை பேரவையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளமை, செயலற்று இருந்த சட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவது ஊடகவியலாளர்களைக் கைதுசெய்வது உட்பட பல தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது. அச்சு ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அதன் உரிமையாளர்களுக்கு எதிரான மறைமுக மற்றும் நேரடி அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்துவதாக அளிக்கப்பட்ட அவரது தேர்தல் வாக்குறுதியை முற்றாக மாற்றும் செயலாகும். தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைத்து ஊடகப் பணியாளர்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக முன்னெடுக்கப்படும் என அவர் உறுதியளித்தது குறுகிய காலத்திட்டமா அல்லது நீண்ட காலதிட்டமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பத்திரிகை பேரவையை முற்றாகச் செயலிழக்கச்செய்து, அது தொடர்பான சட்டத்தை நீக்குவது ஊடக சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் இன்னமும் காணப்படுகின்றது.




அவந்த ஆடிகலவின் கார்டூன் - விஜய பத்திரிகை




எப் எம் ரேடியோ கேட்பவர்கள் என்ன செய்ய வேண்டும் - தர்ஷன கருணாதிலகவின் கார்டூன்

## இலங்கையின் ஊடக சுய ஒழுங்குபடுத்தலுடன் தொடர்பு பட்டுள்ளவர்களின் கருத்துக்கள் (இந்த ஆயிவிற்காக மேற்கொள்ளப்பட்ட பேட்டிகளில் இருந்து)

''கடந்த காலங்களில் பத்திரிகையாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் கருத்துச் சுதந்திரத்தைக் கோரினால் அதற்கு மறு நாள் அவர்கள் காணாமல் போகும் உண்மையான ஆபத்தை எதிர் கொண்டனர். மக்கள் அச்சுறுத்தப் பட்டனர். உடல் ரீதியான தாக்குதல்கள் வார்த்தைகளால் நிந்திக்கப்படுதல் மற்றும் குரல் எழுப்புவதற்காக கொலைகள். இலங்கையில் தற்போது இந்த நிலை இல்லை.'' ''இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு என்பது இலங்கை பத்திரிகைகளுக்கான சிறந்த ஒழுங்குபடுத்தல் ஏற்பாடு. ஆனால் முறைப்பாடு கிடைத்தால் மாத்திரமே அது செயற்பட முடியும். அதன் தீர்ப்புகள் எவரையும் கட்டுப்படுத்தாது. இந்த ஆணைக் குழு இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். மேலும் ஒலிபரப்பு ஊடகங்களையும் இதன் கீழ் கொண்டு வரவேண்டும். (அல்லது அந்த தொழிற்துறை தனது சுய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.)

-கே. குணராசா தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர்.

''எங்கள் ஊடகங்களின் சில பிரிவினர் பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் வன்முறை போன்றவற்றைப்பற்றி ஒருவித தன்மையுடன் செய்தி வெளியிடுகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் குடும்பத்தினர் குறித்து சிந்திக்காமல் இவ்வாறான செய்திகளை பரபரப்பாக்குகின்றனர். இது டிசம்பர் 2012 புதுடில்லியில் இளம் பெண் சந்தித்த அனுபவத்தை ஊடகங்கள் கையாண்ட விதத்திற்கு முரணானது. இந்தியாவின் நூற்றுக் கணக்கான ஊடகங்கள் பாதிக்கப்பட்டவரின் பெயர் மற்றும் குடும்பத்தினரின் பெயர் போன்ற தகவல்களை வெளியிடுவதில்லை என்ற ஒழுக்கத்தை பின்பற்றினர். ஊடகங்கள் அவருக்கு சூட்டிய நிர்பயா என்ற பெயர் மாத்திரமே எங்களுக்கு தெரிந்திருந்தது. ''ஆனால் இலங்கையில் சில செய்தித் தாள்கள் அனைத்தையும் வெளியிடும். முன் பக்கத்தில் படங்களைக் கூட வெளியிடுவார்கள். உணர்வு பூர்வமான புலனாய்வு செய்தி வெளியிடலுக்கு பதில் சிங்கள மொழி செய்தித் தாள்கள் ஈவிரக்கமற்ற உணர்வை தூண்டக் கூடிய விதத்தில் வன்முறைகளை வெளியிடுகின்றன. ஆனால் ஆங்கில செய்தித் தாள்கள் இதற்கு மாறாக செயற்படுகின்றன.''

- சுமித்திரா ரபுவத்தா - முன்னர் இலங்கை நிர்வாக சேவை தற்போது எழுத்தாளர் வெளியீட்டாளர்.

அரசு, ஊடகங்களின்மீது சட்டங்களையும் விதிமுறைகளையும் திணிப்பதற்குப் பதில் ஊடகங்களுக்குச் சுய ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் முன்வைக்கின்றேன். ஒரு தருணத்தில் (2003) நாங்கள் அரசாங்கத்தின் பத்திரிகை பேரவையைச் செயழலிக்கச் செய்துவிட்டு, செய்திப் பத்திரிகை தொழிற் துறையினர் தங்களுடைய சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பை உருவாக்குவதற்கு அனுமதித்தோம். பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இதன் பின்னரே உருவானது, ஆனால், அது முற்றிலும் சிறப்பானதோர் ஏற்பாடு அல்ல, சில பத்திரிகைகளும், ஊடக நிறுவனங்களும் அதன் ஒரு பகுதியாக மாறவில்லை.

**சமன் அத்தாவுத ஹெட்டி- பிரதமரின் மேலதிகச்செயலாளர்- ஊடகம்**

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு அதிகளவு அதிகாரங்களும் அதிகளவு செயல் எல்யையும் அவசியம்(அனைத்து பத்திரிகைகளினதும்)குறிப்பிட்ட ஒரு பத்திரிகை தொழில்சார் நடைமுறைக் கோவையை மீறிவிட்டதாக நிரூபிக்கப்பட்டால், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்கு அபராதத்தை விதிக்கவேண்டும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் பத்திரிகைக்கும் இடையில் மத்தியஸ்தத்தில் ஈடுபடவேண்டும்- இதன் மூலம் மூன்று பில்லியன் ரூபாய் மானநஸ்ட வழக்குகளை தாக்கல் செய்யப்படும் நிலையைத் தவிர்க்கலாம்,- ஐலன்ட், சண்டே ஐலன்ட். சண்டே டைம்ஸ் ஆகியவற்றின்

ஸ்தாபக ஆசிரியர்.

இலங்கையில் ஊடகங்களுக்கு ஒழுங்குபடுத்தல் முறை அவசியம். முதலில் எங்களுக்கு பத்திரிகைத் துறையில் சில கல்வியும் பயிற்சியும் உள்ள ஊடக உரிமையாளர்களும் அவசியம். தற்போது அனைத்து ஊடக அமைப்புகளும் நிறுவனங்களும் அரசியல் தங்கள் தொழிற்துறையில் தலையீடு செய்வதற்கு அனுமதிக்கின்றனர். இது மாற்றமடையவேண்டும், நாங்கள் பத்திரிகைத் துறையின் தராதரத்தை அதிகரிக்கவேண்டிய தேவையுள்ளது, இதன் மூலம் மேலும் அதிக பொறுப்புள்ள தகவலும் சமநிலையான கருத்துக்களும் ஊடகங்கள் மூலம் வெளியாகமுடியும்.

அதேபோன்று ஊடக உரிமையாளர்கள் ஆசிரியபீட உள்ளடக்கங்களில் தலையிடுவதற்கான சந்தர்ப்பங்களைத் தடுப்பதன் மூலம் நாங்கள் ஆசிரியபீட சுதந்திரத்தை உறுதிசெய்யவேண்டும். ஊடகங்களைச் சுயாதீனமாக கண்காணிக்கவேண்டும்.

சிங்கள மற்றும் தமிழ்மொழி பத்திரிகைகள் எங்கள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகத் தங்களுடைய மத வேறுபாடுகளின் அடிப்படையிலேயே செய்திகளை வெளியிடுகின்றன. இவ்வாறான பக்கச்சார்பான செய்தி அறிக்கையிடலே யுத்தத்தை நீடிக்கச்செய்தது. மோசமாகத்தாக்கியது. சிங்கப்பூரில் நான்கு இனக்குழுக்கள் எந்தவித மோதலும் இன்றி சகவாழ்வு வாழ்கின்றன. ஆனால், எங்களால் அந்த ஐக்கியத்தை ஏற்படுத்தமுடியவில்லை. மொழிரீதியிலான தடைகள் இதற்கு ஒரு காரணம். தமிழ் சிங்கள சமூகத்தினர் மத்தியிலான கலாசார மற்றும் மொழிப் பாலங்களை ஏற்படுத்துவதற்கு எங்கள் மத்தியில் போதியளவு மொழிபெயர்ப்புகள்

இன்னமும் இல்லை.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்-
வடமாகாணசபை முதலமைச்சர்

எங்கள் ஊடகங்களில் வலுவான ஒழுங்குபடுத்தல் முறையை நாங்கள் கொண்டிருக்கவேண்டும்.இதன்மூலம் அரசாங்கம் தலையிடவேண்டிய தேவையில்லாத நிலையை உருவாக்கலாம்,எங்களிடம் 2003 முதல் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உள்ளது, ஆனால் அது இன்னும் வலுவான அமைப்பாகக் காணப்படவில்லை. அது தன்னியலானதாக காணப்படுகின்றமையே அதற்குக் காரணம். அதன் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கடப்பாடு எதுவும் இல்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்கு தனது தவறுகளை திருத்திக்கொள்ளாத ஊடகங்களுக்கு எதிராக அபராதங்களை விதிக்கும் அதிகாரங்கள் கொண்டதாக அல்லது தண்டிக்கும் அதிகாரங்களைக் கொண்டதாக வலுப்படுத்தப்படவேண்டும். மேலும் இலங்கையில் உள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்களுக்கு என முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் பொறிமுறையும், சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பும் அவசியம். 2009 முதல் 2011 வரை அவ்வாறான அமைப்பை ஏற்படுத்துவது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றன, ஆனால், அது நிறைவேறவில்லை-

இலங்கை முஸ்லீம்
மீடியா போரத்துடனான
கலந்துரையாடலின்போது
அமீர்ஹீசைன்- ஊடக
பயிற்றுவிப்பாளர் மற்றும்
ஆலோசகர்,ஜாவீட் முனாவர்-
உதவிபொருளாளர்,
துணைத்தலைவர் தாஹா் முசாமில்
ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊடக நிறுவனமொன்று ஒழுக்கக்கோவைகளை மீறித், தனிநபர் களையோ அல்லது நிறுவனங்களையோ அவதூறு செய்யும்போது நடவடிக்கை எடுப்பதற்கான போதிய அதிகாரம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு உள்ளதா என்ற சந்தேகம் எங்களுக்கு உள்ளது. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை தொடர்ந்தும் கண்காணிக்கவேண்டும், மேலும் ஒழுங்குபடுத்தவேண்டும் என்பது எங்கள் கருத்து.

ஒவ்வோர் ஊடக நிறுவனமும் தனது ஒழுக்ககோவையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். அதனைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஊடக நுகர்வோர் அதனைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து மதிப்பிடலாம். மேலும் ஊடக நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களின் துயரங்கள் குறித்தும், வாசகர்களின் கடிதங்கள் குறித்தும் ஆராய்வதற்கான ஆலாட்சி அதிகாரிகளையும் கொண்டிருக்க வேண்டும்.அந்த மட்டத்திலேயே இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும். - இலங்கை பத்திரிகை சங்கத்தில் இடம்பெற்ற கலநதுரையாடலின்போது(யூன், 8 2015)

இலங்கை பத்திரிகை பேரவை-முடிவடையும் காலத்தை எப்போதோ கடந்து விட்டது?

## 3 08 ஊடகங்கள் சுய ஒழுங்குபடுத்தல் கலாசாரத்தை வெளிப்படுத்த வேண்டும்

# நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மைக்கான தேவைகள்

இலங்கையில் வெளியாகும் பல பத்திரிகைள் தற்போது பதிலளிக்க வேண்டிய உரிமையை அங்கீகரிக்கின்றன, ஆனால் இதனை பிரசுரிப்பது ஆசிரியரின் முடிவை பொறுத்தவிடயம், நடைமுறையில் பதிலளிப்பதற்கான உரிமை 70 வீதம் மதிக்கப்படுவதாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனிநபர் நடவடிக்கைகள் மற்றும் ஆசிரியபீட உள்ளடக்கம் ஆகியவற்றிற்கான தெளிவான ஒழுக்க வழிகாட்டுதல் குறித்த அங்கீகாரமும் ஊடக அமைப்புகள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. சில ஊடக நிறுவனங்கள் தாங்களாக முன்வந்து தங்களிற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளன.

உதாரணத்திற்கு ராவய செய்தித்தாள் தனக்கான சொந்த ஒழுக்க வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது, இது இலங்கை ஆசிரியபீடத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தொழிற்சார் நடைமுறைகள் கோவைகளுடன் ஒப்பிடகூடியது. ஆலாட்சி அதிகாரியை அறிமுகப்படுத்திய முதலாவது ஊடக நிறுவனம் ராவயவே. நிதி நெருக்கடிகள் காரணமாக அதனை அது நிறுத்திய போதிலும் மீள ஏற்படுத்துவது குறித்து சிநதித்து வருகின்றது,

## 3 09

நேர்மை மற்றும் பக்கச் சார்பின்மைக்கான தேவைகளை முன்வைக்கும் வலுவான ஒலிபரப்புக் கோவை.

இலங்கையில் அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்களாலும் பின்பற்றப்படும் கோவை எதுவும் கிடையாது, 2013 இல் ஊடக அமைச்சு ஒலிபரப்பு உரிமங்களிற்கான தராதரங்களை உயர்த்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை சில ஒலிபரப்பாளர்கள் எதிர்த்தனர்,

தனியார் ஒலிபரப்பாளர்கள் செய்திகளை வெளியிடக் கூடாது என்ற ஆரம்பகால கட்டுப்பாடுகள் 1994 இல் நீக்கப்பட்டன, ஆசிரியபீட உள்ளடக்க சமநிலைக்கான உரிமத் தேவைகள் எதுவுமில்லை. தேர்தல் காலங்களில் தேர்தல் ஆணையாளர் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை நேர்மை, சமநிலை மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதிசெய்யுமாறு வழிகாட்டுதல்களை வழங்குவார். இந்த வழிகாட்டுதல்கள் செய்திகள், நடப்பு விவகாரங்கள், கருத்து பரிமாற்ற நிகழ்ச்சிகள், மற்றும் அரசியல்வாதிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களை ஆதரிப்பவர்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு இது பொருந்தும்,

இந்த வழிகாட்டுதல்கள் எப்போதும் பின்பற்றப்படுவதில்லை. உதாரணத்திற்கு 2015 ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட்ட பின்னர், தேர்தல் ஆணையாளர் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கிய போதிலும், அரச ஒலிபரப்பாளர்களால் இவை மீறப்பட்டன, புறக்கணிக்கப்பட்டன. அவர்கள் அப்போதைய ஜனாதிபதியை வெளிப்படையாக ஆதரித்தனர். (தோற்றவர்) மேலும் ஆளும்கட்சி ஏனைய வேட்பாளர்களை அவதூறு செய்வதற்கும் அனுமதித்தனர். தேர்தல் தினத்தன்று தேர்தல் ஆணையாளர் அரச ஒலிபரப்பாளர்கள் பிழையான செய்திகளை வெளியிடுவதைத் தடுப்பதற்காகத் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டியிருந்தது. சில தனியார் ஒலிபரப்பாளர்கள் தங்கள் அரசியல் கூட்டணிகளை வைத்திருந்தனர். எனினும் அவர்கள் ஆகக்குறைந்த அளவில் சமநிலையைப் பேண முயற்சித்தனர், எந்த வேட்பாளரையும் கடுமையாகத் தாக்குவதை அவர்கள் தவிர்த்தனர். (அரச ஊடகங்கள் செயற்பட்டது போல இல்லாமல்)

ஆட்சி முறை தொடர்பில் அரச ஊடகங்கள் செயற்படும் விதத்தை கண்காணிக்கும் 'டிரான்ஸ்பரன்சி இன்டநசனல்' சமீபத்தில் இவ்வாறு பரிந்துரைகளை முன்வைத்திருந்து - ''தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அனைத்து அரச ஊடகநிறுவனங்களும் தேர்தல் ஆணையாளர் அல்லது தேர்தல்

[123] http://documents.gov.lk/Extgzt/2014/PDF/Nov/1890_02/1890_02%20E.pdf

ஆணையகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வரவேண்டும். அரச ஊடக நிறுவனங்களைக் கண்காணிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்கும் வகையில் சட்டங்களில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும், தேர்தல் முறைகேடுகளைத் தடுப்பதற்காக அவற்றை கண்காணித்து வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையாளரிற்கு வழங்கப்பட வேண்டும்.

நடைமுறையில் இது அமுல்படுத்துவதற்கு கடினமான விடயமாக காணப்படும். இது ஒலிபரப்பாளர்களின் ஆசிரியபீட சுதந்திரத்தில் தலையிடும் விடயமாக இது காணப்படவாம். இவ்வாறான-

தேர்தல் சட்டங்களிலும் ஊடகங்கள் தொடர்பான சில ஏற்பாடுகள் இடம்பெற்றிருக்க வேண்டுமு. உதாரணத்திற்கு 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் 117 ஆவது பிரிவில் வேட்பாளர்களின் ஒலிபரப்பு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய ஒலிபரப்பாளர்களிற்கான கடப்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. (உதாரணத்திற்கு அனைத்து வேட்பாளர்களிற்கும் சமமான வானலை நேரங்களை வழங்குதல்)

எனினும் தேர்தல் காலத்தில் அரசியல் கட்சியினதோ அல்லது வேட்பாளர்களினதோ கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களின் அலைவரிசைகள் மற்றும் அளவிற்கோ சட்டரீதியான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. மேலும் அரச ஊடகங்கள் ஆளும் கட்சி வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கு வேறு வழிகளை கண்டுபிடிக்கின்றன. உதாரணமாக பேட்டிகள், தேசிய அபிவிருத்தி சம்பந்தமான முயற்சிகள் மற்றும் விவாதங்கள்.

சில ஊடக நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் உள்ளடக்கங் களுக்கான சொந்த வழிகாட்டுதல்களை உருவாக்கி உள்ளன. அல்லது வானலை நேரத்திற்காகக் கட்டணம் ஒன்றைப் பெற்றுக் கொள்கின்றன.
உதாரணத்திற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தனது நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்காக சொந்தக் கோவை ஒன்றைக் கொண்டுள்ளது. அதேவேளை அரச தொலைக் காட்சி தன்னுடைய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கான சொந்தக் கோவையையும் தொலைக் காட்சி விளம்பரத்திற்காகத் தனியான கோவையையும் கொண்டுள்ளது.

## நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும்

- வர்த்தக விளம்பரததிற்கான ஏதாவது எல்லைகள் உள்ளதா. ஊதாரணத்திற்கு ஓர் ஒலிபரப்பு மணித்தியாலத்திற்கு எத்தனை நிமிடங்கள்.

- சிறுவர் தொடர்பான உள்ளடக்கங்கள் குறித்து ஏதாவது கடப்பாடு உள்ளதா.

BOX 15

## State Media's Conduct During Presidential Election 2015

State media institutions (SLBC, SLRC, ITN Sri Lanka and Lake House) being misused for ruling party propaganda reaches its peak when a key national election is declared. When the last Presidential Election was declared on 20 November 2014, the civil society group Transparency International Sri Lanka (TISL) started monitoring state media to gather evidence of the extent and scale of such misuse.

This was done under TISL's Programme for Protection of Public Resources (PPPR), an initiative by to combat corruption and for the protection of public resources during elections. PPPR seeks to uphold the integrity of the electoral process by ensuring that public resources are not misused and abused for propaganda purposes during the election period, and wherever possible to take preventive action in partnership with the relevant authorities.

"All state-owned and state-controlled media therefore have an important obligation to provide citizens with accurate, impartial and balanced coverage regardless of which political party or parties are in power. It is proper and even necessary for citizens' organizations, political parties and candidates to insist on media fairness, balance and accuracy and to call upon government authorities to manage public media in a way that safeguards citizens' rights to the information they need as voters," TISL said.

TISL/PPPR monitored all state media channels in Sinhala, Tamil and English from 21 November 2014 to 10 January 2015 (including Election Day of 8 January). Both quantitative and qualitative data was collected through primary and secondary sources. Among the factors studies were the number of news items allocated for each candidate; whether such news items exalted or deflated the candidate's image; whether focus was on the main issues and policies of candidates rather than personal qualities; and information on voter education.

Here are some of their key findings that confirm highly partisan conduct of state media:

- There was clear evidence of state media promoting or discrediting a presidential candidate, thus violating the guidelines presented by the Commissioner of Elections.
- News coverage time set aside for the UPFA candidate (the incumbent President) was several times more than the common opposition candidate (who ultimately won).
- Two state owned media institutions, SLRC and the ITN, aired an unprecedented number of advertisements both during peak and off peak hours on behalf of the UPFA candidate (who was the incumbent President), without receiving the due payments.
- During the last few days of the election campaign, PPPR noted 40 commercials being aired in a single hour promoting the UPFA candidate both on ITN and SLRC.
- Clearly violating the guidelines issued by the Commissioner of Elections, SLRC and ITN broadcasted live the final rallies of the UPFA candidate on 4 and 5 January 2015.

**Source:**
Electoral Integrity: A Review of the Abuse of State Resources and Selected Integrity Issues during 2015 Presidential Election in Sri Lanka (TISL, March 2015).
http://www.tisrilanka.org/during-an-election-all-state-media-institutions-should-come-under-election-commission/


3 10 ஒலிபரப்புக் கோவையை வலுவாக அமுல்படுத்தல்.

தொழிற் துறைக்கு பொதுவான கோவை இல்லாததால் அல்லது இவ்வாறான கோவையை அமுல்படுத்துவதற்கு சுயாதீன ஒழுங்குபடுத்தல் அமைப்பு இல்லாததால் இதற்கான தேவை எழவில்லை.

முன்னைய அரசாங்கம் அனைத்து ஊடகங்களுக்குமான ஊடக ஒழுக்காற்றுக் கோவையை தயாரித்தது. எனினும் அதில் காணப்பட்ட ஏற்பாடுகள் மிகவும் ஆபத்தானவை இலங்கையில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள சுதந்திரங்களை மேலும் கட்டுப்படுத்தலாம் என ஊடவியலாளர்களும் சிவில் சமூக குழுக்களும் ஆழ்ந்த கவலையை வெளியிட்டனர். எனினும் இந்தக் கோரிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களுக்கு உறுதி அளித்தார்.

129 Sri Lanka withdraws controversial press code – AFP report dated 23 June 2013. http://bit.ly/1DY74h1

அரசியல்வாதிகள் தொதொலைக்காட்சியை தவறாக பயன்படுத்தல் - டப். ஆர். விஜேசோம அவர்களின் கார்டூன்






அவந்த ஆடிகலவின் கார்டூன் - டெய்லி மிரர் - 2 டிசம்பர் 2014

# உ

## ஊடகங்கள் மீது பொதுமக்களின் நம்பிக்கையின் அளவு

**311 பொதுமக்கள் ஊடகங்கள் மீது உயர்ந்த பட்ச நம்பிக்கையை வெளிப்படுத்தல்.**

இலங்கை மக்கள் ஊடகங்களை எவ்வளவு தூரம் நம்புகின்றனர் என்பதை உறுதி செய்வதற்கான பாரிய ஆய்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த விடயம் குறித்து புரிந்து கொள்வதற்கு ஆராய்ச்சிகள் அவசியம்.

2010 ஆம் ஆண்டு காலநிலை மாற்றம் குறித்த மக்களின் அபிப்பிராயங்கள் பற்றி நாடளாவிய ரீதியில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆயிரம் பேர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்து ஆய்வில் நடப்பு விவகாரம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு பொது ஊடகங்களே முக்கிய சேவையாற்றுவது தெரிய வந்துள்ளது. (தொலைக் காட்சி, வானொலி அதன் பின் பத்திரிகை.) எந்தத் தகவல் மூலத்தை அவர்கள் நம்புகின்றனர் என்ற கேள்விக்கு அதிகளவானவர்கள் தொலைக்காட்சி, இணையம், வானொலி மற்றும் பத்திரிகைகளைக் குறிப்பிட்டனர்.

[130] Survey on Public Perceptions on Climate Change in Sri Lanka, 2010. Conducted for Ministry of Environment. http://www.academia.edu/2921623/Survey_on_Public_Perceptions_of_Climate_Change_in_Sri_Lanka_2010

**3 12** ஊடக அமைப்புகள் தங்கள் பணி குறித்த பொதுமக்களின் எண்ணங்களுக்குப் பதிலளிக்க வேண்டும்.

அரச ஒலிபரப்பாளர்கள் வரலாற்று ரீதியாக பார்வையாளர்கள் குறித்த ஆய்வுப் பிரிவுகளைக் கொண்டுள்ளனர். இந்தப் பிரிவு உள்ளடக்கம் குறித்த மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு ஆய்வுகளை மேற்கொள்கிறன்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத் தாபனம் இவ்வாறான பிரிவுகளைக் கொண்டுள்ளது. எனினும் இந்தப் பிரிவுகள் மூலம் தெரிய வந்துள்ள விடயங்களை நிகழ்ச்சிகளைத் திட்டமிடுபவர்களும் முகாமைத்துவமும் மக்களுடன் தங்கள் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு பயன்படுத்துகின்றனரா எனத் தெளிவாகத் தெரியவில்லை.

சில தனியார் ஒலிபரப்பாளர்கள் பொதுமக்களை சென்று சந்திக்கும் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். உதாரணத்திற்குப் பாடசாலைகளுக்கு பிரபலமான சந்தைகளுக்குச் சென்று தங்களுடைய பணி குறித்து கலந்துரையாடுவது. ஆனால், இவர்கள் பொதுமக்களின் மனோநிலையை அறிவதற்கான தீவிரமான முயற்சிகள் போலத் தோன்றவில்லை.

உள

# பத்திரிகையாளனின் பாதுகாப்பு

## 313 பத்திரிகையாளர்கள் இணைக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் மற்றும் ஊடக அமைப்புகள் தங்கள் தொழில் நடவடிக்கைகளைப் பாதுகாப்பாக மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் ஊடகப் பணியாளர்கள் மற்றும் ஊடக அமைப்புகள் எதிர் கொள்ளும் சட்டத்திற்கு அப்பாற்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தங்களுடைய தொழிலை அச்சமின்றி மேற்கொள்வதற்கான அவர்களுடைய உரிமை கட்டுப்படுத்தப்படுகிறது. முன்னைய அரசாங்கங்கள் ஊடகங்களைத் தொடர்ச்சியாக எப்படி ஆபத்தானவையாக கருதின என்ற பாரிய சூழ்நிலை அமைவின் அடிப்படையில் இதனை வைத்து ஆராய வேண்டும். மேலும் சமூகத்தில் சகிப்புத் தன்மை இன்மையும் தீவிரவாதமும் அதிகரித்து வருவதால், கருத்துக்கள் குறித்த வெளிப்படையான திறந்த விவாதங்கள் பாதிக்கப்படுகின்றன. விவாதத்திற்கான தளம் மற்றும் செய்தியை காவிச் செல்பவர் என்ற அடிப்படையில் ஊடகம் பல முனைகளில் இருந்து அழுத்தத்தைச் சந்திக்கிறது. ''வீதி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் குறித்த செய்திகளை சேகரிக்கும்போது பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது, கண்முடித்தனமான கைது மற்றும் தடுத்துவைத்தல், வாய் மற்றும் உடல்ரீதியான தாக்குதல்கள், உபகரணங்களைக் கைப்பற்றி அழித்தல், மற்றும் படுகொலைகள் இடம் பெறும் 16 நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுவதாக கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பது தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் 2012 இல் தெரிவித்திருந்தார்.

**Journalists as Human Rights Defenders**

"…journalists have a broad mandate to gather information and disseminate it to a public audience through print, radio or television media. In their general role, journalists are not human rights defenders. However, many journalists do act as defenders, for example when they report on human rights abuses and bear witness to acts that they have seen."

**- Excerpted from 'Who Are Human Rights Defenders?' by Office of the UN Human Rights Commissioner**
http://www.ohchr.org/EN/Issues/SRHRDefenders/Pages/Defender.aspx

131 http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session20/A-HRC-20-17_en.pdf

2014 இல் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு உலகில் பத்திரிகையாளர்களிற்கு ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இலங்கையை நான்காவதாக சேர்த்திருந்தது, (ஈராக், சோமாலியா, மற்றும் ஆப்கானிஸ்தானிற்கு பின்னர்) பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டு கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுவது குறித்த தனது சர்வதேச பட்டியலிலேயே அது அவ்வாறு குறிப்பிட்டிருந்தது, பத்திரிகையாளர் பாதுகாப்பதற்கான குழு இவ்வாறு தெரிவித்திருந்தது ‘‘மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தனது தலைமைத்துவத்தின் (பிரதமராக, பின்னர் ஜனாதிபதியாக) கீழ் கொல்லப்பட்ட ஒன்பது பத்திரிகையாளர்கள் குறித்து காணப்படும் தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படுதலிற்கு தீர்வைக்காண்பதற்கான அரசியல் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.”119

2014 ஒக்டோபரில் வெளியிட்ட ‘‘நீதிக்கான வீதி” என்ற அறிக்கையில் பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு 2004 முதல் 2013 வரை இலங்கையில் தங்களின் பணிக்காக கொல்லப்பட்ட ஒன்பது பத்திரிகையாளர்கள் குறித்த விபரங்களை வெளியிட்டிருந்தது. இவை குறித்து உரியவிதத்தில் விசாரணைகள் இடம்பெறவில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை, இது தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் கலாச்சாரத்திற்கு வழிவகுத்தது,

2010 ஜனவரியில் கருத்துச் சித்திர கலைஞரும் வெப்தள பத்திரிகையாளருமான பிரகீத் எக்னலிகொட காணாமற்போன விடயம் சர்வதேச அளவில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலும், அரசாங்கத்தினால் எந்தவித திருப்தியளிக்ககூடிய விளக்கமும் முன்வைக்கப்படவில்லை, உரிய விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

தொடர்ச்சியான துன்புறுத்தல்கள் மற்றும் இழிவுபடுத்தப்படுவதன் காரணமாக பல பத்திரிகையாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேறினர். தொடர்ந்தும் ஊடக பணியில் ஈடுபட்டவர்கள் முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகள், மக்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாம்கள் மற்றும் வடகிழக்கில் இடம்பெறும் மீள்குடியேற்றம் குறித்து செய்திகளை சேகரிப்பதில் நெருக்கடிகளைச் சந்தித்தனர். 2013 இல் எப்படி பல தடவைகள் வெளிநாட்டு செய்திக்குழுக்கள் வடக்கில்

132 https://cpj.org/reports/2014/04/impunity-index-getting-away-with-murder.php

133 https://cpj.org/reports/2014/10/the-road-to-justice-appendix1-impunity.php

134 http://www.ifj.org/nc/news-single-view/backpid/33/article/the-freedom-frontier-south-asia-press-freedom-report-2014-15-launched/

செய்திசேகரிக்காமல் தடுக்கப்பட்டன என்பது குறித்து ஃபீறிடம் ஓவ் த பிரெஸ் 2014 அறிக்கை தெரிவித்துள்ளது.இந்த கட்டுப்பாடுகள் ஜனவரி தேர்தலிற்குப் பின்னர் குறைவடைந்துள்ளன. எனினும் வடகிழக்கில் பணியாற்றும் உள்ளூர் செய்தியாளர்கள் தொடர்ந்தும் சட்டஅமுலாக்கல் அதிகாரிகளிடமிருந்து பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இராணுவத்தினர் மற்றும் துணைப்படையினரிடமிருந்து

இலங்கையில் அதிகளவு பாதிக்கப்பட்ட ஊடக அமைப்புகளில் ஒன்றாக தனியாரிற்கு சொந்தமான உதயன் தமிழ் பத்திரிகை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட இந்தப் பத்திரிகை வடக்கில் அதிகளவு விற்பனையாகின்றது.1987 முதல் 2014 வரை அந்த பத்திரிகையின் பணியாளர்களும் பணிமனையும் பல தாக்குதல்களை சந்தித்துள்ளது,

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் 2014-15 தென்னாசிய பத்திரிகை சுதந்திர அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகின்றது- ''இலங்கையின் நீண்ட கால ஊடக ஒடுக்குமுறை வரலாற்றில்,உதயன் பல தாக்குதல்களிற்கு உள்ளாகியுள்ளது. யுத்தம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பவற்றில் போரில் ஊடகங்கள் மீதான ஒடுக்கமுறை அதிகரித்த கடந்த 10 வருடங்களிலும் உதயன் மீதான தாக்குதல் அதிகரித்தே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் வடபகுதியில் ஊடகங்களை ஒடுக்குவதற்கும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்குமாக பல கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னர் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்களின் நிலை மற்றும் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் காணப்படும் பிரச்சினைகள் குறித்த விபரங்கள் வெளிவருவதை தடுப்பதற்காக கருத்துக்களைக் கொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வடபகுதி பத்திரிகையாளர்கள் ஒளிந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர், பயங்கரவாதிகள்போன்று அச்சறுத்தப்பட்டனர்.''

பொலிஸார் அல்லது இராணுவத்தினருடன் மக்கள் மோதும் செய்திகள் குறித்து செய்திவெளியிடும் பத்திரிகையாளர்கள் விசேடமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். உதாரணத்திற்கு 2013 ஆகஸ்ட் முதலாம் திகதி கம்பஹாவின் வெலிவேரியவைச் சேர்ந்த மக்கள் தங்கள் நிலத்தடி நீரை

135 http://en.rsf.org/sri-lanka-soldiers-attack-journalists-05-08-2013,45019.html

136 http://www.amnesty.org.uk/write-rights-prageeth-eknaligoda-sri-lanka#.VUL86_DkqSo

137 http://www.theguardian.com/world/2016/jan/29/sri-lankas-missing-thousands-one-womans-six-year-fight-to-find-her-husband



பிரகீத் எக்னலிகொட அவர்கள் சுவரொட்டி நீதி கோரியமை - 24 டிசம்பர் 2010

அசுத்தப்படுத்தும் தொழிற்சாலையொன்றிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர், அரசாங்கம் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக கண்மூடித்தனமான பலத்தை பயன்படுத்தியது, பொதுமக்களைக் கொலை செய்ததுடன் காயப்படுத்தியது, இந்த சம்பவங்கள் குறித்து செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர், படையினரால் தாக்கப்பட்டனர்.123 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரச்சார காலங்களில் ஊடகசுதந்திர அமைப்புகளும், பத்திரிகையாளர்களும் ஊடக சுதந்திரம், ஊடக சுதந்திரத்தை ஒடுக்குபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரத்தை முடிவிற்கு கொண்டுவருதல் தொடர்பிலான உறுதி மொழிகளைப் பெறுவதற்கான அவருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். சட்ட, நிர்வாக மற்றும் ஏனைய சீர்திருத்தங்கள் ஊடாக இந்த வாக்குறுதிகளைப் புதிய அரசாங்கம் நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஆவலுடன் காத்துள்ளனர்.

139 http://www.theguardian.com/world/2015/jan/10/sri-lanka-president-maithripala-sirisena-promise-change

http://www.reuters.com/article/2015/01/11/us-sri-lanka-rights-media-idUSKBN0KK0G020150111

BOX 16

# How Self-censorship Corrodes Democracy and Hampers Reconciliation

Self-censorship occurs when journalists on their own choose not to publish certain information or opinions. Journalists resort to self-censorship because they are fearful of what could happen -- being slapped with crippling lawsuits, being deprived of significant advertising, being castigated by a powerful section of society, injury to themselves and/or families, or (in the worst case) death.

Journalists and media organisations in Sri Lanka have self-censored their work for many years, out of fear of (or deference to) politicians, military, clergy and business interests. The practice reached unprecedented heights during the last few years of the civil war and its aftermath.

Clare Boronow, a postgraduate law student at University of Virginia School of Law, studied the phenomenon in 2012. Her interviews with many journalists, editors, activists and lawyers revealed "a pervasive culture of fear-induced self-censorship among the Sri Lankan media that prevents the full and open discussion of the Government and the recent war".

In her resulting paper, she noted: "It is clear, therefore, that despite its express guarantee of freedom of expression, Sri Lanka's Constitution is failing to protect that right in practice."

She added: "While most of the consequences of State violations of human rights are visible, self-censorship is particularly invidious because it is invisible and its effects are unquantifiable. By arbitrarily arresting and detaining one journalist for criticizing the government, the State may silence ten others. The rights of the detained journalist to freedom of expression and against arbitrary arrest and detention have clearly been directly violated. But, although the government has also violated the right to freedom of expression of the ten other journalists who are intimidated into silence, because that intimidation is indirect, it is much harder to prove…Thus, they are likely to take the threat to heart and remain silent, which means both that the violation of their freedom of expression goes undetected and the role of the media as watchdog is undermined."

In her view, while violations of freedom of expression and the resulting self-censorship can impair the democratic process in every nation, they are particularly dangerous in Sri Lanka. The country is only just beginning to recover from nearly three decades of war. Although the LTTE has been defeated, the ethnic tensions that fueled the war remain. By silencing public discussion of the war and the Rajapaksa administration, she argued, "the Government is hindering the reconciliation and reform necessary for Sri Lanka to move forward to a sustainable peace."

**Source: Silencing the Media in Sri Lanka: How the Sri Lankan Constitution Fuels Self-Censorship and Hinders Reconciliation**
http://www.vjil.org/assets/pdfs/vol53/Boronow-Finalized-v1.pdf

# 3.14 பாதுகாப்பற்ற சூழல் காரணமாக ஊடக நடவடிக்கைகள் பாதிக்கப்படாமலிருத்தல்

அச்சறுத்தல்கள் மற்றும் உடல் ரீதியான தாக்குதல்கள் மற்றும் வன்முறைகள் இலங்கையின் அனைத்து பத்திரிகையாளர்கள் மத்தியிலும் பரந்துபட்ட சுய தணிக்கை பின்பற்றப்படுவதற்கு வழிவகுத்துள்ளன.

குறிப்பிடத்தக்க பத்திரிகையாளர்கள் நாடுகடந்து வாழ்வதற்கு அச்சுறுத்தலும், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலுமே காரணமாக அமைந்துள்ளது. 2014 வரை வெளிநாடுகளிற்கு பத்திரிகையாளர்கள் தப்பிச் செல்லும் முக்கிய நாடுகளில ஒன்றாக இலங்கை காணப்பட்டது.

பீறிடம் ஹவுஸ் தனது பீறிடம் ஒவ் பிரெஸ் 2014 அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது- ''பெருமளவு பத்திரிகையாளர்களும், ஊடக செயற்பாட்டாளர்களும் நாடுகடந்து வாழ்கின்றனர், இதன் காரணமாக இந்த தொழில் துறையினர் தங்களுடைய மிகவும் அனுபவமிக்க பத்திரிகையாளர்கள் இல்லாத நிலையில் காணப்படுகின்றது.''

2008 முதல் 2010 வரையான காலப்பகுதியில் பத்திரிகை சுதந்திர செயற்பாட்டாளர்கள் உட்பட 55 பத்திரிகையாளர்கள் இலங்கையில் இருந்து பாதுகாப்பு அச்சம் காரணமாக தப்பியோடியுள்ளதாக எல்லைகள் அற்ற நிருபர்கள் அமைப்பு 2010 இல் தெரிவித்தது, ''எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு இலங்கையின் நிலவரம் குறித்து பல்வேறுபட்ட சுதந்திரமான செய்தி வெளியிடலைத் தடுப்பதற்கு புதிய வகையிலான தணிக்கைகள் மற்றும் தடைகளைப் பயன்படுத்துவதை கண்டிக்கின்றது, உடல்ரீதியான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் சிறையில் அடைக்கப்படுதல் போன்றவற்றின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம், ஆனால் அதிகாரிகள் உண்மையான ஆசிரியபீட சுதந்திரத்தின் வருகையை தடுக்கின்றனர் என்பது கவலையளிக்கின்றது.''

இலங்கையில் இருந்து வெளியேறிய பத்திரிகையாளர்கள் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர், அமெரிக்கா மற்றும் சில ஆசிய நாடுகளிலும் அவர்கள் காணப்படுகின்றனர். (குறிப்பாக சுவிட்சர்லாந்து, மற்றும் பிரிட்டன்) சிலர் பல்வகைப்பட்ட ஊடக பணியில் ஈடுபட்டுள்ளனர், ஏனையவர்கள் ஏற்கனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட புலம் பெயர் ஊடகங்களிற்காக பணியாற்றுகின்றனர். சிலர் தங்கள் சொந்த இணையத்தினைத் தனியாகவும் கூட்டாகவும் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து வெளியேறி ஐரோப்பாவில் வாழும் பத்திரிகையாளர்கள் குழுவொன்று 2009 இல் இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள்

என்ற அமைப்பை ஆரம்பித்தது. (ஜேடிஎஸ்) 2012 ஆண்டளவில் 30 பத்திரிகையாளர்கள் அந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர், அவர்களுடைய புளொக் மனித உரிமைகள் மற்றும் பத்திரிகையாளர்கள் சுதந்திரம் பற்றி பேசுகின்றது,. நோர்வேயின் ஒலிபரப்பு ஊடகவியலாளர் பீட்டே ஆர்னெஸ்டெட்டின் மௌனமாக்கப்பட்ட குரல்கள் என்ற விவரணச்சித்திரம் இலங்கையிலிருந்து நாடுகடந்து வாழும் பத்திரிகையாளர்கள் எவ்வாறான சூழலில் வாழ்கின்றனர், வேலை பார்க்கின்றனர் என்பதை வெளிப்படுத்தியதுடன், அவர்கள் குறித்து மேலும் தெரியவருவதற்கும் உதவியது, அந்த விவரணச்சித்திரம் நாடுகடந்து வாழும் நான்கு ஊடகவியலாளர்கள் குறித்து குறிப்பிட்டிருந்தது - சொனாலி அமரசிங்க, பாசனா அபயவர்த்தன, சர்மிலா லோகேஸ்வரம் மற்றும் லோகீசன்.

“ நாடுகடந்து வாழும் பத்திரிகையாளர்களும், புலம்பெயர் குழுக்களும் மேற்குலகின் ஊடகங்களுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன, அதன் மூலம் அவர்களால் இலங்கை அரசாங்கத்தை அம்பலப்படுத்த முடிகின்றது. இந்தக் குழுவினர் பிரிட்டனில் அதிகளவில் செயற்படுவதால் அவர்களால் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்கும் விடயங்களைக் கொண்டுவர முடிகின்றது, இந்த முயற்சிகள் இலங்கை அரசாங்கத்திற்குக் கடும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளன என இலங்கையில் யுத்தத்திற்கு பிந்திய சூழலில் ஊடக சுதந்திரம் நல்லிணக்கத்தின் மீதான அதன் தாக்கம் குறித்து ஆராய்ந்த பிபிசியின் செய்தியாளர் சுவாமிநாதன் நடராஜா 2012இல் எழுதினார்-.

2015 நடுப்பகுதியில் 2005 முதல் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வோம் என புதிய ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டார், பத்திரிகை துறை செழிப்பதற்கான சூழல் உருவாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார், நாடு கடந்து வாழும் அனைத்து பத்திரிகையாளர் களையும் இலங்கைக்கு மீளத் திரும்பி இங்கு பத்திரிகைப் பணியில் ஈடுபடுமாறு அவர் அழைப்பு விடுத்தார் ஆனால் இதுவரை மிகக் குறைவானவர்களே திரும்பியுள்ளனர்.



**Police investigate scene of attack of privately owned Sirasa TV and radio network which took place on 6 January 2009 - Photo Ishara S. Kodikara from AFP**




இலங்கை ஊடகங்களில் பத்திரிகையாளர்களின் எதிர்ப்புத் தாக்குதல் - கொழும்பு வர்த்தமானி




ஊடகங்களின் சுதந்திரத்துக்காக பத்திரிகையாளர்களின் எதிர்ப்பு - கோட்டை புகையிரத நிலையம், கொழும்பு - 23 நவம்பர் 2007

# பரிந்துரை சேகரிப்பு

## பரிந்துரைகள

1. அரசாங்கம் உரிய கொள்கைகள், விதிமுறைகள், மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் ஊடக பன்முகதன்மையை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் அங்கவீனர்கள், சிறு பான்மையினத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக இதனை உள்வாங்கும் ஊடக கொள்கைகள், ஒலிபரப்பாளர்களிற்கான உரிமங்களிற்கான நிபந்தனைகள், ஒலிபரப்பு துறையில் பல்வகைமையை உருவாக்கும் சுயாதீன ஒழுங்குபடுத்துனர்கள், மூன்று அடுக்கு ஒலிபரப்பு முறையை அங்கீகரிக்கும் சட்டங்கள், மற்றும் சுயாதீன தயாரிப்பாளர்களிற்கு நிதிவசதிகளை செய்வதன் மூலம் உள்ளடக்கத்தில் பல்வகைதன்மையை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம்.

2. அரசாங்கம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் ஒலிபரப்பு ஊடகங்களை (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஐடிஎன்) அரச தலையீடுகள் எதுவும் இன்றி மக்களின் நலன்களிற்கு தீர்வு காண்பதற்காக, உண்மையான பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றுவதற்கான சட்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். பொதுச் சேவை ஒலிபரப்புகள் அரசாங்கத்திடம் இருந்து சுதந்திரமாக காணப்படுவதற்கான சட்டரீதியான உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும், ஆட்சி சபைகளை நியமிப்பது உட்பட. இது புதிய சட்டம் மூலம் உத்தியோக பூர்வமானதாக்கப்பட வேண்டும், அந்த சட்டம் பொதுமக்களின் நலன்களிற்கு சேவையாற்றுவதற்கான பொதுச் சேவை ஒலிபரப்புகளை உருவாக்குவதற்கான தெளிவான ஆணைகளைக் கொண்டிருக்க வேண்டும், இந்த சட்டமூலத்தின் நகல்வடிவை தயாரிக்கும் போது ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் மாதிரிகளை பரிசீலிக்க வேண்டும்.

3. அரசாங்கமும் ஊடக தொழிற்துறையும் இணைந்து பொதுச்சேவை ஒலிபரப்புகளிற்கு தொடர்ச்சியான நிதி கிடைப்பதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும், இந்த பொறிமுறைகள் பொதுச்சேவை ஒலிபரப்புகளின் ஆசிரியபீட வேலைகளில் எந்த வித அரசியல் தலையீடுகளிற்கும் இடமளிக்க கூடாது, இந்த அமைப்புகளின் ஆசிரிய பீட சுதந்திரம் சட்டம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டும்,

## பரிந்துரைகள

4. அரசாங்கத்திற்கு சொந்தமான பத்திரிகை நிறுவனங்களின் எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்கு பொது கலந்தாய்வு அவசியம். (லேக் ஹவுஸ்- ஏன்சிஎல்) குறித்து அனைத்து சாத்தியப்பாடுகள் குறித்தும், அவற்றை பொதுச் சேவை ஊடகங்களாக மாற்றுவது, முழுமையாக தனியார் மயப்படுத்துவது உரிமையை மேலும் பரந்துபட்டதாக்குவது உட்படப பரிசீலிக்க வேண்டும்.

5. ஊடக பன்முகதன்மை என்ற எண்ணக்கருத்தை ஊடக தொழிற்துறை அங்கீகரிக்க வேண்டும். ஆசிரியபீட, முகாமைத்துவ மற்றும் தனிப்பட்ட ரீதியில் அதற்கான அர்ப்பணிப்பை வழங்க வேண்டும். உதாரணத்திற்கு தரத்தின் அடிப்படையில் ஆட்களைத் தெரிவு செய்யும் அதேவேளை தங்கள் பணியாளர்கள் இலங்கையின் மத மற்றும் இன பல்வகைமையை வெளிப்படுத்தும் விதத்தில் இருப்பது குறித்து நிறுவனங்கள் சிந்திக்க வேண்டும்,

6. 1973 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டம் நீக்கப்பட வேண்டும், மற்றும் அரசாங்கத்தின் கருவியான இலங்கை பத்திரிகை பேரவை கைவிடப்பட வேண்டும்.

7. 2003 ஆம் ஆண்டு முதல் ஊடக முறைப்பாட்டு பொறிமுறையாக விளங்கும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் சுதந்திரத்தை பத்திரிகை தொழில் துறையும், பத்திரிகை தொழில் துறையினரும் பலப்படுத்த வேண்டும். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்கழுவின் முறைப்பாடு நடைமுறைகளில் அச்சு ஊடகத்தின் அதிகரித்த பங்களிப்பை எவ்வாறு ஊக்குவிப்பது மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை எவ்வாறு உள்வாங்கலாம் என்பது குறித்து இதனுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் தேசிய கலந்தாய்வு ஒன்று இடம்பெற வேண்டும்,

8. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் தீர்ப்புகள் அமுல் படுத்தப்படுவதை வலுப்படுத்துவதற்கான வழிவகைள் குறித்து ஆராய்வதற்காக உடன் தொழிற் துறையினா் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும, (தறபோது

அவை சுயவிருப்பின் அடிப்படையிலானவையாகவும், சில ஊடகங்களால் அலட்சியப் படுத்தப்படுபவையாகவும் காணப்படுகின்றன). அரசாங்கமும் ஊடகங்களும் இணைந்த ஒரு ஒழுங்குபடுத்தல் முறையை எவ்வாறு முன்னெடுப்பது அது சாத்தியமா என்பது குறித்து ஆராய வேண்டும், இது இந்தோனேசியாவில் சாத்தியமாகியுள்ளது. இந்த நிறுவனம் 1999ஆம் ஆண்டின் சட்ட பிரமாணத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டது,. இதன் உறுப்பினர்கள் ஊடகங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது பிரமுகர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர், அதற்கான நிதி அரசாங்கம், ஊடக தொழிற்துறை மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கின்றது.

9. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனது ஆதரித்துப் பேசும் மற்றும் மக்களிற்கு அறிவூட்டும் நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும், இலங்கை பத்திரிகையாசிரியர் சங்கத்தின் தொழிற்சார் செயற்பாட்டு கோவையை ஊக்குவிப்பது உட்பட,இது ஊடகங்களின் பொறுப்புணர்வுடனான நடவடிக்கைகளிற்கான ஒழுக்காற்று வரையமைப்பை வழங்குகின்றது. ஊடக அறிவு மற்றும் ஊடக நெறிமுறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளிற்கு அபிவிருத்தி உதவி வழங்கும் சமூகத்தினர் ஆதரவை வழங்க வேண்டும்.

10. ஊடக அமைச்சும் ஒலிபரப்பு தொழிற் துறையினரும் இணைந்து கூட்டாக இலங்கையின் அனைத்து ஒலிபரப்பு ஊடகங்களிற்குமான தொழில்சார் வழிகாட்டுதல்களையும், ஒழுக்காற்று தராதரங்களையும் ஊவருவாக்கி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒலிபரப்பு துறை இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் கீழ் வரவேண்டுமா என்பது குறித்த கலந்தாலோசகைள் இடம்பெற வேண்டும் (பொது முறைப்பாட்டு தேவைகளிற்காக) அல்லது அவர்கள் ஏற்கனவே இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டள்ள சுயாதீன ஒழுங்குபடுத்தினரின் கீழ் வரவேண்டுமா ? இவ்வாறான ஒழுக்காற்று தராதரங்கள் அரசியல் விவகாரங்கள், மற்றும் பொதுமக்களின் கரிசனைக்குரிய விடயங்களில் அனைத்து ஒலிபரப்பாளர்களும்

## பரிந்துரைகள

சமநிலையுடனும், பக்கச்சார்பற்ற விதத்திலும் செயற்பட வேண்டும் என்பதற்கான கடப்பாடுகளை கொண்டுடிருக்க வேண்டும், அவர்கள் பொதுச் சொத்தை பயன்படுத்துவதை கருத்தில் கொள்ளும் போது.

11. அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களிற்கான ஒழுக்காற்று கோவை தேர்தல்கால கோவை மற்றும் தேர்தல் சமயத்தில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்து ஆராய்வதாக காணப்பட வேண்டும். பக்கசார்பற்ற தன்மை மற்றும் நேர்மை ஆகியவற்றிற்கான தேவை குறித்தும் அது கருத்திலெடுக்க வேண்டும். ஒவ்வொரு தேர்தல் காலத்தின்போதும் தேர்தல் ஆணையகம் விடுக்கும் வழி காட்டுதல்களை கருத்தில் எடுப்பவையாக அவை காணப்பட வேண்டும்,

12. பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள், அச்சகங்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களிற்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க வேண்டும். சகல குற்றவாளிகளும் பொறுப்புக் கூறுவதையும், தண்டிக்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

13. ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றிற்கான பொறுப்பில் இருந்து விடுவிக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட அனைத்து சட்டங்களும் மாற்றங்களிற்கு உட்படுத்தப்பட வேண்டும். மனித உரிமை மீறல்கள் குறித்த உண்மைகள் நிருபிக்கப்பட வேண்டும், பகிரங்கப்படுத்த வேண்டும் மற்றும் மனித உரிமை மீறல்களிற்கு காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்பதை உறுதிப் படுத்துவதற்காக இதனை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு

# 4

## கருத்துச் சுதந்திரம், பன்முகதன்மை மற்றும் பல்வகைமையை உறுதிப்படுத்தும் நிறுவனங்களின் தொழிற்சார் திறனை அதிகரித்தல், மற்றும் ஆதரவளித்தல்

## முக்கிய குறிகாட்டிகள்

### A தொழில்சார் ஊடக பயிற்சி கிடைத்தல்

4.1 ஊடக தொழிலில் உள்ளவர்கள் தங்களிற்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடிதல்

4.2 ஊடக முகாமையாளர்கள், வர்த்தக முகாமையாளர்கள் உட்பட தங்களிற்கு பொருத்தமான தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்,

4.3 ஊடக தொழிலில் உள்ளவர்கள் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி குறிந்து அறிந்து கொள்வதற்கான பயிற்சி பி-ஊடக நடைமுறை தொடர்பான கல்விபடிப்புகள் கிடைப்பது

4.4 பல தரப்பட்ட மாணவர்களிற்கு கல்விபடிப்புகள் கிடைப்பது

4.5 கல்விபடிப்புகள் மாணவர்களிற்கு ஜனநாயகம் மற்றும்அபிவிருத்தி தொடர்பான திறன்கள் மற்றும் அறிவுகளை வழங்குதல்

### B தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளின் பிரசன்னம்

4.6 ஊடக பணியாளர்களிற்கு சுதந்திரமான தொழிற் சங்கங்களில் இணைந்து தங்கள் உரிமைகளை பயன்படுத்துதற்கான உரிமை

4.7 தொழிற் சங்கங்களும், தொழில்சார் அமைப்புகளும் தங்கள் தொழில்சார்பில் குரல் கொடுத்தல்

### C சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

4.8 சிவில்சமூக அமைப்புகள் ஊடகங்களை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் கண்காணித்தல்.

4.9 கருத்துச்சுதந்திர விடயங்களில் சிவில்சமூக அமைப்புகள் குரல் எழுப்ப வேண்டும்

4.10 சிவில் அமைப்புகள் சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுதல்

‘‘நாங்கள் ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்புணர்வு குறித்த செயலமர்வு இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் சுதந்திர ஊடக இயக்கம் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் இலங்கை பத்திரிகை சங்கம் ஆகியவை செய்திப் பத்திரிகைகளுக்கான சர்வதேச சங்கம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகிவற்றுடன் இணைந்து முன்னெடுத்ததை வரவேற்கின்றோம். இதன் மூலம் ஊடகங்களின் பல்வேறு பிரிவினர் மத்தியில் காணப்படும் ஒத்துழைப்பு குறித்த உயர்ந்த உணர்வை வெளிப்படுத்தி உள்ளது.”

‘‘பொதுவாக கருத்துச் சுதந்திரத்தையும் குறிப்பாக ஊடக சுதந்திரத்தையும் ஊக்குவிப்பதற்கான எங்கள் முயற்சியில் மேலும் ஒத்துழைப்பையும் ஐக்கியத்தையும் வழங்குவோம் என்ற எங்கள் அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்துவேம். இதன் காரணமாக நாங்கள் ஊடக அமைப்புகளை இந்தப் பொதுவான போக்கை சாத்தியமாக்குவதற்காக கருத்து வேறுபாடுகள் மற்றும் செயற்படும் விதத்தில் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றை கைவிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இது ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்த கொழும்பு பிரகடனத்தில் இறுதி வார்த்தைகள், நான்கு ஊடகம் சார்ந்த தேசிய அமைப்புகளான இலங்கை பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை பத்திரிகை சமூகம் மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியன 1988 ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற மாநாட்டின் இறுதியில் இதனைத் தெரிவித்திருந்தன.

இந்த ஆவணம் ஊடக பட்டயமாக மாறியது. இதனை அடிப்படையாக வைத்தே நாட்டின் வெளியீட்டாளர்களும் ஆசிரியர்களும் பத்திரிகையாளர்களும் ஊடக செயற்பாட்டாளர்களும் அதிகளவு ஊடக சுதந்திரத்திற்கான தங்கள் பிரசாரங்களை முன்னெடுத்தனர். அதே வேளை உயர்ந்த மட்ட தொழில் சார் பொறுப்புணர்வை வளர்த்தனர்.132

கொழும்பு பிரகடனத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாக ஊடகத் தொழிற்துறையும் ஊடக பணியாளர்களிடம் இருந்து 2003 இல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தை உருவாக்கியமையைக் குறிப்பிடலாம். இது ஊடகம் சார்ந்த செயற்பாடுகளில் தலைமைத்துவத்தையும் திசையையும் வழங்குவதற்கான தொழிற் துறை தளம். இலங்கை பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை பத்திரிகை சமூகம் மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியன இணைந்து இதனை உருவாக்கி இருந்தன.

BOX 17

## Media Education, Media Studies and Journalism Education

ஊடகக் கல்வி மற்றும் பத்திரிகைக் கல்வி போன்ற சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு பயன்படுத்தபடுகின்றன. ஆனால் இவை வேறு வேறு அர்த்தங்களைக் கொண்டன.

- இதழியல் கல்வி சிறந்த மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய இதழியல் செற்பாடுகளை மேற்கொள்வதற்கான தத்துவார்த்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது. 2007 இல் உலக இதழியல் கல்வி பேரவையின் கொள்கைப் பிரகடனம் இவ்வாறு தெரிவித்தது- இதழியல் கல்வியின் இதயமாக விளங்குவது கருத்துரு குறித்த சமநிலை. தத்துவார்த்த மற்றும் திறனை அடிப்படையாகக் கொண்ட உள்ளடக்கங்கள். இதழியல் கல்வி என்பது பல துறைகளைக் கொண்டுள்ள அதேவேளை, அது கல்வித் துறையுமாகும். அறிவு மற்றும் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. இது பொதுமக்கள் தொடர்பு மற்றும் விளம்பரம், மற்றும் ஏனைய பொதுத்தொடர்பாடல்கள் குறித்த படிப்பை கொண்டிராதது.

- டக கற்கை என்பது ஊடகங்கள் பற்றி அறியும் செயற்பாடு, ஊடக தயாரிப்பு மற்றும் தொழிற்நுட்பங்களில் பொதுதிறமையை பெறுவது, அது கற்பவரிற்கு ஊடக மூலபாடங்களை (எழுத்து,கட்புலசாதனங்கள்,மற்றும் டிஜிட்டல் தயாரிப்பு ) ஆய்வதற்கான சிறந்த திறனை வழங்குகின்றது. இதன் மூலம் அவற்றின் பெறுமதியை அறிந்து மதிப்பிட முடியும்,இது சமூகவியலில் காணப்படும் தளமாகும். அது இதழியல்கல்வியில் இடம்பெறும் சில விடயங்களைக் கொண்டுள்ள அதேவேளை இதன் அணுகுமுறை வித்தியாசமானது.

அ

# தொழில்சார் பயிற்சி கிடைத்தல்

## 4.01 ஊடக பணியார்கள் தங்களிற்கு தேவையாகவுள்ள பயிற்சிகளை பெற்றுக்கொள்ளகூடியதாகயிருத்தல்

20 வருடங்களுக்கு முன்னர் ஒப்பிடும்போது தற்போது அதிகளவு இதழியல் மற்றும் ஊடகப் பயிற்சி கற்கைகளும் கற்பிப்பவர்களும் காணப்படுகின்றனர்.

சில இதழியல் கற்கை நெறிகள் இதழியல் தொழிலில் ஆரம்பகட்ட இடைக்காலத் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டவை. ஏனையவை குறிப்பிட்ட கருப்பொருள்களை அடிப்படையாகக்கொண்டு விசேட விவகாரங்கள் அல்லது தலைப்புகளில் பயிற்சிகளை வழங்குபவை.

இதழியல் மற்றும் ஊடகப் பயிற்சிகள் மற்றும் வழங்குநர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளபோதிலும் தரக்கட்டுப்பாடுகள், பொருத்தமான நடைமுறைகள் மற்றும் இவ்வாறான பயிற்சிகளை வாங்கும் திறன் குறித்து கரிசனைகள் காணப்படுகின்றன.

பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்தொழிற்துறையின் ஏனைய பிரிவினரான ஊடக முகாமையாளர்களுக்கும் மேலும் சிறந்த இலக்குவைக்கப்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்கான தேவையுள்ளது. தற்போது

### Why Journalism Education and Training Matters for Democracy

"Professional news media acts as a guardian of public interest. It is an important component of the checks and balances that form part of a democracy. By disseminating information to citizens, the news media enables citizen participation in development and strengthens accountability feedback mechanisms. Citizens cannot exercise and enjoy their citizenship in the absence of crucial information and knowledge, which well-trained journalists are better placed to provide.

"Therefore, society has a responsibility to ensure its journalists have the competencies to seek out and interpret information, and the judgment and integrity to communicate it in as objective and unbiased terms as possible. At the core of journalism is the need for newsrooms that are staffed by well-trained and critically-minded journalists who are likely to influence the processes of democracy and development in their societies."

**- UNESCO Website, on Journalism Education and Training**
http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/journalism-education-and-training/

தொழிற்துறையின் தேவைகளுக்கும் வழங்கப்படும். பயிற்சிகளுக்கும் இடையில் இடைவெளி அல்லது பொருத்தமின்மை காணப்படுகின்றது. இது பல ஊடகத் தொழில்துறை சார்ந்தவர்கள் மத்தியில் திறன் பற்றாக்குறைக்கு வழிவகுத்துள்ளது. மேலும் ஊடக உற்பத்திகளில் ஒட்டுமொத்த தொழிற்சார் தராதரங்கள் இன்மைக்கும் அது வழிவகுத்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக பல ஊடக நிறுவனங்களுக்கு ஊடகக் கல்வி மற்றும் பயிற்சி என்பது முன்னுரிமைக்குரிய விடயமல்ல, பல நிறுவனங் களின் மனிதவள முகாமைத்துவ கொள்கைகள் பத்திரிகையாளர்களின் தொடர் கல்விக்கு உதவும் விதத்தில் காணப்படவில்லை. உதாரணத் திற்கு பதவி உயர்வுகள் என்பவை புதிய திறன்கள் அல்லது கல்வித் தராதரங்களைப் பெறுவதுடன் தொடர்புபட்டதாக காணப்படவில்லை.

பயிற்சிகளை அனே தருணங்களில் தனிநபர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஊக்கத்தினால் பெறுகின்றனர். இதற்காக அவர்கள் தங்கள் சொந்த நிதியை பயன்படுத்துகின்றனர். நிறுவனமயப்படுத்தப்பட்ட பயிற்சி முதலீடுகளை ஊடக தொழிற்துறைக்கு வெளியே உள்ள நிறுவனங்களே மேற்கொள்கின்றன, குரல் தரும் அமைப்புகள் மற்றும் அபிவிருத்தி சகாக்கள் போன்றவர்கள்.

பத்திரிகை துறைக்குள் காலடியெடுத்து வைக்க விரும்பும் அல்லது வைத்துள்ள பத்திரிகையாளர்களுக்கு பல கற்கைநெறிகள் காணப்படுகின்றன. ஆனால் தங்கள் தொழில் வாழ்க்கையில் நடுப்பகுதியில் உள்ளவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம் மட்டுப்படுத்தப்பட்டவை.

தற்போது காணப்படும் கற்கை நெறிகள் தரப்படுத்தப்பட்டவையாகவோ அல்லது அளவுகோல்களாகவோ காணப்படவில்லை. விசாரணை செய்யும் மற்றும் ஆராயும் திறன்களைக்கொண்ட பத்திரிகையாளர்களை உருவாக்ககூடிய சிறந்த செய்தி பத்திரிகையாளர்களை உருவாக் ககூடிய கற்கைநெறி எதுவும் இல்லையென தொழிற்துறையை நெருங்கி அவதானிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

அரச ஊடகங்கம் தங்களது ஸ்தாபனத்திற்கான சொந்த பயிற்சி பிரிவுகளைக் கொண்டுள்ளது (இலங்கை

150 http://slbctraining.blogspot.com/

ஒலிபரப்பு கூட்டுத்தாபன பயிற்சிநிறுவகம், மற்றும் ஏஎன்சிஎல் அல்லது லேக் ஹவுசில் உள்ள பயிற்சிநிலையம்) இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சில பயிற்சிகளை-கல்வி ஒலிபரப்பு மற்றும் வானொலிக்கான பேட்டி யெடுத்தல் போன்றவற்றை கட்டணம் செலுத்தி வெளியாட்களும் பெற்றுக்கொள்ளலாம். எனினும் இங்கும் தரம் என்பது குறைவானதாக காணப்படுகின்றது. அதனால் பாடத்திட்டம் மற்றும் முறைமைகள் குறித்து மீளாய்வு அவசியம்.

## ஊடகத் தொழிற்துறைக்கான தேசிய நிலையம்

நீண்ட காலமாகவே சுயாதீன பத்திரிகை பயற்சி நிலையத்திற்கான தேவை உணரப்பட்டது. 2002 இல் சுவீடனின் அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் அமைப்பு இலங்கையின் பத்திரிகை பயிற்சி தேவைகள் குறித்து ஆராய்வொன்றை மேற்கொண்டது. மூவர்கொண்ட குழு இதனுடன் தொடர்புபட்ட பலருடன் கலந்தாய்வினை மேற்கொண்ட பின்னர் இவ்வாறு தெரிவித்திருந்தது'' இலங்கையில் இதழியல் கற்கை நெறிகள் பல்கலைக்கழகங்களில், அரை அரசநிறுவனங்களில், மற்றும் தனியார் நிறுவனங்களில் காணப்படுகின்றன. தனியாரினால் முன்னெடுக்கப்படும் பல பலவகையான பல தரங்களிலான கற்கைநெறிகள் காணப்படுகின்றன. எனினும் எங்களுக்கு கிடைத்த நேரத்திற்குள் அவை பற்றிய எண்ணக் கருவொன்றை உருவாக்குவது கடினமான விடயமாக காணப்பட்டது. இதற்கு அப்பால் குறிப்பிடத்தக்க அளவிலான பணியின்போதே பயிற்சிகளை வழங்கும் நடைமுறையும் காணப்படுகின்றது. அவை அடிப்படை கொள்கைளிற்கு மட்டுப்படுத்தப் பட்டவையாக காணப்படுகின்றன.

சீடாவின் ஆய்வு புதிய பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்துமாறு பரிந்துரை செய்தது, ''பல்ககலைக் கழங்கள் அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் ஊடகங்களின் திறமைகள் கூட்டுப்பொறுப்பை ஏற்கும் இணைந்த முயற்சி, புதிய அபிவிருத்திக்கான அடிப்படையை உருவாக்குவதற்கான நம்பகத் தன்மைமையும், திறனையும் கொண்டிருக்கும்". இந்த மாற்று ஏற்பாட்டிற்கு ஊடக உரிமையாளர்கள், ஆசிரியபீட முகாமையாளர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் அரசாங்க பிரதிநிதிகளின் ஆதரவும்

151 Journalism Training and Research in Sri Lanka. Stig Arne Nohrstedt, Sunil Bastian and Jöran Hök. April 2002. SIDA. http://www.sida.se/contentassets/2596a99da6904293b210766eb7735640/journalism-training-and-research-in-sri-lanka_784.pdf

152 Op cit

153 http://www.slcj.lk/about/background/

காணப்பட்டது, இலங்கையில் சுதந்திரமான ஊடக சூழலை ஏற்படுத்துவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசசார்பற்ற அமைப்புகாளலும் இது தீவிரமாக வலியுறுத்தப்பட்டது.

1988 இன் கொழும்பு பிரகடனத்திற்கு பின்னர் இலங்கை ஊடக தொழிற்துறையினர் சொந்த முயற்சிகளை முன்னெடுத்திருந்த தருணத்திலேயே சீடாவின் விஜயம் இடம்பெற்றிருந்தது. இந்த செயற்பாடுகள் 2003 இல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்படுத்தப்படுவதற்கு வழிவகுத்தது. அன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கொள்கை ரீதியிலான ஆதரவை வழங்கியது. ஸ்கன்டிநேவிய நாடுகளின் உதவிகள் ஆரம்ப வருடங்களில் மூலதனம் மற்றும் செலவுகளுக்காக வழங்கப்பட்டன. இன்று சுய ஒழுங்குபடுத்தல் அமைப்பான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் பயிற்சிப் பிரிவான இலங்கை இதழியல் கல்லூரி ஆகியவற்றிக்கான ஸ்தாபன வடிவமைப்பை இன்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வழங்குகிறது. ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்களுக்குப் பின்னர் ஊடகத் தொழிற் துறையில் உள்ள பல்வேறு பங்குதாரர்களை ஒன்றிணைக்கக் கூடிய திறனைக் கொண்ட ஒரேயோரு தளமாக அது காணப்படுகிறது. எனினும் வளர்ச்சி அடைந்து வரும் சமூக பொருளாதார வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து இந்த அமைப்பினை மறு மதிப்பீட்டுக்கும் சிந்தனைக்கும் உட்படுத்த வேண்டும். நிதி நெருக்கடிகள் காரணமாக இதன் பல பிரிவுகள் குறைக்கப்பபட்டுள்ளன.

## இலங்கை இதழியல் கல்லூரி

இலங்கையில் இதழியல் கல்வியின் தராதரத்தை அதிகரிப்பதற்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழ் இலங்கை இதழியல் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. அதன் பாடத் திட்டத்தை இலங்கையின் மூத்த ஊடகத் தொழிற்துறை வல்லுனர்கள் ஃபோஜோ ஊடக ஸ்தாபனத்தின் உதவியுடன் உருவாக்கினர். ஃபோஜோ என்பது சுவீடனின் கல்மார் பல்கலைக் கழகத்தின் பயிற்சிப் பிரிவாகும். இலங்கை இதழியல் கல்லூரி மூன்று மட்டத்திலான பத்திரிகையாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குகிறது. ஆரம்ப நிலையில் உள்ள பத்திரிகையாளர்கள் கொழும்பைச் சுற்றி உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் மாகாண பத்திரிகையாளர்கள். அதன் கற்கை நெறிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

Table 3: Different courses offered by Sri Lanka College of Journalism

| Course type | Trainee profile | Description and current status |
|---|---|---|
| **Diploma course in journalism:** Pre-service 12 months: Full time | High school leavers keen to pursue careers in media | Aims to produce multi-skilled journalists (print, radio, TV and web) with a sound theoretical and ethical grounding. Includes a two-month internship at a media company for practical exposure. Offered in Sinhala and English; (Tamil stream suspended due to insufficient demand) |
| **Refresher courses:** In-service Short-term (3-days of full-time training) | Early to mid career journalists and other media industry personnel | These used to cover various thematic and specialized topics of use to journalists. No longer offered due to lack of demand, but a 3-month certificate course in presentation skills is being planned. |
| **Training for provincial journalists** In-service Short-term | Aimed at provincial level journalists, often held away from Colombo | These are conducted occasionally and opportunistically, often in partnership with development organisations. |

இலங்கை இதழியல் கல்லூரியில் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள் உள்ளனர். மேலும் தேசிய ஆசிரியர் பீடங்களில் பணியாற்றும் விரிவுரையாளர் குழாம் ஒன்றை அது கொண்டுள்ளது.இதழியல் கல்லூரியால் நடத்தப்படும் அனைத்து கற்கை நெறிகளும் ஊடக ஒழுக்க நெறி வலுவாக முன்நிறுத்துகின்றன. இது இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட

ஒழுக்காற்றுக் கோவையை கற்கை நெறியில் கலந்து கொண்டவர்கள் அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. டிப்ளோமா மற்றும் இடை நிலைப் பயிற்சி ஆகியன புதிய ஊடக சாதனங்கள் மாற்றங்கள் மற்றும் சவால்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன.

இலங்கை இதழியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட முதல் சில வருடங்களில் அதன் கற்கை நெறிகளுக்கு பெரும் வரவேற்பு காணப்பட்டது. நீண்ட காலத் தேவையை அது பூர்த்தி செய்ததே அதற்குக் காரணம். கல்லூரியின் டிப்ளோமா கற்கை நெறியை முடித்தவர்களுக்குச் செய்தி ஊடகங்கள் விளம்பர மற்றும் மக்கள் தொடர்பாடல் தொழிற் துறையில் உடனடியாக வேலைவாய்ப்பு கிடைத்தது. இலங்கை இதழியல் கல்லூரியின் 2014 இற்கான வருடாந்த ஆய்வில் இவ்வாறு குறிப்பிடப்பட்டது. ''ஊடகப் பணியில் நேரடியாக ஈடுபட்டுள்ள முன்னய பிரிவுகளின் மாணவர்களும் தொழில் விகிதம் இன்னமும் மிக உயர்வாக 90 வீதமாக காணப்படுகிறது. சில மாணவர்கள் மேலதிக உயர் கற்கை நெறிகளை தொடர்வதில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் 2010 முதல் இந்தக் கற்கை நெறியைப் பின்பற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டதுடன் டிப்ளோமாவுடன் தகுதி பெறுபவர்களுக்கான சந்தைத் தேவையும் குறைவடைந்திருந்தது. இலங்கை இதழியல் கல்லூரி நிர்வாகம் இதற்கு இரண்டு காரணங்களை முன்வைக்கின்றது. இலங்கை ஊடகத் தொழிற் துறை இவ்வாறு அதிகளவானவர்களை உள்வாங்கும் அளவிற்கு விரிவடையவில்லை. மற்றையது அபிவிருத்தி உதவி வழங்குபவர்களின் ஆதரவு முடிவடைந்துள்ளது. (மாணவர்கள் தற்போது டிப்ளோமா கற்கை நெறிக்காக 165 000 ரூபாய் செலுத்த வேண்டி உள்ளது.

இதே போன்று இடைநிலையில் உள்ளவர்களுக்கான பயிற்சிகளுக்குப் பதிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் குறைவடையத் தொடங்கி உள்ளது. இலங்கை இதழியல் கல்லூரி தனது ஆரம்ப வருடங்களில் ஜனநாயகம் மனித உரிமைகள் குறித்து செய்தி சேகரித்தல், தேர்தல் காலச் செய்தி சேகரித்தல், பாராளுமன்ற செய்தி சேகரித்தல் போன்ற பல தரப்புகளில் கற்கைகளைக் கொண்டிருந்தது. இவ்வாறான கற்கைகளுக்கான ஆர்வமும் பதிவு செய்தலும் சமீப வருடங்களில்

குறைவடைந்தமை குறித்து மேலும் விசாரணை அவசியம். செய்தி அறைகள் இந்தத் திறன்களில் பயிற்சிகளைத் தொடர்ந்தும் வழங்க வேண்டிய தேவை உள்ளது. செய்தி அறைகளின் தேவைகளுக்கும் நிதி வழங்குபவர்கள் என்ன விடயங்களை விரும்புகின்றனர் என்பதற்கும் இடையில் இடைவெளி காணப்படுகின்றது.

2013 இல் இலங்கை இதழியல் கல்லூரியின் டிப்ளோமா கற்கை நெறியின் பாடத் திட்டம் ஆசிரியர் குழு மூத்த பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக கல்விமான்கள் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்விற்குப் பின்னர் மறு வடிவம் கொடுக்கப்பட்டது. இதற்கு யூக். கே. இன் தோமஸ் மன்றத்தின் நிபுணர் ஒருவர் உதவி வழங்கினார். இந்த ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட ஊடக தொழிற் துறைக்கான தெளிவான பாடத் திட்டதைக் கொண்டுள்ளது. அது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இதழியலை கற்பிப்பதற்காக யுனஸ்கோ பரந்து பட்ட அளவில் பயன்படுத்தும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

தற்போது இலங்கை இதழியல் கல்லூரியில் 18 மாணவர்கள் டிப்ளோமா கற்கைநெறியை பின்பற்றுகின்றனர்.அவர்கள் தங்கள் கற்கையை 2016 இல் பூர்த்திசெய்வார்கள். மேலும் இரண்டு பயிற்சி நிலையங்கள் குறித்து சுட்டிக்காட்டுவது பயனுள்ளதாக அமையும்,

- **ஊடக வள பயிற்சி நிலையம்:** யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இணைக்கபட்டுள்ள அது 2004 முதல் வடபகுதியில் ஊடக பயிற்சியின் முன்னோடியாக காணப்படுகின்றது. யுனெஸ்கோ மற்றும் ஐபிடிசியின் நிதியுதவியில் ஆரம்பிக்கப்பட்ட இதற்குப் பின்னர் ஸ்கன்டினேவியன் நாடுகள் நிதி வழங்கின, ஊடக வள பயிற்சி நிலையம் இரு கற்கை நெறிகளை நடத்துகின்றது. உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான பகுதிநேர கற்கைநெறி மற்றும் பல்கலைகழக மாணவர்களுக்கான முழுநேர கற்கைநெறி. இரண்டு கற்கை நெறிகளும் முக்கியமான பல தலைப்புகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதழியல் குறித்து மற்றும் நடைமுறை விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஊடக வள பயிற்சி நிலையம் ஏற்கனவே பல ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இவர்கள் யாழ்ப்பாண ஊடக சூழலில் ஆர்வத்துடன்

[154] http://www.thomsonfoundation.org/news-and-features/2013/04/04/sri-lanka-shaping-the-future-of-journalism-training

[155] http://mrtc-uoj.blogspot.com

செயற்பட்டு வருகின்றனர். எனினும் ஊடகத்துறையில் காணப்படும் அரசியல் துருவமயப்படுத்தல் ஊடக வள பயிற்சி நிலையத்தையும் பாதித்துள்ளது. நிர்வாக கட்டமைப்பு பல்கலைகழகத்தின் கீழ் காணப்படுவதால் ஊடக வள பயிற்சி நிலையம் நெகிழ்ச்சி தன்மையற்ற கடும் அதிகாரவர்க்க அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

- **இலங்கை தொலைக்காட்சி பயிற்சி ஸ்தாபனம்(எஸ்எல்டிடி)**

ஊடக அமைச்சின்கீழ் இயங்கும் இந்த ஸ்தாபனம்,சேவைக்கு முந்திய மற்றும் சேவையின்போதான பயிற்சிகளைத் தொலைகாட்சி தொழிற்துறைக்குத் தொழில்நுட்ப மற்றும் ஆசிரியபீடத்திற்கு வழங்குகின்றது. இது 1984ஆம் ஆண்டு ஜேர்மனியின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் தொலைக்காட்சி தொழில்துறையுடன் இணைந்து வளர்ந்துள்ளது. ஒக்டோபர் 2015 வரை இந்த ஸ்தாபனம் பலவகைப்பட்ட சான்றிதழ் கற்கைநெறிகள், டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்குகின்றது. செய்திகளை வழங்குவது வாசிப்பது. தொலைக்காட்சி செய்தி இதழியல், ஊடகங்களிற்கான ஆங்கிலம்,தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு, டிஜிட்டல் தயாரிப்புக்கு பிந்திய தொழில் நுட்பங்கள் போன்ற பலதரப்பட்ட கற்கைநெறிகளை வழங்குகின்றது. சில கற்கை நெறிகள் மூன்று மொழிகளிலும் வழங்கப்படுகின்றன. பரந்துபட்ட நோக்கத்துடன் குறிப்பிட்ட ஸ்தாபனத்தை இலங்கை ஊடக பயிற்சி நிலையமாக மீள ஆரம்பிப்பது குறித்த திட்டத்தை அதன் வெப்தளத்தில் காணமுடிகின்றது.

- **கருப்பொருளை அடிப்படையாகக்கொண்ட பயிற்சிகள்**

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளிற்கு அப்பால், பல குறுகியகால கற்கைகள், செயலமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள், அரசாங்கத்தினாலும்,அரசார்பற்ற அமைப்புகாளலும், ஐக்கிய நாடுகளுக்கான அமைப்புகளாலும் பத்திரிகையாளர்களின் திறனை குறிப்பிட்ட கருப்பொருள்களில் வளர்த்தெடுப்பதற்காக நடத்தப்படுகின்றன. (எச்.ஐ.வி. புகையிலை கட்டுப்பாடுகள், நல்லாட்சி,

156 http://www.sltti.lk

157 A Study of Media in Sri Lanka (excluding the North and East). April 2005. Centre for Policy Alternatives, Colombo. http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

158 Sri Lanka Directory of Provincial Journalists, Sep 2005. http://www.environmentaljournalists.org/images/Sri_Lanka_Directory_of_Provincial_Journalists.pdf

"Provincial media and journalists are much closer to the grassroots than the national media. We need to enhance the education and skills of provincial journalists and raise the status of provincial media. Such media can play a key role in articulating the views and aspirations of people in different provinces, so that development can be more meaningful. Development is not just building roads or buildings!"

**- Justice C V Wigneswaran,**
**Chief Minister,**
**Northern Provincial Council**

பாலின சமத்துவம்) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குரிய பயிற்சிகளின் உள்ளடக்கம் குறித்த மையப்படுத்தப்பட்ட தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

2005 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்ட இலங்கை ஊடகங்கள் குறித்த ஆய்வில் தெரிவிக்கப்பட்ட நிலவரங்களில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. பத்திரிகையாளர்களுக்கும், ஊடக பணியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்கும் முக்கிய துறையாக அரச சார்பற்ற அமைப்புகள் காணப்படுகின்றன. எனினும், இவர்களால் வழங்கப்பட்ட அநேக பயிற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமான வையாக காணப்படுகின்றன. அனேகமாக சில செயலமர்வுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும், பயிற்சிகள் தொடர்ச்சியற்றவையாகவும், இலங்கையின் ஒட்டுமொத்த பத்திரிகையாளர்களுக்கான (3000) காணப்படாதவையாகவும் உள்ளன. பிராந்திய பத்திரிகையாளர்களுக்கு இந்தச் செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக ஊடகவியலாளர் களுக்கும் ஊடக பணியாளர்களுக்கும் முழுமையான,

தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கவேண்டிய தேவை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

- **பிராந்திய செய்தியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்**
  இலங்கையில் உள்ள பிராந்திய செய்தியாளர்களின் எண்ணிக்கை குறித்து உறுதியான புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை, ஒரு தசாப்தத்திற்கு முன்னர் 2100 பிராந்திய செய்தியாளர்கள் காணப்பட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது- இவர்கள்‘‘ இலங்கை முழுவதிலும் உள்ள பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,பயிற்சி நிலையங்கள்,வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களை சேர்ந்தவர்கள்.

அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களிற்கான உள்ளடக்கத்தில் ஆகக்குறைந்தது 50 வீதத்தினை பிராந்திய செய்தியாளர்கள் வழங்குவதாக தொழிற்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.எனினும் அனேக பிராந்திய செய்தியாளர்கள் எந்தவித முறைசார்ந்த பத்திரிகை பயிற்சியையும் கொண்டிராதவர்கள். பலருக்கு

159 A Study of Media in Sri Lanka (excluding the North and East). April 2005. Centre for Policy Alternatives, Colombo. http://www.cpalanka.org/a-study-of-media-in-sri-lanka-excluding-north-and-east/

**Media House running Training College**

The Asian College of Journalism (ACJ) in Chennai, India, is a good example of an industry-supported training school which, with modifications, might be a model for Sri Lanka.

Originally started by the B. D. Goenka Foundation, it was taken over by the Media Development Foundation, a not-for-profit public trust set up in 1999 to "foster journalism as an independent, investigative, socially responsible, and ethical profession". The Hindu media group has invested substantially in this venture, whose benefits are for the entire Indian media industry and society.

http://www.asianmedia.org/aboutus/mdf.asp

செய்தி சேகரிப்பது மற்றும் அதனை வெளியிடுவது என்பது பகுதிநேரப் பணியாகவுள்ளது. பத்திரிகை தொழில் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் முக்கிய தொழில் இல்லை. அவர்கள் தொழில் ரீதியாக வேறு இடங்களைச் சார்ந்துள்ளனர். உதாரணம் ஆசிரிய தொழில், இது உரிய தொழிற்சார் தன்மையின் மற்றும் முரண்பாடுகள் குறித்த கரிசனைகளை எழுப்பியுள்ளது.

பிராந்திய ஊடகவியலாளர்களும், பத்திரிகையாளர்களும் தேசிய பத்திரிகைகளை விட சமூகத்தின் அடிமட்ட மக்களுடன் நெருக்கமாக உள்ளனர். பிராந்திய செய்தியாளர்களின் கல்வி மட்டம் மற்றும் திறன்களை மேலும் வளர்த்துப் பிராந்திய ஊடகங்களில் தகுதியை வளர்த்தெடுக்கவேண்டியுள்ளது. அவ்வாறன ஊடகங்கள் வெவ்வேறு பிராந்தியங்களில் உள்ள கருத்துகளையும், அபிலாசைகளையும் முன்வைப்பதில் முக்கிய பங்கை ஆற்றமுடியும. இதன் காரணமாக அபிவிருத்தி என்பது மேலும் அர்த்தபூர்வமானதாக காணப்படும். அபிவிருத்தி என்பது வெறுமனே வீதிகளை பாலங்களை கட்டுவதல்ல- வடமாகண முதலமைச்சர் நீதியரசர் சிவி. விக்னேஸ்வரன்.

2005 ஆம் ஆண்டு மாற்றுக்கொள்கை நிலையம் இலங்கை ஊடகங்கள் குறித்த ஆய்வொன்றிற்காக நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பல பிராந்திய ஊடகவியலாளர்களைப் பேட்டி கண்டது, இதன்போது எந்த ஊடக நிறுவனமும் இரண்டு ஆண்டு பகுதிக்குள் அவர்களுக்கு எந்தவித பயிற்சியையும் வழங்காமை தெரியவந்தது, ஆரம்பகட்ட பயிற்சிகள் கூட வழங்கப்படவில்லை.

அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது ‘‘எந்த பிராந்திய செய்தியாளருக்கும் தங்கள் அலுவலகத்திலிருந்து தொழிற்சார் நடவடிக்கை கோவை வழங்கப்படவில்லை அதேபோன்று ஒழுக்காற்று கோவை குறித்து அவர்களுக்கு பயிற்சிகள் எதுவும் வழங்கப்படவில்லை. உதாரணத்திற்கு ஒவ்வொரு செய்தியாளரும் ஆகக்குறைந்தது தற்கொலை குறித்து ஒரு செய்தியையாவது பதிவுசெய்துள்ளனர். எனினும் தற்கொலை குறித்த உணர்வுபூர்வமான செய்தியிடலிற்கான தொழில்சார் கோவை

குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை. அனேக பிராந்திய செய்தியாளர்கள் பத்திரிகை துறை குறித்த அடிப்படை பயிற்சிகூட இல்லாத நிலையில் காணப்படுகின்றனர். தங்கள் பகுதியில் இடம்பெறும் ஊடககற்கை நெறியில் கலந்துகொள்வது குறித்து அவர்கள் ஆர்வமாகவுள்ளனர்.

இந்த நிலை இன்றும் காணப்படுவதற்கான ஆதாரங்கள் உள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை இதழியல் கல்லூரி பிராந்திய செய்தியாளர்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அதனடிப்படையில் குறுகியகால பயிற்சிநெறியை வடிவமைத்தது. வீடியோ செய்தி வழங்கல், செய்தி சேகரிக்கும்போது கருத்தில் கொள்ளவேண்டிய ஒழுக்கவிதிகள். வானொலி தயாரிப்பு குறித்த ஆரம்ப திறன்கள் போன்றவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது.

பிராந்திய செய்தியாளர்களின் திறனை அதிகரிப்பதும், அவர்களுடைய தொழில்சார் தன்மையை அதிகரிப்பதும் இலங்கையில் ஊடக சீர்திருத்தங்களுக்கு அவசியமானவை. எனினும் பிராந்திய செய்தியாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான தொழிற்துறை சார்ந்த, திட்டமிடப்பட்ட அணுகுமுறை எதுவும் காணப்படவில்லை.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ரங்க கலாசூரிய இவ்வாறு தெரிவிக்கின்றார் ''இலங்கையில் பிராந்திய செய்தியாளர்களிற்கு பயிற்சிகளை வழங்குவது என்பது நிதி வழங்குவோர் அல்லது நிகழ்ச்சி நிரலை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படுவதாக காணப்படுகின்றது, பல செயலமர்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால் இவை அடிப்படை திறன் விருத்தி குறித்து கவனம் செலுத்தவில்லை. பல தசாப்தகால அனுபவங்களைக் கொண்ட பல பத்திரிகையாளர்களை நான் சந்தித்துள்ளேன், ஆனால் அவர்களுக்கு செய்தி சேகரிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய 5 டபிள்யூக்கள், அல்லது எச் குறித்து எதுவும் தெரியாது, அடிப்படைக் கொள்கைகள் மற்றும் இதழியலின் அடிப்படைகள் குறித்த போதிய புரிந்துணர்வின்மை காரணமாக,

**4 02** வர்த்தக முகாமையாளர்கள் உட்பட ஊடக முகாமையாளர்கள் தங்களுக்குத் தேவையான பயிற்சிகளை ஏற்றுக் கொள்ள முடியும்.

ஊழல்கள்கள் போன்ற விடயங்கள் பொதுவானவையாக காணப்படுகின்றன.

சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் ஊடகவியல் தொடர்பில் போதிய புத்தகங்கள், காணப்படாததன் காரணமாக பயிற்சி மற்றும் சுய கற்றல் என்பதும் பாதிக்கப்படுகின்றது.

ஆங்கில மொழியும் தகவல் தொழில் நுட்ப பயிற்சியின் மூலமாக பிராந்திய மட்டம் மற்றும் ஊடகத் தலைமை அலுவலகங்கள் உள்ள பல பத்திரிகையாளர்களால் ஆங்கில மொழி பயிற்சி கணினி மற்றும் புதிய ஊடக திறன்கள் குறித்த பயிற்சிகளால் நன்மையடைய முடியும்.

ஊடக நிறுவனங்கள் இரண்டு வகையான முகாமைத்துவத்தைக் கொண்டுள்ளன. வர்த்தக முகாமைத்துவம் மற்றும் ஆசிரியர் பீட முகாமைத்துவம். தற்போது கிடைக்கும் ஊடகப் பயிற்சி நெறிகள் இந்த இரு வகையான ஊடக முகாமையாளர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதாக காணப்படவில்லை. (மிக அதிகளவிற்கு ஆசிரியர் பீட உள்ளடக்கம் அல்லது நடவடிக்கைகளுக்கே கவனம் செலுத்துகின்றனர்.)

இதன் காரணமாக இலங்கையின் தொழில் சார் ரீதியில் பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் கல்வித் தகைமைகள் கொண்ட ஊடக முகாமையாளர்கள் குறைவாக காணப்படுகின்றனர். அநேகமாக நிறுவனங்கள் மூத்த பத்திரிகையாளர்களை அல்லது ஊடக ஒலிபரப்பாளர்களைப் பல வருட சேவைக்குப் பின் முகாமைத்துவ பதவிகளுக்கு தரம் உயர்த்துகின்றனர். எனினும் இவர்கள் பலர் தந்திரோபாய திறன்கள் மற்றும் ஆளணி முகாமைத்துவ திறன்கள் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். சில எம்.பி.எ. கற்கை நெறிகள் சந்தைப்படுத்தல் கற்கை நெறிகள் மற்றும் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள் ஊடகத் தொழிற் துறையில்

160 http://spc.cmb.ac.lk/?q=PG_Dip_MAinMass_Media

4.03 ஊடகத் தொழிற் துறையினர், ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தியை புரிந்து கொள்வதற்கு பயிற்சிகள் உதவுகின்றன.

உள்ள முகாமைத்துவ சவால்களுக்கு பொருத்தமான விடயங்களைக் கொண்டுள்ளது. அவைகள் பயன் உள்ளவையாகவே இருக்கலாம் ஆனால் போதுமானவை அல்ல. பயிற்சி நெறிகள் அல்லது எத்தனைபேர் பயிற்றுவித்தனர் என்பது குறித்த தரவுகள் எதுவும் இல்லை. இலங்கை இதழியல் கல்லூரி 2009 வரை செய்தியறை முகாமைத்துவ கற்கைகளை வழங்கியது. அதற்கான தொழிற் துறை தேவையும் காணப்பட்டது. ஆனால் பயிற்றுவிப்பாளர்களை வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரவேண்டி இருந்தது. இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பது பணம் செலவாகும் விடயம்.

இந்த ஆய்விற்காக நாங்கள் பேட்டி கண்ட சில ஊடகத் தொழிற் துறையினர் இலங்கை ஊடக நிறுவனங்களில் தற்போது முகாமைத்துவப் பதவிகளை வகிப்பவர்கள் ஊடக முகாமைத்துவப் பயிற்சியில் விசேட பயிற்யிசிக்கான தேவை இருப்பதை உணரவில்லை என சுட்டிக் காட்டினர். ஏனெனில் பலர் செய்தியறை முகாமைத்துவம் குறித்த கருத்துருவாக்கத்தை புரிந்து கொள்வதில்லை. இது ஊடக நிர்வாகம் மற்றும் வர்த்தக முகாமைத்துவத்தில் இருந்து வித்தியாசமானது.

ஜனநாயகம், மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஊழல் ஆகியன எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டுள்ளன என்பது குறித்துப் போதிய அறிவு இன்மையும் புரிந்துணர்வு இன்மையும் கருத்துரு தெளிவின்மையும் ஒட்டு மொத்தமாக பல பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுகிறது. மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆட்சி புரியும் ஸ்தாபனங்கள் ஆகியவை குறித்த ஊடகங்களின் பங்களிப்பையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

மேலே 4.1 இல் குறிப்பிட்டது போல அரசு சார்பற்ற மற்றும் ஐ.நா. வின் அமைப்புகள் போன்றவற்றால் ஏற்பாடு செய்யப்படும் கருப் பொருளை மையமாகக் கொண்ட குறுகிய கால செயல் அமர்வுகள் இவற்றுக்கு ஓரளவு தீர்வு காண்கின்றன. இலங்கை, ரிரான்பரன்சி இன்ரநசனல் போன்ற அமைப்புகள் ஆட்சி விவகாரங்களில் ஊடகங்களின் திறமையை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளன. உதாரணத்திற்குத் தகவல் உரிமையை பயன்படுத்துதல், புலனாய்வு இதழியல் போன்றவை சமீப வருடங்களில் தீவிரவாத சக்திகள், பொலிஸ் தலையீடுகளை சந்தித்துள்ளன. இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை

ஆணையகம் குறித்த ஊடகங்களில் போதிய தெளிவின்மை. இலங்கை ஊடகங்கள் சர்வதேச அரசியல் மற்றும் இலங்கை மீதான அதன் தாக்கம் குறித்து புரிந்து கொள்வதற்கும் செய்திகளை வெளியிடுவதுக்குமான திறமை அற்று இருப்பது ஐ.நா. மனித உரிமை பேரவையின் இலங்கையுடனான ஈடுபாடுகளை அவர்கள் செய்தியாக்கிய விடயத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிந்தது. மார்ச் 2014 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட எ.˙.எச்.ஆர்.சி.˙.25.˙.1 என்ற இலங்கையில் மனித உரிமைகளையும் நல்லணக்கத்தையும் பொறுப்புக் கூறுதலையும் ஊக்குவக்கும் தீர்மானத்தில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை நல்லிணக்க மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவினால் ஆராயப்பட்ட காலப் பகுதிக்குள் இலங்கையின் இரு தரப்பினரும் மேற் கொண்டதாகக் குற்றம் சாட்டப்படும் பாரிய மீறல்கள் மனித உரிமை, துஷ்பிரயோகங்கள், மற்றும் அதனுடன் தொடர்பு பட்ட குற்றங்கள் தொடர்பாக முழுமையான விசாரணையை மேற்கொள்ளுமாறும் அவ்வாறான மீறல்கள் குறித்த சூழல் தகவல்களைக் குற்றங்களைத் தண்டனையில் இருந்து தப்பித்தலைத் தவிர்ப்பதற்கும் பொறுப்புக் கூறுதலை உறுதிப் படுத்தும் பொருத்தமான நிபுணர்கள் மற்றும் விசேட செயற்பாடுகளுக்கான ஆணை பெற்றவர்களின் உதவியுடன் முன்னெடுக்குமாறு கோரியது.

இந்த ஆணையின் அடிப்படையில் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ஜெனிவாவைத் தளமாகக் கொண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணையை ஏற்படுத்தினார். இந்த வருடம் செப்ரம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 30ஆவது அமர்வில்

- எ/எச்.ஆர்.சி/30/61 நல்லிணக்கத்தை மனித உரிமைகளை, பொறுப்புக் கூறலை இலங்கையில் ஊக்குவித்தல் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் அலுவலக அறிக்கை.

- எ/எச்.ஆர்.சி/30/சி.ஆர்.பி.2 ஐக்கிய நாடுகள் மனத உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை.

2014 – 2015 இல் இடம்பெற்ற இந்தச் செயற்பாடுகள் குறித்து இலங்கையின் மிகக் குறைந்த அளவு ஊடகங்களே துல்லியமாகவும் சமநிலையிலும்

161 Transparency International condemns repeated intimidation at investigative journalism workshop. 10 June 2014 http://www.transparency.org/news/pressrelease/arbitrary_disruption_of_transparency_international_sri_lankas_investigative

செய்திகளை வெளியிட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கை ஓர் இணைந்த பங்களிப்பை வழங்கும் அரசாங்கங்களுக்கு இடையிலான செயற்பாடுகள் காணப்படும், குழப்பங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பல ஊடகங்கள் புரிந்துகொள்ளத் தவறி இருந்தன. ஐ.நா. அவர்களுடன் தொடர்புபட்ட ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் நடைமுறைகள் குறித்து செய்தி அறைகளில் போதிய புரிந்துணர்வு இல்லாமை தவறான கருத்துக்களையும் மக்கள் மத்தியில் சந்தேகங்களையும் அச்சங்களையும் உருவாக்குவதற்கு உதவு கின்றன.

பத்திரிகையாளர்கள் அனேகமாக அவ்வாறான முக்கியமான உணர்வு பூர்வமான விடயங்கள் - இல்லாமல் செய்தி சேகரிக்கின்றனர். இது பொது மக்கள் மத்தியில் பெருமளவிற்கு குழப்பத்திற்கும் புரிந்துணர்வின்மைக்கும் வழிவகுக்கின்றது. நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொள்ளும்போது இலங்கையின் சர்வதேச மற்றும் அரசாங்கங்களுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஒவ்வோர் ஆசிரிய பீடத்தினதும் திறனை அதிகரிக்கவேண்டியது அவசியம்.

**From a Focus Group discussion with Sri Lanka Muslim Media Forum held on 8 June 2015, involving M S Ameen Hussain, Media trainer and consultant; Javed Munawwer, Assistant Treasurer; and Thaha Muzamil, Vice President:**

- Our journalists need training and capacity building in knowledge, skills and ethics but this is not going to be accomplished by random short-duration workshops. We need a more systematic approach to training. Some media organisations and journalists do not see the value of training, so we need to promote the demand side too.
- No matter how hard we try to train journalists, some of them have an attitude problem (that they don't need any training). This must change.
- Media owners probably don't like their journalists' capacity being built and the standard of journalism going up – because then journalists will have to be paid better!

162 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx

163 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session30/Documents/A_HRC_30_61_ENG.docx

164 http://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session30/Documents/A_HRC_30_CRP_2.docx

BOX 18

## What Every Journalist Ought to Know…

The media is an important part of democracy. A good test of democracy is citizen participation. Civic awareness enables both media practitioners and users to appreciate the role of journalism and media in building democratic societies. The normative nature of the media opens up avenues for negotiating what the media can do to deepen the democratic experience of developing countries.

UNESCO advocates that journalism education should result in a thorough understanding of the basic indices of democracy. All journalists need to understanding these concepts:

- **Popular sovereignty:** All legitimate power ultimately resides in the people.
- **The common good:** The promotion of what is good for the polity as a whole and not the interests of a portion of the polity at the expense of the rest of society.
- **Constitutionalism:** The empowerment and limitation of government by an enforceable written or unwritten constitution. Constitutionalism includes the idea of the rule of law. Constitutionalism also respects the principle that a law should be considered illegitimate if it is incompatible with the constitution.
- **Equality:** The right of all persons in a society to be treated equally.
- **Majority rule/minority rights:** The rights of the majority to rule, constrained by the rights of members of the minority to enjoy the same benefits and share the same burdens as those in the majority.
- **Justice and fairness:** Governmental decisions about burdens and benefits should be based on criteria that are not partial to specific groups. These procedures must be derived

through procedures that reflect 'fair play' or 'fundamental fairness'.

- **Political rights for citizens:** The authority to control government and hold it accountable as embodied in political rights, such as freedom of speech and of the media; the right to association, assembly, demonstration, and petition; and the right to vote in open, free, fair, regular elections.

- **Independent judiciary:** The judicial system providing decisions on an impartial basis in accordance with the law as the supreme criterion of judgement. As such, the judicial system must operate independently of any other agency of government (separation of powers), social organisation, or corrupting influence.

- **Civilian control of the military and police:** The military and police must be subject to the control of civilian authority.

- **Political competition:** Different political parties and organised groups should be able to compete for power and influence in society.

- **Political and societal pluralism:** There should be multiple, alternative sources of information and vehicles for the expression of interests and ideas in society.

- **Freedom from fear:** The right of individuals and groups to be secure under the rule of law from exile, terror, torture, invasion of privacy by state actors, and arbitrary or unjustified detention.

**Source:** Civic education for media professionals: A training manual (UNESCO, 2009) http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/civic-education-for-media-professionals-a-training-manual/

BOX 19

## சிங்கள, தமிழ் மொழி ஊடகங்களின் தொழில்சார் தராதரத்தை உயர்த்துதல்

அச்சு ஊடகங்களில் (சிங்கள,ஆங்கில) பணியாற்றியவரும், பின்னர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியவருமான கலாநிதி ரங்க கலன்சூரிய பெப்ரவரி 2015 இல் கட்டுரையொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஆங்கில ஊடகங்களைப் போன்றில்லாமல் தமிழ் சிங்கள அச்சு ஊடகங்கள்- தனியார்- அச்சு- பல சவால்களை எதிர்கொள்கின்றன- அவற்றை-தொழில்சார் மற்றும் உரிமை தொடர்பானது என குறிப்பிடலாம்.

''எனது கலாநிதி ஆய்வின்போது – அது முக்கியமாகத் தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்களின் தொழில்சார் தராதரம் குறித்தே காணப்பட்டது. இந்த இரண்டு உள்ளுர் மொழி அச்சு ஊடகங்களில் காணப்படும் மோசமான தொழில்சார் தரம் என்பது யுத்தத்திற்கு முன்னரே தமிழ், சிங்கள பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களில் காணப்படும் ஒன்று என நான் வலியுறுத்த முயன்றேன். செய்தியறிக்கையிடும் முறையின் அனேகமாக ஒரேயொரு தகவல் மூலத்தை அடிப்படையாக வைத்து மாத்திரமே அது மேற்கொள்ளப்படுகின்றது,மாறுபட்ட கருத்துக்களை முன்வைப்பதன் மூலம் சிறந்த ஆய்வு மற்றும் இதழியல் திறமைகளை அது வெளிப்படுத்தவில்லை.

''இதன் காரணமாக அது தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இதழியல் மரபுகளை ஒழுக்கநெறிகளை மீறியுள்ளது. இன அடிப்படையிலான, பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிராத ஆசிரியபீடங்கள் சமூகத்தில் இன அடிப்படையில் துருவமயப்படுத்தல் ஏற்படுவதற்கு மேலும் காரணமாக அமைந்துள்ளன. மேலும் இந்தத் தோற்றப்பாடு ஊடகங்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் நிலையையும், அது என்ன அறிய

வேண்டும் என்பதற்கு அது என்ன அறிய விரும்பகின்றது என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் இந்தப் போக்கு தொடர்கின்றது''.

''இந்த விடயத்தில் அச்சு ஊடகங்களை விடவும் ஒலிபரப்பு ஊடகங்கள் சாதகதன்மையைக் கொண்டுள்ளன, அவை முழுமையான தொழிற்சார் தராதரங்களைக் கொண்டுள்ளன என்பது இதன் அர்த்தம் அல்ல. ஆனால், ஒரு விடயத்தைத் தெரிவிப்பதற்கு அதற்குக் குறுகிய காலமே காணப்படுகின்றது, இது ஓரளவிற்கு தொழில்சார் தாரதரங்களைச் சிறப்பாகக் கையாள்கின்றது.

'' இவ்வாறான பின்னணியில் நான் இலங்கையின் தமிழ் மற்றும் சிங்கள பத்திரிகைகளுக்கு இந்தப் புதிய வாய்ப்பை பயன்படுத்து வதற்கான தொழிற்சார் திறமையும், ஆழமான,ஆய்வுகளுடன் கூடிய விடயங்களைத் தருவதற்கான திறனும் இல்லை எனவும் நான் கருதுகிறேன். இவர்கள் இன்று பல செய்திகளை ஒரேயொரு தகவல் மூலத்தை அடிப்படையாகவைத்து வழங்குகின்றனர். மேலும் தகவலை அறிவதில் மிகுந்த ஆர்வம் உள்ள இந்த சமூகத்தின் இன்றைய சந்தைக்கு நேற்றைய விடயங்களை வழங்குகின்றனர். இந்தக் காரணிகள் குவிந்துகொண்டிருப்பதன் காரணமாக செயற்பாட்டு வாதங்களுக்கும், இதழியலிற்கும் இடையிலான மெல்லிய கோடு அதிகளவிற்கு மங்கலாகின்றது. தேசப்பற்று என்பது தொழிற்சார் தன்மையை விஞ்சுகின்றது. சில வேளைகளில் இந்தக் குறிப்பிடத்தக்க வாதம் ஆங்கில இதழியலிற்கும் பொருந்தக்கூடியதாக காணப்படுகின்றது. ''எனினும் இந்தச் சூழ்நிலை இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமானது அல்ல. எந்த அபிவிருத்தியடைந்து வரும் நாட்டினதும் உள்ளூர் மொழிப் பத்திரிகைகளின் நிலை இவ்வாறானதாகவே

காணப்படகூடும். குறிப்பாகத் தொழில்சார் தராதரங்களை ஒப்பிடும்போது. இந்தியாவில் இது அதிகளவிற்குத் தேசியவாதமாகவும், பாகிஸ்தானில் தீவிரவாதம் தொழிற்சார் தன்மையை கைப்பற்றியதாகவும் காணப்படும். போதிய வெளிப்பாடின்மை, தகுதிவாய்ந்த மனித வளங்களைக் கவரக்கூடிய மோசமான பணியிட நிலைமைகள், மொழித் தடைகள், போன்றவையே இந்த நிலைமைக்கான சில காரணங்களாகும், பாரிய நிறுவனங்கள் இந்தப் பலவீனத்தைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மற்றும் வேறு இலக்குகளை அடைய முயலக்கூடும்,

''இலங்கையின் சிங்கள – தமிழ் ஊடகங்களின் தராதரத்தில் நாங்கள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும், பத்திரிகைகளில் மாத்திரமல்ல அனைத்திலும். பத்திரிகையாளர்களினதும் அவர்களை கட்டுப்படுத்துபவர்களினதும் தரத்தினை அதிகரிக்கவேண்டும். அதற்கு சமாந்திரமாக நாட்டிற்குப் பயனுள்ள செயற்திறன் மிக்க ஒழுங்குபடுத்தல் பொறிமுறை அவசியம். அது அனைத்து தொழில்சார் தராதரங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதாக காணப்படவேண்டும்,

தகவல் மூலம் - டெய்லி மிரர் பெப்ரவரி 2015
http://www.dailymirror.lk/64923/pm-ranil-kick-starts-focus-on-media-protocol






s ஒலிசார்ந்த காட்சி பயிற்சி நேரம் - புகைப்படம் பர்ட்ரம் நிஹால்

t தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கான மன மற்றும் உடல் பயிற்சிக்கான வெளிவாரி திட்டம் - புகைப்படம் **SLRC**






s **MTRC**
யாழ்ப்பானத்தில் இடம்பெற்ற ஒளிபரப்பு தயாரிப்பு பயிற்சி - புகைப்படம் ஊடக உதவி

t **MTRC**
யாழ்ப்பானத்தில் வானொலி பேட்டி பயிற்சி - புகைப்படம் **www. mediahelpingmedia. com**

# ஊடக செயற்பாடுகள் குறித்த கற்கை நெறிகள் கிடைத்தல்

இதழியல் துறையில் சர்வதேச தராதரம் இல்லை என்ற அடிப்படையில் இலங்கையின் ஊடக தொழிற்துறை வகைப்படுத்தப்படுகின்றது- துல்லிய தன்மை, பக்கச்சார்பின்மை மற்றும் பொறுப்புணர்வு. இவற்றிற்கு நாட்டின் இதழியல் கல்வி- அல்லது அவ்வாறான ஒன்று இல்லாமையே நேரடியான காரணம் என தெரிவிக்கமுடியும், வெகுஜன ஊடகங்கள் எவ்வாறு எங்கள் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளதை கருத்தில் கொள்ளும்போது வலுவாக கட்டமைக்கப்பட்ட இதழியல் கல்விக்கான தேவை முன்னர் எப்போதையும் விட அதிகமாக காணப்படுகின்றது.- கலாநிதி பிரதீப் வீரசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெகுஜன ஊடக கற்கை பீடத்தின் வெகுஜன ஊடக கற்கைளுக்கான சிரேஸ்ட விரிவுரையாளர் (பாளி வளாகம்)

பல வருட உள்நாட்டு யுத்தம் மற்றும் துருவமயப்படுத்தல் காரணமாக அச்சமடைந்திருக்கும் நாட்டில் இதழியலின் பணி என்பது மிகவும் முக்கியமானது. அரசாங்கத்தின் கடமைகள் மற்றும் அதன் தோல்விகளை

ஊடகங்கள் சுட்டிக்காட்டவேண்டும். மேலும் மாணவர்கள், பத்திரிகையாளர்கள், குறிப்பாக சிவில் சமூகத்திற்கு இந்த நோக்கத்தை அடைவதில் வழிகாட்டுதல்களை வழங்கவேண்டும்,-

கலாநிதி எஸ் ரகுராம்,கிழக்கு பல்கலைகழகத்தின் திருகோணமலை வளாகத்தின் தொடர்பாடல் மற்றும் வர்த்தக கற்கைக்கான பீடத்தின் பீடாதிபதி.

இலங்கையின் அரசியல் நெருக்கடி ஊடக கல்வியின் சொல்லாடல் மீது பாரிய சூழமைவு தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. இந்த விடயத்தில் சட்ட மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சூழலில் இலங்கையின் சீர்திருத்தவாதிகள் செய்யக்கூடிய விடயங்களிற்கு எல்லையுண்டு. சுட்டிக்காட்டப்பட்ட பல விவகாரங்கள்- நீண்ட கால கல்விசீர்திருத்தங்களின் மூலம் மாத்திரம் தீர்வை காணக்கூடிய பரிமாணங்களைக் கொண்டுள்ளன. உதாரணத்திற்குத் தொழிலில் காணப்படும் பாலினம் குறித்த உணர்வு பூர்வமின்மை அல்லது இன அடிப்படையிலான பக்கச்சார்பையோ ஒரே இரவில் மாற்றிவிடமுடியாது. சமகால சீர்திருத்த முயற்சிகளின்போது இனங்காணப்பட்டது போன்று அடிப்படை மாற்றங்களுக்கு வகுப்பறையில் மாத்திரம் தீர்வைக் காணமுடியும. அங்கே எதிர்கால பத்திரிகையாளர்களும், ஊடகப்பணியாளர்களும் உருவாக்கப்படுகின்றனர்.

கிசாலி பின்டோ ஜயவர்தன மற்றும் ஜெகான் குணதிலக- தாக்குதலுக்கு உட்பட்டுள்ள ஊடகத்தில், இலங்கையில் ஜனநாயகம், ஆட்சி மற்றும் சீர்திருத்தம்

## 4.04 தரப்பட்ட மாணவர்களிற்கு கல்விபடிப்புகள் கிடைப்பது

வெகுஜன தொடர்பாடல் என்பது 1973 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் நிலை அளவில் கற்பிக்கப்பட்டு வந்தது. அந்த ஆண்டிலேயே களனி பல்கலைகழகம் தனது பட்டப்படிப்பை ஆரம்பித்தது. இன்று முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்குப் பல கற்கை நெறிகள் காணப்படுகின்றன. எனினும், இங்கு முக்கிய விடயம் என்பது அவற்றின் தராதரமே. பல்கலைகழகங்களால் நடத்தப்படுபவகைள் உட்பட.

இதழியல் மற்றும் வெகுஜன ஊடக கற்கைநெறிகள் பல பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு அளவில் வழங்கப்படுகின்றன. பல டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளும் காணப்படுகின்றன. இதனை வழங்கும் ஸ்தாபனங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. (வரிசையில் அல்ல)

- களனி பல்கலைகழகத்தின் வெகுஜன தொடர்பாடல் துறை
- கொழும்பு பல்கலைககழகத்தின் கலைப்பீடத்தின் இதழியல்பிரிவு
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் பாலி வளாகத்தின் வெகுஜன ஊடக துறை
- ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிங்களம் மற்றும் வெகுஜன தொடர்பாடல்துறை
- இலங்கை திறந்த பல்கலைககழகத்தின் சமூக கல்விக்கான துறை,
- சப்ரகமுவ பல்கலைகழகத்தின் மொழிகள் துறை.
- யாழ்ப்பாண பல்கலைககழகத்தின் கலைப்பீடத்தின் மொழியியல் துறை
- தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் சமூகவிஞ்ஞான துறை
- ரஜரட்டை பல்கலைக் கழகத்தின் மானுடவியல் துறை.

மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பல்வேறு துறைகள் குறித்த சுருக்கம் பிரிவு—தரப்பட்டுள்ளது. பட்டப்படிப்பு அளவில் பல்கலைக்கழக கல்வி என்பது அரசாங்கத்தினால் மக்களின் வரிப்பணத்தை முதலீடு செய்து இலவசமாக வழங்கப்படுகின்றது. பட்டப்பின்படிப்பு அளவில் கட்டணங்கள் அறவிறப்படுகின்றன ஆனால் இவை பலராலும் செலுத்தக்கூடியளவில் காணப்படுகின்றன.

பல கற்கை நெறிகள் குறித்த பொதுவான கருத்தாக தற்போதைய தேவைகள் மற்றும் ஊடக தொழிற்துறையில் காணப்படும்

யதார்த்தத்தைப் பிரதிபலிப்பனவாக அவை காணப்படவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர்களில் அனேகமானவர்கள், ஊடக தொழிற்துறையில் தொழில் ரீதியிலான அனுபவம் அற்றவர்கள் என்பது இதற்கு ஒரு காரணம், மேலும் அனேக பல்கலைகழகங்கள் இதழியலிற்கு பதில் வெகுஜன தொடர்பாடல் குறித்தே கவனம் செலுத்துகின்றன என்பதும் இன்னொரு தடையாக காணப்படுகின்றது. இதழியலில் உரியவிதத்தில் தகுதிகளைக்கொண்ட. ஆசிரியபீட அனுபவங்களைக் கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் இலங்கையில் இல்லை.

மாறாக பலவருட தொழிற்துறை அனுபவத்தைக் கொண்ட பல பத்திரிகையாளர்கள் முழுமையான அல்லது பகுதிநேர பல்கலைக்கழக ஆசிரியர்களாக பணியாற்றுவதற்கான முறைப்படியான கல்வித்தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை.

2012 இல் விமர்சகர்கள் கிசாலி பின்டே ஜயவர்தனவும், ஜெஹான் குணதிலகவும், இலங்கையில் மூன்றாம் நிலை இதழியல் கல்வி மற்றும் வெகுஜன கல்வியின் பாடத்திட்டங்கள் குறித்து ஆய்வொன்றை நடத்தினர். அதில் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்'' "பயிற்றுவிக்கப்படுவதற்கும் ஊடகம் செயற்படும் விதம் குறித்த யதார்த்தத்திற்கும் இடையிலான பாரிய இடைவெளி காரணமாக இலங்கையில் ஊடக கல்வி பலவீனமான நிலையில் உள்ளது என்பது ஒரு சீரான கருத்தாக காணப்படுகின்றது. ஊடக பயிற்சி என்பது ஒழுக்கநெறிகள், கொள்கைகள் மற்றும் தொழில்சார் கோவையைப் பின்பற்றுதல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என சரியான கருத்து முன்வைக்கப்படுகின்றது. இந்த ஸ்தாபனங்களிற்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகள் ஒழுக்க தாரதரங்களை முன்னிறுத்துவதில் சிறிதளவும் வெற்றியளிக்கவில்லை என்பது குறித்து பரந்துபட்ட இணக்கப்பாடு காணப்படுகின்றது.

இந்த இடைவெளிக்கான மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

இதழியலில் தகுதிபெற்ற போதியளவு பலகலைக்கழக ஆசிரியர்கள் இன்மை (ஆசிரியபீட அனுபவமின்மை)

பல்கலைக் கழகங்களில் காணப்படும் காலத்தால் பிந்திய பாடதிட்டங்கள்

(தற்போதைய சூழ்நிலையை விட ஒன்றிரண்டு வருடங்கள் பின்தங்கியிருப்பதற்குப் பதில் எங்கள் பாடதிட்டங்கள் ஓரிரு தசாப்தங்களால் பின்நிற்கின்றன)

ஊடக தொழிற்துறைக்கும் கல்வித்துறையினருக்கும் இடையிலான உரிய தொடர்புகள் இன்மை, (பல்கலைகழகங்களின் பழமைவாதபோக்கே காரணமாகயிருக்கலாம்)

165 Media Education: A Curricular Review, by Kishali Pinto-Jayawardena and Gehan Gunatilleke, in Embattled Media: Democracy, Governance and Reform in Sri Lanka (Sage Publications, 2015), pp 245-266

BOX 20

## இதழியல் கல்விக்கான பொருத்தமான பாடத்திட்டம்?

இதழியல் எவ்வாறு வெகுஜன தொடர்பு என்ற விடயத்திற்குள் பொருந்துகின்றது என்பதைப் புரிந்துகொள்ளச் செய்வதற்குப் பதில், பாடத்திட்டம் மாணவர்களைப் பத்திரிகை தொழிலில் ஈடுபடுவதற்குத் தயார் படுத்தவேண்டும், இதழியல் குறித்த மிகத் தெளிவான வரைவிலக்கணம் பொதுமக்கள் தொடர்பு, விளம்பரங்கள் மற்றும் ஏனைய விதமான தொடர்பாடல்கள் குறித்த படிப்பை உள்ளடக்கியிருக்கவில்லை.

பல்கலைக்கழகங்களில் இதழியல் கற்கை என்பது மூன்று அச்சுக்கலை மையமாக வைத்து பொதுவாக உருவாக்கப்படுகின்றது

- இதழியலின் விதிமுறைகள், வழக்காறுகள்,சாதனங்கள், தாரதரங்கள் மற்றும் நடைமுறை செயற்பாடுகள் தொடர்பான அச்சு,

பத்திரிகை துறை நடைமுறையின் சமூக, கலாசார, பொருளாதார,சட்ட மற்றும் ஒழுக்க அம்சங்களை வலியுறுத்தும் அச்சு,

- உலக அறிவு மற்றும் பத்திரிகையாளர்களின் அறிவுசார் சவால்களை சந்திப்பதற்கான அச்சு

பத்திரிகைத் துறை நடைமுறைகள் என்பது அறிவுசார்ந்த ரீதியில் சவாலானது என்பதே பாடத்திட்டத்தின் அடிப்படை புரிந்துணர்வாக காணப்படவேண்டும். குறிப்பாகப் பத்திரிகையாளர்கள் முன்னர் அறிந்திராத தகவல்களை மிகவும் துரிதமாக உட்கிரகித்துக்கொள்வதற்கும் அதிகாரதன்மையுடன் அதனை வெளியிடுவதற்கும்,

- இதழியல் பாடத்திட்டம் இதழியலின் அடிப்படைகள் என அழைக்கப்படும் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படவேண்டும். இவை அறிவுபூர்வமான மற்றும் கைவினைத் திறன்களை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டவை. இந்த அடிப்படைகள் பின்வருபவனவற்றை கொண்டுள்ளன,

- விமர்சனபூர்வமாக சிந்திப்பதற்கான ஆற்றல், கிரகித்தல், ஆராய்தல், இணைத்து நோக்கல், மற்றும் அறிமுகமில்லாத விடயங்களை மதிப்பீடு செய்தல், ஏனையவர்களுக்குத் தெளிவுபடுத்துதல். மேலும் ஆதாரங்கள் குறித்த அடிப்படை அறிவு மற்றும் ஆராய்ச்சி முறைகள்.

- தெளிவாக எழுதும் திறன், விவரிப்பு, விளக்க மற்றும் பகுப்பாய்வு முறைகள்

- உள்நாட்டு, சர்வதேச, பிராந்திய, பிரதேச அரசியல், பொருளாதார, கலாசார, மத மற்றும் சமூகநிறுவனங்கள் குறித்த மற்றும் விவகாரங்கள் குறித்த அறிவு.

- மற்றும் நடப்பு விவகாரம், விடயங்கள், குறித்த அறிவு, வரலாறு மற்றும் புவியியல் குறித்த பொதுஅறிவு.

BOX 21

## Ideal Curricula for Journalism Education?

The curricula should be designed to prepare students to do journalism rather than to understand how journalism fits into the field or system of mass communications. A strict definition of journalism education does not include coursework in public relations, advertising, or other forms of communication.

Journalism education in universities is normally organized around three curricula axes or lines of development:

- an axis comprising the norms, values, tools, standards, and practices of journalism;
- an axis emphasizing the social, cultural, political, economic, legal and ethical aspects of journalism practice; and
- an axis comprising knowledge of the world and preparation to meet journalism's intellectual challenges.

A fundamental understanding of the curricula is that the practice of journalism is intellectually challenging, especially in the way it requires journalists to assimilate unfamiliar information rapidly and well enough to report on it with authority.

A curriculum in journalism education should include units in the 'foundations of journalism', which are designed to promote intellectual and craft skills. These foundations include:

- an ability to think critically, incorporating skill in comprehending, analyzing, synthesizing, and evaluating unfamiliar material quickly and well enough to explain it to others, as well as a basic understanding of evidence and research methods;
- an ability to write clearly, using narrative, descriptive, and analytical methods;
- a knowledge of local, regional, national and international political, economic, cultural, religious, and social institutions and issues; and
- a knowledge of current affairs and issues, and a general knowledge of history and geography.

**Source: Model Curricula for Journalism Education. UNESCO, 2007**
http://www.unesco.org/new/en/communication-and-information/resources/publications-and-communication-materials/publications/full-list/model-curricula-for-journalism-education/

# சிவில் சமூக அமைப்புகளின் பிரசன்னம்

## 4.06 சிவில் சமூக அமைப்புகள் ஊடகங்களை முறையாக கண்காணித்து வருகின்றன

இலங்கையில் சிவில் சமூக அமைப்புகள் ஊடக உள்ளடக்கம் மற்றும் அதில் வெளியிடப்படும் தகவல்கள் போன்றவற்றை அவ்வப்போது அவதானித்து வந்துள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு தொனிப்பொருள் சார்ந்து அல்லது சில பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வித அவதானிப்புகள் இடம்பெற்றுள்ளன.

- ஊடகங்களில் இடம்பெறுகின்ற விடயங்களை பால் நிலை அல்லது பெண் உரிமை ஆகிய கண்ணோட்டத்தில் அணுகுதல். இவ்வகையான செயலை women and media collective மேற்கொண்டது.

- மேலும் இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெ'னல் நிறுவனமானது ஊடக விடயங்களை ஊழல் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய தலைப்புகள் கோணத்தில் அணுகியிருந்தது. உதாரணமாக, தேர்தல் காலப்பகுதியில் ஊடகங்களின் செயற்பாடுகள்.

- சர்வதேச ஊடக வலையமைப்புகள் (உதாரணம்,IFJ) அரசாங்கங்களுக்கிடையிலான

171 http://womenandmedia.org

172 See, for example, electoral integrity report on the Presidential Election in January 2015: http://www.tisrilanka.org/wp-content/uploads/2015/02/PPPR_2015_ENG_Final.pdf

அமைப்பு (உதாரணம் Unicef) அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (உதாரணம் Save the children போன்றன), சில நேரங்களில் சிறுவர்கள் தொடர்பான ஊடக ஆக்கங்களையும் முன்னெடுத்துள்ளன. ஊடக சுதந்திரம் மனித உரிமைகள் தொடர்பிலும் செயற்பட்டுள்ளன.

இருப்பினும் ஊடக உரிமைகள் தொடர்பில் முறையான மேற்பார்வைகளோ அல்லது கலந்துரையாடல்களோ இடம்பெறவில்லை. இருப்பினும் தற்சமயம் பல்வேறு வகையான அமைப்புகளினாலம் புலமை சார்ந்தவர்களை உள்ளடக்கிய குழுக்களினாலும் ஊடகம் பற்றிய பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தேசிய பிரச்சினைகள் தொடர்பில் காத்திரமான கலந்துரையாடல்கள் ஊடகங்களில் இடம்பெற்றுவருகின்றன. இதன் காரணமாக வாசகர்கள் அல்லது நேயர்கள் சில புரிதல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. இதன் காரணமாக எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதார போக்குகள் பற்றி எதிர்வுகூறக்கூடியதாக இருக்கின்றது. எனவே, தேசிய அபிவிருத்திகள் தொடர்பில் முன்கூட்டிய உபாய ரீதியான திட்டமிடுவதற்கான வழிகாட்டல்களை இவை வழங்குகின்றன.

பொதுமக்களது நலனை அடிப்படையாகக் கொண்டு முறையாக ஊடகங்களை கண்காணிக்கக் கூடிய, பகுப்பாய்வு செய்யக் கூடிய மற்றும் ஆவணப்படுத்தக் கூடிய ஆராய்வுகளை மேற்கொள்ளக் கூடிய அர்ப்பணிப்பு மிக்கதொரு சிவில் சமூகம் இலங்கைக்கு அவசியப்படுகின்றது. இவற்றின் செயற்பாடுகள் மூலம் பல்வேறு விதமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். உதாரணமாக, ஊடக கற்கைகளுக்கான இந்திய நிலையம் (CMS India) அல்லது இந்திய இணையத்தளமான 'TheHoot' மேற்கொள்ளப்படும் விமர்சனங்களை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்கள் மற்றும் பரிந்துரை நிகழ்ச்சித்திட்டங்கள். இலங்கையில் ஊடகம் தொடர்பில் தற்சமயம் காணப்படுகின்ற குறைவான கற்கைகளை மேம்படுத்துவதற்கு இவை உதவி செய்யலாம். இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள், பரிந்துரைக் குழுக்கள், கல்வியியலாளர்கள் ஆகியோர் பிரதான ஊடகம் தொடர்பில் தமது ஈடுபாடுகளை மேம்படுத்துவதுடன், அவற்றின் செயலாற்றுகைகளையும் கண்காணிக்க வேண்டும். இது பல்வேறு

[173] http://www.veriteresearch.org/the-media-analysis.cfm

[174] http://www.cmsindia.org/

[175] http://www.thehoot.org/

**4.07** கருத்துச் சுதந்திரம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புகள் நேரடியான பரிந்துரைகளை வழங்குகின்றன.

மட்டங்களில் நிகழலாம். உதாரணமாக, ஊடக உள்ளடக்கத்திற்கான பங்களிப்புகள், மின்னியில் ஊடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல், ஊடகத் தொழிற்துறைக்கு ஆலோசனைகளை வழங்குதல் அல்லது அதன் தொழில்வாண்மை தராதங்களை மேம்படுத்தல் அடிமட்ட மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமான களங்களை அமைத்துக்கொடுத்தல், ஊடக உள்ளடக்கத்தினை மேற்பார்வை செய்தல் போன்றன.

கருத்துச் சுதந்திரம் தொடர்பில் ஊடக உரிமைகள் அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் ஆகியன நேரடியான பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ளன. சிலவேளைகளில் இவற்றை சுயமாக மேற்கொள்கின்றன. சிலவேளைகளில் ஊடக அமைப்புகள் மற்றும் ஊடகத் துறைசார்ந்த தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பங்காண்மையுடன் இவ்வித செயல்களில் ஈடுபடுகின்றன.

உதாரணமாக:

- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA): இது குறிப்பிடக் கூடிய ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. அதாவது, சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி சிறுபாண்மையின மக்களுக்கெதிராக எவ்வாறு வெறுப்பூட்டக்கூடிய பேச்சுக்களின் மூலமாக அழுத்தங்களைப் பிரயோகித்து கருத்துச் சுதந்திரம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மேலும் இலங்கையில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி ஆபத்தான பேச்சுக்கள் அல்லது உரைகள் பரப்பப்படுகின்ற

176 http://www.cpalanka.org/freedom-of-expression-on-the-internet-in-sri-lanka/

177 http://www.cpalanka.org/liking-violence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka/

178 http://www.cpalanka.org/saving-sunil-a-study-of-dangerous-speech-around-a-facebook-page-dedicated-to-sgt-sunil-rathnayake/

179 http://www.rightsnow.net/?page_id=4851

180 http://www.humanrights.asia/countries/sri-lanka

முறை.

- **Rights now collective for democracy:** இது இலாபம் கருதாத பக்கச்சார்பற்ற அமைப்பாகும். ஊடக தொழில்வாண்மை மிக்கவர்கள் சட்டம், பௌதீக, எண்மிய பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது இவற்றை வெற்றிகொள்வதற்கு தமது ஆற்றல்களை மேம்படுத்தும் முறை தொடர்பில் செயற்பட்டு வருகிறது.

- ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (**AHRC**): ஹொங்கொங்கை மையமாகக் கொண்டு செயற்படும் இந்நிறுவனம் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் செயற்பட்டுள்ளது. மேலும் ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் தொடர்பிலும் செயற்பட்டுள்ளது.

- சகலவிதமான பாரபட்சங்கள் மற்றும் இனவாதம் ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச அமைப்பு (**IMADR**): இது சர்வதேச மனித உரிமைகள் அமைப்பாகும். இதன் தலைவராக இலங்கையர் ஒருவர் செயற்படுகின்றனார். கருத்துச் சுதந்திரம் தொடர்பான அவதானிப்புகளை தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கி வருகின்றது.

- இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் (**JDS**): இதுவே ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பாகும். தமது பணி சார்ந்த அச்சுறுத்தல்களையும் கொடுமைகளையும் எதிர்நோக்கியதன் விளைவாக இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பிலானது. 2009 ஜூலையில் பேர்லின், ஜேர்மனியில் இக்குழு தோற்றுவிக்கப்பட்டது. மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகளில் ஈடுபடுகின்றது. இவற்றுள் தமது இணையத்தளத்தின் மூலம் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களையும் வெளியிட்டு வருகின்றது.

மேலும் குருவுயுபோன்ற அமைப்புகளும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டு வருகின்றன.

181 http://imadr.org/activity/srilanka/

182 http://www.jdslanka.org/index.php/2012-01-30-11-50-09

**4|08** சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனது குரல் ஒலிப்பதற்கும் சிவில் சமூக அமைப்புகள் உதவுகின்றன

கடந்த அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அண்மைக் காலமாக ஊடகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் பல பாதிப்புக்களை எதிர்கொண்டன. பிரதான ஊடகங்கள் மேற்கொண்ட குரோத நடவடிக்கைகளின் காரணமாக, சில சிவில் சமூக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன மாற்றீட்டுத் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டன. உதாரணமாக, இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தளங்களையும் சமூக வலைத்தளங்களையும் பல பயன்படுத்தின.

பிரதான ஊடகங்களின் உதவியின்றியும் அவற்றின் தலையீடுகள் அற்ற நிலையிலும் சில சிவில் சமூக அமைப்புகள் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமது நடவடிக்கைகளை அடிமட்ட மக்கள் மத்தியில் மேற்கொண்டன. இதற்கென இலங்கையின் பாரிய அபிவிருத்தி அமைப்புகளில் ஒன்றான சர்வோதய தனது உப நிறுவனம் மூலமாக சர்வோதய பியூசன் என்றவொரு நிகழ்வினை மேற்கொண்டது.

[163] http://fusion.lk

## விதப்புரைகள்

- கல்வியியலாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியன இணைந்து ஊடகம் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இவற்றினால் கிடைக்கப்பெறுகின்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஊடகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மேம்படுத்தப்படல் வேண்டும். இவ் ஆய்வுகளில் ஊடகத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள், சமூகவியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றுதல் வேண்டும்.

BOX 22

## ஊடகக் கல்வி அறிவு என்றால் என்ன?

ஊடகம் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் ஆகியன பரவிக் காணப்படுவதன் காரணமாக மனித தொடர்பாடல் முறைகள் மற்றும் நடத்தை ஆகியவற்றில் பாரிய மாற்றங்களை இவை ஏற்படுத்தியுள்ளன.
மரபு ரீதியான ஊடகம் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவை தொடர்பில் தேர்ச்சிகளை ஏற்படுத்தி மக்களை வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டதாக ஊடகக் கல்வியறிவு இருத்தல் வேண்டும் (அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகள் போன்றன). இது பின்வரும் அம்சங்களை அல்லது கற்றல் ரீதியான விளைவுகளை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும்.

- ஜனநாய சமூகமொன்றில் ஊடகத்தின் வகிபாகம் மற்றும் அதன் செயற்பாடுகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்.

- இத்தகைய செயற்பாடுகளை எந்த நிலைமையின் கீழ் ஊடகத்தினால் வழங்க முடியுமென்பதைப் புரிந்துகொள்ளுதல்.

- ஊடக உள்ளடக்கங்களை விமர்சன பூர்வமாக மதிப்பீடு செய்தல்.

- சுய கருத்து வெளிப்பாடு மற்றும் ஜனநாயக ரீதியான பங்குபற்றுதல் ஆகியவற்றில் ஊடகத்தை ஈடுபடுத்துதல்.

- பயன்படுத்துனர்களினால் உருவாக்கப்படுகின்ற உள்ளடக்கங்களை மீளாய்வு செய்வதற்கான திறன்கள் (தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் திறன்கள் உள்ளடங்கலாக).

மனித உரிமைகள் சர்வதேச பிரகடனத்தின் 19 ஆம் உறுப்புரையை யதார்த்தபூவர்மாக உணர்ந்து அனுபவிப்பதற்கு தரமான ஊடகம் மற்றும் தகவல்களைப் பெறல் ஊடகம் மற்றும் தொடர்பாடல் வலையமைப்புகளின் பங்குபற்றுதல் ஆகியன அவசியமாகும்.

மூலம் : யுனஸ்கோ இணையத்தளம்.
http://www.unesco.org/new/en/communication-and-information/media-development/media-literacy/

165

## ஊடக கல்வியை மேம்படுத்தல்

நவீன காலத்தில் வாழுகின்ற சகல மக்களும் ஊடகம் எவ்வாறு செயற்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது சிறப்பானதாகும். இதனை ஊடகக் கல்வி என்றழைக்கின்றோம். அதாவது, ஊடகங்களில் காணப்படுகின்ற பல்வேறு விடயங்களை அறிந்து அவை தொடர்பில் விமர்சனங்களை மேற்கொள்வதாகும்

.ஊடகக் கல்வியானது ஊடகத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, ஊடகங்களில் வெளிவருகின்ற விடயங்களை நுகர்வோரும் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இவை தொடர்பிலான மக்கள் பெற்றுக்கொள்கின்ற தேர்ச்சியானது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு அவசியமான விடயங்களுள் ஒன்றாகும்.

இலங்கையில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத்தின் பிரகாரம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 97.7மூ ஆகக் காணப்படுகிறது. ஊடகக் கல்வி தொடர்பில் நாடுகள் பற்றிய ஆய்வுகளோ, புள்ளிவிபரங்களோ முறையாகக் காணப்படாத பட்சத்திலும் இவை தொடர்பான அறிவு குறைவாகவே காணப்படுவதாக சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சில தொழில்வாண்மைமிக்க ஊடகவியலாளர்கள் மத்தியிலும் இடைநிலைப் பாடசாலைகளில் ஊடகக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பிப்பவர்கள் மத்தியிலும் இவ்வித நிலைமையே காணப்படுகிறது.

ஊடகக் கல்வியானது இலங்கையில் ஒரு காத்திரமான விடயமாகத் திகழ்வது முக்கியமெனை யுனெஸ்கோ, ஐ.பீ.டீ.சீ. ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் விஜானந்த ஜயவீர தெரிவிக்கின்றார். ஊடகக் கல்வியின் பிரச்சாரப் பணியில் ஊடகமும் பங்காளராகச் செயற்பட முடியும். இருப்பினும் எமது கல்வி முறையின் அடிப்படைக் கடப்பாடுகளுள் ஒன்றாக ஊடகக் கல்வியும் இருத்தல் வேண்டும். ஊடகத்தைப் பயன்படுத்துபவர்கள் மத்தியில் ஊடகக் கல்வியை மேம்படுத்தும் முகமாக தேசிய தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றுள் வாராந்த ஊடக விமாசன நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். பொதுமக்கள் மத்தியில் ஊடகம், செய்திகள் தொடர்பான ஒழுக்கநெறிகள் ஆகியன தொடர்பில்

நிபுணர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அனுபவமிக்க ஊடகவியலாளர்கள் போன்றவர்கள் தமது கருத்துக்களை இந்நிகழ்ச்சிகளின் பொழுது தெரிவிக்க முடியும்.

அதேபோல் நீண்டநாள் அடிப்படையில் பாடசாலைகளில் இடைநிலைக்கல்வி மட்டத்தில் ஊடகக் கல்வி வழங்கப்படல் வேண்டும். 2006 ஆம் ஆண்டில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியென்ற பாடம் க.பொ.த. (உ.த) மற்றும் (சா.த) ஆகியவற்றில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு தசாப்தம் கடந்த நிலையில் இது தொடர்பான மீளாய்வுகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இருப்பினும் இப்பாடத்திட்டம் தொடர்பில் திரு.ஜயவீர அவர்கள் சந்தேகம் கொண்டவராகவே காணப்படுகின்றார். இது பக்கச்சார்புள்ளதாகவும் ஊடகக் கல்லி தொடர்பில் அரிதாகவும் செயற்படுவதாகவே இவர் தெரிவித்தார். இப்பாடத்திற்கு வழங்கப்பட்ட தலைப்பானது அதாவது, தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி என்ற தலைப்பானது ஊடகக் கல்வி தொடர்பான புரிதல்களை இடைநிலை மாணவர்கள் மத்தியில் குறைவாகவே எடுத்துரைப்பதாகக் காணப்படுகிறது (ஊடகக் கல்வியானது பல்கலைக்கழக மட்டங்கள் வரையில் விமர்சன அடிப்படையில் தொடரக் கூடியதொரு விடயமாகவிருத்தல் வேண்டும். இது விமர்சனக் கோட்பாடுகள் மற்றும் சமூகவியல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகவிருத்தல் வேண்டும்).

ஊடகக் கல்வியானது ஊடகச் செயற்பாடுகள் மற்றும் அறிக்கையிடும் தன்மை ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாக பாடசாலைகளில் ஊடகக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். காத்திரமான சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு சிவில் சமூகத்தின் முக்கிய அங்கமாக இது காணப்படுகிறது.

இடைநிலைக் கல்வி மட்டத்தில் ஊடகக் கல்வியைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்கள் பின்வரும் புரிதல்களைப் பெற்றுக்கொள்வர்:

- ஜனநாயகத்தில் ஊடகத்தின் செயற்பாடு
- எவ்விதமான நிலைமைகளின் கீழ் ஊடகம் அவற்றைப் பிரயோகிக்க முடியும்.
- அவ்வித செயற்பாடுகள் தொடர்பில்

ஊடக அறிக்கையை எவ்வாறு மதிப்பீடு செய்வது.

- பல்வேறு விதமான ஊடகங்களுக்கு அவற்றை பயன்படுத்துபவர்களை அடிப்படையாகக் கொண்டு ஊடக உள்ளடக்கங்களை உருவாக்குவதற்கு அவசியமான அடிப்படைத் திறன்கள்.

- நீண்டகால அடிப்படையில் ஊடகம் தொடர்பில் மக்கள் எவ்வாறு ஈடுபட முடியும், ஊடக அறிவை மேம்படுத்துவதன் மூலம் எவ்வாறு ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும். மக்களை அணிதிரட்டி அவர்களின் பங்களிப்புகள் மூலம் அரசாங்கம் மற்றும் அரசியல் ஆகியவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முறைகள்.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஊடக ஆய்வாளருமான காலஞ்சென்ற திலக் ஜயரத்ன மற்றும் சரத் கிலபொள ஆகியோர் 2012 இல் எழுதிய ஆக்கமொன்றின் மூலம் இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்:

"இலங்கையில் ஊடகக் கல்வியானது மோசமான நிலையில் காணப்படுவதாக நாம் நம்புகின்றோம். ஏனெனில் இது தொடர்பில் தேசிய கொள்கையொன்று இல்லை. இது ஊடகத் துறையின் தேவைப்பாடுகளை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. நாட்டின் தேவைகளை உள்ளடக்கியதாகக் காணப்படவில்லை. ஊடகம் என்றால் என்ற விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்ட போதிலும் கூட ஊடகத்திலேயே இதற்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. நாட்டில் முக்கியத்துவம் மிக்க பல பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்கின்ற பொழுது ஊடகக் கல்வியானது பல்வேறு பிரச்சினைகளுக்கான காரணியாகவும் அவற்றுக்கான தீர்வாகவும் காணப்படுகின்றது. இத்தகைய பின்புலத்தில் ஊடகக் கல்வியை ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் கல்வியியலாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. இவற்றுள் ஊடகச் சுதந்திரம் தொடர்பான போராளிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சட்ட நடவடிக்கை தொடர்பான தொழில்வாண்மை மிக்கவர்கள், சிவில் சமூகம், சமயத் தலைவர்கள், புத்திசாலிகள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் போன்ற பங்கீட்டுப்பாட்டாளர்கள் ஈடுபடல் வேண்டும்;"

## விதப்புரைகள்

- 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி என்ற பாடம் தொடர்பிலான மதிப்பீடொன்றை கல்வி அமைச்சு மேற்கொள்ளல் வேண்டும். இக்கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் மறுசீரமைக்கப்படல் வேண்டும். எதிர்கால சிவில் சமூகத்தின் சிவில் கல்வியின் முக்கிய அங்கமாக ஊடகக் கல்வி திகழ்கின்றது என்ற அடிப்படையில் இவ்வித மீளாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- அரசாங்கம், ஊடகத் தொழிற்துறையைச் சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்களது அமைப்புகள் ஆகியன மக்கள் மத்தியில் ஊடகக் கல்வியை மேம்படுத்தல் வேண்டும். இது முக்கியமானதாகும். இதனடிப்படையில் விமாசன பூர்வமான பல மக்கள் இவ்வித செயற்பாடுகளை மேற்கொண்டு காத்திரமான பங்களிப்புகளை நல்க முடியும். இதன் மூலம் பிரதான ஊடகச் செயற்பாடுகள் மற்றும் எண்மிய ஊடக ஆக்கங்கள் போன்றன தொடர்பில் மக்களது பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி முறைகள் மூலம் ஊடகக் கல்வியை மேம்படுத்தக் கூடிய விதத்தில் தேசிய கொள்கையொன்றினை அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். கல்வியின் ஒட்டுமொத்த நோக்கங்களுள் ஊடகக் கல்வியை மேம்படுத்துவதும் ஓர் அங்கமாகத் திகழல் வேண்டும்.







s பொது மன்றத்தில் டாக்டர் ஹரினி அமரசூரிய அவர்கள் பேசியது

t பொது மன்றத்தில் டாக்டர் கே.டபினரஞ்சன அவர்கள் பேசியது





s சாதாரண குடிமக்கள் குரலும் அரசியல்வாதிகளின் ஊடக மேலாதிக்கமும்

t தொலைக்காட்சி நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் வழிகாட்டல் - புகைப்படம் **SLRC**

# Professional capacity building and supporting institutions that underpins freedom of expression, pluralism and diversity

## Collation of Recommendations

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 4.1 Media professionals can access training appropriate to their needs | 1. The mismatch between the media industry's needs and what is being provided by way of training should be studied further to identify strategies for making future training more relevant and responsive. At the same time, both media and journalist training should take into account rapid changes taking place in media content production and consumption so as to prepare Lankan media practitioners and managers to cope with such change. The government and development donors should suppot a medium term (five year) Strategic Plan for training in the country.<br><br>2. The media industry needs to better recognise the value of greater professionalism and human resource development as integral to media sector's development. As part of this, media companies should assign a higher priority to in-service training (but not necessarily in-house training) including subject specialisation of its journalistic, editorial and managerial staff. They should also allocate more resources, and also actively look for more training opportunities and scholarships.<br><br>3. Media companies should also review and revise their human resource policies and practices. Among other things, emphasis should be placed on continuing education of journalists. Salary increments and promotions should be linked more logically and transparently to work performance and acquisition of new skills. |

| Indicator | Relevant Recommendation |
|---|---|
| 4.1 Media professionals can access training appropriate to their needs | 4. Media companies, the government and international aid donors should support the existing media training facilities – such as the Sri Lanka College of Journalism (SLCJ), Sri Lanka Media Training Institute (SLMTI) and the Media Resources and Training Centre (MRTC) in Jaffna – to provide subsidized training of a quality standard which many individuals cannot afford on their own. This should include funding to train more media trainers, and to produce some journalism education text books in the local context. A trust fund created by government through Parliament could do this without compromising editorial independence.<br><br>5. Under a new broadcast licensing system, the proposed independent broadcast regulator, should consider making it an obligation for all licence holders to support a certain level of media training – whether inhouse or in specific institutions.<br><br>6. The Sri Lanka Press Institute (SLPI), as the print media industry's umbrella organisation, should expand its ability to strengthen capacities of journalists with the support of development donors, media companies and international advocacy groups. This can transform SLPI into an effective platform for implementing media sector reforms. |
| 4.2 Media managers, including business managers can access training appropriate to their needs | 7. Media companies should invest more in recruiting and further training professional media managers with a view to developing media management capacity in the industry. |

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 4.3 Training equips media professionals to understand democracy and Development | 8. Lankan media companies, in partnership with international media development organisations, should come up with appropriate training programmes for journalists to better understand the issues and interlinkages of democracy, governance and development. This should include non-technical and non-legalistic coverage of Sri Lanka's obligations under international human rights and humanitarian treaties that it has signed and ratified. |
| 4.4 Academic courses accessible to wide range of students | 9. The Ministry in charge of Higher Education, along with the University Grants Commission and other stakeholders, should review all curricular related to journalism, mass media and mass communication at public universities with a view to identifying the gaps in knowledge, skills and resources. After such a review, these institutions should embark on a process of curriculum reform and facilities upgrading so as to enable formal journalism education to meet intellectual challenges and to be responsive to the needs of media industry and society at large.<br><br>10. Higher education institutions and media training centres should expand their scope to include new modes of learning, including online training modules and e-learning courses, so that students have the option of more flexible learning. Future training should include elements of computer assisted journalism.<br><br>11. Universities and media advocacy groups should collaborate in producing a series of text books on journalism in Sinhala and Tamil languages that are contextualised for Sri Lanka. Adaptations from internationally acclaimed journalism text books may also be considered. These should be made available widely, including online in e-book formats. |

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 4.4 Academic courses accessible to wide range of students | 12. Universities engaged in journalism education/ training should adopt a long-term vision for faculty development and institutional development. Strategies for this may include: opportunities at overseas universities reputed for good journalism education programmes; collaborative research projects with South Asian and other universities; and the organisation of regional conferences on current concerns in journalism.<br><br>13. Universities teaching journalism and/or mass media courses should strengthen their links with the media industry so as to benefit from practical experiences available in the industry while providing more intellectual rigour to the industry. |
| 4.5 Academic courses equip students with skills and knowledge related to democratic development | 14. The universities, in partnership with international media development organisations, should come up with appropriate curricular revisions and modules that can enable students to understand the issues and interlinkages of democracy, governance and development. Teaching of development journalism should go beyond simply promoting state-driven development to taking a critical examination of development outcomes for the people. |
| 4.6 Media workers have the right to join independent trade unions and exercise this right | 15. All media organisations should recognise and respect the basic human right and Constitutional right of journalists and other media workers to join a trade union of their choice, and to engage in trade union activities, without fear of disciplinary action or dismissal. |

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 4.7 Trade unions and professional associations provide advocacy on behalf of the profession | 16. Media company proprietors and managers should review their salary structures and raise salaries for journalists and other media workers in order to attract (and retain) talented recruits for the industry. They should also reduce and eventually eliminate the sharp disparities that currently exist in salaries paid to English language journalists and those recruited for Sinhala or Tamil language media.<br><br>17. The trade unions, on their part, should engage media owners and managers to secure their workers' right through peaceful negotiations. Trade unions have a right to be affiliated with political parties, but such affiliation should not undermine their commitment to journalistic professionalism and editorial independence.<br><br>18. Media companies and media advocacy groups should especially look at ways to raise the standard of professionalism of provincial journalists. As part of this, their payments, other benefits and facilities need to be urgently upgraded, so they can become fully-fledged members of the media community -- and not simply suppliers of raw material to media head offices. |
| 4.8 CSOs monitor the media systematically | 19. Sri Lanka's civil society organisations (CSOs), advocacy groups and academics should intensify their engagement with the mainstream media and monitoring their performance. This could happen at various levels: contributing content, participating in electronic media programmes, advising the industry on raising professional standards, providing deliberative platforms at the grassroots, and through the monitoring of media content. |

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 4.9 CSOs provide direct advocacy on issues of freedom of expression | 20. Academic and civil society groups should increase the depth and breadth of their media research activity, so as to produce the evidence base on which media policy and practices can be improved. These studies should ideally involve those specialising in mass media and journalism studies as well as sociologists and anthropologists. |
| 4.10 CSOs help communities access information and get their voices heard | 21. Ministry of Education should undertake an evaluation of the school subject of Communication and Media Studies, introduced in 2006. Based on the findings, the curricula should be revised with focus on enhancing media literacy as an essential part of the civic education of the future citizens.<br><br>22. The government, media industry and journalists' professional associations should all promote media literacy among the people. This is vital so that more people will develop the ability to critically examine media content in the mainstream media and also to participate in co-creation of new content using digital media.<br><br>23. The government should develop a national policy on promoting media literacy through formal and non-formal education methods. Enhancing media literacy should become an overall educational objective. |

வகை

# 5

# சுயாதீன, பன்மைத்துவமிக்க ஊடகத்திற்கு உதவக்கூடிய போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள்

## பிரதான குறிகாட்டிகள்

**A** ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும

5.1 ஊடக அமைப்புகளுக்குச் செய்தி சேகரித்தல், தயாரிப்பு, விநியோகம் ஆகியவற்றின் நிமித்தம் கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள்

**B** செய்தி ஊடகம், ஒலிபரப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

5.2 ஓரங்கட்டப்பட்ட மக்களும் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள்

5.3 ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களது தகவல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது

தகவல் மையச் சமூகமானது தகவல்களின் உருவாக்கம், விநியோகம், பயன்பாடு, ஒருங்கிணைத்தல், கையாளுதல் ஆகியவற்றைத் தனது பொருளாதார அரசியல் கலாசார நடவடிக்கைகளில் கணிசமானளவு கொண்ட சமுதாயமாகும்.

எண்மியத் தகவல்கள் (digital information), தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் (ICTs) ஆகியன அதன் பிரதான பண்புகளாகக் காணப்படுகின்றன. இவை தகவல் வெளிப்பாட்டுப் புரட்சிக்கு வித்திட்டுள்ளதோடு, பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், யுத்தம், அரசியல் மற்றும் ஜனநாயகம் உள்ளிட்ட சமூக அமைப்புகளின் சகல அம்சங்களிலும் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

கடந்த சில தசாப்தங்களாக தகவல் மையச் சமூகமொன்றில் இலங்கை மிகத் துரிதமாக பிரவேசித்து வருகிறது. 1980 களில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்லிடத் தொலைபேசியானது தொடர்பாடல்கள் தொடர்பில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் வெறும் வாய்மொழி மூலமான அழைப்புகளுக்காக இவை பயன்படுத்தப்பட்ட போதிலும் பின்னர் தரவு மாற்றம் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளும் உள்ளடக்கப்பட்டன.

BOX 23

## ஊடகக் குவிவு என்றால் என்ன?

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணினி ரீதியான வலையமைப்புகள், ஊடக உள்ளடக்கம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளுடன் கூடிய தோற்றப்பாடு ஊடகக் குவிவு எனப்படும். இது 3 'C' ஐக் கொண்டது. அதாவது, ஊழஅிரவபைெ (கணினி), Communication (தொடர்பாடல்), Content (உள்ளடக்கம்) ஆகியனவாகும். ஊடக உள்ளடக்கங்களை எண்மியப்படுத்தியமை, இணையங்களின் பிரபல்யம் ஆகியவற்றின் நேரடிப் பின்விளைவுகளாக இவை காணப்படுகின்றன.
தாபிக்கப்பட்ட கைத்தொழிற்துறைகள், சேவைகள், வேலை ரீதியான நடைமுறைகள் ஆகியவற்றை ஊடகக் குவிவு மாற்றியமைப்பதுடன் புதிய வடிவிலான உள்ளடக்கங்கள் தோன்றுவதற்கு முழுமையாக வழிவகுக்கின்றது. நீண்டகாலம்

167 https://en.wikipedia.org/wiki/Information_society

168 The Mobile Revolution. By Nalaka Gunawardene. Echelon magazine. 8 August 2014. http://www.echelon.lk/home/mobile-revolution/

தாபிக்கப்பட்ட ஊடகத் துறையை தேய்வடையச் செய்வதுடன், குறிப்பிட்ட கருவியிலிருந்து பல்வேறு விதமான தகவல்களைப் பிரித்தறிய உதவுகிறது. இது அரச கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு பிரதான சவால்களை விடுக்கின்றது.

**Source: Britannica.com**
http://global.britannica.com/topic/media-convergence

[189] INET Colombo 2015 – 20 Years of Internet in Sri Lanka. ReadMe.lk magazine. 16 June 2015. http://readme.lk/inet-colombo-2015-20-years-internet-sri-lanka/

செல்லிடத் தொலைபேசியானது தற்சமயம் அனைவருக்கும் பொதுவானதொரு உபகரணமாகத் திகழ்வதுடன் பல பாவனையாளர்களையும் சேவைகளையும் ஒன்றாக இணைக்கின்ற கருவியாகவும் திகழ்கின்றது. இலங்கை போன்ற வளர்ந்து வருகின்ற பொருளாதாரம் ஒன்றில் பல மில்லியன் ஏழை மக்களை ஒன்றிணைக்கின்ற கருவியாகவும் இது திகழ்கின்றது.

1995 ஏப்ரலில் இணையத்துடன் இலங்கை காத்திரமாக இணைந்துகொண்டதன் விளைவாக இலங்கையில் அர்த்தபுஸ்டியான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இலங்கையில் தகவல் மையச் சமூகம் துரிதமாக வளர்ந்து வந்தது. மேலும் வர்த்தகம் சார்ந்த இணைய மையச் சேவைகள் வளர்ச்சி கண்டன (1990 முதல் ஆரம்ப கட்டங்களில் காணப்பட்ட பயன்பாடானது கல்விப் புலச் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது).

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பரவுகை, அதனைச் சமூகம் ஏற்றுக்கொண்டமை ஆகியன அரசாங்கத்தின் போதியளவு கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான பதிலளிப்புகள்

ஆகியவற்றை விஞ்சியதாகக் காணப்பட்டது. இருப்பினும் இலங்கையில் தொலைத்தொடர்பாடல்கள், தகவல் தொழில்நுட்பம், எண்மிய புலமைச்சொத்து, ஊடகம் ஆகியன தொடர்பில் குறிப்பிடக்கூடிய கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியன காணப்படுகின்றன. இவை அவ்வப்போது ஆங்காங்கே தனிமைப்பட்ட நிலையிலேயே உருவாக்கப்பட்டன. இருப்பினும் தற்சமயம் ஊடகம் மற்றும் எண்மிய தொழில்நுட்பக் குவிதல் ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய சவால்களை ஒருங்கிணைந்து முகங்கொடுக்கக் கூடிய பண்புகள் குறைவாகவே காணப்படுகின்றன.

இணைய ரீதியான சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப காலத்தின் பொழுது அதனை பொதுமக்கள் அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தல் போன்ற சில பிரச்சினைகள் காணப்பட்டன. சமூக, பொருளாதாரக் குழுக்கள் மற்றும் நகர, கிராமிய மக்கள் ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்பத் தொடர்பாடல்கள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் மென்மெதுவக வீழ்ச்சி கண்டதன் விளைவாகவும் இவை இலகுபடுத்தப்பட்டதன் காரணமாகவும் இலங்கை தற்சமயம் பல்வேறு சிக்கல் மிக்க சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இவை சில நேரங்களில் இணையப் பயன்பாட்டிற்குப் பின்னரான சவால்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்றன. தகவல் மையச் சமூகமொன்றில் பல பிரச்சினைகள் வளர்ந்து வருவதற்கும் இவை காரணிகளாகின்றன.

# ஊடகங்களுக்குக் கிடைக்கின்ற தொழில்நுட்ப வளங்களும் அவற்றின் பயன்பாடும்

## 5 01 ஊடக அமைப்புகளுக்குச் செய்தி சேகரித்தல், தயாரிப்பு, விநியோகம் ஆகியவற்றின் நிமித்தம் கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள்

சுமார் இரண்டு நூற்றாண்டுப் பரிமாணத்தில் இலங்கையின் நவீன ஊடக உரிமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தமது ஆசிரிய தலையங்கச் செய்திகள், தயாரிப்புகள், வெளிக்கள வேலைகள் ஆகியவற்றின் நிமித்தம் பல்வேறு விதமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

1980 களில் பிரதான செய்திப் பத்திரிகை வெளியீட்டாளர்கள் ஓப்செட் அச்சிடல் தொழில்நுட்பத்தின் மூலம் தமது வெளியீடுகளை நவீனமயப்படுத்தினர். இந்த நவீனமயப்படுத்தல் செயற்பாடானது நகைச்சுவைமிக்க சித்திரக் கதைகளை உருவாக்குவதுடன் ஆரம்பமானது. ஆரம்பத்தில் பல செய்தித் தாள்கள் பல வர்ணங்களுடன் கூடிய புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். தற்சமயம் பெரும்பாலும் எல்லாச் செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும் ஓப்செட் அச்சிடல் முறையைப் பயன்படுத்துகின்றன. இவை தாராளமாக வர்ணங்களையும் கிரபிக்ஸ்களையும் புகைப்படங்களையும் பயன்படுத்துகின்றன.

1980 களிலிருந்து செய்தித் தாள் வெளியிடல் தொடர்பில் கணினி அறிமுகப்படுத்தப்பட்ட பொழுதிலும் கூட ஒருசில வருடங்களாக இவை செய்தி

அறைகளில் பயன்படுத்தப்படவில்லை. தமது செய்தித்தலைப்புச் சார்ந்த விடயங்களை ஆரம்பத்தில் பெரிய ஊடக கம்பனிகளும் ஆங்கில மொழியிலான ஊடகங்களுமே கணினியைக் கொண்டு பயன்படுத்தின. பதிப்புரிமை சார்ந்த அதனோடு தொடர்புடைய விடயங்களில் இன்றும் கூட சில சிறிய ஊடகக் கம்பனிகள் மற்றும் தேசிய மொழி ஊடகவியலாளர்கள் கணினிகளைப் பயன்படுத்துவதில்லை (இன்றும் சிலர் தமது பிரதிகளை கைகளினால் எழுதுகின்றனர்).

செய்திகளைச் சேகரித்தல், அவற்றைத் தயார் செய்தல், அவற்றை வெளியிடல் ஆகியன தொடர்பில் தகவல் தொழில்நுட்பத்தை ஆரம்ப காலங்களில் இலங்கை ஊடகங்கள் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. ஆரம்பக் கட்டங்களில் நிதியின்மை இதற்கானதொரு காரணியாகத் திகழ்ந்த பொழுதிலும் ஊடக முகாமையாளர்களும் ஊடகச் செயற்பாட்டாளர்களும் எண்மிய தொழில்நுட்பங்கள் மற்றும் இணைய மையத் தகவல் முறை ஆகியவற்றினால் வழங்கப்பட்ட வாய்ப்புகளை மிகவும் மெதுவாகவே உள்வாங்கிக் கொண்டனர்.

ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில் முக்கிய கருவியாக செல்லிடத்தொலைபேசி காணப்படுகிறது எனலாம். இன்று பலர் தமது ஊடகச் செயற்பாட்டின் நிமித்தம் செல்லிடத்தொலைபேசியைப் பயன்படுத்துகின்ற அதேவேளை, செய்தி சேகரித்தல், கருத்து மூலங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதன் நிமித்தம் இணையத்தளங்களையும் பயன்படுத்துகின்றனர். அதேவேளை, வளங்கள் சார்ந்த மட்டுப்பாடுகளும் ஆற்றல் விருத்தி தொடர்பான மட்டுப்பாடுகளும் தேசிய மொழிகளில் கருமமாற்றுகின்ற மாகாண மட்டங்களில் காணப்படுகின்றன. இதனை வென்றெடுப்பதற்கு அதிகளவிலான முதலீடுகளும் ஆற்றல் விருத்திகளும் அவசியப்படுகின்றன.

## பல்கள விநியோக முறைகள்

புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை நோக்கிய இலங்கை ஊடகங்களின் நிறுவன ரீதியான மாற்றமானது மெதுவாகவும் படிப்படியாகவுமே நடைபெற்றுள்ளது. 1995 இல் செய்தித் தாள்கள் இணைய வெளியீடுகளை ஆரம்பித்தன. தற்சமயம் பல செய்தித்

தாள்கள் அவற்றுக்கே சொந்தமான இணைய வெளியீடுகள் அல்லது மின்னியல் பத்திரிகைகளைக் கொண்டுள்ளன. அதேபோல் ஒருசில ஊடகங்கள் 24 மணித்தியாலமும் செய்திகளை வெளியிடக் கூடிய இணையத்தளங்களையும் கொண்டுள்ளன. சில ஊடகங்களைப் பொறுத்தவரையில் ருவிட்டர் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் தமது சமூக ஊடக பின்னூட்டல்களை வெளியிட்டு வருகின்றன.

இணையத்தின் மூலமாக தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்வதற்கு அதிகளவான பேண்ட்வித் அவசியமாகிறது. 2003 - 2004 காலப்பகுதியில் புரொட்பேண்ட் இணையம் கண்டறியப்படும் வரை இதற்காக காத்திருக்கவேண்டியேற்பட்டது. பல பிரதான ஒலிபரப்பாளர்கள் தற்சமயம் ஓடியோ மற்றும் காணொளி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றனர். பல்வேறு விதமான ஒலிபரப்பாளர்கள் யூரியூப் போன்றவற்றைப் பயன்படுத்தி தற்சமயம் தமது ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்கின்றனர். அலைபேசிகள், மடிக்கணினிகள், தனிப்பட்ட கணினிகள், ஸ்மாட் தொலைக்காட்சிகள் போன்ற ஒரு குறிப்பிட்ட உபகரணத்தை மாத்திரம் தான் பயன்படுத்தி இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமது நேர்களுடன் ஊடாட்டத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இலங்கையின் பிரதான ஊடகங்களைப் பொறுத்தவரையில் குறைவாகவே காணப்படுகின்றன. மேலதிக உள்ளடக்கங்களைப் பரப்புவதன் பொருட்டு பல்வேறு விதமான சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஆகியவற்றைப் பல செய்தித் தாள்களும் ஒலிபரப்பு நிலையங்களும் பயன்படுத்துகின்றன. இருப்பினும் நேர்களது ஸ்திரத்தன்மை மிக்க ஈடுபாடுகளின் நிமித்தம் இவற்றிடம் தெளிவான உபாய முறைகள் இல்லை.

இவற்றின் சாதகமான அம்சம் என்னவெனில், சில செய்தித் தாள்களைப் பொறுத்தவரையில் மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும் கடிதங்களை அவை ஏற்றுக்கொள்கின்றன. அதேபோல், குறுஞ்செய்திகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலமாக கிடைக்கப்பெறுகின்ற கருத்துக்களையும் சில அச்சு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. மேலும் சில ஊடகங்கள் தமது நேர்கள் பங்குபற்றும் முகமாக, குறிப்பாக வானொலி

190 Internet in Sri Lanka: The First Five Years. Nalaka Gunawardene and Chanuka Wattegama. 2000. http://www.academia.edu/4378630/Internet_in_Sri_Lanka_The_First_Five_Years_book_chapter_written_in_late_2000_

191 Why mainstream media must embrace social media. David Brewer. 23 November 2012 http://www.mediahelpingmedia.org/training-resources/media-strategy/587-the-social-network-challenge-for-traditional-media

மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள், தொலைபேசி, குறுஞ்செய்தி அல்லது முகநூல் போன்றவற்றின் மூலம் நேரடி ஈடுபாட்டினை ஏற்படுத்துகின்றன
பல ஊடகங்களைப் பொறுத்தவரையில் தமது பிரதான ஊடகச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாகவே இவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தமது உள்ளடக்கம் தொடர்பில் முழுமையான கட்டுப்பாட்டினை இழப்பதற்கு ஊடகவியலாளர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் தயங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். உதாரணமாக, சன நெருக்கடியுடன் தொடர்புடைய நிகழச்சிகள் மிக அரிதாகவே மேற்கொள்ளப்படுகின்றன. தமது இணையத்தள நிகழ்ச்சிகளின் வெளிப்பாடாக எந்தவொரு பிரதான ஊடக நிறுவனமும் அல்லது செய்தி அமைப்பு வெற்றிகரமாக வலைப்பதிதல் நிகழ்வுகளை தமது நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக வெற்றிகரமாக ஒருங்கிணைக்கவில்லை.

## எண்மிய ஒலிபரப்பு (Digital broadcasting)

உலகின் பல நாடுகளில் இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், அதனை ஒலிபரப்புச் செய்தல், அவர்களது ஆவணக்காப்பகத்திலிருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பமானது அனலொக் முறையிலிருந்து எண்மிய முறைக்கு மாறியுள்ளது. இந்த தசாப்தத்தில் புவி ஒலிபரப்பாளர்கள் எண்மிய முறைக்கு மாறியுள்ளனர். எண்மிய ஒலிபரப்பு முறை மூலம் நிலையங்களுக்கு பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றுள் பல அலைவரிசைகள் இயக்குவதற்கான குறைந்த செலவு, புதிய வியாபார வாய்ப்புகள் போன்றன உள்ளடங்கும். அதேபோல் பார்வையாளர்களுக்கும் பல நன்மைகளை இது வழங்குகிறது. அவற்றுள், ஊடாட்டத் தொலைக்காட்சி, மின்னியில் சார்ந்த நிகழ்ச்சிநிரல் வழிகாட்டிகள், உயர் தெளிவு (high-definition - HDTV) போன்ற புத்தாக்க ரீதியான சேவைகள் உள்ளடங்கும். இருப்பினும் இந்த எண்மிய முறையைப் பின்பற்றுவது தொடர்பில் கொள்கை மற்றும் ஒழுங்குவிதி, தொழில்நுட்ப ரீதியான

192 https://www.itu.int/ITU-D/tech/digital_broadcasting/project-dbasiapacific/Roadmaps/db_asp_roadmap_SriLanka.pdf

சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த செயன்முறையை எப்பொழுது, எவ்வாறு பின்பற்றுவது என்பது தொடர்பில் இலங்கை பல வருடங்களாக தீர்மானிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டின் 16 தொலைக்காட்சி நிறுவனங்களினால் இலவசமாக 24 புவிசார் தொலைக்காட்சி அலைவரிசைகள் காணப்பட்டன. இவை யாவும் அனலொக் முறையிலேயே தமது ஒலிபரப்புக்களை மேற்கொண்டன. சில நிறுவனங்கள் தமது தயாரிப்புக்களை எண்மிக முறையில் மேற்கொண்ட பொழுதிலும் அவை தமது ஒலிபரப்புக்களை அனலொக் முறையிலேயே மேற்கொண்டன. ஏனெனில் எண்மியச் சமிக்ஞைகளைப் பெற்றக்கொள்வதற்கான கருவிகள் (receivers) பலரிடம் காணப்படவில்லை.

புவிசார் தொலைக்காட்சி ஒலிபரப்புகளை எண்மிய முறையில் ஒலிபரப்புச் செய்வதற்கான கொள்கை ரீதியான வரைவுச்சட்டகங்களை உருவாக்கும் முகமாக உப குழுவொன்றினை 2010 ஆம் ஆண்டில் ஊடக அமைச்சு நியமித்தது. இந்த குழுவானது பல்வேறு பொறியியலாளர்களையும் சினிமாத் துறையில் நீண்டகால அனுபவமிக்கவரான டாக்டர் டீ.பீ. நிகால்சிங்க அவர்களையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இரண்டு காரணங்களின் நிமித்தம் எண்மிய புவிசார் தொலைக்காட்சி ஒலிபரப்பினை (DTTB) ஐரோப்பிய உருவாக்க DVB-T2 முறையைப் பயன்படுத்துவதற்கு அவ் அறிக்கையில் விதந்துரை செய்தது.

- உயர்வான வினைத்திறன், உறுதி, நெகிழ்வுத் தன்மை ஆகியவற்றை வழங்கக் கூடிய மிகவுயர்வான எண்மிய புவிசார் ஒலிபரப் முறைகளை DVB-T2 கொண்டுள்ளது.

- DVB-T2 உயர் தர முறையானது வரையறுக்கப்பட்ட அலைவரிசை நிகழ்ச்சித்திட்டங்களை தற்போதைய சகல அனலொக் தொலைக்காட்சிகளுக்கும் சம நேரத்தில் வழங்கக்கூடிய ஒரேயொரு DTTB தராதர முறையாகும்.

ஒலிபரப்புச் சேவைகள் நேர்களுக்கு வழங்குபவற்றை மத்தியப்படுத்தும் நோக்குடன் புதிய வகையிலான சேவை வழங்குநர் ஒருவரை அறிமுகப்படுத்துவதற்கான விதப்புரைகளையும் இவ் அறிக்கை


கொண்டிருந்தது. இது எண்மிய ஒலிபரப்பு வலையமைப்புச் செயற்பாட்டாளர் (DBNO) எனவழைக்கப்படும். நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற சகல ஒலிபரப்பாளர்களையும் உள்ளடக்கி பல் ஒலிபரப்பாக இது செயற்பாடும்.

ஒலிபரப்புத் துறையைச் சேர்ந்தவர்கள் புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் முகமாக அவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்படல் வேண்டுமெனவும், அதேவேளை நேர்கள் இவ்வித ஒலிபரப்புகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிமிக்க தொலைக்காட்சிகளைக் கொள்வனவு செய்யும் முகமாக (STBs) மானியங்கள் வழகப்படல் வேண்டுமெனவும் இவ் அறிக்கை பிரேரித்தது.

இலங்கையில் புவிசார் தொலைக்காட்சி ஒலிபரப்பினை (ITU, பெப்ரவரி 2012) அனலொக் முறையிலிருந்து எண்மிய முறையில் ஒலிபரப்புச் செய்வதற்கான செயல் வழிகாட்டியொன்றை உருவாக்கும் முகமாக ITU இன் தொழில்நுட்ப நிபுணர் குழுவானது இலங்கையைச் சேர்ந்த தமது சகபாடிகளுடன் 2011 இல் கருமமாற்றினர். எண்மிய ஒலிபரப்புத் தொடர்பான அவர்களது ஆரம்பக் கட்ட நேர வரைவு பின்வருமாறு காணப்பட்டது.

- 2011 இறுதி முதல் 2012 மத்திய காலம் வரை : வட மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகியவற்றில் DTTB முன்னோடி ஒலிபரப்புச் சேவைகளை மேற்கொள்ளுதல்.
- 2014 மத்திய காலப்பகுதி: எட்டு DTTB பிரதான சேவை நிலையங்களிலிருந்து DTTB சேவைகளை மேற்கொள்ளுதல்.
- 2015 இறுதி : மேல் மாகாணத்தில் அனலொக் முறையை முடிவுறுத்தல்.
- 2017 இறுதி : அனலொக் முறையை முழுமையாக முடிவுறுத்துதல்.

இருப்பினும் மேற்படி அட்டவணையை பூரணப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. ஏனெனில், 2014 மத்திய காலப்பகுதியில் ராஜபக்‘ அரசாங்கமானது ஜப்பானிய தராதரம் மிக்க ISDB-T முறையை ஏற்றுக்கொள்வதென அறிவித்தது. அத்தோடு புவிசார் தொலைக்காட்சி ஒலிபரப்புக்களை எண்மிய முறைப்படுத்தும் நோக்கில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனமான (துஜஐஊயு) 13,717 மில்லியன் யென் (சுமார் 17.4 மில்லியன் இலங்கை ரூபா) கடனாக





உலகலாவிய ரீதியில் டிஜிடல் பிராந்திய ஒளிபரப்பு தரத்தை உயர்த்தல் - வரைபடம் விக்கிபீடியா மார்ச் 2016

ஜப்பானிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக இருதரப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது.

ஒரு வருடமாகியும் புதிய அரசாங்கமானது DTTB தொடர்பில் தனது கொள்கையை அறிவிக்கவில்லை. அரசாங்கமானது ஜப்பானிய தராதர முறையை நாடி நிற்குமென மார்ச்சில் ஊடகங்கள் தெரிவித்தன. இத்தீர்மானம் அமைச்சரவை பொருளாதார முகாமைத்துவக் குழுவிற்கும் அறிவிக்கப்பட்டது.

193 http://www.treasury.gov.lk/news-and-events/592-digitalization-of-terrestrial-television-broadcasting-project-ru-sankya.html




இலங்கையில் டிஜிடல் மாற்ற திட்டம் - அறிக்கை 2012

## பரிந்துரைகள் :

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அனலொக் முறையிலிருந்து எண்மிய முறையில் ஒலிபரப்புச் செய்வது தொடர்பான தெளிவான காலவரையறை மற்றும் உபாய முறை ஆகியவற்றை ஒலிபரப்புத் துறையைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கம் விருத்தி செய்தல் வேண்டும். இதனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் தாபிக்கப்படுவதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ள சுயாதீன ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு மூலம் இந்த உபாய முறைகளானவை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மை மிக்கவையாகவும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். எண்மிய மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், அனலொக் கொள்கையில் காணப்பட்ட பல முரண்பாடுகள் ஒழுங்கமைப்பு ரீதியான குறைபாடுகள் ஆகியவற்றைத் தீர்ப்பது முக்கியமானதாகும்.

- பல்கள ஊடக நிகழ்ச்சிகளைப் பரப்புதல் தொடர்பில் அரச ஒலிபரப்பாளர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பிலான களஞ்சியம் ஒன்றை உருவாக்குதைப் பொதுக்கடப்பாடாக ஊடக அமைச்சு உருவாக்குதல் வேண்டும் (BBC இன் iPlayer: https://en.wikipedia.org/wiki/BBC_iPlayer) இவ்வாறு நிகழ்ச்சிகளைக் களஞ்சியப்படுத்துவதானது பயன் தரக்கூடியதாகவிருக்கும். குறிப்பாக கல்வித்துறையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுபவர்களுக்குப் பயன்மிக்கது.

- மிகவும் பொருத்தமான எண்மியக் களங்கள், உள்ளடக்கங்களை உருவாக்கக் கூடிய கருவிகள் மற்றும் தமது வெளியீடு மூலம் பல்வேறு வகையான நேர்களை சென்றடையக்கூடிய விடயங்களைக் கருத்திற்கொண்டு எண்மிய ஊடக உபாயங்களை இலங்கையிலுள்ள ஊடக அமைப்புகள் உருவாக்குதல் வேண்டும். சமூக ஊடக பயன்பாட்டிற்கு அவசியமான நிறுவன ரீதியான கொள்கைகள் சிறந்த நடைமுறைகள், புலமைச் சொத்துரிமைகள், ஆவணக் காப்பக நிகழ்ச்சிகள், ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக எண்மிய உபாயங்கள் காணப்படல் வேண்டும்.

ஆ

# செய்தி ஊடகம், ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஊடுருவல்

## 5.02 ஓரங்கட்டப்பட்ட மக்களும் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள

ஊடக நிகழ்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கருவிகளை உரிமையாகக் கொண்டுள்ளவர்களின் அடிப்படையில் பிரதான ஊடகங்கள் இலங்கையில் எந்தளவிற்கு செல்கின்றது என்பதை உணர்தல்.

2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீடு மற்றும் வீடு கணக்கெடுப்பு ஆகியவற்றின் பிரகாரம் செல்லிடத் தொலைபேசியானது (78.9மூ வீடுகளில் காணப்பட்டது) தொலைக்காட்சிப் பெட்டிகளை விட அதிகமானதாகும் (78.3மூ) செல்லிடத் தொலைபேசியே தொடர்பாடல்களைப் பொறுத்தவரையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.மூன்றாவது இடம் வானொலிக்குக் கிடைத்துள்ளது. இது 68.9மூ ஆன வீடுகளில் காணப்படுகிறது. 42.4மூ ஆன வீடுகளில் நிரந்தர தொலைபேசி காணப்படுகிறது. 15மூ ஆன வீடுகளில் கணினிகளும் 5.6மூ ஆன வீடுகளில் மடிக்கணினிகளும் காணப்படுகின்றன.

செல்லிடத்தொலைபேசி அல்லது தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவற்றின் உரிமை தொடர்பில் நகரப் புறங்களுக்கும் கிராமியப் புறங்களுக்கும் இடையில்

195 Census of Population and Housing 2012: Key Findings http://countryoffice.unfpa.org/srilanka/?publications=12333

196 Household Income and Expenditure Survey (HIES) 2012-13, covering sample of 25,000 households: http://www.statistics.gov.lk/HIES/HIES2012_13FinalReport.pdf

பாரிய வித்தியாசங்கள் இல்லை. இருப்பினும், பெருந்தோட்டத் துறையைப் பொறுத்தவரையில் இத்தகைய கருவிகளைச் சொந்தமாகக் கொண்டவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர்.

ஸ்மாட் தொலைபேசிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருவதன் காரணமாக ஊடகம் சார் நுகர்வுகளில் எத்தனை பேர் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிதல் கடினமாகிறது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் சுமார் 3.5 மில்லியன் மக்கள் இதனைப் பயன்படுத்துவதாக நம்பப்படுகிறது. குரல் ரீதியான அழைப்புகள், குறுஞ்செய்தித் தகவல்கள், வானொலியைச் செவிமடுத்தல், இணையத்தளங்களுக்குப் பிரவேசித்தல், VOIP மற்றும் உடனடித்தகவல் சேவைகள், வைபர், வட்ஸ்அப் போன்ற உடனடித் தகவல் சேவைகள் ஆகியவற்றுக்காக ஸ்மாட் தொலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ரெலிகொம்மின் அண்மைய புள்ளிவிபரத்தின் படி (2015 செப்டம்பர் 30 வரையில்) மொத்தமாக 2,644,366 பேர் இலங்கையில் நிரந்தர தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர் (2011 இல் 3,608,392 பேர் பயன்படுத்தினர், நிலைமை வீழ்ச்சிகண்டுள்ளது என்பதைக் கருத்திற்கொள்ளவும்). அதேவேளை, சுமார் 23,771,580 பேர்கள் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர் (100 நபர்களுக்கு 113.4 என்ற விதத்தில்). சில நபர்கள் பல கணக்குகளை வைத்திருப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் இறுதி வரை சுமார் 3,373,388 பேர் அலைபேசி மூலமாக இணைய வசதிகளைப் பெற்றிருந்தனர். மேலும் 631,523 பேர் நிரந்தர தொலைபேசி மூலம் இணைய வசதியைப் பெற்றிருந்தனர். மொத்தம் 4,004,911 ஆகும். இதனடிப்படையில் சுமார் 84 வீதமானவர்கள் இணையத்தளங்களை அலைபேசி கருவி மூலமாகவே அணுகிப் பெறுகின்றனர். அதேவேளை, பயன்படுத்துநர்கள் மத்தியில் சில கணக்குகள் பகிரப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நாட்டில் சுமார் 5 முதல் 6 மில்லியன் வரையிலானவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஊகிக்கக்கூடியதாகவுள்ளது. அதாவது, மொத்த சனத்தொகையில் சுமார் 25 வீதமானவர்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

197 http://www.trc.gov.lk/2014-05-13-03-59-39/statistical-overview.html

198 http://lirneasia.net/projects/2010-12-research-program/teleusebop4/

## ஓரங்கட்டப்பட்ட மக்களது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாடு

ஓரங்கட்டப்பட்ட மக்களை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைகள் எவ்வாறு சென்றடைகின்றன என்பது தொடர்பில் திட்டவட்டமான தகவல்கள் இல்லை. இருப்பினும், 1990 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ரெலிகொம் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உலகிலேயே குரல் அழைப்புகள் மற்றும் தரவுப் பரிமாற்றம் தொடர்பில் மிகக் குறைவான கட்டணங்கள் இலங்கையிலேயே அறவிடப்படுகின்றன (சந்தைப் போட்டி நிலைமைகள் காரணமாக).

இதன் காரணமாக குறைவான வருமானமுடைய மக்களும் அலைபேசிகளை, தொலைபேசிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் காணப்படுகின்ற தடைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. உதாரணமாக 3G மற்றும் 4G சமிக்ஞைகளை நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஒரே விதமாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது. நகர மற்றும் கிராமியப் புறங்களில் சனத்தொகை செறிவாகக் காணப்படுகின்ற பிரதேசங்களிலும் அதிக பயன்படுத்துனர்கள் காணப்படுகின்ற பிரதேசங்களிலுமே இவ்வகையான சமிக்ஞைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இலங்கை சமிக்ஞை தொடர்பான வரைபடம் மூலமாக இதனை அறிந்துகொள்ள முடியும். இது http://opensignal.com

ஸ்மாட் தொலைபேசிகள் உள்ளடங்கலாக ஏனைய அலைபேசிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுவதன் காரணமாக இலங்கையில் எண்மிய பயன்பாடு (digital divide) எவ்வாறு குறைந்துள்ளது என்பதை சில ஆய்வுகள் மூலம் கண்டறிய முடிந்தது. குறைந்த வருமானமுடைய மக்கள் அல்லது பிரமிட்டின் அடித்தளம் (bottom of the pyramid) ஆகியோர் தொலைபேசிகளை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்ற ஆய்வொன்றினை கொழும்பை அடிப்படையாகக் கொண்ட ஆசிய பிராந்தி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை ஆராய்ச்சி நிறுவகம் டுஐசுநேயளயை ஆகியன 2005 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொண்டது.

BOX 24

# உள்ளடக்கிய தகவல் சமூகங்களுக்கான சமுதாய ஊடகம்

உள்ளடக்கிய தகவல் சமூகமொன்றில் பின்தங்கிய மற்றும் ஏனைய ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களும் தொடர்பாடல்களை அணுகிப் பெறக்கூடியதாயிருத்தல் வேண்டும். இதன் நிமித்தம் அரசாங்கத்தின் விசேட கவனங்களும் முதலீடுகளும் அவசியப்படுகின்றன. இவை தொடர்பில் சமுதாய ஊடகங்கள் முக்கிய வகிபாகத்தினை வகிக்க முடியும்.

சமுதாய ஊடகமானது பல வடிவங்களில் செயற்பட முடியும் : சமுதாய செய்தித் தாள்கள், சமுதாய செய்திப் பலகைகள், சமுதாய பல் ஊடக நிலையங்கள் போன்றன. இருப்பினும் இதுவரையில் சமுதாய வானொலியே சமுதாய ஊடகங்கள் மத்தியில் மிகவும் வினைத்திறன் மிக்கதாகக் காணப்படுகிறது. ஏனெனில், இவ் வானொலியை பலர் பங்குபற்றுவதற்கு ஏற்ற விதத்தில் உயர்வான முறையில் பயன்படுத்தக் கூடியதாகவிருப்பதுடன் இவை தொடர்பிலான செலவுகளும் குறைவாகவும் செலவுக்குட்பட்டதாகவுமே காணப்படுகிறது.

அணுகிப் பெறல் மற்றும் பங்குபற்றுதல் ஆகியன சமுதாய ஊடகத்தின் மிக முக்கியமான இரண்டு அங்கங்களாகும். இருப்பினும் ஓரங்கட்டப்பட்ட சமுதாயமானது எந்தளவிற்கு அக்கறையுடன் செயற்படுகின்றது, பிரதான ஊடகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட முறையில் எவ்வாறு அறிக்கையிடுகின்றது என்பது தொடர்பில் இத்தகைய அம்சங்கள் மாறுபடுகின்றன.

இது தொடர்பிலான வித்தியாசத்தை 1994 இல் பிரான்ஸஸ் பெரிகன் என்பவர் விளக்கினார். சமுதாய ஊடகத்தை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தினார். "விசேட தேவைகள் அல்லது அக்கறைகளைக் கொண்ட இன அல்லது சிறுபாண்மைக் குழுக்கள் போன்றவர்களது நிகழ்ச்சிகளை இனங்காண்பதற்கு குறிப்பாக குறிப்பிட்ட சமுதாய குழுக்களுக்கென வடிவமைக்கப்பட்டவற்றை இனங்காண்பதற்கு சமுதாய ஊடகம் போன்ற சொற்பிரயோகங்கள் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டன. இவற்றைத் தவிர நிகழ்ச்சித் தயாரிப்புச் செயன்முறையில் சிறிதளவு மாற்றங்களே காணப்பட்டன. தலைப்புகள் தொழில்வாண்மை

மிக்க தொடர்பாடல்களினால் குறிப்பிட்ட முறையில் தெரிவுசெய்யப்பட்டன. மற்றும் நேர்களது அக்கறை, அவர்களது தேவைகள் ஆகியவற்றை இலக்காக் கொண்டு இவை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சமுதாய ஊடகம் எனும் போது எவ்விதமான நோக்கங்கள் தொடர்பிலும் சமுதாயமானது தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது அதனை அச்சமூகத்தினால் பயன்படுத்தக்கூடியதாக ஊடக இசைவாக்கங்கள் காணப்படல் வேண்டும். சமுதாய உறுப்பினர்களுக்குத் தேவையேற்படுகின்ற பொழுது அவர்கள் தகவல்கள், கல்வி, பொழுதுபோக்கு போன்ற விடயங்களை ஊடகங்களை அணுகிப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருத்தல் வேண்டும். இங்கு திட்டமிடுனர்களாக, தயாரிப்பாளர்களாக, செயலாற்றுனர்களாக, பங்குபற்றுனர்களாக சமுதாய உறுப்பினர்களே இவ் ஊடகங்களில் காணப்படுகின்றனர்.

சமுதாயத்திற்கு என்பதற்குப் பதிலாக சமுதாயத் தேவைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக் கூடியவர்களாக இவர்களே திகழ்வர்"

மூலம்: Community Communications: அபிவிருத்தியின் சமுதாய ஊடகத்தின் வகிபாகம். Frances J Berrigan. 1994 UNESCO. pp7-8
http://unesdoc.unesco.org/images/0004/000440/044035eo.pdf

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கேள்வியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் பிரகாரம் ஓரங்கட்டப்பட்ட மக்களாகவிருந்தாலென்ன தொலைபேசிப் பயன்பாட்டினைப் பொறுத்தவரையில் மற்றவர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் வேறுபாடு இல்லை. அவசரகால தொடர்பாடல்கள், சமூக வலையமைப்பு ரீதியான நன்மைகள், தொலைபேசி ஒன்றைச் சொந்தமாக வைத்திருத்தல் ஆகியன தொடர்பிலான இலங்கைப் பின்புலத்தில் மேம்படுத்தப்பட்ட தனிப்பட்ட பாதுகாப்பினை அனைவரும் ஒரேவிதமாகவே மதிக்கின்றனர்.

இவ் ஆய்வின் பிரகாரம் ஆண்களும் பெண்களும் தொலைபேசிகளை பெரும்பாலும் ஒரே விதமாகவே பயன்படுத்தி வருகின்றனர்.

டுஜசுநேுயளயை'ள வுநடநரளநஞ டீழூ இலங்கை ஆய்வு மற்றும் ஏனைய வளர்ந்து வரும் ஆசிய சந்தைகள் ஆகியவற்றின் பிரகாரம் தொலைபேசிகளின் பயன்பாடு குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட மக்களது பயன்பாடு ஆகியன பிரமிட்டின் அடிமட்டத்திலேயே காணப்படுகிறது என்பதை அரசாங்கத்திற்கு உணரச்செய்தல் வேண்டும். இதன் கண்டறிதல்களின் பிரகாரம் சர்வதேச சேவைகள் கொள்கைகள் மற்றும் வறியிடல் மற்றும் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு தொலைபேசியினைப் பதிவுசெய்தல் போன்ற விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்பம் மற்றும் வியாபார ரீதியான மாதிரிகள் ஆகியவற்றில் நிகழ்கின்ற புத்தாக்கச் செயற்பாடுகளானது அடிமட்ட மக்களுக்கு வினைத்திறனுடன் சேவையாற்ற வேண்டும் அதற்கேற்ற கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். அத்தோடு, அடிமட்ட மக்கள் மத்தியில் தொலைபேசிப் பயன்பாடுகள் தொடர்பில் காணப்படுகின்ற வளர்ந்து வருகின்ற அதிகமான கேள்விகள் தொடர்பிலும் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

[199] http://lirneasia.net/2007/12/documentary-film-highlights-telephone-revolution-in-asias-emerging-markets/

[200] http://lirneasia.net/projects/icts-the-bottom-of-the-pyramid/

“தற்சமயம் இலங்கையில் அதிகமானவர்கள் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். மொழி இவர்களுக்கு ஒரு தடையல்ல. யுனிகோட் பொன்ட் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலும் பல விடயங்களை மக்களால் வாசிக்கக் கூடியதாகவுள்ளது. இணையத்தளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய புளக்ஸ் போன்றவற்றில் மொழிப் பிரச்சினை ஒரு தடையல்ல. எனது மதிப்பீட்டின் பிரகாரம், 90 வீதமான இலங்கை அரசாங்க அலுவலர்கள் தற்சமயம் இணையத்தை தமது உத்தியோகபூர்வக் கடமைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அதேபோல் அரசாங்க அதிகாரிகள் பரவலாக கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுள் சுமார் 40 வீதமானவர்கள் ஸ்மாட் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். பல இலங்கையர்களைப் பொறுத்தவரையில் ஸ்மாட் போனையே இணையத்திற்குப் பிரவேசிப்பதற்கான சாதனமாகப் பயன்படுத்துகின்றனர்.

“இருப்பினும் இணையத்தளம் மூலமாக உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற விடயங்கள் இலங்கையைப் பொறுத்தவரை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சிங்கள மொழியைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாகவே இது காணப்படுகிறது. இணையத்தளம் மூலமாக பல விடயங்களைத் தயாரித்து அதனை மேம்படுத்திப் பரிமாறிக்கொள்ளக் கூடிய நிலைக்கு எமது மக்கள் வருவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது”.
ஹர்‘ விஜயவர்தன, திணைக்களத் தலைவர்.். ஆலோசகர், கொழும்புப் பல்கலைக்கழக கணினிப் பிரிவு (UCSC)

**- Harsha Wijayawardhana,**
**Head of Department/Consultant,**
**University of Colombo School of Computing (UCSC)**

## மக்கள் (பிரஜைகள்) இதழியலின் எழுச்சி

உரிமை சார் ஊடகத்தின் முன்னோடிச் செயற்பாட்டளரும் ஆய்வாளருமான டான் கில்மர் குறிப்பிட்டதன் பிரகாரம், “இதழியலில் எழுமாறான செயற்பாடுகள்” - இவரின் கூற்றுப்படி, இதழியலில் எழுமாறன செயற்பாடுகளை செயலாற்றும் முகமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளையும், தளங்களையும் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது புதிய வகையான மக்கள் இதழியலுக்கும் சமூக ஊடகத்திற்கு அடித்தளம் இட்டதோடு, இவ் ஊடகங்களைப் பயன்படுத்துபவர்கள் தம்மைச் சூழ நடக்கின்ற நிகழ்வுகளைக் கண்டறிவதுடன் தமது கருத்துக்களையம் எண்ணங்களையம் எண்மிய முறை மூலமாகப் பகிர்ந்துகொள்கின்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக இதழில் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்டன் ஜே. சிறிவர்தன குறிப்பிட்டதன் பிரகாரம் “செய்திப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் அவற்றுக்கே உரிய சில பண்புகள்காணப்படுவதன் காரணமாக இத்தகைய பாரம்பரிய ஊடகங்களில் தமது பின்னூட்டல்களைத் தெரிவிப்பதற்கும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்குமான வாய்ப்புகள் இவ் ஊடக வாடிக்கையாளர்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகிறது. இணையத்தளங்கள், வலைப்பதிவுகள், சமூக ஊடகங்கள் ஆகியன அதன் பயன்பாட்டாளர்களுக்குத் தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியதுடன், இதழியலாளர்கள் என்ற முறையில் அவர்களது ஆக்கங்களை உருவாக்கி வெளியிடுவதற்கான வாய்ப்பினையும் நல்கியது. புதிய ஊடகக் கருவிகள் இலங்கைப் பயன்படுத்துனர்கள் அல்லது நேர்களுக்கு நன்கு பரீட்சயமானதுடன், நாட்டில் இதழியலைப் பயன்படுத்து மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

மக்கள் இதழியலின் ஆரம்ப மூலமாக வலைப்பதிதல்கள் காணப்படுகின்றன. இது 1990 இன் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்றது. இணைய புரோட்பேண்ட் சேவைகள் அதிகரித்ததன் விளைவாக அதிகமானவர்கள் டுவிட்டர் (சிறிய வலைப்பதிதல்கள்), முகநூல் (சமூக வலையமைப்பு), இன்டர்கிராம் (படங்களைப் பரிமாறிக்கொள்ளல்), யூரியூப் (வீடியோ பகிர்வு) போன்றவற்றை

201 Contribution of Citizen Journalism as a Tool for Development Communication in Sri Lanka. Krishan J Siriwardhana. http://arts.cmb.ac.lk/sites/default/files/content/title22.pdf

202 Blogging in Sri Lanka: A New Platform for Creativity? http://nalakagunawardene.com/2015/04/26/a-k-lit-fest-session-on-blogging-in-sri-lanka-a-new-platform-for-creativity/

203 http://www.slideshare.net/NalakaG/media-reforms-in-lanka-big-picture-ideas-by-nalaka-gunawardene

அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். அண்மைக்காலமாக ஊடாட்டப் படங்கள், மெப்ஸ் (வரைபடங்கள்), ஊடகப் பகிர்தல் சேவைகள், வட்ஸ்அப், வைபர் போன்றனவும் அறிமுகப்படுத்தப்பட்டன.

பொதுமக்கள் நலன்களை மையமாகக் கொண்ட வலைப் பதிதல்கள் மெதுவாக வளர்ந்துவந்த போதிலும், இவை 2004 டிசம்பரில் இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட சுனாமியின் பின்னர் உறுதியாக வளர்ச்சி கண்டன. மக்கள் இதழியலின் ஒரு திருப்புமனையாக இதனைக் கருதமுடியும். அதனைத் தொடர்ந்துவந்த தசாப்தத்தில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான வலைப்பதிவுகளானது இலங்கையர்கள் வெளிநாட்டில் வசிக்கின்ற தம் உறவுகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்பட்டது. இவற்றின் மூலமாக கவிதைகள், கட்டுரைகள், கற்பனா இலக்கியங்கள், பல்வேறு விதமான ஊடக நிகழ்வுகள் ஆகியன பரிமாறிக்கொள்ளப்பட்டன. சில வலைப்பதிதல்கள் (blogs) காத்திரமான அரசியல் சமூகக் கருத்துக்களை எடுத்துரைத்த அதேவேளை, மேலும் சில புதிய ஆக்கபூர்வமான எழுத்துக்கள், கட்புல

204 http://www.kottu.org/

BOX 25

## இலங்கையின் முதல் மக்கள் ஊடகவியலாளர்கள்

சாதாரண மக்களிடம் மக்கள் ஊடகவியலாளர்கள் பற்றிய அடிப்படை வரைவிலக்கணங்களைக் கூறுகின்ற பொழுது அவர்கள் எவ்வித தங்குதடையுமின்றி இது தொடர்பில் இலங்கைக்கு நீண்ட வரலாறு உண்டெனக் குறிப்பிடுவர். சீகிரிய சுவர் ஓவியங்கள் மற்றும் 5ஆம் நூற்றாண்டில காசியப்பன் அரசனால் கட்டப்பட்ட சீகிரிய கோட்டை ஆகியவற்றை நாம் நோக்குகையில் இதனை அடிப்படையாகக் கொண்டு பல சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளன என்பதை உணர முடியும் (6 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை). இவற்றை பொருள் உணர்ந்து கற்கின்ற பொழுது அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் அவர்களது அபிலாசைகள் போன்றன பற்றி அறிய முடியும்.

அண்மைக்காலமாக மக்களது கருத்து வெளிப்பாடுகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகின்றன. இது "கவிகொளய" (கவி நயத்துடன் தாளில் எழுதப்படும் விடயங்கள்) முதல் "கௌ பத்தரய" (அனமதேயக் கடிதங்கள்) உள்ளடங்கும். கடந்த இரண்டு தசாப்தங்களாகவே இணையத்ஜத அடிப்படையாகக் கொண்டும் இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்டும் பல்வேறு விதமான தகவல்கள் வெளிவருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இவற்றின் மூலம் பல்வேறு விதமான கருத்துக்கள், உலகளாவிய விடயங்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆகியன ஆராயப்படுகின்றன.

ரீதியான திறன்கள் ஆகியவற்றுக்குக் களம் அமைத்துக்கொடுத்தன.

ஒரு ஆய்வாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் இலங்கையில் 3000 இற்கும் மேற்பட்ட வலைப்பதிவுகள் காணப்படுவதாகவும் இவை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழியில் வெளியிடப்படுவதாகவும் தெரிவித்தார். 2016 பெப்ரவரியில் புகழ்பெற்ற வலைப்பதிவான கொட்டு (Kottu) 1,750 இலங்கை வலைப்பதிவுகளை தனது தன்னியக்க சுய பதிவுச் சேவையில் கொண்டிருந்தது. வலைப்பதிவுகளுக்கிடையிலான வாசகர்கள் மற்றும் இடைச்செயற்பாடுகள் ஆகியன பல மட்டங்களில் மாறுபட்டதாகக் காணப்படுகிறது. சில சுமாரான வாசகர்களைக் கொண்டிருந்த அதேவேளை, கருத்துக்களையும் கலந்துரையாடல்களையும் மையமாகக் கொண்ட புகழ்பெற்ற வலைப்பதிதல்கள் அதிகமாகக் காணப்பட்டன.

வலைப்பதிதல் பயன்படுத்துனர்கள் பாரிய புதிய ஊடகமான மக்கள் இதழியலுக்கு ஏற்றவர்களாகக் காணப்பட்டனர். இது தொடர்ச்சியாக வளர்ச்சிகண்டு வருகிறது. இதுவரை ஊடக ஆய்வாளர்களினால் இவை தொடர்பான முழுமையான கற்கை மேற்கொள்ளப்படாத பொழுதிலும் எமது பொதுத் துறையின் ஒரு முக்கிய அங்கமாக இது திகழ்கிறது.

ஆய்வாளரும் புதிய ஊடகச் செயற்பாட்டாளருமான சஞ்சன ஹத்தொட்டுவ அவர்களின் பிரகாரம், மரணங்கள், மனித வீழ்ச்சிகள், இலங்கையில் ஏற்பட்ட சிவில் யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சமூக இழப்புகள் மற்றும் பல பிரதான ஊடகங்களினால் கூருணர்வுமிக்கதாக மாற்றியமைக்கப்பட்ட யுத்த காலச் செயற்பாடுகள் போன்றன தொடர்பில் அர்த்தமுள்ள வகையில் அறிக்கையிடும் செயற்பாடுகளில் மக்கள் இதழியலானது காத்திரமான முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. இருப்பினும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகள் காணப்படுவதனால் மாத்திரம் பொதுமக்கள் கூட்டுணர்வுமிக்க பிரஜைகள் இதழியலை உறுதிப்படுத்த முடியாது என்பதையும் அவர் தெரிவிக்கின்றார்.

பிரஜைகள் இதழியல் தொடர்பான புதிய காலமானது மொழியியல் ரீதியான குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. மேலும் செயலாண்மைத்திறன் மற்றும் சமூக, அரசியல் விழுமியங்கள்

205 WAN-IFRA Blog, 2013 interview with Sanjana Hattotuwa: http://blog.wan-ifra.org/2013/05/02/citizen-journalism-platform-groundviews-thrives-in-sri-lanka

206 Opinion: The Promise of Citizen Journalism, by Sanjana Hattotuwa. https://www.opendemocracy.net/the_promise_of_citizen_journalism

207 http://www.c3magazine.com/a-dying-breed-how-social-networks-killed-the-sri-lankan-blogosphere/

குன்றியதாகவும் காணப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் சுவாரஷ்யமற்றவையாகவும் வெறும் உணர்வுபூர்வமானதாகவும், பொறுமையற்றதாகவும், பொருத்தமற்றதாகவும் உணர்வுகளைத் தூண்டக்கூடியதாகவும் காணப்படுகிறது என அவர் தெரிவித்தார். இருப்பினும் இத்தகைய மக்கள் இதழியல்கள் மூலம் அனைத்து மக்களுக்கும் தமது ஆண், பெண் வேறுபாடுகளின்றி, இன, சாதி, சமய, வகுப்பு வேறுபாடுகளின்றி தமது கருத்துக்களைச் சுயமாக வெளியிடுவதற்கான வாய்ப்புகள் கிடைப்பதுடன், சமூகம் பல்வேறு வகையான கருத்துக்களைப் புலப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் கிடைக்கின்றன.

2006 இல் அத்தேதொட்டுவ Groundviews.org ஐ உருவாக்கினார். இது இலங்கையை மையமாகக் கொண்ட இணையத்தள பிரஜைகள் இதழியலாகும். யுத்த காலத்தின் பொழுதும் அதற்குப் பின்னரும் பாதுகாப்பான முறையில் கருத்துக்களை விவாதிக்கவும் கலந்துரையாடவும் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. நல்லாட்சி, மனித உரிமைகள், கலை, இலக்கியம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாற்றீட்டுக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சிறந்த தளமாக இது திகழ்கின்றது. பல்வேறு எண்ணக்கருக்களையுடைய மக்கள் மத்தியிலிருந்து பரந்த கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புக்களை இது வழங்கியது. அதேபோல் புலன்விசாரணை ஊடகங்களுக்கான பண்புகளையும் இது பிரேரித்தது.

அத்தொட்டுவே மேலும் குறிப்பிடுவதாவது, “நாட்டில் அபூர்வமான சில விடயங்களை நாம் தோற்றுவித்துள்ளோம்… இது விவாதத்திற்கும் கலந்துரையாடலுக்கும் பாதுகாப்பான தளமாகும். நாகரீகமான முறையிலே மாறுபட்ட கருத்துக்களை எடுத்துரைக்க முடிகின்றது. இப்பொழுது சம்பவங்களையும் கதைகளையும் எடுத்துக் கூறுவதற்கு பல்வேறு விதமான வடிவங்களை நாம் பிரயோகிக்கின்றோம்: புகைப்படம், காணொளி, இதழியலின் நீண்ட வடிவம், நாட்டில் இத்தகைய விடயங்களுக்கு நாம் மாத்திரமே களம் அமைத்துக் கொடுக்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

கிரவுண்ட் வீவ்ஸ் ஆனது தனியொரு இணையத்தளம் என்ற நிலைக்கும் அப்பால் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.
முகநூல் மற்றும் டுவிட்டர் போன்றவற்றில் காணப்படுகின்ற பின்னூட்டல்களையும்

208 http://www.manthri.lk/?locale=en

உள்ளடக்கியதாக இது திகழ்கின்றது. இது சிங்கள மொழியில் Vikalpa.org எனவும் தமிழ் மொழியில் Maatram.org எனவும் இணையத்தள சமூக ஊடக பின்னூட்டல்களையும் கொண்டுள்ளது. தனிப்பட்ட கலந்துரையாடலுக்கும் பொதுக் கலந்துரையாடலுக்குமென தொடர்ச்சியான பல்வேறுவிதமான பரீட்சார்த்த முயற்சிகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். 2010 இலிருந்து கலந்துரையாடல்களானது பல்வேறு சமூக ஊடகங்களை நோக்கி, அதாவது முகநூல் மற்றும் டுவிட்டர் போன்றவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றன. வழமையான வலைத்தள நிகழ்வுகளும் கூட இவற்றில் இடம்பெறுகின்றன. அனுபவமிக்க வலைத்தளச் செயற்பாட்டாளரான அகமட் நிசாரின் கருத்துப்படி, சமூக ஊடகங்களின் வளர்ச்சியின் காரணமாக வலைத்தளச் செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டுள்ளன.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் முற்போக்கான சமவுரிமை சமத்துவத்துடன் கூடிய சமுதாயமானது பொறுமையற்ற எதிர்த்தாக்குதல்களை நடத்தக்கூடிய நிலப்பிரபத்துவம், அரச அதிகாரம் மற்றும் கடும் தேசியவாதம் போன்றோர்களது தாக்குதலை முகங்கொடுக்க வேண்டியுள்ளது. சிறு கருத்தொன்றைக் கொண்டிருந்தமைக்காக அவர்கள் வாய் மொழி மூலமான அச்சுறுத்தல்களை மாத்திரமல்ல சிலவேளைகளில் பௌதீக ரீதியாகவும் தாக்கப்படுகின்றனர். இவ்வகையான பொறுமையின்மைகள் சமூக ஊடகங்களிலும் பரவிக் காணப்படுகின்றன. இழிவான செயல்களையும் அவதூறான விடயங்களையும் பரப்பும் முகமாக புனைப்பெயர்களிலும் அனாமதேய செய்திகள் மூலமாகவும் இனவாதிகள், மதவாதிகள், சதிகாரர்கள் மற்றும் வன்முறைகளைத் தூண்டுபவர்கள் போன்றோர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

## இலங்கையில் சமூக ஊடகங்களின் பயன்பாடு

சமூக ஊடகங்களின் பல்வகைத்தன்மை, அவற்றின் பரிணாம வேகம், வளர்ந்துவரும் செல்வாக்கு அகியன பரிந்துரை மற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாய்ப்புகளையும் சவால்களையும் ஏற்படுத்தியுள்ளது, இவற்றோடு தொடர்புடைய போக்குகளைப் பிரித்தறிவதற்கும் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பிலான ஆவணங்களைத் திட்டவட்டமாகப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியமான தகவல்

தொழில்நுட்பத் தொடர்பாடல் அவதானிப்பு விடயங்கள் இலங்கையில் குறைவாகவே காணப்படுகின்றன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு ஒன்றினைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். அதாவது, Manthri.lk என்ற மும்மொழிகளிலுமான இணையத்தளத்தின் மூலமாக இலங்கையிலுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள முடியும். பாராளுமன்ற உத்தியோகபூர்வ அறிக்கையான ஹன்சாட்டில் உள்ள விடயங்கள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றுக்கென தனியான குறியெண்களும் வழங்கப்பட்டுள்ளன. இணையத்தளத்திலிருந்து அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதேபோல், வெரிட்டே ஆய்வானது உபாய ரீதியான பகுப்பாய்வுகளை வழங்குவதுடன், தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கும் கருத்துக்களைத் தோற்றுவிப்பவர்களுக்கும் அவசியமான உபாய ரீதியான பகுப்பாய்வுகளையும் இது வழங்குகின்றது.

பல்வேறு விதமான சிவில் சமூக அமைப்புகளின் அனுபவங்களின் பிரகாரம் பரிந்துரைச் செயற்பாடுகளானது இணையங்கள், சமூக ஊடகங்கள் மூலமாகவும் அதேபோல், மரபு சார்ந்த அணுகுமுறைகளான ஊடக மாநாடுகள், ஊடக கூற்றுக்கள், ஊர்வலங்கள் அவசியமானவிடத்து அமைதியான முறையில் வீதி ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்கின்ற போது இதனோடு தொடர்புடைய பிரச்சாரங்களை வினைத்திறன் மிக்க முறையில் மேற்கொள்ள முடியும் என்பதாகும்.

## விதப்புரைகள் :

- சமூக ஊடகச் செயற்பாடுகள், சிறிய வர்த்தக ஊடக அமைப்புகள் உதவும் முகமாக பல்வேறு வகையான ஊடகத் துறைகளின் காத்திரமான அபிவிருத்திக்கு உதவும் முகமாக அரசாங்கமானது ஊடக அபிவிருத்தி நிதியம் மற்றும்.'. அல்லது ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தைத் தாபித்தல் வேண்டும். இதற்கான சிறந்த உதாரணம், 2002 இல் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட ஊடகப் பல்வகைமை மற்றும் அபிவிருத்தி நிறுவனமாகும் (http://www.mdda.org.za).

## 5.03 ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களது தகவல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கை நாட்டில் காணப்படுகிறது

கிராமியப் புற மக்களும் நகர்ப்புற மக்களும் எவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்ற நிலைமையில் ஸ்மாட் தொலைபேசிகள் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியதன் காரணமாகவும் அவை எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுவதன் காரணமாகவும் கிராமியத் தொலை நிலையங்களான Nenasalas தொடர்பிலான கொள்கைகளை ICT நிறுவனம் மீளாய்வு செய்தல் வேண்டும். இதன் மூலமாக ஓரங்கட்டப்பட்ட மக்களின் தகவல் ரீதியான தேவைகளை அறிந்து அது தொடர்பிலான அணுகுமுறைகளைக் காத்திரமான முறையில் மாற்றியமைக்க முடியும் (இவற்றுள் அங்கவீனர்களும் வயதானவர்களும் உள்ளடங்குவர், மட்டுப்படுத்தப்படமாட்டாது).

2016 ஜனவரி வரையில் புதிய அரசாங்கமானது தனது மீளாய்வு செய்யப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவிக்கவில்லை. ஒரு புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்படும் வரை 2001 முதல் 2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க அவர்களது அரசாங்கம் 2003 இல் அறிமுகப்படுத்திய ஈ-இலங்கை கருத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கையைப் பிரயோகிக்க முடியுமென ஊகிக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முகமாக ஈ-இலங்கைக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது, ஐந்து நிகழ்ச்சிநிரல் உபாயங்களை மையமாகக் கொண்டு இதன் தொலைநோக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அவைகளாவன,

- நடைமுறைப்படுத்தல் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்.

- தகவல் ரீதியான உட்கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் வாய்ப்புள்ள சுற்றாடலை உருவாக்குதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மனித வளங்களை விருத்தி செய்தல்.
- அரசாங்க மற்றும் பிரஜைகளுக்குச் சேவை வழங்குகின்ற விடயங்களை நவீன மயப்படுத்தல்.
- அரசாங்க தனியார்ப் பங்காண்மைகள் மூலம் சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.

ஈ-சமூகம் தொடர்பான ஆறாவது உபாயங்கள் பின்னர் சேர்க்கப்பட்டது.

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் உயர் அமைப்பாக 2003 இல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் (ICTA) தாபிக்கப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய அரசாங்கத்தின் சகலவிதமான கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும் ஆணை ICTA இற்கு வழங்கப்பட்டது.

பல வருடங்களாக ICTA இன் இலகுபடுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் விளைவாக பின்வரும் நன்மைகள் கிடைத்தன.

- தேசிய, சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பயன்படுத்துவதை உறுதிசெய்தல். அத்தோடு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இலகுவாகப் பிரயோகித்தல். தற்சமயம் பல்வேறு வகையான பொன்ட்களை தரவிறக்கம் செய்யாத நிலையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழியில் கணினியில் இலகுவாக தட்டச்சு செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.
- நாட்டின் .lk குறியீட்டிற்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டு முதல் சர்வதேச டொமைன் பெயர்களையும் (IDN) சிங்களம், தமிழ் மொழிகளிலும்

209 http://www.icta.lk/index.php?option=com_content&view=article&id=25&Itemid=233&lang=en

210 An overview of Sri Lanka's ICT sector is found on this World Bank website: http://broadbandtoolkit.org/Case/lk/3

211 Main source: http://www.icta.lk/attachments/article/1247/Ideas%20Actioned,%20v%205.pdf

212 http://වෙබ්.ලක්ඩසම.ලංකා/index.php/si/

பயன்படுத்த முடியும். இதன் மூலம் ஆங்கிலத்தைப் பயன்படுத்தாத மக்கள் இணையத்திலுள்ள வளங்களை இலகுவாக அணுகிப்பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. தற்சமயம் ccTLDs .□□□□ மற்றும் .இலங்கை ஆகியவற்றின் மூலமாக இப்பொழுது தமிழிலும் சிங்களத்திலும் டொமைன் பெயரைப் பதிவுசெய்துகொள்ள முடியும்.

- அங்கவீனர்களும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை இலகுவாக அணுகிப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தரப்படுத்தல்கள் மற்றும் கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சைகை மொழியிலான அகராதியொன்று விருத்திசெய்யப்பட்டது. இதனுடன் ஈ-கற்றல் மூலமான கற்கை நெறியொன்றும் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை சைகை மொழியை எவரும் கற்க முடியும் (செவிப்புலன் குன்றியவர்கள் உலகளாவிய ரீதியில் பயன்படுத்துகின்ற செய்கை மொழியானது இடத்திற்கு இடம் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது என்பதைக் கருத்திற்கொள்ளவும்). கட்புலன் மற்றும் செவிப்புலனற்றவர்கள் இது தொடர்பான பிரயோகங்களைப் பயன்படுத்த முடியும். பிரயில் மொழியில் காணப்படுகின்ற ஆக்கங்களை தேசிய மொழியில் உரையாடல் வடிவில் மாற்றுவதற்கான மென்பொருட்களும் இங்கு காணப்படுகின்றன.

- Bhasha புரசர சிங்களவர்கள் தமிழையும் தமிழர்கள் சிங்களத்தையும் கற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. கூகிள் அப்ஸைப் பயன்படுத்தி இலவசமாக இதனைத் தரவிரக்கம் செய்ய முடியும்.

- கிராமியப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகளைக் கருத்திற்கொண்டு நென்செல (அறிவு நிலையங்கள்) ICTA இனால் உருவாக்கப்பட்டன. 2015 இறுதி வரையில் சுமார் 1000 அத்தகைய நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இவை பல்வேறு விதமான சமூக ஊடாட்டங்களை ஏற்படுத்தின. வறுமையைக் குறைத்தல், பொருளாதார அபிவிருத்தி, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு தகவல் மற்றும் தொடர்பாடல்

213 http://www.wsis-award.org/winner/impaired-aid-3720100424

214 http://www.mobogenie.com/download-bhasha-guru-1184238.html

215 http://www.nenasala.lk/index.php?option=com_content&view=article&id=86&Itemid=523&lang=en

216 http://www.icta.lk/index.php?option=com_content&view=article&id=1494:government-information-center-1919&catid=131:main-projects&Itemid=234&lang=en

ரீதியான உதவிகளை நென்செல வழங்கியது.

- பல்வேறு விதமான அரசாங்க நிறுவனங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கக் கூடிய சேவைகள் தொடர்பான தகவல்களை வழங்கும் முகமாக அரசாங்க தகவல் நிலையத்தை (GIC) ICTA உருவாக்கியது. இதனை http://www.gic.gov.lk/gic இணையத்தளம் மூலமும் 1919 அழைப்பு மூலமும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் சேவைகள் மூன்று மொழிகளிலும் இதன் சேவைகள் காணப்படுகின்றன (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

இருப்பினும் தொழில்நுட்பத் தராதரங்கள் தொடர்பில் தீர்க்க முடியாத பிரச்சினைகள் இன்னும் காணப்படுகின்றன. தேசிய மொழிகளை யுனிகோட் பண்புகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதில் காணப்படுகின்ற தாமதங்களின் காரணமாக அச்சகங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய முறைகளையே பயன்படுத்தி வருகின்றனர். யுனிகோட்டிற்குப் பதிலாக இதனையே இவர்கள் பயன்படுத்துவதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அத்தோடு தேசிய மொழியிலான பொன்ட்களும் பல்வகைமை குன்றியதாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒளியியல் பண்புகளை தெரிவுசெய்வது தொடர்பான சிரமங்கள் (optical character recognition - OCR). இலங்கையில் எண்மிய உள்ளடக்கங்களின் உருவாக்கம் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியன முழுமையாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி இயங்கக் கூடியதாகவும் ஒத்துப்போகக் கூடியதாகவும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இருத்தல் வேண்டும். எதனுடன் தொடர்புடைய விசைப் பலகைகளும் தராதரமிக்க முறையில் சீர்செய்யப்படல் வேண்டும்.

## இணைய உட்கட்டமைப்பு

அண்மைக்காலம் வரை இலங்கையில் பைபர் ஒப்டிக் கேபிள்ஸ் முறையானது பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. நாட்டில் காணப்படும் பெரும்பாலான பைபர் வலையமைப்புகள் ஒட்டுமொத்தத் தரவு நெரிசல்களின் திரட்டை எடுத்துச் செல்லும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது (உதாரணம், இணைய அகலப்பட்டை (Internet bandwidth). இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்பாட்டாளர்களது எதிர்கால தேவைகளை

217 Strategies for the promotion of broadband services and infrastructure: a case study on Sri Lanka. ITU and the Broadband Commission for Digital Development. 2012. http://www.broadbandcommission.org/Documents/publications/BB_MDG_SriLanka_Final.pdf

218 http://www.trc.gov.lk/2014-05-12-13-25-54/broadband-speed-test.html

219 Broadband in Sri Lanka: Glass Half Full or Half Empty? http://www.infodev.org/articles/broadband-sri-lanka

நிறைவேற்றும் முகமாக TRCSL ஆனது Backbone Network (NBN) ஐ வலுப்படுத்தும் பொறுப்பினை இலங்கை ரெலிகொம்மிற்கு வழங்கியது. தமது வலையமைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பினாலோ அல்லது அதிகமானோர் அவற்றைப் பாவிப்பதன் காரணமாகவோ இந்த புரோட்பேண்டினுடைய வேகம் வீழ்ச்சியடையாமலோ அல்லது ஏற்றத்தாழ்வுடையதாக இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு ரெலிகொம் செயற்பாட்டாளர்களைச் சார்ந்ததாகும். இருப்பினும் இத்தகைய நிலைமைகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுவதில்லை. வாடிக்கையாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதுடன் முறைப்பாடுகளையும் மேற்கொள்ளச் செய்தது. தனது இணையத்தளத்தில் TRCSL ஆனது எளிமையான புரோட்பேண்ட் வேகத்தை வழங்கிய பொழுதிலும் புரோட்பேண்ட் வாடிக்கையாளர் உரிமைகள் தொடர்பில் பயன்படுத்துனர்கள் மத்தியில் விழிப்பூட்டல்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

இரண்டு பிரதான நீர் மூழ்கிக் கேபிள் முறைகள் மூலம் இலங்கையானது அதன் சர்வதேச இணைய இணைப்புகளைப் பெற்றுக்கொள்கிறது. தென் கிழக்காசியா/ மத்திய கிழக்கு/ மேல் ஐரோப்பா (SEA-ME-WE) மற்றும் பூலோக ரீதியாக பைபர் ஒப்டிக் லிங்க் எரவுண்ட் த குளோப் (Fiber-Optic Link Around the Globe -FLAG). SLT மற்றும் லங்கா பெல் ஆகியவற்றின் மூலமாக 3 நீர்மூழ்கிக் கேபிள் முறைகள் பேணப்பட்டு வருகின்றன. பாரத் லங்கா மற்றும் திரகு ஆகிய இரண்டு பிராந்திய நீர்மூழ்கிக் கேபிள்கள் மூலம் தொடர்புகள் பெறப்படுகின்றன.

இலங்கையில் வழங்கப்படும் புரோட்பேண்ட் சேவைகளின் தரம் பற்றி 2012 இல் LIRNEasia இன் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுகையில் “இங்கு காணப்படும் பிரதான சவால்கள் எனில், போதியளவு தராதரத்துடன் உற்பத்திப் பொருள் ஒன்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாகும். பஜட் புரோட்பேண்ட் அல்லது பஜட் ரெலிகொம் மாதிரிகள் எனும் பொழுது அவை செலவு குறைந்ததாகவும் விலை குறைந்ததாகவும் காணப்படுகிறது. ஆனால் அவற்றின் தரம் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையில் புரோட்பேண்ட்களின் நிலைமை இவ்வாறுதான் காணப்படுகின்றன. இருப்பினும் பல்வேறு விதமான சேவைகளைக் கருத்திற்கொண்டு நோக்குகையில்

இலங்கையைப் பொறுத்தவரையில் மொபைல் புரோட்பேண்டகளானது நிரந்தர புரோட்பேண்களை விட சிறப்பான சேவைகளை வழங்குகின்றன. உலகிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பு நோக்குகையில் இலங்கை வாடிக்கையாளர்கள் தாம் செலுத்துகின்ற பணத்திற்கு குறைவான பெறுயுடைய சேவைகளையே பெற்றுக்கொள்கின்றனர். மோசமான விளம்பரம் இதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகும். (புரோட்பேண்ட்களுடைய வேகம் பற்றி அறிவிக்கப்பட்டாலும் கூட உண்மையில் அந்த வேகத்தை அவை கொண்டிருப்பதில்லை) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றுமொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அதிக விலை காரணமாக சர்வதேச ரீதியான தொடர்புகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினை.

## அதிகளவில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

நம்பகத் தகுந்த தராதரத்துடன் இணைய இணைப்புகளை அனைவரும் தாங்கக் கூடிய வகையில் நியாயபூர்வமான விலையில் வழங்குவதன் அவசியத்தை புதிய அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இரண்டு முன்னெடுப்புகள் இது தொடர்பில் எடுத்துரைக்கின்றன.

- இலவச பொது வைபை (WiFi) : 2014 டிசம்பரில் திரு மைத்திரிப்பால சிறிசேன அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடக சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகையில் “தொடர்பாடல் தொழில்நுட்பத்தை முகாமைத்துவம் செய்யும் முகமாகவும் சிறந்த சமூகதிற்கான சமூக ஊடகங்களை உருவாக்கும் முகமாகவும் ஊடக அபிவிருத்திக் கொள்கையொன்றை உருவாக்குதல்” 2016 இல் இது ஆரம்பிக்கப்பட்ட பொழுது இந்த முறையானது இலங்கையை பெரும்பாலும் சர்வதேச இணைய வசதிகளைப் பெற்ற முதல் நாடாக மாற்றியமைக்குமென ICTA குறிப்பிட்டது.

- கூகுள் நிறுவனத்துடன் வான் பலூன் தொடர்பான பங்காண்மைகள் : கம்பியற்ற (wireless) இணையச் சேவையை நாடு முழுவதும் வழங்கும் முகமாக 2015 ஜூலையில் கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ICTA கையொப்பமிட்டது. நிலத்திலிருந்து சுமார் 20 கி.மீ. இற்கு மேல் உபாய ரீதியான முறையில் 13 உயர் தொழில்நுட்ப பலூன் வலையமைப்புகளைக் கொண்டதாக

## National Backbone Network (NBN)





இக்கருத்திட்டம் காணப்பட்டது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட இந்த பலூன்கள் வான் பரப்பில் "மிதக்கும் கோபுரங்கள்" போல் செயற்படும். இவை நிலத்திலிருந்து விநியோகிக்கப்படுவதை விட அதிகளவிலான 3G மொபைல் சமிக்ஞைகளை அனுப்பி வைக்கும். 2016 இல் இது ஆரம்பித்து வைக்கப்பட்ட பொழுது உலகிலேயே சர்வதேச இணைய வசதிகளைப் பெற்ற முதல் நாடாக இலங்கை திகளும் என ICTA குறிப்பிட்டது.

### பகிரங்கத் தரவுகள்

பதிப்புரிமை, காப்புரிமை அல்லது ஏனைய கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் அற்ற நிலையில் சில வகையான தகவல்களை யாரும் மீள்பதிப்புரிமை செய்ய முடியும் அல்லது வெளியிட முடியும். அவ்வாறு காணப்படுகின்ற தரவுகள் பகிரங்கத் தரவுகள் எனப்படும். இவ்வகையான பகிரங்கத் தரவுகள் அணுகுமுறையானது குறிப்பாக விஞ்ஞான ரீதியான தரவுகள் மற்றும் அரசாங்கத் தரவுகள் போன்றவற்றுக்கு ஏற்புடையதாகும். கடந்த சில வருடங்களாக இலங்கையின் அரசாங்கத் துறையைச் சார்ந்த தரவுகள்

220 http://www.freewifi.lk/hubs.php

221 http://www.lankabusinessonline.com/google-loon-project-to-cover-sri-lanka-with-3g-internet/




Submarine cables connecting Sri Lanka to global information infrastructure.
From TeleGeography Submarine Cable Map at http://www.submarinecablemap.com

இத்தகைய பகிரங்கத் தரவுகளை நோக்கிப் பயணிக்கின்றது.

இலங்கையின் பகிரங்கத் தரவுகள் தொடர்பான முன்னெடுப்புகள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டன. ஏனைய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து ICTA இனால் இது செயற்படுத்தப்படுகின்றது. இதன் நோக்கங்களானது இணை அரசாங்க அபிவிருத்தி தரவுகள், இனப்பரம்பல், புள்ளிவிபரங்கள், செலவுகள் போன்ற பயன்மிக்க தரவுகளை கொள்கை வகுப்பாளர்கள், மென்பொருள் தீர்வு விருத்தியாளர்கள், பொதுமக்கள் போன்றவர்கள் பயன்மிக்க வகையில் பயன்படுத்தக் கூடிய விதத்தில் எண்மிய வடிவத்தில் இவை காணப்படுகின்றன. இணையத்தின் மூலமாக கூயாதீனமாக பயன்படுத்தக் கூடிய விததில் இவை காணப்படுகின்ற (உதாரணம், இத்தகைய தரவுகள் பகிரங்கமாக காணப்படுகின்றன. ஏனைய மென்பொருட்களுடன் இவற்றைப் பகுப்பாய்வுக்குட்படுத்த முடியும்).

2016 பெப்ரவரி வரை இலங்கை பகிரங்க தரவுகள் தொடர்பான முன்னெடுப்பானது 9 பொதுத் துறை அமைப்புகளிடமிருந்து 89 தரவுத் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டது.

222 https://www.data.gov.lk

இவற்றுள் 50 வீதத்திற்கும் அதிகமான தரவுகள் புள்ளிவிபரத் திணைக்களம், சனத்தொகை கணக்கெடுப்புத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்றன. இவற்றுடன் தொடர்புபட்ட மற்றுமொரு நிறுவனமாக பொலிஸ் திகழ்கின்றது. இருப்பினும் இதனால் வழங்கப்பட்ட தரவுகளில் போதாமைகள் காணப்படுகின்றன.

உரிமையாளர் மற்றும் தனிப்பட்ட ஊழியர்கள் ஆகியவற்றுக்கிடையிலான தரவு சமநிலையானது ஒரு சமநிலையற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. எனவே. ஊடக உரிமையாளர்களுடன் கூட்டிணைந்த உடன்படிக்கைகளை விருத்தி செய்வது அவசியமாகின்றது. ஏனையவற்றுக்கும் இது பொதுவானவையாக் காணப்படுகின்ற போதிலும் ஊடகத்திற்கும் ஏற்புடையதாக ஏன் அதனை மாற்றியமைக்க முடியாது?

## விதப்புரைகள்

- நல்லாட்சி, ஜனநாயக ரீதியான பண்மைத்துவம், பொதுமக்கள் நலன் ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய எண்மிய தொழில்நுட்பங்கள் சார்ந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தக் கூடிய தெளிவான, ஒத்திசைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கொள்கையொன்றினை தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் எண்மிய உட்கட்டமைப்பு அமைச்சு மூலம் அரசாங்கம் உருவாக்குதல் வேண்டும். தனிநபர் அந்தரங்கங்களைப் பாதுகாத்தல், இணையம் சார்ந்த பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கிய இவை தொடர்பான சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளக் கூடிய விதத்தில் விழிப்பூட்டல்களைக் கொண்டதாக கொள்கை இருத்தல் வேண்டும். புதிய கொள்கையினை உருவாக்குதன் பொருட்டு மக்கள் மத்தியில் கலந்தாராய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- சிங்களப் பிரதிகளில் காணப்படுகின்ற சகல பிரச்சினைகளையும் முன்னுரிமை அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் தீர்த்தல் வேண்டும். ஏனெனில், இப்பிரச்சினையானது உள்நாட்டு எண்மிய உள்ளடக்கங்களைப் பாதிக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. சிங்கள மற்றும் தமிழ் வடிவங்கள் ஒன்றுடனொன்று ஒத்துப் போகக் கூடிய விதத்தில் பண்மைத்துவம் மிக்கதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை ICTA மேற்கொள்ளல் வேண்டும்.


- சமூகத்தில் இணையம் சார்ந்த வலையமைப்புப் பொருளாதாரம் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு இலங்கைக்கும் சர்வதேச இணையக் கட்டமைப்புகளுக்கும் இடையில் போதியளவு தொடர்புகள் உள்ளதை அரசாங்கம் உறுதிசெய்தல் வேண்டும். தேசிய வலையமைப்பு போதியளவு வலுப்படுத்தப்படல் வேண்டும். பிரதேச மட்டங்களில் சகல புரோட்பேண்ட் வலையமைப்புகளும் சிறப்பான தராதரத்துடன் செயற்படுவதை TRCSL உறுதிசெய்தல் வேண்டும்.

- இலங்கையில் ஏற்கனவே பகிரங்கத் தரவு முன்னெடுப்புகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தனது திறந்த தரவுக் கொள்கையினை அரசாங்கம் விரிவுபடுத்தல் வேண்டும். இவற்றுள் அரசாங்க பல்கலைக்கழகங்கள், அரச நிதியிடல் ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரச துறைக்கும் இது விரிவாக்கப்படுதல் வேண்டும். வரி செலுத்துபவர்களது பணத்தினால் இயக்கப்படுகின்ற இந்த தரவுகளை காத்திரமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் கலந்துரையாடல் மற்றும் விவாதங்கள் போன்ற கலாசாரம் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது சமூகம், கலாசாரம்,டு அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும்

முகமாக இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களானது ஐஊவு அவதானிப்பு சார்ந்த விடயங்களை மேற்கொள்ளல் வேண்டும். தற்சமயம் மிகக் குறைவாகக் காணப்படுகின்ற இணைய மையக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பில் தலைமைத்துவம் சார்ந்த வகிபாகத்தினை இவ் அமைப்பு மேற்கொள்ளலாம்.






**s** சகமனித பிரச்சினையை பத்திரிகையாளர் எடுத்துக் காட்டுகிறார் - கார்டூன் கிஹான் தி சிகேரா - டெய்லி மிரர் 18 ஜூன் 2014

**t** முக்கிய ஊடகங்கள் எடுக்க தயங்கும் காட்சிகளை சமூக ஊடகம் இலங்கை குடிமக்களுக்கு செயல்படுத்தல் - கார்டூன் அவந்த ஆடிகல அவர்கள் விஜே பத்திரிகை




உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை பயன்படுத்தி **manthri.lk** இனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து நிலைப்படுத்தல்

CATEGORY 5

# Infrastructural capacity is sufficient to support Independent and pluralistic media

## Collation of Recommendations

| Indicator | Relevant Recommendation |
| --- | --- |
| 5.1 Media organisations have access to modern technical facilities for news gathering, production and distribution | 1. The government should develop, through a consultative process with the broadcast industry, a clear strategy and timeline for transiting from analogue to digital broadcasting in television. Once adopted, the strategy's implementation in a fair and transparent manner should be done by the independent broadcast regulator proposed to be set up. It is important to resolve the various analogue era policy and regulatory anomalies before digital transition is completed.<br><br>2. On multi-platform media content dissemination, the Media Ministry should make it a public obligation for the state broadcasters to maintain programme repositories online (comparable to BBC's iPlayer: https://en.wikipedia.org/wiki/BBC_iPlayer). Such archiving would be particularly useful for educational and research purposes.<br><br>3. Sri Lanka's media organisations should develop digital media strategies that take into account the most suitable digital platforms and tools to produce content and engage multiple audiences through their delivery. Digital strategies should also include institutional policies and best practices for social media use, intellectual property rights, archiving and capacity building. |
| 5.2 Marginalised groups have access to forms of communication they can use | 4. The government should establish a Media Development Fund and/or a Media Diversity and Development Agency to actively support the development of a more diverse media industry through support for community media operations and small commercial media entities. A useful model is the Media Diversity and Development Agency of South Africa (http://www.mdda.org.za), set up by an Act of Parliament in 2002. |

| Indicator | Relevant Recommendation |
|---|---|
| 5.2 Marginalised groups have access to forms of communication they can use | 5. The ICT Agency should review its policies and strategy for rural tele-centres (Nenasalas), as the spread of mobile phones (especially smartphones) has completely changed the dynamics of how urban and rural Lankans access and share information. In doing so, it should evolve a more differentiated approach addressing information needs of various marginalised groups (including, but not limited to, those with disability and older people). |
| 5.3 The country has a coherent ICT policy which aims to meet the information needs of marginalised communities | 6. The government, through the Ministry of Telecommunications and Digital Infrastructure, should adopt a clear and coherent ICT policy which takes full advantage of digital technologies and opportunities for promoting governance, democratic pluralism and the public interest. There is a need for better awareness at policy and regulatory level of challenges such as privacy protection and cyber security. Citizen consultations should be held with a view to developing a new policy.<br><br>7. The ICT Agency should solve all outstanding issues on Sinhala scripts on a priority basis, as this bottleneck hinders the development of local language digital content. ICTA needs to ensure full interoperability, compatibility and versatility of Sinhala and Tamil characters.<br><br>8. Considering the increasingly networked economy and society, the government should ensure that there is adequate international connections between Sri Lanka and the global Internet infrastructure, and that the National Backbone Network is adequate and robust. At the retail level, TRCSL should ensure that all telecom operators maintain broadband quality standards so that consumer interests are safeguarded. |

| Indicator | Relevant Recommendation |
|---|---|
| 5.3 The country has a coherent ICT policy which aims to meet the information needs of marginalised communities | 9. The government should extend its open data policy, already articulated in the Sri Lanka Open Data Initiative, across the entire public sector including public universities and public funded research institutes. This would lead to proactive sharing of data that has been gathered and stored using taxpayer funds, leading to a culture of data-driven public discussion and debate.<br><br>10. Sri Lanka's public universities should considering setting up an 'ICT Observatory' to undertake multidisciplinary action research on ICTs' impact on society, culture, politics and the economy. Such a body can also play a leadership role in promoting cyber literacy that is currently low. |

# Annexes

**Annex 1** Sources and Persons consulted

**Annex 2** Research Support Team

**Annex 3** Summaries of Focus Group Discussions

**Annex 4** Recommendations to political parties during General Election 2015

**Annex 5** Radio and Television Channels in Sri Lanka

**Annex 6** Registered Institutions for Radio and TV Licence in Sri Lanka

**Annex 7** Highlights of Public Survey on Mass Media in Sri Lanka 2015

Annex
# 1
# Sources and Persons consulted

This study was driven by a combination of literature review, personal interviews with key stakeholders, and focus group discussions.

The literature review took into account various books, academic papers, advocacy group reports, published news media reports, media op-ed articles, blogs and other sources that are in the public domain. Sources going back to the past 20 years were consulted in some cases, but most were published during the past few years. The key sources and references are given in footnotes.

For the Rapid Assessment conducted during March – April 2015, a number of persons were informally consulted by its author Nalaka Gunawardene through face-to-face interviews, phone calls or emails that elicited information, clarifications and viewpoints. In particular, inputs from the following persons are acknowledged with much gratitude (Designations given are those valid at the time of interviews).

- Karunaratne Paranavithana, Secretary, Ministry of Media
- Dr Charitha Herath, Former Secretary, Ministry of Media and Information
- Wijayananda Jayaweera, Media consultant and media rights advocate
- Toby Mendel, Executive Director, Centre for Law and Democracy (CLD), Canada
- Dr. Pradeep N Weerasinghe, Senior Lecturer in Mass Media Studies, University of Colombo
- Ms Hana Ibrahim, South Asia Free Media Association (SAFMA) – Sri Lanka Chapter
- Ms Dilrukshi Handunnetti, Former Associate Editor, Ceylon Today newspaper
- Asoka Dias, Country Representative, Asian Media Information and Communication Centre (AMIC)
- K W Janaranjana, Chief Editor, Ravaya newspaper
- Sumith Chaaminda, Senior Analyst and Head of Politics, Verite Research
- Arun Arokianathan, Editor, Sudar Oli newspaper
- Sukumar Rockwood, CEO, Press Complaints Commission of Sri Lanka (PCCSL)
- Kumar Lopez, CEO, Sri Lanka Press Institute (SLPI)
- Sam de Silva, Innovation Advisor for Asia, InterNews
- Dileepa Abeysekera, advertising professional
- Ms Sandya Salgado, social marketing professional
- Ranga Kalansooriya, Regional Advisor for Asia, International Media Support (IMS)

For the full assessment, the research team of the Secretariat for Media Reforms interviewed selected media stakeholders using a structured questionnaire and later transcribed them. The following persons granted such interviews (listed in no particular order):

| Name | Affiliation | Interview date |
|---|---|---|
| S G Punchihewa | Writer, columnist and critic | 2015.05.06 |
| Dr Rohan Samarajiva | Communications scholar; former Director General, Telecom Regulatory Commission | |
| Ms Sumithra Rahubaddha | Novelist; formerly of Sri Lanka Administrative Service | 2015.06.08 |
| Jayantha Fernando | Director – Legal, ICT Agency | 2015.05.29 |
| Fred Gamage | President, Web Journalists Association | 2015.04.27 |
| Gairika Perusinghe | Former chairman, ITN Sri Lanka | 2015.04.28 |
| Rosmand Senaratne | Former General Manager, Swarnavahini and former chairman, ITN Sri Lanka. | 2015.06.17 |
| Priyantha Kariyapperuma | Former Director General, Telecom Regulatory Commission; Advisor to Siyatha TV | 2015.06.17 |
| S Sri Kajan | Editor, Daily Virakesari | 2015.06.14 |
| Shan Wijetunge | Senior Manager, Advocacy & Public Relations, Transparency International Sri Lanka | 2015.04.26 |
| C V Wigneswaran | Chief Minister of Northern Provincial Council | 2015.06.07 |
| Lal Kantha | Former Member of Parliament, Janatha Vimukthi Paramuna (JVP) | 2015.04.27 |
| Indika Jayaratne | Director (News) - Sri Lanka Broadcasting Corporation (SLBC) | 2015.04.28 |
| Ms Krithika Dharmaraja | Lecturer, Journalism Unit, University of Jaffna | 2015.06.06 |
| Fr Ruban Mariyampillai | Visiting lecturer, University of Jaffna | 2015.06.06 |
| Susara Dinal | Channel Head Sirasa TV | 2015.04.21 |
| Samira Kalupe | Head of Finance and Human Resources. Lanka Broadcasting Network. | 2015.04.25 |

| | | |
|---|---|---|
| K Kunarasa | News Editor, Thinakaran | 2015.06.21 |
| Kanchana Marasinghe | Producer, Sri Lanka Broadcasting Corporation | 2015.04.19 |
| Harsha Wijayawardhana | Head of Department/Consultant, University of Colombo School of Computing (UCSC) | 2015.04.28 |
| H M Jackson | Director General (Engineering) Sri Lanka Broadcasting Corporation | 2015.04.21 |
| Newton Gunaratne | Former ahairman, ITN | 2015.04.29 |
| Hema Nalin Karunaratne | Managing Director, Heritage TV | 2015.04.26 |
| Edmond Ranasinghe | Former Editor, Divaina and The Island | 2015.06.21 |
| Vijitha Yapa | Former Editor, The Island, Sunday Island and Sunday Times | 2015.06.19 |
| Mohan Samaranayake | Former chairman, Sri Lanka Rupavahini Corporation; commentator on international affairs | 2015.04.28 |
| Thilina Samarasooriya | Director - Training & Foreign Relations, Sri Lanka Broadcasting Corporation (SLBC) | 2015.04.19 |
| Somaratne Dissanayaka | Chairman, Sri Lanka Rupavahini Corporation (incumbent at the time of interview) | 2015.04.19 |
| Saman Athaudahetti | Additional Secretary (Media) to the Prime Minister of Sri Lanka | 2015.04.28 |
| B K S Ravindra | Additional Secretary, Ministry of Mass Media | 2015.05.17 |
| Charitha Herath | Former Secretary, Ministry of Mass Media | 2015.05.06 |
| Prof Dhammika Ganganath Dissanayake | Former chairman of Sri Lanka Rupavahini Corporation and ITN Sri Lanka; | 2015.04.17 |
| Nanda Muruttetuwegama | Chairman, Sri Lanka Broadcasting Corporation | 2015.04.23 |
| S M Marikkar | Former Channel Head, Sirasa FM | 2015.04.22 |

In addition, those who participated in the five focus group discussions are named along with summaries in Annex 3.

Annex

# 2

# Research Support Team

Valuable research and interview assistance for the Rapid Assessment was provided by Ameer Hussain who visited and consulted with several Tamil language media organisations and professionals.

For the full report, the following team provided research assistance and support in various ways, working under the overall supervision of Dr Pradeep N'Weerasinghe, Head, Department of Mass Media, Sri Palee Campus, University of Colombo.

**Research Associates:**
Sajitha Lakmali
Kumeshi Prabashini
Dilan Singappuli

**Research Assistants:**
Lakshiri Wijesinghe
Chamodi Kaluarachchi
Fathima Shamila
Dinithi Wijerathne
Nipuna Kariyawasam
Pubudu Pathirana
Indira Nawagamuwa

Annex

# 3

# Summary of Focus Group Discussions

**Focus Group Discussion with National Collective of Provincial Journalists (9 June 2015)**
**Participating: Kanchana Kumara Ariyadasa, President; Rohana Siriwardena, Secretary; T M Janoo Kichilan, Treasurer**

- Ideally, provincial journalists should be engaged in this pursuit on a full time basis. There are a few among us who manage this by contributing news to multiple media outlets. But most cannot do so as payments for their reporting is very low.
- Media outlets for which we report have little or no obligations to us. We get paid little, and have no other benefits. We have no employment contract or salary details, so cannot even apply for a bank loan. Even when one of us dies, there is no expression of condolences from Colombo media companies.
- Many provincial journalists are known and respected in their areas. They don't need the media accreditation issued by the government to gain access to sources or events. In some cases, provincial journalists are more influential than local politicians.
- Most provincial journalists have established their trust with sources and can access news and information even without legally guaranteed right to information. But RTI would make it easier and faster.
- Some provincial journalists think that they cannot criticize government officials or politicians. This is a misconception. The challenge is to gather evidence and report

without bias or ideology. Some among us have criticised public officials or politicians even in the state media.

- Sadly, we have no control whatsoever on the news agenda of media companies for whom we report. Some media outlets want our coverage to be centred on local politicians. But we want to focus on people's problems, issues and solutions.
- We want to evolve into a Provincial Journalists Cooperative, with legal status and registration with the government's Department of Cooperatives. Such an entity can collectively support welfare and professional development of provincial journalists.
- Provincial journalists need an enabling environment in which they can carry out their journalism activities with freedom, dignity and self-respect. We are not Samurdhi beneficiaries (recipients of poverty alleviation cash transfers from government), so don't wish to be treated as such by anyone!
- We need to regular upgrading of our knowledge and skills. While occasional training workshops are useful, we would like to see a more systematic effort in capacity building.
- We are struggling to get organised. Even registering our collective has been delayed for 3 years by bureaucratic procedures. Eventually, we want to evolve to a trade union.
- We are concerned by some media outlets promoting any citizen to report their local events through videos captured using mobile phones. Having a smartphone does not make anyone a journalist. A reporter needs to have some grounding in ethics, too.
- Our long-term vision is to develop our own provincial newspapers and community radio services, so we can cover our local stories in greater depth and detail. Market viability of such media is a huge challenge. A cooperative can provide the financial foundation needed for such ventures.

**Focus Group Discussion with Sri Lanka Muslim Media Forum (8 June 2015) Participating: M S Ameen Hussain, Media trainer and consultant; Javed Munawwer, Assistant Treasurer; Thaha Muzamil, Vice President**

- Our media is divided along linguistic, religious and political lines. We need media reforms to overcome these divisions and evolve as an industry.
- Journalists in Sri Lanka face many difficulties in the line of their work. There are laws, regulations and procedures in government that restrict information. We are hopeful that when the Right to Information law is enacted, this situation will improve.
- Public officials have historically been trained to restrict, not share, public information. They go to great lengths to block information. We need a change of such attitudes.
- Journalists have devised ways of accessing even restricted information, but they face enormous risks in reporting such

information related to corruption, political scandals and administrative blunders, etc. Ensuring the safety of journalists and media organisations is a vital part of promoting democracy.

- Many restrictions were imposed during the civil war on freedom of expression. Now, more than six years after the war ended, why are these curbs being continued? We are no longer under Emergency Regulations. But some public sector procedures introduced during the war continue. These need to be changed.
- The 19th Amendment to the Constitution is a progressive step forward: it also recognized the right to information as a fundamental right. But we need public education on how to assert these rights in the public interest.
- Ideally, we should have an effective system of self-regulation in our media so that the state does not need to get involved. We have the Press Complaints Commission (PCCSL) since 2003, but it is not yet a fully effective system – because it is voluntary, not obligatory, to abide by its rulings. Perhaps PCCSL should be empowered to impose fines or have other punitive powers on media that does not correct proven lapses.
- Editorial freedom is under siege in Sri Lanka from state and corporate sources. There is regular interference by politicians and advertisers. We need laws to guarantee editorial freedom of journalists and editors.
- We also need a complaints mechanism and self-regulatory body for radio and television broadcasters in Sri Lanka. During 2009-2011, some discussions were held on setting up such a body, but it has not happened.
- Just as we demand and expect greater transparency in the government, we also need greater transparency in the media sector itself. For example, appointments and promotions in many media companies lack clear policies and procedures.
- We need to better engage and involve readers and audiences in how media content is determined and produced. Right now, we have mostly passive media consumers.
- Some private media companies do not pay EPF, ETF (pension benefits) to their journalists. Journalists in many private media are not allowed to join trade unions or participate in union activities.
- Our journalists need training and capacity building in knowledge, skills and ethics but this is not going to be accomplished by random short-duration workshops. We need a more systematic approach to training. Some media organisations and journalists do not see the value of training, so we need to promote the demand side too.
- No matter how hard we try to train journalists, some of them have an attitude problem (that they don't need any training). This must change.
- Media owners probably don't like their journalists' capacity being built and the standard of journalism going up – because then journalists will have to be paid better!
- We do not have media pluralism in Sri

Lanka today. We have many outlets, but they are driven by a certain, narrow agenda.

**Focus Group Discussion with Sri Lanka Press Association (8 June 2015) Participating: Upul Janaka Jayasinghe, National Organiser; Narendra Rajapakse, Vice President; Pushpa Ilangatilake, Executive Committee member**

- There are huge labour rights and HR issues in media companies. Many journalists are employed without a letter of appointment. There is widespread exploitation.
- All journalists should be issued with a letter of appointment, and the Code of Ethics for journalists gazetted in 1981 can be part of that letter.
- Code of Ethics is not respected or heeded by most media in Sri Lanka. The Editors' Guid has taken it forward to some extent, and got most newspapers to commit to the Right of Reply. But how many newspapers actually respect that right? Not many.
- Promotion of media freedom should be accompanied by a proper regulation of media as well as an ethically responsible media. We can learn much from India on this.
- We have concerns whether Press Complaints Commission is sufficiently empowered to act when a media outlet violates ethics and defames individuals or entities. In our view, the PCCSL itself needs to be monitored and regulated.
- We need an independent media commission. There should be no state or government representatives or nominees in that commission. All commissioners should be competent and respected individuals, and they should serve a single, fixed term (2 years).
- There needs to be a minimum qualification to enter journalism. Such national media qualification should be quality assessed and certified. It should become mandatory for all those who wish to work in the media from 2015 onwards.
- Every media company should be required to adopt its own code of ethics, which should be disclosed to the public. Media consumers can then assess their conduct against it.
- Every media company should also have their own Ombudsman who can look into staff grievances and reader complaints, and resolve as many of these as possible at that level.
- Salaries of journalists and other media workers should be linked to educational qualifications and training certification. Salary increments should take into account the acquisition of new skills and competencies.
- Media companies should ideally standardize their salary scales. This would prevent some companies 'poaching' journalists from another company by paying a few thousand rupees more.
- Media freedom is most restricted by media owners. So the media reform process needs to become a movement that involves everyone – media employees, managers, owners, regulators and media consuming public.

- Journalists and other media workers in Sri Lanka are not properly organised or united when compared to other sectors like banking. We need a strong alliance that can network and unify 15 media associations.
- The journalist in Sri Lanka lacks dignity and self-respect. Most don't take pride in their profession. This needs to be changed slowly by raising professional standards of media.
- State advertisements are given only to selected media companies, which creates market anomalies. There is, in fact, a Cabinet memorandum that says state sector advertisements should only be given to state media. This needs to be revisited and clarified.

**Focus Group Discussion with Sri Lanka Working Journalists Association (4 June 2015)**
**Participating: Lasantha Ruhunage, President; Kanchana Marasinghe**

- Airwaves are a public property, so everyone who uses spectrum needs to be accountable to the public. Broadcasters cannot do whatever they please with their licenses.
- Broadcast regulation does not mean regulating their editorial content. It is the use of spectrum and overall balance and ethical conduct that needs regulation.
- Telecom Regulatory Commission (TRC) has not managed the frequency spectrum well. We need an independent broadcast commission to cover licensing, spectrum management and overall regulation of the broadcast industry. We need to streamline the status quo before moving into digital broadcasting.
- There is a code of ethics – the Code of Professional Practice – adopted by the Editors' Guild of Sri Lanka. But we wonder how many of the editors, even those who were involved in adopting this Code, actually practise it in their own daily media work?
- We have media associations and societies, but need to evolve into a media sector trade union. We highlighted this as a key point in the "Charter for a Democratic and Pluralist Media Culture and Social and Professional Rights for Media and Journalism in Sri Lanka" that we drafted in 2005 and is known as the Tholangamuwa Declaration.
- We need to ensure that journalists and other media workers are free to form trade unions in their work places and/or join existing trade unions without fearing repercussions from their employers or loss of jobs.
- We realize that many media owners today acknowledge the need for media reforms. We need their support and participation for media reforms to succeed.
- We have to move beyond placard-carrying, slogan-shouting kind of trade union activism to one that is based on negotiations with all stakeholders including media owners. Sri Lanka Press Institute is the platform we have for this.
- We need letters of appointment for all journalists and other media workers, but

that is not enough. The power equation between owner and individual employee is not a balanced one. Thus we need to develop collective agreements with media owners. This practice is commonplace in other industries, so why not in the media?

- Much of what happens inside our media companies is done informally through connections and favours. Some journalists are happy with this and don't see the need to organize as a trade union. But we need such evolution to professionalize the sector.
- The state-owned Press Council of Sri Lanka should be abolished, and the Press Council Act should also be repealed or replaced. But we recognise the need for a complaints mechanism for media, so we have to strengthen the Press Complaints Commission.
- We don't yet have laws guaranteeing the protection of media's sources. But courts in Sri Lanka have recognized that journalists need not disclose their sources. Our entire media industry is based on trust and confidentiality we can offer sources disclosing information in the public interest.

**Focus Group Discussion at the Jaffna Press Club (2 May 2015)**
**Participating: Dharmapalan Vinojit, Vigneshwaran Kajeevan, Rathnam Dayabaran and Sriramachandran Mayudaran**

- In a multicultural society like ours, the media can either promote ethnic harmony or divide people. National reconciliation is still not a priority for all our media. This is because most media have no clear policy on reconciliation.
- Compared to the situation in other areas of Sri Lanka, media freedom of media practitioners in the Northern Province is still lagging behind and problematic.
- Even after the change of government in January 2015, Northern journalists continue to experience threats and arrests due to their professional work. We are not free to report or comment on the ground realities of Jaffna and the Northern Province in our media.
- There are political and societal factors inhibiting free and open reporting in the Northern Province. This does not serve our media consuming public or the media industry.
- We are not seeking freedom to do whatever we please. All we ask is that we be allowed to report based on journalistic principles and ethics. Is that too much to ask for?
- We have pressures from outside as well as from within the media industry. Sometimes we as reporters are not allowed to cover all aspects of a given incident or

issue. We have to risk our jobs and even life and limb to give the full story to our public.

- In spite of these limitations, we are committed to upholding the public interest as much as we can. We have built up resilience during the war years and are not easily deterred.
- We try not only to highlight problems that the Northern people face, but also look for solutions. We cannot solve many problems but advocate certain measures that need to be taken by government, business or civil society.
- We feel isolated from the rest of media community in Sri Lanka. We have tried very hard to engage, but the (southern) media community does not seem to reciprocate.
- Looking at the Lankan media as a whole, there still is considerable stereotyping of ethnic and religious minorities. During the war, some newspapers equated all Tamils as Tigers. While this no longer happens, old prejudices are lingering among some journalists and editors. Our society and media community are both polarized along ethnic lines.
- There is a need for more robust and better organised regional or provincial level media in Sri Lanka. Why should the media industry remain so concentrated around Colombo?
- Against many odds, we are working hard to sustain several local level newspapers in Jaffna. We try to cover local news, but our analysis and commentary is not narrowly focused on our areas. We try to adopt a national perspective where needed.
- There is something like a 'class divide' between the national level media and the provincial or local level media in Sri Lanka. The former gets all the recognition and easier access, but the latter has to struggle to even get noticed! In a healthy media ecosystem, we should have room for both these kinds to co-exist and thrive.
- We recognise that there are gaps in the professionalism of provincial journalists. We are keen to improve our professionalism for which we need all the help we can get.
- Media demands accountability from everyone else in society, but we in the media must also be accountable to the public. For this we need media regulation. Readers and audiences need to have mechanisms through which they can comment or complain about specific media content or any violations of media ethics.

Annex

# 4

# Statement on Freedom of Expression and Media Freedom

## For the attention of political parties contesting in General Election 2015

**Issued on 21 July 2015 in Colombo by:**
Secretariat for Media Reforms
Sri Lanka Press Institute (SLPI)
Free Media Movement (FMM)
Sri Lanka Working Journalists' Association (SLWJA)
Sri Lanka Press Association
Jaffna Press Club
Sri Lanka Muslim Media Forum
National Alliance of Provincial Journalists
National Alliance of Community Broadcasters
Young Journalists Association

Since the Presidential Election on 8 January 2015, some progress has been made with regards to freedom of expression (FOE) and media freedom in Sri Lanka. These include: steps being taken to end threats against and pressure on media organisations and journalists; the unblocking of political websites that were arbitrarily blocked; the 19th Amendment to the Constitution recognizing the right of access to information as a fundamental right; and the government extending an open invitation to exiled journalists to return to Sri Lanka.




S ஊடக வாதிடும் குழு வழங்கும் சீர்திருத்தங்களுக்கான பொது தேர்தல் 2015 க்கான முன்னுரிமை பதிந்துரை

But much more remains to be done to improve FOE and media freedom situation in Sri Lanka, and to ensure a more conducive environment for the media. Such policy, legal and structural reforms would require the political will of all political parties in the next Parliament of Sri Lanka.

In view of this, we urge the political parties contesting in the General Election to be held on 17 August 2015 to give a firm commitment to the following specific measures for meaningful media freedom and reforms.

These are not listed in any order of priority.

1. **Right to Information:** A right to information law, which gives individuals the right to access information held by public authorities, should be adopted. The new Parliament should pass, on a priority basis, the Right to Information Bill that was finalised in May 2015 with inputs from media stakeholders.

2. **Media Self-Regulation:** The Press Council Act No. 5 of 1973 should be repealed, and the government-controlled Press Council should be abolished. The self-regulatory body established in 2003 by the media industry, known as the Press Complaints Commission of Sri Lanka (PCCSL), should be strengthened and ideally its scope should be expanded to cover the broadcast media as well.

3. **Law Review and Revision:** Civil and criminal laws that pose various restrictions on media freedom should be reviewed and revised to bring them into line with international standards regarding freedom of expression. Such laws include the Prevention of Terrorism Act, the Official Secrets Act, sedition laws, and the rules on contempt of court and Parliamentary privileges.

4. **Crimes Against Journalists:** An independent Commission of Inquiry should be created with a mandate and adequate powers to investigate past killings of, threats to, disappearances of and other attacks on journalists, media workers and media outlets, with a view to ensuring that those responsible are prosecuted and that appropriate compensation is paid to the victims and their families.



5. **Broadcast Regulation:** Comprehensive legislation on broadcasting should be adopted in line with international guarantees of freedom of expression. This should provide for, among other things, proper planning in relation to the frequencies allocated to broadcasting, including through the digital transition, a three-tier system of broadcasting which recognises public, commercial and community broadcasters, and obligations on broadcasters to be balanced and impartial in their coverage of politics and other matters of public concern. An independent Broadcasting Authority should be set up to regulate the entire broadcasting sector in the public interest. This regulator should ensure a fair, pluralistic and efficient broadcasting system.

6. **Community Broadcasting:** The broadcasting regulation to be introduced should support the development of community broadcasting services owned and operated by communities through clear definitions of what constitutes a community broadcaster, a tailored licensing process, and lower fees for frequency allocation and other concessions.

7. **Restructuring State Media:** The three State broadcasters – the Sri Lanka Rupavahini Corporation (SLRC), the Sri Lanka Broadcasting Corporation (SLBC) and the Independent Television Network (ITN) – should be transformed into independent public service broadcasters which enjoy editorial independence, have

**5 Seetha Ranjani, Convenor of Free Media Movement, speaks at press conference on media reforms, 21 July 2015**

a clear mandate to serve the public and benefit from public funding which does not compromise their independence. Measures should also be taken to ensure that Associated Newspapers of Ceylon Limited (ANCL or Lake House) can operate independently of government and enjoy editorial freedom. A public consultation should determine the most appropriate way forward.

8. **Preventing Censorship:** No prior censorship should be imposed on the media. Where necessary, courts can review media content for legality after publication on an urgent basis. Laws and regulations that permit censorship – including the Public Performance Ordinance – should be reviewed and amended to bring them into line with international standards.

9. **No Blocking Political Websites:** There should be no attempts to limit online content or social media activities contravening fundamental freedoms guaranteed by the Constitution and international conventions. Restrictions on illegal content may be imposed only through an independent judicial process which ensures that fundamental rights to access information and freedom of expression are not hindered.

10. **Privacy and Surveillance:** The state should respect and protect the privacy of all citizens. There should be strict limits to the state surveillance of private individuals' and entities' telephone conversations and electronic communications. In exceptional situations, such surveillance should only be permitted with judicial oversight and according to a clear set of guidelines.

**Contacts:**

Dr Pradeep N Weerasinghe and Ms Kumari Welagedera
Secretariat for Media Reforms
Email: pnweera@yahoo.com
Web: www.sardglobal.org

Annex
5

# Radio and Television Channels in Sri Lanka

(Source: Lanka Market Research Bureau, 2015)

| Channel name | Language |
|---|---|
| E FM | English |
| Fox FM | English |
| Gold FM | English |
| Kiss FM | English |
| Legends 96.6 | English |
| Lite 87 | English |
| Radio SL | English |
| Real FM | English |
| Red FM | English |
| Sun FM | English |
| TNL Radio | English |
| Yes FM | English |
| Buddhist | Sinhala |
| City FM | Sinhala |
| FM Derana | Sinhala |
| Hiru FM | Sinhala |

| Channel name | Language |
|---|---|
| Isira FM | Sinhala |
| Lak FM | Sinhala |
| Lakhanda | Sinhala |
| Neth FM | Sinhala |
| Ran FM | Sinhala |
| Rangiri Dambulu | Sinhala |
| Rhythm FM | Sinhala |
| Seth FM | Sinhala |
| Shaa FM | Sinhala |
| Shree FM | Sinhala |
| Sinha FM | Sinhala |
| Sirasa FM | Sinhala |
| Sith FM | Sinhala |
| Siyatha FM | Sinhala |
| SLBC Commercial | Sinhala |
| SLBC National | Sinhala |
| V FM | Sinhala |
| Vidula | Sinhala |
| VIP | Sinhala |

| Channel name | Language |
|---|---|
| Y FM | Sinhala |
| You FM | Sinhala |
| Shakthi FM | Tamil |
| Sooriyan FM | Tamil |
| Tamil FM | Tamil |
| Thendral | Tamil |
| Therai FM | Tamil |
| Thesiya/Varthaka | Tamil |
| Varnam FM | Tamil |
| Vasantham | Tamil |
| YAL FM | Tamil |

| SLBC's Regional Radio Services | Language |
|---|---|
| Kandurata | Sinhala |
| Rajarata | Sinhala |
| Ruhuna | Sinhala |
| Uva | Sinhala |
| Wayamba | Sinhala |

| Television channels | Broadcast method | Language |
|---|---|---|
| ART TV | Terrestrial | English |
| CCTV International | Terrestrial | English |
| Channel Eye | Terrestrial | English/Tamil |
| CSN/Carlton | Terrestrial | English/Sinhala |
| ETV | Terrestrial | English |
| Hiru TV | Terrestrial | Sinhala |
| ITN | Terrestrial | English/Sinhala |
| MTV Sports (renamed in 2016 as TV 1) | Terrestrial | English |
| Nethra | Terrestrial | Sinhala |
| NTV | Terrestrial | English |

| Television channels | Broadcast method | Language |
|---|---|---|
| Rangiri Sri Lanka | Terrestrial | Sinhala |
| Rupavahini | Terrestrial | Sinhala |
| Shakthi TV | Terrestrial | Tamil |
| Sirasa TV | Terrestrial | Sinhala |
| Siyatha TV | Terrestrial | Sinhala |
| Swarnavahini | Terrestrial | Sinhala |
| The Buddhist | Terrestrial | Sinhala |
| TNL | Terrestrial | Sinhala |
| TV Derana | Terrestrial | Sinhala |
| Varnam TV | Terrestrial | Tamil |
| Vasantham TV | Terrestrial | Tamil |
| YOU TV | Terrestrial | English |

Annex

# 6

# Radio and Television Channels in Sri Lanka

## Registered Institutions for Radio or TV Licences in Sri Lanka

This table is adapted from Ministry of Media website, with a few annotations added. However, data accuracy is not independently verified. Accessed on 31 January 2016 from:

http://www.media.gov.lk/images/pdf_word/licensed-institutions-tv-radio.pdf

It is not clear from this table which of the licensees have not yet commenced or sustained broadcast operations.

| | Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|---|
| 1 | Sri Lanka Broadcasting Corporation (fully state-owned) | Radio<br>Authorised by Act of Parliament | Legacy broadcaster | Sri Lanka Broadcasting Corporation Act No 37 of 1966 |
| 2 | Sri Lanka Rupavahini Corporation (fully state-owned) | Terrestrial TV<br>Authorised by Act of Parliament | Legacy broadcaster | Sri Lanka Rupavahini Corporation Act No 6 of 1982 |
| 3 | Independent Television Network ITN Sri Lanka (State-owned enterprise) | Terrestrial TV | Legacy broadcaster | Company wholly owned by the government of Sri Lanka |
| 4 | Colombo Communication (Pvt) Ltd., later transferred to EAP Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 01.04.1992<br>28.07.1993 | |
| 5 | Maharaja Organization (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 12.05.1992 | |
| 6 | Teleshan Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 08.10.1992 | |
| 7 | IWS Holding (Pvt) Ltd | Terrestrial TV<br>Direct-to-Home (DTH) | 11.01.1995<br>31.10.1997 | |
| 8 | Asia Broadcasting Corporation (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 17.11.1995<br>16.05.2008 | Licence is reissued on 21.02.2008 |
| 9 | Television and Radio Network | Terrestrial TV<br>Radio<br>Cable TV | 30.05.1996 | |

| Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|
| 10 Grant Communication (Pvt) Ltd | Cable TV | 15.07.1996 | |
| 11 The Southern Development Authority (Pvt) Ltd | Cable TV<br>Pay TV | 24.10.1996 | |
| 12 Dynavision (Pvt) Ltd | Direct-to-Home (DTH) Terrestrial TV | 31.10.1997 | |
| 13 Ru Ras Lanka (Pvt) Ltd | Radio | 01.01.2004 | |
| 14 Asset Radio Broadcasting (Pvt) Ltd Changed name from 18.06.2007 to Dialog Television Pvt Ltd | Radio<br>TV (Satellite)<br>Cable | 09.02.2004 | |
| 15 Power House (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 29.02.2004<br>19.10.2005 | |
| 16 MGM Networks (Pvt) Ltd Changed name to MGMR Network Pvt Ltd from 10.11.2006) | Radio<br>Terrestrial TV | 14.09.2005 | |
| 17 Lanka Television Network (Pvt) Ltd Changed name to Dumee International (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 18.01.2006 | |
| 18 Voice of Asia Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV<br>Cable TV<br>Satellite TV | 16.02.2006<br>14.05.2004 | |
| 19 People's Media Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 31.05.2006 | |
| 20 Rangiri Sri Lanka Media Network (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 09.10.2006<br>16.08.2011 | |
| 21 Sky TV and Radio Network (Pvt) Ltd | Satellite TV/Cable Tv<br>(Amended date) | 12.12.2006<br>(23.02.2007) | |
| 22 Lanka Broad Band Network (Pvt) Ltd | Cable TV | 29.03.2007 | |
| 23 Sri Lanka Telecom (Pvt) Ltd | Internet Protocol Television (IPTV) | 09.04.2007 | |

| Licensee | Type of Licence | Issue date | Remarks |
|---|---|---|---|
| 24 Lak Viru TV and Radio Network (Pvt) Ltd | Radio | 12.04.2007 | |
| 25 Lak View Broadcasting (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 25.05.2007 | |
| 26 The Buddhist Broadcasting Service | Satellite TV | 22.06.2007 | |
| 27 Sat Net (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 19.07.2007 | |
| 28 Friend Media (Pvt) Ltd | Regional Radio | 16.10.2007 | |
| 29 Tharunyata Hetak Media Network (Pvt) Ltd | Radio<br>(Canceling date) | 25.02.2008<br>(23.05.2008) | Cancelled |
| 30 LTTE Peace Secretariat | Radio | 11.11.2002 | Cancelled on 07.01.2009 |
| 31 Tea Small Holding Development | Radio | 08.12.2000 | Cancelled |
| 32 Yellow Win Media (Pvt) Ltd | Radio<br>Terrestrial TV | 18.03.2008 | |
| 33 Future Sat Com Holding (Pvt) Ltd | Terrestrial TV | 13.05.2008 | |
| 34 VIS Broadcasting Network Pvt Ltd | Radio<br>Terrestrial TV | 16.05.2008 | |
| 35 Mobitel (Pvt) Ltd | Mobile TV | 24.06.2008 | |
| 36 Sri Global Television Company | Radio<br>Terrestrial TV | 27.11.2008 | |
| 37 City Cable Links (Pvt) Ltd | Cable TV | 19.01.2009 | To be operated in Colombo Municipal Council area |
| 38 Ask Media (Pvt) Ltd | Terrestrial TV | 22.06.2010 | |
| 39 Carlton Sports Network (Pvt) Ltd | Terrestrial TV | 03.03.2011 | |
| 40 Ritz Asia (Pvt) Ltd | Terrestrial TV | 03.03.2011 | |
| 41 Lanka Cable and Satellite Network | Cable TV | 24.02.2011 | |

Annex

# 7

# Highlights of the Public Perceptions Survey 2015

The sample of the study consisted of randomly selected 800 respondents, representing Sinhalese and Tamils. The survey was conducted between July and October 2015, in all the provinces of Sri Lanka. A structured questionnaire was developed in both languages to collect data for the survey (i.e. Sinhala and Tamil). Telephone interviews and field surveys were administered to collect data. The survey team comprised students and lecturers of mass media at Colombo University's Sri Palee Campus.

## Preferred language

Survey respondents were asked about their preferred language of the media messages.

**Table 1: Preferred language of the media messages**

| Language | No. of respondents | % |
|---|---|---|
| Sinhala | 514 | 64.3 |
| Tamil | 223 | 27.9 |
| English | 63 | 7.8 |
| Total | 800 | 100 |

Asked if language was a barrier for accessing media messages, 73% said no and 27% answered yes. This suggests that a majority of respondents find media messages delivered in their preferred languages.

## Credibility of media messages

When asked how they ranked the level of credibility of media content they consumed, a majority of respondents opted for the 'neutral' answer. Table 2 summarises these answers.

**Table 2: Credibility of media messages**

| Credibility ranking | No of respondents | % |
|---|---|---|
| Highly credible | 32 | 4.0 |
| Fairly credible | 344 | 43.3 |
| Neutral | 392 | 48.9 |
| Not very credible | 12 | 1.4 |
| Totally not credible | 20 | 2.4 |
| Total | 800 | 100 |

## The most trusted types of media

Most respondents said they trusted television the most (56%), followed by newspapers (20%) and the Internet (21%). There is a trend among the young generation to turn to the Internet as a source of news and information. Notably, radio's trust levels are very low among this sample.

**Table 3: The most trusted medium**

| Most trusted media type | No of respondents | % |
|---|---|---|
| Internet | 169 | 21.1 |
| TV | 448 | 56.0 |
| Radio | 16 | 1.9 |
| Newspaper | 160 | 20.1 |
| Gossip | 7 | 0.9 |
| Total | 800 | 100 |

In addition, Table 4 reveals that the most influence medium is television (52%), followed by the Internet (24%). Importantly, the Internet is already more influential than newspapers or radio.

**Table 4: The most influencing media**

| Most persuasive media | No. of respondents | % |
|---|---|---|
| Gossip | 33 | 4.1 |
| Internet | 195 | 24.4 |
| TV | 412 | 51.5 |
| Newspaper | 133 | 16.6 |
| Radio | 27 | 3.4 |
| Total | 800 | 100.0 |

## Freedom to express ideas through media

Respondents were asked whether they have an opportunity to express their ideas freely through mass media. A clear majority felt there was no such freedom.

**Table 5: Freedom to express ideas through media**

| Freedom to express ideas | No of respondents | % |
|---|---|---|
| Yes | 231 | 28.8 |
| No | 569 | 71.2 |
| Total | 800 | 100.0 |

## Usage of foreign media for information

Despite there being a multitude of national and local media outlets, a sizeable number of the sample also uses foreign media.

**Table 6:**
**Usage of foreign media for information**

| Usage of foreign media | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 341 | 42.6 |
| No | 459 | 57.4 |
| Total | 800 | 100.0 |

Furthermore, more than two thirds of respondents have trust on the foreign information sources.

**Table 7: Trust on foreign sources**

| Trust on foreign sources | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 540 | 67.5 |
| No | 260 | 32.5 |
| Total | 800 | 100.0 |

## Sources of everyday information

Table 8a and table 8b show how state and private media sources are used as sources for everyday information. In terms of the state media, television (63%) plays is the most significant source for everyday information, followed by print media (61%) and radio channels (40%).

**Table 8a: State sector sources**

| Sources of everyday information | Print media | | Radio channel | | TV channel | |
|---|---|---|---|---|---|---|
| | No. of respondents | % | No. of respondents | % | No. of respondents | % |
| Yes | 484 | 60.5 | 322 | 40.3 | 503 | 62.9 |
| No | 316 | 39.5 | 478 | 59.7 | 297 | 37.1 |
| Total | 800 | 100.0 | 800 | 100.0 | 800 | 100.0 |

The same view is shown even in the private media sources (Table 8b) - respondents highly depend on television (68%), than the other information sources i.e. print media 56% and radio (45%) for their everyday information.

**Table 8b: Private sector sources**

| Sources of everyday information | Print media | | Radio channel | | TV channel | |
|---|---|---|---|---|---|---|
| | No. of respondents | % | No. of respondents | % | No. of respondents | % |
| Yes | 444 | 55.5 | 358 | 44.7 | 545 | 68.1 |
| No | 356 | 44.5 | 442 | 55.3 | 255 | 31.9 |
| Total | 800 | 100.0 | 800 | 100.0 | 800 | 100.0 |

Table 8c shows that social media is used for everyday information by close to a third of the sample.

Table 8d shows that mobile phone and SMS are used significantly for everyday information by 44.1% of respondents.

**Table 8c: Social media source**

| Use social media source | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 250 | 31.3 |
| No | 550 | 68.7 |
| Total | 800 | 100.0 |

**Table 8d: Mobile Phones and SMS news alert**

| Use mobile phones and SMS news alert | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 354 | 44.2 |
| No | 446 | 55.8 |
| Total | 800 | 100.0 |

Public meetings have ceased to be sources of everyday information for most people.

**Table 8e: Public Meetings for everyday information**

| Public Meetings for everyday information | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 84 | 10.5 |
| No | 716 | 89.5 |
| Total | 800 | 100.0 |

### Media literacy: Awareness of media ownership

Table 9 shows the media ownership awareness of the respondents. Accordingly, most respondents are aware that media is owned by the state and private sectors (73%).

**Table 9: Media Ownership**

| Media Ownership | No. of respondents | % |
|---|---|---|
| State only | 90 | 11.2 |
| Private sector only | 16 | 2.0 |
| State and private sector | 586 | 73.3 |
| Public | 108 | 13.5 |
| Total | 800 | 100.0 |

### Trust in TV and Radio news

Respondents were further asked if they trusted news on television and radio news. Results show that 37% of the respondents have no trust on television and radio news while 39% of are neutral. Only 24% said they trusted radio or television news.

**Table 10: Trust on TV and Radio news**

| Trust on TV and Radio news | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 192 | 24.0 |
| No | 295 | 36.9 |
| Neutral | 313 | 39.1 |
| Total | 800 | 100.0 |

In addition, it was examined whether respondents are satisfied with the television and radio news. Table 11 shows that only 22% of the respondents are satisfied with the news on television and radio, while majority of the respondents are not satisfied (41%).

**Table 11: Satisfaction of TV and Radio program**

| Satisfaction of TV and Radio program | No. of respondents | % |
|---|---|---|
| Yes | 178 | 22.3 |
| No | 331 | 41.4 |
| Neutral | 291 | 36.3 |
| Total | 800 | 100.0 |

### Influences on the News

Influences on the content of news were examined in two perspectives: influence of the government and of private sector ownership. Table 12a areveals the influence of the government on the content of the state owned media news. Accordingly, it shows that 61% of the respondents have an attitude that government influences the content of the news of the state owned media.

**Table 12a: Government influences on content of state owned media news**

| Government influences on content of news | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 180 | 22.5 |
| Agree | 307 | 38.4 |
| Strongly Disagree | 182 | 22.8 |
| Disagree | 51 | 6.4 |
| No Idea | 80 | 9.9 |
| Total | 800 | 100.0 |

Table 12b shows the attitudes of the respondents on the content of the news of private owned media: only 46% of respondents believe that private media owners have an influence on the content of the news.

**Table 12b: Private Sector owner influences on the content of news**

| Private Sector owner influences on the content of news | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 88 | 11.0 |
| Agree | 283 | 35.4 |
| Strongly Disagree | 234 | 29.2 |
| Disagree | 133 | 16.6 |
| No Idea | 62 | 7.8 |
| Total | 800 | 100.0 |

Opportunity for complaining on media content

There are no sufficient opportunities for making complaints against any misleading or offensive media content: only 33% of respondents agreed that there are opportunities for complaining against media content.

**Table 13: Opportunity for complaints**

| Opportunities are available for complaints against media outlets | No. of respondents | % |
|---|---|---|
| Strongly agree | 54 | 6.7 |
| Agree | 207 | 25.9 |
| Strongly Disagree | 233 | 29.1 |
| Disagree | 220 | 27.5 |
| No Idea | 86 | 10.8 |
| Total | 800 | 100.0 |